ஆன்மீக சஞ்சிகை

# சிவ ஒளி

வள்ளுவர் ஆண்டு 2051 - வீறியெழல் ஆண்டு
நளி- சிலை திங்கள் கார்த்திகை - மார்கழி 2020

மாதாந்த மின்னிதழ்



## சிவதீட்சை (தீக்கை)

பக்கம் 63

## மார்கழி மாதமும் அதன் மகத்துவமும்

பக்கம் 06

## நகுலேஸ்வரம் (கீரிமலைச் சிவன் கோயில்)

பக்கம் 09

## மதுரை எரிகிறது

பக்கம் 75

## தமிழர் நாகரீக வரலாற்றின் ஆய்வில் சுவாமி விபுலானந்தரின் கருத்து வெளிப்பாடுகள்

பக்கம் 30

sivaoli.com

# சிவ ஒளி

மாதாந்த மின்னிதழ்

கார்த்திகை– மார்கழி 2020

ஆன்மீக மின்னிதழ்– ஒளி– 8

சிவஒளி ஆலோசனை தென்கயிலை ஆதீனம் குரு முதல்வர் அகத்தியர் அடிகளார்

**தலைமை ஆசிரியர்**

அனைதுலக ஒருங்கிணைப்பாளர்
தென்கயிலை ஆதினம்
தென்கயிலை சிவா (பிரான்ஸ்)

**உதவி ஆசிரியர்**

நாட்டியக் கலைமணி
திருமதி.பவானி குகப்பிரியா (கொழும்பு)

**படைப்புரிமை**



**சிவஒளியில் வெளிவரும் கட்டுரைகள் யாவும் படைப்பாளிகளுக்கே உரித்துடையதாகும்.**



**வடிவமைப்பு**

மோகன ஷாந்தி



தென்கயிலை ஆதீனம்
இல-36 சிவன் மலை பீலியடி
கன்னியா, திருகோணமலை.
இலங்கை.

**குரு மகா சந்நிதானம்:**

தவத்திரு அகத்தியர் அடிகளார்
00 94 77 509 8157.

**இளைய பட்டம்:**

திருமூலர் தம்பிரான் அடிகளார்.
00 94 77 173 1728

**தொடர்புகளுக்கு:**

தென்கயிலை சிவா
00 33 6 13 15 93 49
thenkailaisiva@gmail.com


# ஒளியில் ஒளியாகி... உயிரில் உயிராகி

**சிவஒளியில் பிரகாசித்து சிவப்பரம் பொருள் அருளாசியுடன் இணைந்திருக்கும் அனைவருக்கும் வணக்கம்.**

**ஓம் நமசிவாய...**

மார்கழி மாதம் என்பது இறையருள் நிறைந்த மாதமாகும். இல்லங்களிலும் இதயங்களிலும் அன்புருவாகி இறையருள் நிறைக்கும் கால மாகும். எனது என்னும் நிலையிலிருந்து எங்களு டைய என்னும் பரந்து விரிந்த பண்பாட்டை வரித் துக்கொண்டு அடுத்த வருடத்திற்கான வாழ்வுக்கு அடியெடுத்து வைக்கும் காலமாகும்.

திருமந்திரத்திலிருந்து திருக்குறள் வரைக்கும் அன் பு,மானிடத்துவம்,சமத்துவம்,சகோதரத்துவம் என்று அனைத்தையும் எடுத்துரைக்கும் அற்புதமான வழி காட்டும் ஞானிகள்,பெரியார்கள்,சமயக்குரவர்கள் போன்றவர்களின் வாழ்வுத் தடங்களில் நாம் வாழ் கின்றோம் என்னும் பெருமைக்குரியவர்களாக போற் றப்படுகின்றோம்.

இத்தனை பெருமைக்குரிய நாங்கள் வாழ்வில் மனித நேயத்துடன், புரிந்துணர்வுடனும் விழிப் புணர்வுடனும் நாம் நடந்து கொள்ளவேண்டிய முக்கிய காலகட்டம் இதுவாகும். இன்றைய நாட்க ளில் உலகை உலுக்கி வரும் பெருந்தொற்றுக்கள் நிறைந்த காலம் இதுவாகும்.இக் காலகட்டத்தில் நாம் அனைவரும் தன்னை நேசித்து தன்னைப் பாது காக்கும் வழிமுறைகளை கையாளும் அதே வேளை மற்றவர்களையும் பாதுகாக்கும் முறையில் நமது வாழ்வியல் பழக்க வழக்கங்களை கடைப்பிடித்தே ஆகவேண்டும்.

முதலில் ஒரு மனிதன் தன்னை நேசிக்க வேண் டும். தன்னை நேசிக்கும் ஒருவருக்குத்தான் மற்றவ ரையும் நேசிக்கும் மனப்பக்குவம் உருவாகும். இனி வரும் காலங்கள் உலகளாவிய ஒழுங்கமைவுக்கு

**படைப்பாளிகள்:**

- தமிழ் நிதி அருணா செல்லத்துரை - (வவுனியா)
- கலாநிதி பாலசுந்தரம் இளையதம்பி - (கனடா)
- கலாநிதி பால சிவகடாட்சம் - (கனடா)
- வரலாற்று ஆய்வாளர் என்.கே.எஸ். திருச்செல்வம் (இலங்கை)
- கலாபூசணம் நா.வை.குமரிவேந்தன் - (கிளிநொச்சி)
- சித்தமருத்துவர் தியாகராஜா சுதர்மன்- (மானிப்பாய்)
- திருமதி பவானி சற்குணசெல்வம் - (நெதர்லாந்து)
- சித்தமருத்துவர் எம்.ஏ உசைன் - (சென்னை)
- தென்கயிலை ஞானக்கவி தேசபாரதி இராஜலிங்கம் - (கனடா)
- வைத்தியக் கலாநிதி. சிவஸ்ரீ சன பிரதாபன் தேசிகர் - (இலங்கை)
- சைவத்தமிழ் வித்தகர் சந்திரலிங்கம் ரமேஸ் - (மன்னார்)
- வித்தியா கலாபமணி. கிருத்திஸ்ரீ எஸ்.ரமேஸ் (குருநாகல்)
- இளங்கலைமணி சுரேந்திரா நரேந்திரா (கிழக்கு பல்கலைக்கழகம்)
- சைவப்புலவர் சித்தாந்தரத்தினம் கந்தையா பத்மானந்தன் (இலங்கை)
- சைவப்புலவர் சு. துஷ்யந்த் முன்னாள் ஆசிரியர்
- சைவப்புலவர் திருமதி சிவானந்த ஜோதி ஞானசூரியம்
- கலாபூணம் திருமதி .இராஜேஸ்வரி ஜெகானந்த குரு
- சிவத்திரு .சற்குணலிங்கம் ஹோபிநாத் (ஆசிரியர்)
- கலாநிதி. பொன் ஜெயரூபன் (தேசியக் கல்வி நிறுவகம்)
- பேராசிரியர். சி.பத்மநாதன்
- சித்தாந்த இரத்தினம் திருமதி. செல்வராஜ் உதயகௌரி
- திருமதி.ஹேமலோஜினி குமரன்.
- சைவப்புலவர் இரா.ஜீவன் பிரசான்

உட்பட்டே காலங்கள் நகர்த்த வேண்டியுள்ளது. தன்னைப்போல் பிறரையும் நேசியெனும் தமிழனின் தாரக மந்திரமே உலகத்திற்கு சொந்தமாக அமைகிறது.


ஆகையால் இன்று நாம் எதிர்நோக்கியுள்ள கோவிட்19 என்னும் நோயிலிருந்து விடுபட நாம் ஒவ்வொருவரும் விழிப்புணர்வுடனும் மனித நேயத்துடனும் வாழப் பழகிக்கொள்வோம். எங்களிடம் இருக்கின்ற அன்பு வழியையும், அறநெறி வாழ்வையும் முறையாகக் கடைப்பிடிப்போமானால், எந்த எதிர்ப்புச் சக்தியிலிருந்தும் நாம் பாதுகாக்கப்படுவோம்.

விழிப்புணர்வு என்பது பல மட்டங்களில் உருவாக வேண்டும். தனிமனித வாழ்வு, தன்சார்,பிறர்சார் சமூக வாழ்வு, இல்லார்க்குதவிடும் இளகியமனப் பாங்கு, மற்றவரை மன்னிக்கும் மனிதநேய மனப் பாங்கு என்று நாம் ஆன்மீகப் பாதையிலும் அறநெறி வழுவா பாதையிலும் அடியெடுத்து வைக்கும் அவசியமான காலமிது.

போர்க்கால வடுக்கள் இன்னும் போகவில்லை. கடல் கோள் எனும் இயற்கையின் சீற்றத்தின் எச்சங்கள் இருந்து கொண்டேயிருக்கின்றன. இதற்கிடையில் இப்பொழுது எம்மை விட்டகலா நிலையிலுள்ள, பெருந்தொற்றான கோவிட் 19 எனும் கொடிய நோய். இக் கொடிய தொற்றிலிருந்து எங்களையும் பாதுகாத்து மற்றவர்களையும் பாதுகாத்து வாழவேண்டுமானால் இந்நோய் பற்றியும் , நோய்க்குரிய தடுப்பு முறைகள் பற்றியும் நாம் ஒவ்வொருவரும் விழிப்புணர்வுடன் செயற்படத் தலைப்படுவோம். விழிப்புணர்வுடன் நாம் செயற்படுவோமானால் நிச்சயம் இப் பெருந்தொற்றை இலகுவில் விரட்டி அனுப்ப முடியும். அதன் மூலம் மனிதத்தை நாம் அனைவரும் பாதுகாக்க முடியும்.

**அன்பே சிவமாகி**
**அமர்ந்திருப்போமே**

**ஒளியில் ஒளியாகி**
**உயிரில் உயிராகி**
**மனித உறவுகளைப்**
**போற்றுவோம்.**



**தென்கயிலை சிவா**
அனைத்துலக
ஒருங்கிணைப்பாளர்
தென்கயிலை ஆதீனம்

# அன்பே சிவமாய்



**அன்பே சிவம் அறநெறிப்பள்ளி**
**கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டு நிகழ்வு**

திரிகோணமலை வெருகல் முகத்துவாரத்தில் சூரநகர்ப்பகுதியில் தென்கயிலை ஆதீனத்தால் அன்பே சிவம் அறநெறிப்பள்ளிக்கான கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டு நிகழ்வு செவ்வாய்கிழமை 08 12 2020 அன்று காலை இடம் பெற்றது. தென்கயிலை ஆதீன முதற்குரு மகாசந்நிதானம் தவத்திரு அகத்தியர் அடிகளார் தலைமையில் இளையபட்டம் தவத்திரு திருமுலர் தம்பிரான் ,மனோஜ் ஐயா, சசி ஐயா ஆகியோரால் அடிக்கல் நாட்டு நிகழ்வுப் பூசைகள் இடம் பெற்றன.

முதலில் அன்பேசிவம் அறநெறிப்பள்ளி கட்டிடத்திற்கான அடிக்கல்லை குருமகாசந்நிதானம் தவத்திரு அகத்தியர் அடிகளார் நாட்டியதைத் தொடர்ந்து , இளையபட்டம் தவத்திரு. திருமூலர் தம்பிரான், பிரதேச சபை உறுப்பினர் திரு.ஞானகணேசன் ஆகியோர் மற்றும் முக்கியமானவர்கள் அடிக்கல் நாட்டி வைத்தனர்.

மேற்படி, அன்பேசிவம் அறநெறிப்பள்ளி கட்டிடத்திற்கான் நன்கொடையை இலண்டன் IYKONS நிறுவன உரிமையாளர் திரு. குலசேகரம் ஜெயராஜ் அவர்கள் வழங்கியுள்ளார் என்பது மகிழ்ச்சியான செய்தி.











# மார்கழி மாதமும் அதன் மகத்துவமும்



**''சேர் சிறுகாலை துயில்நீத் தெழுந்தருட் செல்வருடன் நீர்துழைந்தாடிமலர் கொய்துசன்னிதிநின்றுநின்றன் பேர் பலபாடிவணங்குகின்றோம். எம்பிழைதவிர்க்க மார்கழிமாதம் வருவாய் அம்மாஞானமாணிக்கமே''**

*என மார்கழி மாதத்தின் சிறப்பை அகத்தியர் பாடுகிறார். மார்கழிமாதத்தை தேவர்கள் மாதம் என்றே குறிப்பிடுவார்கள். இறைவனை வழிபடுவதற்குரிய மாதம் மார்கழி.கலியுகத்தில் ஒரு ஆண்டு தேவலோகத்தில் ஒருநாள் தைமுதல் ஆனி வரை உள்ள மாதம் உத்தராயணம் எனதேவர்களின் பகற்காலமாக விளங்குகின்றது. ஆடியில் இருந்து மார்கழி தட்சணாயம் என இராப்பொழுதாக விளங்குகின்றது. எனவே*

*மார்கழி மாதம் தேவர்களின் விடியற் காலைப் பொழுது தேவர்களின் பிரமமுகூர்;த்தம் மார்கழி மாதமே. எனவேதான் இம் மாதம் கடவுள் வழிபாட்டிற்குரிய மாதமாக எவ்வித பண்டிகைகளோ மங்கள நிகழ்வுகளோ இல்லாமல் இறை வழிபாட்டிற்கு உகந்த மாதமாக விளங்குகின்றது. மார்கழி மாதம் முழுவதும் வீட்டின் முற்றத்தின் நடுவில் சாணத்தினை மெழுகி பச்சரிசி மாவினால் கோலம் போட்டு சாணத்தினால் பிள்ளையார் பிடித்து வைத்து பூக்களைச் சாத்தி வழிபடுவார்கள். சாணம் ஒரு தொற்று நீக்கி மார்கழி மாதம் மழைஇ பனி நிறைந்த காலம் அக்காலத்தில் நோய்க்கிருமிகள் வீட்டினுள் நுழையாமல் சாணத்தினால் மெழுகி சாணத்தினை முற்றம் முழுவதும் தெளித்தும் சாணத்தினால் பிள்ளையார் பிடித்தும் வைத்தலும் ஒரு கிருமிநாசினியாக விளங்கியது.இதனால் பக்தியுடன் நோய் எதிர்ப்பு ஆயுதமாகவும் இது விளங்கியுள்ளது. ஆரிசிமா கோலம் எறும்பு போன்ற சிறு பூச்சிகளுக்கு உணவாகவும் விளங்குகின்றது. மாதம் முழுவதும் சேர்த்த சாணத்து பிள்ளையாரை சேர்த்து வைத்ததைப் பொங்கல் முடிய ஒருநாளில்*



**திருமதி.ஹேமலோஜினி குமரன்**
**அறநெறிப்பிரிவு – உதவிப் பணிப்பாளர்**
**இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்**



மோதகம் முதலிய நிவேதனம் பிடித்து பூசித்து நீர் நிலைகளில் கரைத்துவிடுவது வழமை.

திருவாதிரையும் வி;ணுவின் வைகுண்ட ஏகாதசியும் மார்கழி மாதத்தில் அனு;டிக்கப்படும் பெருவிரதங்களாக விளங்குகின்றன.மாதங்களில் நான் மார்கழி என்று பகவற் கீதையிலேயே கண்ணபிரான் கூறுகிறார். மார்கழி நீராடல் சங்க நூல்களில் தை நீராடல் என்று குறிப்பிடப்படுகின்றது. பிங்கலந்தை எனும் நூலில்பனிநீர் தோயலும்இ பாவைபாடலும்என்று பாவை நீராட்டலும் பாவைதோமாகவும் குறிப்பிடப்படுகின்றன.

மாணிக்கவாசகரின் திருவெண்பாவையும் ஆண்டாளின் திருப்பாவையும் ஒரே விடயத்தைத்தான் கூறுகின்றன. மார்கழிமாத வைகரைப் பொழுதிலே பெண்கள் கூடி ஒருவரை ஒருவர் துயில் எழுப்பி நீராடி பாவை நோண்பை நோற்பதற்காக ஆலயத்தை நோக்கி செல்வதையும் அந்த இறைவனின் அருட் சிறப்புக்களையும் இவ்விரு இலக்கியங்களும் கூறி நிற்கின்றன.

## திருவாதிரை நோன்பு

பஞ்சகிருத்தியங்களை நடாத்தும் நடராஜப் பெருமானிற்குஆதிரையின் முதல்வன்என்றும் ஆதிரையான்; என்றும் சிறப்பிக்கப்படுகின்றார்ஆதிரைநாள் உகந்தான்,ஆதிரையாய்,ஆதிரையான் கண்டாய்,ஆதிரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய். என்றெல்லாம் திருமுறைகள் சிறப்பிக்கின்றன. சம்பந்தர் அப்பரை நோக்கி திருவாதவூர் சிறப்பைக் கூறுக எனக் கேட்டபோது அவர் ஆதிரை நாளின் முத்துவிதானம்என்ற பதிகத்தால் ஆதிரை நாளின் சிறப்புக்களை கூறினார். இதனால் அப் பதிகத்திற்கு திருவாதிரைப் பதிகம் என்றுபெயர்.

மார்கழி மாதத்தில் வரும் திருவாரை திருநாளிற்கு முதல் ஒன்பது நாட்களிலும் கன்னி பெண்கள் அதிகாலையில் துயில் எழுந்து ஒருவரை ஒருவர் பாடி துயில் எழுப்பினர் திருவெண்பாவை உலகம் நலம் பெறமழை வளம் வேண்டுவதுடன் மகளிர் நலம் பெற நற்கணவரைப் பெற வேண்டப்படுகின்றது. மார்கழி நீராடலை மேற்கொள்ளும் கன்னிப் பெண்களின் பேச்சாக திருவெண்பாவை விளங்குகின்றது. ஐந்து முதல் பன்னிரண்டுவரையான வயதுக் கன்னிப் பெண்கள் நோன்பு நோற்பதற்குரியவர். பராசக்தி வழிவந்த பலசக்திகள் ஒருங்கு கூடித் தம்முன் ஒருவரை ஒருவர் எழுப்பிக் கொண்டு இறைவன் புகழையும் பராசக்தியின் புகழையும் பாடிக் கொண்டு பொய்கைக்கு நீராடப் போவதற்குத் திருவெண்பாவைக்கு உட்பொருள் கூறுவர். ஆணவ மலமாகிய இருளில் வீழ்ந்து உறங்கும் உயிர்கள் அத்துயில் விட்டு எழுப்பிப் பிறவிப் பிணி நீங்க இறைவன் கருணை வெள்ளத்தில் ஆழ்ந்து இன்புற வருக என்பது மற்றோர் உட்பொருள். இச் செய்திகள் திருப் பெருந்துறைப் புராணம் கூறுவன.

சைவமரபிலே மாணிக்கவாசகருக்கு இருக்கும் செல்வாக்கின் காரணமாகவும் அவர் திருவெம்பாவைப் பதிகம் அருளிய காரணத்தாலும் திருவெம்பாவை நோன்பு அவரோடு இயைந்ததொன்றாகவே நோக்கப்படுகின்றது. திருவெம்பாவைக் காலத்தில் அவருடைய புராணம் படிக்கப் பெறுவதும், அவருடைய அற்புத வரலாற்று நிகழ்ச்சிகளை ஒவ்வொன்றாக ஒவ்வொரு நாளும் பாவனா முறையில் நிகழ்த்திக் காட்டுவதும்,திருவாதிரையில் சிவன் தேரேறி வருவதும் கூடவே மாணிக்கவாசகரையும் எழுந்தருளப் பண்ணுவதும் இன்றைய பாவைநோன்பின் கூறுகளாகிவிட்டன. பெருங் கோயில்களில் எல்லாம் திருவெம்பாவை ஒரு மகோற்சவத்தை ஒத்ததாகவே நடைபெறுகின்றது.

திருவாதிரை விழா சிதம்பரத்தில் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. நடேசருக்கு சிறப்பு அபிசேகங்களும் ஆராதனைகளும் நடைபெறும் சூரிய உதயத்திற்கு முன்பாக கிழக்குத் திசை நோக்கி நுனிவாழையிலை இட்டு அதில் பழம்,வெற்றிலை,பாக்கு,செவ்வந்திப்பூ,நோன்புக்கயிறு,ஆகியவற்றை வைத்து வழிபடுவர். ஒற்றைப்படை எண்ணிக்கையில் காய் கறிகளை ஒருசேர இட்டுச் சமைத்து உண்பர். பூசை முடிந்ததும் மூத்த மங்களமகளிர் இளைய மங்களமகளிர்க்கும் மூத்த மங்களமகளிர்க்கு அவர்தம் கணவரும் நோன்புக் கயிற்றினை கையில் கட்டுவர்.

நடுத்தரவயதுக்கு மேற்பட்டவரே விரதம் இருப்பர். இக்காலத்தில் எவ்வளவு கோயிலுக்கு செல்ல முடியுமோ அவ்வளவு கோயிலுக்குச் சென்று நடராஜப் பெருமானை தரிசிப்பார். சிவாலயங்கள் எங்கும் திருவாதிரைத் திருநாள் சிறப்பாகக் கொண்டாடப்படும். இவ்விரதத்தை சிதம்பரத்தில் இருந்து அனு;டிப்பது உத்தமமாகும் திருவாரை திருநாளை ஆருத்ரா தரிசனம் என்றும் அழைப்பர். அன்று நடராஜப்பெருமான்

வீதியுலா வந்து பக்தருக்கு காட்சியளிப்பார். திருவாதிரை நோன்பில் களி,பிட்டு சிறப்பிடம் பெறுகின்றது இதனை ஆதிரைக்களி என்றும் கூறுவர். திருவாதிரைத் திருநாளில் தேவாராதியோர்கள் கூட்டம் கூட்டமாக தெருக்களிலே நிறைந்து நின்று பெருமானது தொல்புகழ் பாடி பரவுவார்கள். ஆனந்தக் கூத்தாடி மகிழ்வார்கள் அப்போது தரிசனத்துக்காக எல்லோரும் வந்து விட்டார்களா? வந்தவர்கள் யார்? வராதவர்கள் யார் என்றெல்லாம் கணக்கெடுக்கப்படும்.

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாராயணனொடு நான்முகன் இங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாக்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே

என ஆதிரைநாளின் சிறப்பை சேந்தனார் பாடுகின்றார்.

நடராஜர் தன் நடனத்தை பதஞ்சலிக்கும் வியாக்கிரபாதருக்கும் ஆடிக் காட்டியது இந்த திருவாதிரை நட்சத்திரத்தன்று தான். அந்நடனத்தை திருமூலர் கல்லாடர்,காரைக்கால் அம்மையார்,கபிலர் ஆகிய அடியார்கள் பல கோணங்களில் கண்டு பரவசமடைந்துள்ளனர்.அணுக்கள் முதல் அண்டங்கள் முறை எல்லாம் ஒழுங்கு முறை தவறாது ஆடுகின்றனர். இந்த நடனத்தில்தான் வேதங்கள்,ஆகமங்கள்,கீதங்கள்,கலைகள் முதலியன உதயமாகின்றன.

## வைகுண்ட ஏகாதசி

கேசவ நாராயண எனும் விஷ்ணுவின் பன்னிரன்டு நாமங்களும் பன்னிரன்டு மாதங்களாக விளங்குகின்றன. இதில் கேசவ என்ற முதல் நாமம் மார்கழிக்கு உரியது கேசவன் அறிவு தரும் கடவுள் அதனால் இம் மாதம் தூய அறிவு தரும் மாதமாக விளங்குகின்றது. மார்கழி மாத சுக்கிலபட்ட ஏகாதசிக்கு மோட்ச ஏகாதசி என்று பெயர். இதுவே வைகுண்ட ஏகாதசி என்றும் சொல்லப்படும். வைகுண்ட நாதன் திருமால் வைகுண்டம் அவரது இருப்பிடம். வருடத்தில் வரும் இருபத்தைந்து ஏகாதசிகளும் விஷ்ணுவிற்கு சிறந்ததாக கருதப்படினும் வைகுண்ட ஏகாதசிக்கு சிறப்பாக விஷ்ணுவின் சம்பந்தம் கூறப்படுவதால் இதற்கு இப்பெயர் வந்தது. ஆகமங்களில் மகாவிஷ்ணுவின் மாத உற்சவங்கள் செய்ய விரித்திருக்கும் பஞ்ச பருவங்களில் ஏகாதசியும் ஒன்று. பாஞ்ச ராத்திர ஆகமத்திலுள்ள ஈஸ்வர சங்கீதையில் மார்கழி மாதம் மகா விஷ்ணுவிற்கு அத்தியாயன உற்சவம் நடத்தி அதில் தினந்தோறும் நைவேத்தியம் செய்த பிறகு வைஸ்ணவர்களைக் கொண்டு நாலாயிரம் திவ்வியபிரபந்தம் படிக்கவேண்டும் என கூறப்பட்டுள்ளது. இதனால் வைகுண்ட ஏகாதசியை இடையில் வைத்து அதிலிருந்து பகலில் பத்து நாட்களும் அதன் முன் இரவில் பத்து நாட்களுமாக இருபது நாட்கள் அத்தியாயன உற்சவம் நடைபெறும். இந்த மரபு ஆழ்வார் திருவார் திருநகரில் நம்மாள்வார் பகவானை சிம்மாசனத்தில் அமர்த்தி தாம் இயற்றிய திருவாய் மொழி எனும் ஆயிரம் பாக்களை மார்கழி மாதமுதல் பத்து நாட்களில் தினம் நூறாக கேட்பச் செய்து பத்தாம் நாள் பரமன் திருவடி சேர்ந்தார். இதை நினைவு கூறும் முகமாகவே ஸ்ரீரங்கத்தில் இன்றும் உட்சவமாகநடத்திவருகின்றார்கள்.

காயத்திரிக்கு ஈடான மந்திரமில்லை தாய்க்கு சமமான தெய்வமில்லை காசிக்கு மேற்பட்ட தீர்த்தமில்லை. ஏகாதசிக்கு சார்பான விரதமில்லை. என்று அக்கினிபுராணம் கூறுகின்றது. ஏகாதசி அன்று நியமமாக சுத்த உபகாசம் இருப்பவர்க்கு ஒரு வியாதியும் வராது. இரண்டு வேளை உபவாசம் இருக்க முடியாதவர்கள் ஒருவேளையேனும் உண்ணாது இருக்கவேண்டும்.

ஏகாதசி என்பது ஒரு சக்தி அவள் வி;ணுவின் திருமேனியில் விளங்குகின்றாள். இந்த சக்தி வி;ணுவிடம் கேட்டவரம் ஏகாதசி அன்று தங்களை நினைத்து உண்மை மனத்துடனும்



திடமான சித்தத்துடனும் விரதமிருப்பவர்களை காத்தருள வேண்டும். அன்று முதல் ஏகாதசி விரதத்தை எல்லோரும் கைக்கொண்டனர். ஏகாதசி அன்று முழுநாளும் பட்டினி இருப்பதும் மூன்று வேளையும் ஸ்ஞானம் செய்வதும் சுத்த மனத்துடன் ஜபம் கீர்த்தனம் ஹரியின் கதைகளை கேட்பதும் படிப்பதும் இரவெல்லாம் தூங்காமல் தெய்வ சிந்தனையில் தன்னை. ஈடுபடுத்துவதும் மறுநாள் காலையிலே ஹரி நாமத்தை சொல்லிக் கொண்டு துளசி தீர்த்தம் அருந்தியபின் உணவை உண்பது என்பவை விரத நியமங்கள் ஆகும். வைகுண்டஏகாதசிக்கு முதல் நாள் இரவு பகவான் அசுரர்களை மயக்க மோகனா அவதாரம் எடுத்தது கொண்டாடப்படும். ஏகாதசி அன்று சொர்க்க வாயில் என்ற வாசல் புதிதாக திறக்கப்பட்டு அதன் வழியே திருமாலின் திருவுருவம் எடுத்துச் செல்ல அடியார்களும்' உடன் சென்று வாயிலைக் கடந்து பாவனையாக சுவர்க்கம் செல்வார்கள்.

முனித ஜென்மத்துக்குதான் இத்தனை விரதங்களும் நோன்புகளும் வைக்கப்பட்டன. இந்த ஜென்மத்தை அடைந்தவன் தன் செய்கைகளால் உயரவும் முடியும் தாழ்ந்து அழியவும் முடியும். தாழாமல் காப்பது தானம் என்றும் அதனை தரித்து இருக்கச் செய்வதால் தர்மம் என்றும் அழைக்கப்பட்டன. எனவே மகத்துவம் மிக்க மார்கழி மாதத்தில் சுத்தக் காற்றும் இதந்தரும் குளிரும் மிக்கது. இம் மாதத்தில் இன்மை பயக்கும் விரதங்களும் அனுஷ்டித்து உய்வோமாக.

# நகுலேஸ்வரம்



## (கீரிமலைச் சிவன் கோவில்)

இலங்கையிலுள்ளபுராதனசிவாலயங்களுட் கீரிமலைச் சிவன் கோயிலும் ஒன்றாகும். யாழ்ப் பாணத்துச் சிவன் கோயில்களில் அதுவேமிகப் பழமையானது. நகுலேஸ்வரம் திருத்தம்பலேஸ் வரம் என்னும் பெயர்களால் அது வழங்கி வரு கின்றது. பூர்வீக காலத்தில் நகுலேச பாசுபதர்க ளினால் அமைக்கப் பெற்றதென்று கருதுவதற்று இடமுண்டு. அதுவே யாழ்ப்பாணத்திலே தலயாத் திரிகைகளுக்கு மிகப் பிரசித்தமான தலமாகும். திரு விழாக் காலங்களிலும் பிறசமயங்களிலும் குடா நாட்டின் பல ஊர்களிலிருந்தும் ஆயிரக்கணக்கில் அடியார்கள் ஆலய தரிசனத்திற்கு அங்கு செல்வது நெடுங்காலவழமை. அங்குள்ள சமுத்திரத் தீர்ததத் தின் காரணமாக நகுலேஸ்வரம் யாழ்ப்பாணத்துச் சைவர்களின் சமயசாரங்களில் மிகுந்த சிறப்பு




பேராசிரியர். சி.பத்மநாதன்
தகைசார் பேராசிரியர்
வேந்தர், யாழ்ப்பாண
பல்கலைக்கழகம்




டையதாய் விளங்குகின்றது. சபிண்டீகரணம், அஸ்திசஞ்ஜனம் முதலிய கிரியைகளுக்குச் சிறப்பா கவுள்ள புண்ணிய த்திரமாகவும் அது நெடுங்கால மாக விளங்கிவருகின்றது.

நகுலேஸ்வரம் பற்றிய ஐதீகங்களும்வரலாற் றுக் குறிப்புகளும் யாழ்ப்பாண வைபவமாலையிற் கூறப்பெற்றுள்ளன. அது பற்றி அந்நூல் கூறும் கருத்து மேல் வருடதறு உள்ளது.

அரசாட்சியை ஆரம்பிக்க முன்னமே விஜயராசன் தன் அரசாட்சிக்குப் பாதுகாப்பாக நாலுதிக்கிலும் நாலு சிவாலயங்களை எழுப்பிக் கொண்



டான். கீழ்த்திசைக்குத் தம்பலகாமத்துக்டகாணே சர் கோவிலை நிறுத்தி,மேற்றிசைக்கு மாதோட்டத் திற் பழுதுபட்டுக் கிடந்த திருக்கேதீச்சரச் சிவாலயத் தைப் புதுப்பித்து, தென்றிசைக்கு மாத்தறையிற் சந்திரசேகரேச்சரன் கோவிலையெழுப்பி, வடதிசை க்கு கீரிமலைச் சாரலில் திருத்தம் பலையெனும் பகு தியிலே திருத்தம்பலேசுவரன்,திருத்தம்பலேசுவரி கோயில்களையும் அவைகளின் சமீபத்திலே கதிரை யாண்டவர் கோயிலையும் கட்டுவித்து அவ்வால யங்களுக்குப் பூசனை நடத்தும்படி நீலகண்டாசா ரியனின் மூன்றாங் குமாரன் வாமதேவாசாரியார் என்னும் காசியிற் பிராமணனையும் அவன் பன்னி யாகிய விசாலாட்சியம்மாளையும் அழைப்பித்து அக்கிரகாரம் முதலிய வசதிகளுங் கொடுத்திருத்தி வைத்தான். அக்கோயில் அவ்விடத்துத் தோன்றிய காரணத்தால் அந்தக் கிராமம் கோயிற்கடவை எனப் பெயர் பெற்றது.

கீரிமலை பற்றி யாழ்ப்பாணவைபவமாலை கூறுவதெல்லாம் வரலாறன்று விஜயராசனுக்கும் யாழ்ப்பாணத்திற்கும் எதுவிதமான தொடர்பும் இல் லை. இந்நூலாசிரியரான மயில்வாகனப் புலவர் ஒல்லாந்தராட்சிக் காலத்தில் 18ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் யாழ்ப்பாணத்துப் பூர்வகுடிகளின் உற் பத்தி பற்றி நகுலேஸ்வரம் பற்றிய ஐதீகங்களைக் குறிப்பிடுகின்றனர் அவரின் குறிப்புக்களிலிருந்து மேல்வரும் செய்திகளை அறிந்து கொள்ளமுடீகின் றது. (1) கீரிமலைச் சிவன் கோயில் திருக்கேதீஸ் வரம், திருக்கோணேஸ்வரம் என்பவற்றையொத்த புராதனமானது என்று அவர் கருதினார். (2) அங்கு முற்காலத்தில் சிவனுக்கும் அம்மனுக்கும் வெவ்வே றான கோயில்கள் அமைந்திருந்தன. (3)நகுலேஸ வரம் யாழ்ப்பாணத்துக் கோயில்களிலே மிகப் பிரசி த்தமானதென்றும் புராதனமானதென்றும் அவரு டைய காலத்திலே கருதப்பட்டது. (4) அங்கு வழி பாடுகளை முறைப்படி செய்வதற்கென்று கோயிற் கடவையிற் முற்காலத்தில் அக்கிரகாரமொன்று அமைக்கப்பெற்றிருந்தது. அங்கு வாழ்ந்தபிராம ணர் நீலகண்ட ஆசாரியாரின் வழியினர். இவ்வம்ச ங்களை மேலும் தெளிவுபடுத்துவதற்கு ஏதுவான ச ான்றாதாரங்கள் கிடைக்குமாறில்லை.

கோயில்களின் உற்பத்தியினையும் தலச்சிறப்பி னையும் விளக்கும் வண்ணமாய் எழுந்த புராணக் கதைகள் பல உள்ளன. நகுலமுனிவரைப் பற்றி யகதை இத்தகையது. ஆதனை மயில்வாகனப் புலவர் மேல் வருமாறு கூறுவர். முற்காலத்தில் நகுலமுனியென்னும் ஒரு இருடி அங்குள்ள மலைச் சாரலிலே சிலகாலந் தங்கியிருந்து தீர்த்தமாடி வந்த பொழுது தன் முகத்துக்கிருந்த அங்கவீனம் நீங்கிப் போனது கண்டு அத்தலவிசேடத்தையும் தீர்த்தமகி மையையும் குறித்து வியப்புற்று அவ்விடமே தனக் குத் தவம் செய்வதற்கேற்ற இடமென்று அம்மலை முழைஞ்சியிலே வாசஞ்செய்து கொண்டிருந்தார். அம்முனிவனுக்கு கீரிமுகம் மாறிய காரணத்தால் அம் மலைக்கு கீரிமலையென்பார்கள். விஜயராசன் அவ் விடத்திற் சிவாலயங் கட்டுவித்த பின் நகுலமுனி வர் அவ்வாலயங்களில் இறங்கியிருந்து வழிபாடு பண்ணிவந்தார். அதனால் திருத்தம்பலேசுவரன் கோயிலை நகுலேசர் கோயிலென்றும், திருத்தம்ப லேசுவரியம்மன் கோயிலை நகுலாம்பிகையம்மன் கோவிலென்றும் வழங்கி வந்தார்கள்.

நகுலம் என்பது கீரி எனப் பொருள்படும் சமஸ்கி ருதமொழிச் சொல்லாகும். நகுலமுனிவர் வழிபாடு; செய்த தலம் கீரிமலை என்றும் நகுலேஸ்வரம் என்றும் பெயர் பெற்றது என்ற ஐதீகம் நகுலேச பாசுபதர்களின் காரணமாகக் கீரிமலைச் சிவன்கோ யிலுக்கு இப்பெயர்கள் ஏற்பட்டன என்ற வரலாற் றுண்மையை உணர்த்துவதாகும்.

கீரிமலையின் தலச்சிறப்பினை விளக்கும் கதை யொன்று கைலாசபுராணத்தில் இடம்பெற்றுள்ளது. இராவணனின் யாழோசையினாலே பெரிதும் கவ ரப்பெற்ற சுசங்கீதன் என்னும் கந்தருவன் இராவ

ணனின் யாழினைக் கவர்ந்து கொள்ளுவதற்குத் தருணம் பார்த்திருந்தான். இராவணனை இராம பாணம் தாக்கியபோது அவன் கையிலிருந்த யாழ் நழுவிவிழ, அதனை சுசங்கீதன் பற்றிக் கொண் டான். அவன் கீரிமலையிலே யாழ் வாசினைபுரிந்து பரமேஸ்வரனைத் தொழுதனன். பார்வதிசமேதரா கக் காட்சி கொடுத் தமகேஸ்வரன் காடு கொன்று நாடாக்கி நகரமைத்து அதனை வீணாபணம் என் னும் பெயரோடு ஆட்சிபுரிவாய் என்று திருவாய் மலர்ந்தருளினார். யாழ்ப்பாணம் என்னும் பெய ரின் உற்பத்தியை விளக்குமாறு அமைந்த இக்கதை யாழ்பாடிகதையின் மிகப்பழைய வடிவமாகும். இத னைமேல் வரும் கைலாசபுராண செய்யுள்களில் காணலாம்.

*வானவரகடொழுங் கோணையண்ணலையுந்*
*தேவியையும் மகிழ்ந்துமுன்னாட்*
*டேனனையமொழிக் கங்குற் கரிபுதல்வ*
*னன்பினொடுசெய்யசாம*
*கானமதனாற் றுதிக்கும்படிகரத்திற்*
*றரித்திடுமக் கலத்தைக் கண்டே*
*யானசுசங் கீதனெனுங் கந்தருவனதைக்*
*கவர்தற் காசையுற்றான்*

*உற்றதொருசமயம் பார்த்திருந்தவனிராம*
*னுயர் வெங்கோலா*
*விற்றபோழ்தினிற் கவர்ந்து மானுடவடிவாகி*
*யிணையில் கீரிய*
*பொற்பை யெய்திக் கங்கா சங்கமப் புணரி*
*நதியாடிப் பொருவிலாத*
*பற்றொடரொன்றனை யேத்தி வீணாகானந்*
*தன்னைப் பண்ணினனால்*

*பண்ணுதலுஞ் சிவபிரான் மகிழ்ந்துவெளிப்பட்டுச்*
*சுசங்கீதனைப் பார்த்*
*துண்ணெகிழ்ந்துநீவீணாகரனாய்*
*நின்றிசைத்தமையாலோங்குமிங்ஙன்*
*மண்ணவர்கள் புகழ் வீணாபணமெனும்*
*பெயராகமாற்றிப் பாங்க*
*ரெண்ணில் பதலமுளவிக் காட்டைவெட்டி*
*றகராக் கென்றியம்பிப் போனான்*

*போனவரின் மொழிப்படியச் சுசங்கீதன்*
*காட்டை வெட்டிப் புரமதாக்கித்*
*மானழிந்த வாலயங்க டனையுமெழில் பெறப்*
*புதுக்கிச் சனங்கடம்மை*
*யானகுடியாயிருத்தி நகுலேசரடி பரவியருள்*
*பெற்றேகி*
*மானிலமெலாம் புகழத் தனதுலகந்தனி*
*லடைந்துவாழ்ந்தானன்றே.*

நகுலேஸ்வரம் யாழ்ப்பாணத்திலுள்ளதலங்களுள் மிக வும் புராதனமானது. அங்குள்ள சமுத்திர தீர்த்தம் பாவ விமோசனங்களையும் இராசபோகம் முதலான இம்மை பலன்களையும் கொடுக்கவல்லது. அங்கு வழிபா டாற்றிய சுசங்கீதனுக்கு யாழ்ப்பாணத்தின் ஆதிபத்தியம் இறைவனாலே வழங்கப்;பெற்றது. அங்கே குடிப்பெ ருக்கமும் வேளாண்மை போன்ற தொழில்களும் ஆரம்ப மாகியகாலம் முதலாகவே நகுலேஸ்வரம் நிலைபெற்று வருகின்றது என்னும் சிந்தனைகள் இப்பாடல்களில் இடம்பெற்றுள்ளமை கவனத்திற்குரியது.

கீரிமலைத் தலத்தின் சிறப்பினை விளக்கும் அம்ச ங்கள் மாருதப்புரவல்லி பற்றிய கதையிலும் காணப்ப டுகின்றன. அக்கதை யாழ்ப்பாண வைபவமாலையில் மேல்வருமாறுள்ளது.

சோழ தேசாதிபதியாகிய திசையுக்கிரசோழன் மகள் மாருதப் புரவல்லியென்பவள் தனக்கிருந்த குன்ம வியா தியினால் மெலிந்தவளாய் வியாதியை வைத்தியர்கள் ஒருவரும் சுகமாக்க முடியாததினால் இனித்தீர்த்த யாத் திரையாகுதல் செய்து பார்த்தால் சுகம் வரவும் கூடும் என்றெண்ணிக் காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து புறப் பட்டு அங்குமிங்கும் போய்த் தீர்த்தமாடி வருகையில் ச ஏந்தலிங்கமெனும் ஒருசந்நியாசி கண்டு,'உன் வியாதி





பண்டிதர் ஒருவராலும் குணமாக்கத்தக்கதல்ல. நீ இப்பொழுது எடுத்த முயற்சியே உனக்குச் சுகம் தரத்தக்கது. இலங்கையின் வடமுனையிலே கீரிமலை என்றொரு மலையுண்டு. அது சமுத்திர தீர்த்தத்திலுள்ளது. அங்கே உவர்ச்சலமத்தியில் சுத்ததீர்த்தமும் மலையருவித் தீர்த்தமும் கலந்து உத்தமதீர்த்தம் ஒன்றுண்டு. உலகத்திலுள்ள எந்தத் தீர்த்தங்களிலும் முக்கிய தீர்த்தமாயிருக்கின்றது. அதிலே நீபோய் நீராடிச் சிலகாலம் தங்கியிருந்தால் சுகமடைவாய்' என்று சொல்ல, அச்சொற்படி மாருதபுரவல்லி புறப்பட்டுத் தாதிமாரும் தோழிமாருஞ் சேனை வீரருஞ் சூழ்ந்துவரக் கீரிமலைச் சாரலில் வந்திறங்கிக் குமாரத்தி பள்ளமென்னும் இடத்தில் பாளயம் போட்டுக் கொண்டிருந்து நகுலமுனிவரைக் கண்டு சஎட்டாங்கமாக வணங்கி அவரால் ஆசிர்வாதம் பெற்றுக் கொண்டு அத்தலவிசேடத்தையும் தீர்த்தமகிமையையும் அத்தீர்த்தத்தில் ஆடித் தனக்குக் கீரிமுகம் மாறின செய்தியையும் அம்முனி சொல்லக்கேட்டு மகாசந்தோசத்துடன் தீர்த்தமாடிச் சிவாலயதரிசனஞ் செய்து வந்தாள். சிலகாலத்தில் அவளுக்கிருந்த குன்மவலியுந் தீர்ந்து குதிரை முகமும் மாறிற்று. மாறவே மாருதபுரவல்லியின் யௌவன சொரூபத்தைக் கண்டவர்கள் ஆச்சரியம் கொள்ளாதிருந்ததில்லை.

அக்காலத்திலே கதிரைமலையிலிருந்து உக்கிரசிங்க மகாராசன் நகுலேசர் கோவிலைத் தரிசிக்க மூன்றாந் தரம் கீரிமலைச் சாரலில் வந்திறங்கி வள்வர்கோன் பள்ளத்தில் பாளையம் போட்டிருந்தான். அவன் மாருதப் புரவல்லியை நகுலேசர் சந்நிதானத்திலிலே கண்டு அவள் பேரழகினால் மயங்கி மிகுந்த ஆச்சரியம் கொண்டு தான் அவளை விவாகம் செய்ய வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டான்.

தீரா நோய் தீர்க்கவல்ல அற்புதமான தலம் கீரிமலை என்ற கருத்தினை வலியுறுத்தும் பாங்கில் அமைவதே மாருதபுரவல்லியின் கதை. அங்கே சமுத்திரக் கரையிலே நீராடியதும் நகுலமுனிவரின் கீரிமுகம் அகன்றது. அக்கரையிலே நீராடியதும் சோழகுமாரியான மாருதப்புரவல்லியின் குன்ம நோய் நீங்கியது. அவள் குதிரைமுகம் நீங்கப் பெற்று சுந்தரவதனியாகி உக்கிரசிங்கனோடு கூடி இராசபோகம் பெற்றாள். பத்தாம்,பதினோராம் நூற்றாண்டுகளிலே சோழவம்சத்து இராசகுமாரனொருவனும் அவனது தேவியும் கீரிமலையில் வழிபாடாற்றித் திருப்பணிகள் செய்தமை பற்றிய செய்திகள் காலப்போக்கிலே விகாரமாகி நாட்டார் வழக்கிலே மாருதப்புரவல்லி பற்றிய ஐதீகங்கள் தோன்றியிருத்தல் கூடும்.

யாழ்ப்பாண ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்திலே நகுலேஸ்வரம் அரசர்களின் ஆதரவுக்கும் அபிமானத்திற்கும் உரிய தலமாக விளங்கியது. நல்லூரில் இராசதானி அமைத்த சிங்கையாரின் கீரிமலையோடு தொடர்பு கொண்டிருந்தான் என்று சொல்லப்படுகின்றது. இதனைக் குறித்து மயில்வாகனப் புலவர் மேல்வருமாறு கூறுவர்.

சிங்கையாரிய மகாராசனும் புவனேகபாகு மந்திரியும் கீரிமலைக்குப் போய்த் தீர்த்தமாடிச் சிவாலய தரிசனமுஞ் செய்து கொண்டு அவ்வாலய விசாரணையை அரசாட்சி விசாரணைக்குள்ளாக்கிக் கொண்டு கந்தசுவாமி கோவிலில் வந்து பெரிய மனத்துளாரின் குமாரர் சிதம்பர தீட்சிதரின் மகன் சின்ன மனத்தூர் விருந்திட உண்டு இளைப்பாறினார்கள்.

இதுவரைநாம் கவனித்தவற்றிலிருந்து கீரிமலைச் சிவன் கோயிலான நகுலேஸ்வரம் மிகப் புராதனமானது என்பதும் யாழ்ப்பாணத்துச் சைவக் கோயில்களில் பறங்கியர் காலம் வரை மிகப் பிரதானமாக ஒன்றாக விளங்கியது என்பதும ;தெளிவாகின்றன. இலங்கையின் முதலாவது அரசனென்று கொள்ளப்படும் விஜயராசன் அதனை நிர்மாணித்தான் என்று கருதப்படுமளவிற்குப் புராதனமுடையதாக அது விளங்கியது. யாழ்ப்பாணத்து வரலாற்றின் பிரதானகதைகள் எல்லாவற்றிலும் அதற்குச் சிறப்பிடம் வழங்கப் பெற்றுள்ளது. யாழ்ப்பாணத்துச் சமுதாய உற்பத்தியினை விளக்குவனவற்றுட் காலத்தால் முற்பட்டதும் கைலாசபுராணத்திலே காணப்படுவதுமான சுசங்கீதன் என்னும் யாழ்பாடி பற்றிய கதையில் கீரிமலை சிறப்பித்துக் கூறப்பெற்றுள்ளது. யாழ்ப்பாணப் பிரதேசத்தின் தனித்துவமான வரலாற்றின் ஒருகால கட்டத்தினை விளக்குவது போன்றதான உக்கிரசிங்கன்,மாருதப்புரவல்லி என்போர் பற்றிய ஐதீகங்களிலும் அதுவே பிரதம தலமாயுள்ளது. சிங்கையாரியனைக் கீரிமலையோடு தொடர்புபடுத்தும் யாழ்ப்பாண வைபவமாலைக் குறிப்பானது நகுலேஸ்வரம் ஆரியச் சக்கரவர்த்திகளின் பரிபாலனத்தில் அமைந்திருந்தது என்பதை உணர்த்துகின்றது. யாழ்ப்பாணத்து அரசர்கள் தங்களுக்கு இறைகடமையாகவும் வருமானமாகவும் கிடைத்த பணத்தின் ஒரு பகுதியை ஆலயபரிபாலனத்திற்குச் செலவிட்டார்கள் என்பதைப் போர்த்துக்கேயரின் ஆவணங்

கள் மூலமாக அறிய முடிகின்றது. நகுலேஸ்வரத்திலே மூன்றுபிரகாரங்களும் ஐந்து கோபுரங்களும் இருந்தன என்பது ஐதீகம். கி.பி 1621 ஆம் ஆண்டளவிலே யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றிய போர்த்துக்கேயர் நகுலேஸ்வரம்,நல்லூர்க்கந்தசுவாமி கோயில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் முதலிய ஆலயங்கள் யாவற்றையும் இடித்தழித்தனர். பரராசசிங்கமுதலி இறந்த பின் பறங்கிக்காரர் தாங்கள் இடியாமல் விட்டிருந்த ஆலயமெல்லாம் இடிப்பித்தார்கள். அப்பொழுது பரசுபாணி ஐயரென்னும் பிராமணன் கீரிமலைச் சாரலிலுள்ள தேவாலயங்களின் தட்டு முட்டுக்களையும் விக்கிரங்களையும் கிணறுகளில் போட்டு மூடி வைத்தான்.

இவ்விதமாக பல கோயில்களுக்குரிய அசல மூர்த்திகளும் உலோகப் படிமங்களும் நிலத்திற் புதைத்தன. அவற்றுட் சில நிலத்தை வெட்டும் சமயங்களிலே எதிர்பாராத வண்ணமாய்க் கிடைத்தன. ஆயினும் கீரிமலைக் கோயில்களுக்குரிய தொல்பொருட்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை.

ஏறக்குறைய 180 வருடங்களாகப் பறங்கியரின் ஆட்சியிலும் ஒல்லாந்தரின் ஆட்சியிலும் தடைசெய்யப்பட்டிருந்த சைவசமயம் பிரித்தானியரின் ஆட்சியிலே பத்தொன்பதாம் நூற்றாண்டில் புனருத்தானம் பெற்றது. முன்பு பறங்கியர்களால் அழிக்கப்பட்ட கோயில்களின் தளங்களிலே புதிய கோயில்கள் உருவாக்கப்பெற்றன. நகுலேஸ்வரத்தைப் புனருத்தானஞ் செய்வதற்கான முயற்சிகள் ஆறுமுகநாவலரால் மேற்கொள்ளப்பட்டன. 1878ஆம் ஆண்டு வெகுதானிய வரும் வைகாசிமாதம் 24 ஆம் திகதி கீரிமலைச் சிவன் கோயில் பற்றி அன்னார் ஒரு விஞ்ஞாபனம் வெளியிட்டனர். ஆறுமுகநாவலர் சரித்திரம் என்னும் நூலில் திரு.த.கைலாசபிள்ளை மேல் வருமாறு கூறியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கீரிமலையில் ஒருசிவாலயம் முற்காலத்திலிருந்து அழிந்து போயிற்று. இந்த ஸ்தலத்திலே வேறொரு சிவாலயம் அமைக்க வேண்டுமென்று நினைத்து 'கீரிமலைச் சிவன் கோயில்' என்னும் பெயர் கொடுத்து ஒரு பத்திரிகை எழுதித் தமது கையெழுத்தோடு வெளிப்படுத்தி அதற்காக அங்கே போய் இடமும் பார்த்து வகுத்து அவ்வியத்தில் முயற்சி செய்யும்படி பிராமண குருமாரையும் தூண்டிவிட்டார். இப்போது அங்கே அமைக்கப்பட்டிருக்கும் கோயிலும் அதுவே இடமும் அதுவே.

கா.தியாகராசக் குருக்கள் 1882 ஆம் ஆண்டு சித்திரபானுவரும் ஐப்பசி மாதம் அச்சிடுவித்து வெளியிட்ட ஆவேதனத்தில் கீரிமலைச் சிவன் கோயிலின் புனருத்தாரனம் பற்றி நாவலர் பெருமான் மேற்கொண்ட முயற்சிகளை விபரித்துள்ளனர். வண்ணார் பண்ணை திரு.வை.ஆறுமுகம் போன்றவர்களின் ஆதரவோடு திருப்பணி வேலைகள் நிறைவேற்றப்பட்டு 1895 ஆம் ஆண்டு மன்மதவரும் ஆனிமாதம் சிவலிங்கம் பிரதி;ஐட செய்யப்பெற்றுக் கும்பாவிஷேகம் நடைப்பெற்றது.



1918 ஆம் ஆண்டு கோயில் தற்செயலாகத் தீப்பற்றி எரிந்து. அதன்பின் வெவ்வேறு காலகட்டங்களிலே திருப்பணிவேலைகள் நடைபெற்றன. இந்தியாவிலிருந்து சிவாகமங்களிலே விற்பன்னகராக விளங்கிய சிவாச்சாரியார்களை வரவழைத்து 1953ஆம் ஆண்டிலே கும்பாபிஷேகத்தைச் சிறப்பாகச் செய்தனர். 1955ஆம் ஆண்டிலே சிவன் கோயில் வாசலில் கொடியேற்றி வருடாந்த மகோற்சவத்தைத் தொடங்கினர். 1973 ஆம் ஆண்டில் மகாகும்பாவிஷேகம் சிறப்புடன் நடைபெற்றது. அம்மன் கோயிலில் 1976ஆம் ஆண்டு முதலாக வருடாந்த உற்சவம் நடைபெற்று வந்தது.

ஆலயத்தோற்றம்

சிவன் கோயில் கர்ப்பக் கிரகம், அர்த்த மண்டபம்,மகா மண்டபம்,நிருத்தமண்டபம் கோபுரவாயில், பரிவார தேவர் கோயில்கள்,பிரகாரம் என்னும் அமைப்புக்களுடன் விளங்குகின்றது. சுணீவாகம விதிகளுக்கும் சிற்பசாத்திர முறைகளுக்கும் அமையவே ஆலயத்தின் அம்சங்கள் யாவும் உருவாக்கப் பெற்றுள்ளன. கோயிலின் அடித்தளமான பீடம் வெள்ளைக் கல்லினால் வேலைப்பாடுகளோடு அமைந்துள்ளது. இங்குள்ள அலங்கார வேலைப்பாடுகளோடு அமைந்த தூண்களும் வெள்ளைக் கற்றூண்களாகும். விமானத் தளங்களும் வரிவண்ண வேலைப்பாடுகளுடன் வெள்ளைக் கல்லினால் ஆக்கப் பெற்றுள்ளன. இறையகத்தின் தெற்கு மாடத்திலே தணீணாமூர்த்தியும் மேற்கு மாடத்திலே இலிங்கோற்பவரும் அமைந்துள்ளனர். மகாசிவராத்திரி தினத்திலே இலிங்கோற்பவருக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெறும்.

நிருத்த மண்டபத்தின் முகப்புச் சுவரிலே பார்வதி பரமேஸ்வரரின் திருக்கல்யாண வைபவம் அழகுமிக்க ஓவியமாகச் சித்தரிக்கப் பெற்றுள்ளது. நான்முக திருமணச் சடங்கினைச் செய்யத் திருமால் தாரைவார்த்துக் கொடுக்கும் காட்சி கவர்ச்சிமிக்கதாய் அமைந்துள்ளது. தேவர்களும் அசுரருமாய் கூடிப் பாற்கடலை கடைய ஆலகாலம் பரவியமை, திருநீலகண்டர் அதனை பருகி உலகினைக் காத்தமை, பகீரதன் தவம் புரிந்ததன் பயனாகக் கங்கை ஆகாயத்திலிருந்து உற்பவித்து உய்யும் வண்ணம் நிலவுலகிலே பாய்ந்தமை முதலிய கதைகள் பிரகாரச் சுவரிலே எழில்மிகு ஓவியங்களாக



அமைக்கப்பெற்றுள்ளன.

பிரகாரத்தின் உள்ளே பரிவார தேவர்களின் ஆல யங்கள் உள்ளன. அவை தள அமைப்போடு கூடிய விமானம் பொருந்தியனவாகும். பிள்ளையார், சண்மு கர், சோமாஸ் கந்தர், மகாவி;ணு, மகால;மி, பஞ்சலிங் கவடிவிலான பரமேஸ்வரர் ஆகியோரின் ஆலயங்கள் மேற்குப் புறத்திலுள்ளன. கிழக்கிலேவைரவர் சந்நிதான மும் நவக்கிரக நிலையமும் உள்ளன. எல்லாப் பரிவா ரதேவர் ஆலயங்களிலும் மகோற்சவம், திருவுலா ஆகி யன நடிபெறுவதற்கேற்ற வண்ணமாக பஞ்சோலக வார்ப்பு விக்கிரகங்கள் அமைக்கப் பெற்றுள்ளன.

நிருத்த மண்டபத்தின் வடபால் நடராஜரின் உருவத் தைத் தெற்கு நோக்கிய வண்ணமாய் அமைத்துள்ள னர். இரண்டாம் பிரகாரத்தின் வடபுறத்திலே துர்க்கை அம்மனின் கோயில் காட்சியளிக்கின்றது. நவராத்திரி விழாவும் மானம்பூ விழாவும் அங்கு சிறப்புற நடைபெ றுவது வழக்கம்.

## நித்திய நைமித்திய உற்சவங்கள்

நகுலேஸ்வரத்திலே சிவாகம வழிப்படி நித்திய, நைமித்திய உற்சவங்கள் நடைபெறுவது வழக்கம். திருப்பள்ளியெழுச்சி முதலாக அர்த்தசாமப் பூசை ஈறாக நாள் தோறும் ஆறுகாலப் பூசை நடைபெறும். இங்கு மூலமூர்த்திக்குத் திருமணமாகிய சிவாச்சாரியர்களே பூசைசெய்வர்.

முடதப் பிறப்பு,வருடப் பிறப்பு,சித்திரைப் பௌர் ணமி,வைகாசிவிசாகம்,ஆனி உத்தரம்,ஆவணி மூலம்,மானப்பூ,புரட்டாதிசனிவாரம்,ஐப்பசிவெள் ளி,கார்த்திகைவிளக்கீடு,மார்கழித் திருவெம்பாவை, திருவாதிரை,சொர்க்கவாயில் ஏகாதசி,தைப்பொங் கல்,தைப்பூசம்,மாசிமகம்,பங்குனிஉத்தரம் முதலான தினங்களிலே நைமித்திய உற்சவங்கள் சிறப்பாக நடை பெறும்.

இவற்றோடு மாதந்தோறும் சோமவார விழாக்கள் அலங்கார உற்சவங்கள் நடைபெறும். கார்த்திகை மாதத்து நித்திய சோமவார விழாக்கள் முழுவதும் சி றப்பாக நடைபெற்றுச் சங்காபிஷேகத்தோடு நிறைவு பெறும். சுக்கிர வாரந்தோறும் விரதம் மேற்கொள்ளும் அடியார்கள் பெருந் தொகையானோர் ஆலயம் செ ன்று வழிபாடு செய்வர்.

புரட்டாதிச்சனி நான்கு வாரமும் நகுலேஸ்வரத்திலே திருவிழா நடைபெறும். கடைசிச் சனிக்கிழமைகளில் எள் எண்ணெய் எரித்து வழிபடுவதற்கு யாழ்ப்பாணத் தின் எல்லாப் பாகங்களிலிருந்தும் அடியார்கள் ஆல யத்துக்குச் செல்வர். மார்கழிமாத ஏகாதசியில் புராணப டனமும் நடைபெறும்.

சிவன் கோயிலில் வருடாந்த மகோற்சவம் மாசி மாதத்திலே நடைபெறும். சுவிராத்திரி அமாவாசை யன்று தீர்த்த உற்சவம் நிகழும். அம்மன் கோயிலில் பங் குனி மாதத்திலே கொடியேற்றத் திருவிழா நடைபெறும். சித்திரை வருடப் பிறப்பிலே தேர்த் திருவிழாவும் தீர்த்தமும் நடைபெறுமு;. மகோற்சவ காலங்களில் பெருந்தொகை யான அடியார்கள் கீரிமலைக்குச் சென்று விரதமிருந்து ஆலயத்திலே வழிபடுவது வழக்கம். அவர்கள் அங்கு தங் கிச் செல்வதற்கு வசதியாக மடங்களும் உள்ளன.

## புராணபடனம்

சைவர்கள் வாழும் பகுதிகளிலே புராணபடனம் சிறப் புற்று விளங்கிய பிரதேசம் யாழ்ப்பாணமேயாகும். அங் குள்ள கோயில்களில் இம்மரபினைப் பொறுத்த வரை யில் கீரிமலைச் சிவாலயம் முதன்மை வாயந்;ததாகும்.

கந்தபுராணம்,பெரியபுராணம்,திருவிளையாடற் புராணம் ஆகியன இங்கு படிக்கப்படும். இவற்றோடு நகுலாயபுராணம், ஏகாதசிப் புராணம் போன்றனவும் படிப்பார்கள். பெரியபுராண படனமும் நகுலாயபுராண படனமும் சிவன் கோயிலில் கொடிக்கம்பத்திற் குமுன் பாக நடைபெறும். கந்தபுராணபடனம் முருகன் சந்நிதா னத்திலே நிகழும். ஏகாதசி புராணத்தை வி;ணு ஆலயத் தின் முன்பு படிப்பார்கள். மார்கழித் திருவெம்பாவைக் காலத்திலே திருவாதவூரடிகள் புராணத்தை படித்து பயன் சொல்லுவது வழக்கம்.

திருவிழாக் கோலத்தோடு புராணபடனம் ஆரம்ப மாகும். அதில் கலந்து கொள்வோர் ஆசார அனு;டான சீலராயிருப்பர். சுவாச்சாரியார்கள் புராண படனத் தைத் தொடக்கி வைப்பது இக்கோயிலுக்குரிய வழக்காகும். பின்பு அவர்களோடு பிறருங் கலந்து கொள்வர். ஏரம்பையர்,அப்பாசாமிஐயர்,வித்துவசிரோ மணி,பொன்னம்பலபிள்ளை,த.கைலாசபிள்ளை முத லிய வித்துவான்கள் இங்கு புராணபடனம் செய்தனர். அவர்களின் காலத்திற்கு பின்பு கருகம் பானை சங்கரப் பிள்ளை, நவசிவாயம் முதலியோர் இதனை நடத்திச் சென்றார்கள்.

கோயில் பற்றிய புராணங்களும் பாடல்களும்

பத்தொன்பதாம் நூற்றாண்டிலே சைவாலயங்கள் புனரமைக்கப் பெற்றுச் சைவசமய மறுமலர்ச்சியும் விழிப்புணர்வும் மேலோங்கியிருந்த காலத்தில் கோயில் களைப் பற்றிய மரபுவழியான ஐதீகங்களை அடிப்

படையாகக் கொண்டு பலவகையான பிரபந்தங்கள் பாடப்பெற்றன. இலக்கியப் புலமையும் பாட்டியல் இலக்கணப் பயிற்சியும் சைவசித்தாந்த சாத்திர நூலறிவும் சமயாபிமானமும் கொண்ட வித்துவான்கள் பலர் இருந்தனர். அத்தகையோர் கோயில்களைப் பற்றிப் பாடிய பிரபந்தங்கள் அநேகம். அவர்கள் புனைந்த கவிதைகள் பெரும்பான்மையும் உன்னதமான இலக்கியப் பண்புகளைக் கொண்டிருக்கவில்லை. ஆவை வித்துவப் புலமையினை வெளிப்படுத்துவனவாகவும் எல்லோராலும் இலகுவில் புரிந்துகொள்ள முடியாதனவாயும் அமைந்திருந்தன. தேவார திருவாசகங்களுக்குரிய இனிமையும் எளிமையும் சிந்தனைச் செறிவும் கவர்ச்சியும் இவற்றிலே காணப்பெறுவதில்லை. எனவே இவை சமுதாயத்தில் அறிமுகமாகி விலாசம் பெறாது முடங்கிக் கிடந்துள்ளன. அச்சில் வெளிவந்த பாடல்களும் கிடைத்ததற்கு அரிதாகிவிட்டன. அவை மீண்டும் அச்சிடப் பெற்று பிரசுரமாகவில்லை. நகுலேஸ்வரம் பற்றிய புராணங்களும் பாடல்களும் இந்நிலையில் உள்ளன.

நகுலாசபுராணம் நகுலேஸ்வரம் பற்றிய தல புராணமாகும். மாதகல் வாசியான ஏரம்பையர் (1847-1914) இதனைப் பாடியுள்ளனர். சுப்பிரமணிய சாத்திரியாரின் மகனாகிய ஏரம்பையர் நல்லூர் சம்பந்த புலவர், நீர்வேலி சங்கர் பண்டிதர் முதலான மகா வித்துவான்களிடத்தில் கல்விபயின்றவர். நீதிசாத்திரம், நாகேஸ்வரி தோத்திரம்,குவாலம்பூர் சிவபெருமானூஞ்சல்,காலிக் கதிரேசரூ;சல் முதலியவற்றையும் இவர் பாடினார் என்பர். நகுலாசல புராணச் செய்யுள் களிரண்டு மேல்வருவனவாகும்.

பகுதியுந் தகுதியும் பாலுணர்த்திடும்
விகுதியும் பெற்றிடை விளங்கிரட்டியால்
நகுலனைப் பணிபவர் நண்ணு மீறதாம்
புகுமுதல் பெற்றடி பொருந்தி வாழ்வரே

ஐந்துறை நிகமத் தம்பின்
அமைந்திடும் முல்லை யக்கம்
நொந்திடும் இடைபொ றைச்சீர்
நுதலினோ டழகு பெற்று
பைத்தொடி சோழ ராசன்
பாவையும் உருவம் மாற்றி
முந்திவந் தெழுந்தாள் நீரின்
மும்முடி யழகு பெற்றே

நகுலாசல புராணத்திற்குச் செ.சிவசுப்பிரமணியம் என்பவர் உரை ஒன்றினை எழுதியுள்ளனர். நகுலேஸ்வர மான்மியம் என்னும் நூலினை நீர்வேலிப் பண்டிதர் ச. சிவப்பிரகாசம் சமஸ்கிருத மொழியில் பாடியுள்ளனர். இதனை அ. குமாரசாமிப் புலவர் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

அராலியூரைச் சேர்ந்த விசுவநாத சாத்திரியார் கவிநயம் மிக்கதான நகுலமலைக் குறவஞ்சி என்னும் பனுவலைப் பாடினார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வாழ்ந்த விசுவநாதர் நாராயண சாத்திரியாரின் புதல்வர். வாக்கிய பஞ்சாங்கத்தை முதன்முதல் கணித்து (16.05.1667) வெளிப்படுத்திய இராமலிங்க முனிவரின் வழித்தோன்றல். வண்ணக் குறவஞ்சி என்பதனையும் இவர் பாடியுள்ளார். தலச்சிறப்பும் மாருதபுரவல்லி,உக்கிரசிங்கன் ஆகியோர் பற்றிய கதைகளும் நகுலமலைக் குறவஞ்சியிலே சிறப்பாக வர்ணிக்கப் பெற்றுள்ளன.

நகுலேசர் ஊஞ்சல் என்பது குமாரசாமிப் புலவரால் பாடப்பெற்றது. மகோற்சவ காலங்களிலே தீர்த்தத் திருவிழாவின் முடிவிலே திருவூஞ்சல் நடைபெறும். அவ் வைபவத்திலே நகுமீலுசர் ஊஞ்சல் படிக்கப்படும். நகுலேசர் சதகம் என்னும் பிரபந்தம் பண்டிதர் இ.நமசிவாயத்தின் பெயரால் வழங்குகின்றது. செ. சிவசுப்பிரமணியம் என்பார் நகுலேஸ்வரம் மீது பாடிய பல பக்திரசக் கீர்த்தனைகளும் உள்ளன. சொல்லலங்காரச் சிறப்புடையதான நகுலேசுவரர் விநோத விசித்திர கவிப் பூங்கொத்து என்பதை மயில்வாகனப் புலவர் (1875-1918) பாடியுள்ளார். மயில்வாகனப் புலவர் கணபதிப்பிள்ளையின் குமாரர். வறுத்தலை விளானில் வாழ்ந்தவர். இவர் சுன்னாகம் குமாரசாமிப் புலவரிடம் கல்விகற்றவர். முயிலை மும்மணிமாலை, விநாயக ரகவல், மயிலைச் சுப்பிரமணியர் விருத்தம், ஊஞ்சல்,வைரவர் தோத்திரம்,மாவைப் பதிகம், இணுவைப் பதிகம், துணைவைப் பதிகம் முதலியனவும் இவருடைய படைப்புக்கள் என்பர்.





# 326 வருடங்கள் மண்ணில் புதையுண்டிருந்த கோணேசப் பெருமான் மாதுமையம்பாள் திருவிக்கிரகங்கள்

ஈழத்தின் திருகோணமலை மண்ணில் அமைந்திருக்கும் அனைத்து ஆலயங்களும் தம் விசேட உற்சவங்களின் போது வெளியிடும் அறிவிப்புகளை, விஞ்ஞாபனங்களை கோணேசப் பெருமானை முன்னிலைப்படுத்தியே ஆரம்பிப்பது வழக்கம். தெட்சண கைலாசம் எனும் பெருமையினை தன்னகத்தே கொண்டிருக்கும் திருக்கோணேஸ்;வரம் இன்றளவும் பல சோதனைகளுக்குள்ளாகியும் கூட உலகெங்கிலுமுள்ள சைவப் பெருமக்களினாலும் ஏனையோராலும் மிகுந்த பக்தி சிரத்தையோடு தரிசிக்கப்பட்டு வருகின்ற ஒரு ஆலயமாக திகழ்கிறது.

**கணபதிப்பிள்ளை அருள் சுப்பிரமணியம்**
**திருகோணமலை கோணேஸ்வர ஆலய பரிபாலன சபை**



கீர்த்திமிக்க கோணேசப் பெருமானுடைய ஆலயத்தின் சிறப்பினைச் சார்ந்து திருகோணமலையில் அமைந்திருக்கும் அனைத்து ஆலயங்களின் மேன்மையும் கீர்த்தியும் சிறந்து விளங்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. சமூக அரசியல் மாற்றங்களின் காரணமாக உண்மைகள் மறைக்கப்பட்டு வரலாறுகள் திரித்தெழுதப்படும் இக்கால கட்டத்தில் முடிந்த அளவு கோணேசப் பெருமானது வரலாற்று அற்புதங்களை எமது இளம் சந்ததியினரிடம் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டியது எம் எல்லோருடைய தலையாய கடமையாகிறது.

திருக்கோணேஸ்வரத்தின் சுற்றாடலில் காணப்படும் அனைத்து கொடி செடிகளில் தொங்கிக் கொண்டிருக்கும் நேர்த்தித் தொட்

டில்களும் காசு முடிச்சுகளும், அங்கு அன்றாடம் வருகை தரும் மக்களுடைய வேண்டுதல்களை வெளிப் படுத்துவனவாக உள்ளன. எல்லாம் விதிப்படி நடக் கும் என்கிற வலிதான கருத்தையும் நம்பிக்கையையும் தாண்டி தம் துன்பங்களுக்கு நிவர்த்தி தேடும் மார்க்கங் களைக் கண்டறிய வரும் மக்கள் தம் பிரச்சனைகளை முடிச்சாகக் கட்டி பெருமானிடம் சமர்ப்பித்து விட்டு அவைகளை அவர் அவிழ்த்து தம் வேண்டுதல்களை நிறைவேற்றித் தருவார் என்ற நம்பிக்கையுடன் திரும் புகின்றனர்.

இத்தகைய நேர்த்திகளை சைவ மக்கள் மட்டுமல் லாது வேற்றின மக்களும் நிறைவேற்ற வருகிறார்கள். அம்மக்களோடு அளவளாவி அவர்கள் ஆறுதல் பெற்ற மனநிலையை தெரிந்து கொள்கிற போது கோணேசப் பெருமானின் கருணைக்கு எல்லையேயில்லையென் பது புரிகிறது.

ஆத்மஞானம் பெற்ற பெருமக்கள் இறைவனைத் தமக்குள்ளேயே தரிசித்து அனுபவிக்கும் ஆற்றல் உள்ளவர்கள். ஏனைய மக்கள் ஆலயங்களுக்குச் செ ன்று இறைவனைத் தரிசிக்க வேண்டியுள்ளது. ஆல யங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் இறை விக்கிரகங்களை இறைவனாகப் பாவித்து தம் உள்ளக் கிடக்கைகளை பகிர்ந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

இவர்கள் வழிபடுவதற்கு ஆதாரமாக உள்ளவை ஆலயங்களில் இறைவனை உருவகப்படுத்தும் விக்கி ரகங்கள். இவ்விக்கிரகங்கள் சிற்பிகளினால் வடிக்கப் படுபவை. மனிதரால் செதுக்கப்படும் விக்கிரகங்களி னால் பெரிதாக என்ன செய்துவிட முடியும் என்கிற கேள்விகளுக்கு மத்தியில் கல் என்று பார்ப்பவர்களின் கண்ணோட்டத்தில் கல்லாகவும் கடவுள் என்று பார்ப் பவர்களின் கண்ணோட்டத்தில் கடவுளாகவும் இவ்விக் கிரகங்கள் விளங்குகின்றன.முக்கியமாக, இவ்விக்கிர கங்களின் லட்சணங்கள்,அவற்றிலே பொதிந்திருக்கும் கருணை,மக்கள் மனங்களில் படிந்து விடுகின்றன.

இதற்கு, அவைகளை நிர்மாணித்த சிற்பாசிரியர்க ளின் அர்ப்பணிப்பு,கைத்திறன் காரணமாகிறது. இந்த வகையில், திருக்கோணேஸ்வரத்தில் குடிகொண்டி ருக்கும் கோணேசப் பெருமான், மாதுமையம்பாள் விக் கிரகங்களை செதுக்கிய சிற்பாசிரியர்களின் கைத்திறன் எம்மைப் பிரமிக்க வைக்கிறது. உள்ளத்தில் உண்மை யொளி உள்ளவர்களின் வாக்கினிலே ஒளியுண்டாகும் என்பது எவ்வளவிற்கு உண்மையோ அவ்வளவிற்கு உள்ளத்தில் நிறைந்த பக்தியும் தெளிவும் இருக்கின்ற சிற்பாசிரியர்கள் வடித்த விக்கிரகங்கள் நாளடைவில் பெருமானின் கீர்த்தியையும் கருணையையும் வெளிப் படுத்தும் சாதனங்களாக அமைகின்றன என்பது உறு தியாகிறது.

இந்தியாவிலும் இலங்கையிலும் பல ஆலயங்க ளைத் தரிசித்த பெரியவர்கள் - திருக்கோணேஸ்வ ரத்தில் எழுந்தருளியிருக்கும் கோணேசப் பெருமான் மாதுமையம்பாள் விக்கிரகங்களில் காணப்படும் கருணையையும் தீர்க்கமான ஞானத்தையும் தாம் வேறெங்கும் கண்டதில்லை என்று கூறுகிறார்கள். இதனைஉண்மையாக அனுபவித்தவர்கள் மட்டுமே உணர்ந்து கொள்வார்கள்.



இத்தகைய கருணையும் கீர்த்தியுமிக்க விக்கிரகங் கள் எமக்குக் கிடைத்த வரலாறு அற்புதமானது. 326 வருடங்கள் மண்ணுள்ளே புதைந்து கிடந்த பின்னரும் கூட எதுவித மாசும் படாமல் மீண்டும் வெளிப்பட்ட கோணேசப் பெருமான் மாதுமை அம்பாள் புனித விக்






கிரகங்கள் எமக்குக் கிடைத்த வரலாற்றினை எமது மக்கள் அறிந்திருப்பார்கள். அறியாதவர்களும் உள்ளார்கள்.அவர்களுக்காக, குறிப்பாக எமது குழந்தைகள் அறிந்திருக்க வேண்டும் என்னும் நல்நோக்குடன் கீழே விபரிக்கப்பட்டுள்ளது.

சமயகுரவர்கள் நால்வரினாலும் பாடப்பெற்ற தேவாரப் பதிகங்கள் முதல் மூன்று திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. அந்நால்வரில் ஒருவராக விளங்கிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் கி.பி ஏழாவது நூற்றாண்டில் வாழ்ந்தவர். அவருடைய காலத்தில் திருக்கோணேஸ்வரம் எத்தனை சுபீட்சத்துடனும் அழகுடனும் விளங்கியதென்பதற்கு அவரது கோணேஸ்வரப் பதிகங்களே சான்று. திருக்கோணேஸ்வரத்திற்கு அவர் நேரில் வரவில்லை. நேரில் வராமலே ஒரு திருத்தலத்தினைப் பற்றி பாட வேண்டுமானால் அதற்கு ஞானதிருஷ்டியும் நிறைந்த பக்தியும் அத்திருத்தலத்தைப் பற்றிய பூரண அறிவும் இருக்க வேண்டும். அவர் தமிழ்நாட்டில் வாழ்ந்த காலத்தில் அங்கிருந்த வண்ணமே கோணேசப் பெருமானின் திருத்தலத்தை வர்ணிக்கும் பாங்கு, கோணேஸ்வரம் அன்று எத்தனை உயர்ந்த நிலையில் இருந்தது என்பதை எமக்கு எடுத்துக் காட்டப் போதுமானது.

இத்தனை பழமையும் புகழும் படைத்த தலம் ஆயிரங்கால் மண்டபத்தினைக் கொண்ட பிரமாண்டமான ஆலயமாக விளங்கியது. கி.பி 1624ம் ஆண்டுபோர்த்துக்கீசர் இவ்வாலயத்தினை அழிக்குமுன்னர் வேறு பல வரலாற்றுப் பெருமைமிக்க ஆலயங்களை அழித்திருக்கிறார்கள். கி.பி. 1552ல் சிலாபத்தில் முன்னேஸ்வரம், 1589ல் மன்னாரில் திருக்கேதீஸ்வரம், 1621ல் நல்லூர் கந்தசாமி கோவில் ஆகிய பிரபல தலங்கள் அழிக்கப்பட்டன.

மற்றைய ஆலயங்களை அழித்த போதிலும் திருக்கோணேஸ்வரத்தில் கைவைக்க அவர்கள் ஏனோ முயலவில்லை. அதற்குப் பல காரணங்கள் இருந்திருக்கலாம். ஆயினும் 1622ல் வேறு அந்நிய படைகள் திருகோணமலை இயற்கைத் துறைமுகத்தினை கைப்பற்ற முயற்சிப்பதை அறிந்து கொண்ட போர்த்துக்கீசர், அந்த முயற்சியை முறியடிக்க வேண்டுமானால் திருகோணமலையில் பெரியதொரு கோட்டையைக் கட்டுவதன் மூலம் துறைமுகத்தினைக் காப்பாற்றி தம்வசம் தொடர்ந்து வைத்திருக்கலாம் எனக் கருதினார்கள். கோணேசர்ஆலயத்தில் விலைமதிப்பற்ற விக்கிரகங்களும் நிறைய தங்க நகைகளும் ஏனைய செல்வங்களும் நிறைந்திருந்ததை அவர்கள் அறிந்து வைத்திருந்தார்கள். அவைகளைக் கைப்பற்றுவதோடு ஆயிரங்கால் மண்டபத்தினைக் கொண்ட ஆலயத்தினையும் அழித்து விட்டால் அதிலிருந்து எடுக்கக்கூடிய கற்களைக் கொண்டு கோட்டையைக் கட்டலாம் எனத் திட்டமிட்டார்கள்.

தென்கிழக்கு ஆசியாவிலேயே மிகப்பிரசித்தமாகவும் செல்வம் மிகுந்த ஆலயமாகவும் கருதப்பட்ட திருக்கோணேஸ்வரம்,1624ம் ஆண்டு புத்தாண்டு தினத்தன்று விழாக்கோலம் பூண்டிருந்தது. அன்றைய விசேட பூசைகள் நடந்தேறியபின் பெருமானை நகர்வலத்தில் கொண்டு செல்ல பக்தர்கள் ஆயத்தமானார்கள்.

இந்நேரத்தில் இந்து பூசகர்கள் போல் வேடமணிந்து கோயிலுக்குள் புகுந்தார்கள் போர்த்துக்கீச வீரர்கள். உடனடியாக எடுக்கக்கூடிய அத்தனை செல்வத்தையும் கொள்ளை அடித்தார்கள். அன்று மாலை போர்த்துக்கீச அதிகாரியான கொன்ஸ்ரன்ரீன் டீசா ஆலயத்தைச் சேர்ந்த பூசகர்களிடம் ஆலயத்தில் உள்ள அனைத்து செல்வங்களையும் அடுத்த நாட்காலைக்குள் கையளிக்க வேண்டுமென்றும்;, இன்றேல் கடலில் நிற்கும் கப்பலிலிருந்து குண்டுகள் பொழியப் படும் என்றும் எச்சரிக்கை விடுத்தான்.

அந்த நள்ளிரவில் பூசகர்களும் சில பக்தர்களும் யாரு



டைய கண்ணிலும் படாமல் விக்கிரகங்களோடு வெளி யேறினார்கள். நெருக்கடி மிகுந்திருந்த அந்நேரத்தில் கோணேசர் ஆலயத்திற்கு அண்மையில் இருந்த கடலோ ரத்திலேயே தாம் மறைவாகக் கொண்டு வந்த விக்கிரகங்க ளைப் புதைத்து வைக்க பக்தர்களினால் முடிந்திருக்கிறது. காலையில் எச்சரிக்கைக் காலம் முடிந்ததும் திருக்கோ ணேஸ்வரம் குண்டுமாரி பொழியப்பட்டு அழிக்கப்பட்டது.

கோயிலை இடிப்பதற்குப் பொறுப்பாக இருந்த போர்த் துக்கீசத் தளபதி கொன்ஸ்;ரன்ரீன் டீசாவின் மகனான ஜோறொட்றிகே டீசா கி.பி. 1679ல் வெளியிட்ட ஒரு நூலில் திருக்கோணேஸ்வரத்தினைப் பற்றி பின்வருமாறு எழுதியுள்ளார்:

'மலையின் உச்சிக்குச் செல்லும் செங்குத்தான வழி தொடங்கும் இடத்தில் ஒரு கோயிலும் செங்குத்தான பாதை யின் மத்தியில் மற்றொன்றும், மிகவும் சிறப்பு வாய்ந்ததும் நுட்பமான சிற்பக்கலை அமைதிகள் பொலிந்து விளங்கிய துமான மூன்றாவது மலையுச்சியிலும் இருந்தன'.

அதன்பின்னர் 1803 வரை அதாவது 180 வருடங்க ளுக்கு அங்கே பூசை வழிபாடு எதுவும் இடம்பெறவில்லை. ஆலயத்திலிருந்து எடுக்கப்பட்ட கற்களால் கட்டப்பட்ட கோட்டை 1658ல் டச்சு அரசின் வசமாகியது. அதன்பின் னர் 1782ல் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் வந்தது.

ஆலயம் இடிக்கப்பட்ட போதும் பழைய ஆலயம் இருந்த இடத்தில் வழிபாடு நடத்த வேண்டுமென்ற மக்களின் ஆர் வம் தணியவில்லை. போர்த்துக்கீசிய ஆட்சியும்,அதற்க டுத்ததாக வந்த டச்சு ஆட்சியும் இருந்த வரை மக்களின் விருப்பம் நிறைவேறவில்லை. பின்னால் பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்ட போது அது கைகூடிவந்தது. 1803ம் ஆண்டு முதல் கோயில் இருந்ததாகக் கருதப்படும் சுவாமிமலை யில் இந்துக்கள் வழக்கம் போல வழிபாடு நடத்துவதற்கு அனுமதிக்கப்பட்டார்கள். இரண்டாவது உலக யுத்தகா லத்தில் பிரட்ரிக் கோட்டை பாதுகாப்பு ஸ்தலமாக இருந்த பொழுது கூட வாரத்தில் இரண்டு நாட்கள் குருக்களும் இதர பக்தர்களும் சுவாமிமலைக்குச் சென்று கற்பூரம் ஏற்றி வழிபாடு நடத்த அனுமதிக்கப்பட்டார்கள்.

கோணேசர் ஆலயத்தை மீண்டும் பழைய பெருமையு டன் புனருத்தாரணம் செய்ய வேண்டுமென்ற தணியாத தாகம் எங்கள் முன்னோர்களுக்கு உண்டாயிற்று.1950ம் வருடம் ஜூன்மாதம் 3ம் திகதி காலை பத்து மணிக்கு பிரட் ரிக் கோட்டைக்குள் சுவாமிமலையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. பல அரச உத்தியோகத்தர்கள்,திருகோண மலை பாராளுமன்ற அங்கத்தினர்,நகரசபைத் தலைவர், உபதலைவர், ஆசிரியர்கள், குருமார்கள், மற்றும் பொது மக்கள் அக்கூட்டத்திற்கு சமூகம் கொடுத்திருந்தார்கள். 1624ம் வருட இந்து புதுவருட தினத்தன்று போர்த்துக்கீ சர்களினால் அழிக்கப்பட்ட கோணேஸ்வரர் ஆலயத்தை அது இருந்த இடத்திலேயே திரும்பக் கட்டுவது பற்றி இக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. இதற்காக ஒரு ஆலோ சனைக்குழு நியமிக்கப்பட்டு 1950ம் வருடம் ஆகஸ்ட் 6ம் தேதி மறுபடி கூடுவதென்றும் அதற்குள் ஆலயத்தைக் கட் டுவது பற்றியும் ஆலயத்திற்கு காசியிலிருந்து ஒரு சிவலிங் கத்தை தருவிப்பது பற்றியும் சபை பரிசீலனை செய்து அறிவிக்கவேண்டுமென்றும் முடிவுசெய்யப்பட்டது.

இதற்கிடையில் திருகோணமலை நகரசபையினரால்; வேலைக்கு அமர்த்தப்பட்ட சில தொழிலாளர்கள் கோணே சர் ஆலயத்திற்கு அண்மையாகவுள்ள பத்தாம் குறிச்சிப் பகுதியில் (இப்போது வீரநகர் என அழைக்கப்படும் கட லோரப் பகுதி)ஒரு பொதுக்கிணறு வெட்டும் பணியில் ஈடுபட்டிருந்தார்கள். மண்வெட்டி எதன் மீதோபட்டு சப்தம் கேட்கவே அந்த இடத்தை கவனமாகத் தோண்டிப் பார்த்தார்கள். சுமார் மூன்று அடி ஆழத்தில் மூன்று விக்கி ரகங்கள் தென்பட்டன.

திருக்கோணேஸ்வரர் (சோமஸ்கந்தமூர்த்தமுள்ள சிவபி ரான்), இம் மூர்த்தத்தின் ஒரு அங்கமாயுள்ள மாதுமை அம்மன் (பார்வதி), சந்திரசேகரர் ஆகிய இம்மூன்று விக்கி ரகங்களும் அன்று எமக்குக் கிடைத்தன.

சுவாமி மலையில் கூட்டம் நடத்தப்பட்ட 24 தினங்க ளுக்குப் பின்னர் (27.06.1950) கண்டுபிடிக்கப்பட்டது தெய்வ சங்கல்பமென்றே கூறவேண்டும். இந்த அற்புதம் நிகழ்வதற்கு சில தினங்களுக்கு முன்னர் இதே பகுதியில் ஒரு தென்னை மரத்தினடியில் கணேசர், பார்வதி, திரிசூ லம், அன்னப்பறவைஆகிய விக்கிரகங்கள் தனியொருவரி னால் கண்டுபிடிக்கப்பட்டு அவரது வீட்டில் வைக்கப்பட் டிருந்தன. அவரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்ட போது ஒரு மறுப்பும் சொல்லாமல் நகரசபையினரிடம் அவற்றை அவர் ஒப்படைத்தார்.

சுவாமிமலையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில்



கோணேஸ்வரர் ஆலயத்தில் வைக்க காசியிலிருந்து ஒரு லிங்கத்தை தருவிக்க வேண்டுமென்று எண்ணமிட்ட சில தினங்களுக்குள்ளாக புராதன ஆலயத்தில் வைத்துப் பூசிக்கப்பட்ட விக்கிரகங்கள் வெளிக்கிளம்பியது அதிசயம் என்பது மட்டுமல்ல தெய்வ சங்கல்;பமும் ஆகுமென்பதில் சந்தேகமில்லை.

இவை எல்லாமே கைதேர்ந்த சிற்ப சாஸ்திரிகளைக் கொண்டு அமைக்கப்பட்டவைகளாயிருந்தன. 1950ம் ஆண்டில் கண்டெடுக்கப்பட்ட விக்கிரகங்களை நாடெங்கும் தரிசனத்துக்கு எடுத்துச்செல்ல வேண்டுமென்று சைவ நன்மக்கள் கேட்டுக்கொண்டார்கள். 326 வருட காலமாக மண்ணில் புதையுண்டிருந்த கோணேஸ்வரரை தரிசிக்க வேண்டுமென்ற ஆவல் எல்லோருடைய மனதிலும் எழுந்தது. கிராமங்கள் பட்டினங்கள் தோறும் விக்கிரகங்கள் எடுத்துச் செல்லப்பட்டபொழுது மக்கள் ரூபா35,000 வரை காணிக்கைகளாக வழங்கினார்கள். பக்தகோடிகளுக்கு கோணேசர் பெருமான் தரிசனம் கொடுத்துவிட்டு திருகோணமலைக்குத் திரும்பியதும் புராதன கோணேசர் ஆலயம் இருந்ததாகக் கருதப்பட்ட இடத்திலேயே ஒரு சிறிய ஆலயம் நிறுவப்பட்டு அங்கு விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டன. 1952ம் வருடம் பெப்ரவரி மாதம் 23ம் திகதியன்று இந்த வைபவம் நடைபெற்றது.

இத்தகைய பெருமைகளைக் கொண்ட இப்புனித விக்கிரகங்களை கண்டெடுத்த புனிதக் கிணறு திருகோணமலை நகரில் வீரநகர்ப் பகுதியில் இருக்கிறது. அப்பகுதி மக்களால் அன்றாட தேவைகளுக்காகப் பாவிக்கப்பட்டு வரும் இக்கிணறு கோணேசர் நகர்வலம் செல்லும் முதல் நாளன்று புதுப்பொலிவு பெறுவது வழமையாகும். அப்போது அப்பகுதி மக்கள் கிணற்றை அழகுபடுத்தி பெருமானை வரவேற்க ஆயத்தமாவார்கள். நகர் உலாவரும் பெருமான் அக்கிணற்றடி வாயிலில் தங்கி நிற்பார். குருக்களும் மற்றும் பக்தர்களும் கிணற்றடிக்குச் சென்று அதனைச் சூழ வாழும் மக்கள் ஒழுங்கு செய்து வைத்திருக்கும் பூசை புனஸ்;காரங்களை முறைப்படி நிறைவேற்றி பெருமான் பெருமாட்டி தோன்றிய கிணற்றினை வழிபட்டு மீளுவார்கள்.

நகர்வலம் முடிந்த கையுடன் மீண்டும் மக்களின் அன்றாடப் பாவனைக்கு அக்கிணறு பயன்படுத்தப்படும். கடலோரத்தில் அமைந்திருந்ததாலும், வேறு தண்ணீர் வசதி பெரிதாக இல்லாததாலும் இக்கிணறே அப்பகுதியில் வாழும் மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இக்கிணற்றின் பெருமையினை இப்பகுதி மக்கள் தெரிந்து வைத்திருந்த போதும், இதனைப் புனிதமாகப் பேணி பராமரித்து பாதுகாக்க வேண்டுமென்ற விருப்பம் இருந்த போதும், வசதிகளற்ற காரணத்தால் அதனை நடைமுறைப்படுத்த முடியாமல் இருந்து விட்டார்கள்.

வரலாற்றுப் பெருமையும் கீர்த்தியுமிக்க கோணேசப் பெருமான் மாதுமையம்பாள் ஆகிய கிடைத்தற்கரிய புனித விக்கிரகங்களை தன்னுள்ளே வைத்து நெருக்கடி மிகுந்த நீண்டதொரு காலம் காப்பாற்றித் தந்த அந்தக் கிணற்றினை புனிதமாகவும் நல்லவிதமாகவும் பேணி பராமரித்து பாதுகாக்க வேண்டிய கடமை தங்களுக்கு உள்ளது என்பதை அந்த மக்கள் பெரிதும் உணர்கிறார்கள்.

திருகோணமலை கோணேஸ்வர ஆலய பரிபாலன சபைஇந்த மக்களின் உணர்வினை கருத்திற் கொண்டு அக்கிணற்றினை புனரமைத்து அருகில் சிறிய ஆலயத்தையும் கட்டி 12.02.2012ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை வைபவரீதியாக திறந்து வைத்தது.

அன்றைய தினம் அப்பகுதி மக்கள் அக்கிணற்றிற்கு முன்னால் பொங்கல் பொங்கி கோணேசப் பெருமானை வழிபட்டார்கள். இப்போது புனிதக்கிணறும் ஆலயமும் அப்பகுதி மக்களால் கண்ணும் கருத்துமாக சிறந்த முறையில் பேணிப் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**எல்லாம் எம்பெருமான் செயல்**
**அன்பே சிவம்.**



# இராவணன் கோணேஸ்வரப் பெருமானையும், கேதீஸ்வரப் பெருமானையும், ஒரே நேரத்தில் இருந்து வணங்கிய மலை



சிவபூமியின் சுவடுகளைத் தேடி ஆராய்ந்து கொண்டிருந்த காலகட்டத்தில், யார் இந்த இராவணன் எனும் நூலை நான் எழுதிக் கொண்டிருந்த போது, இராவணன் காலத்தில் சிவலிங்கங்கள் இருந்த இடங்கள் எவை எனத் தேடினேன்.

இராவணன் இலங்கையில் ஆயிரக்கணக்கான சிவலிங்கங்களை ஸ்தாபித்து வணங்கி வந்ததாகக் கூறப்படுகிறது. இராவணன் காலத்தில் இருந்த லங்காபுரி எனும் இராவணன் நாடு கடற்கோளினால் அழிந்த பின் இராவணன் நாட்டின் எஞ்சிய சிறு பகுதியே இன்றைய இலங்கை என்பது வால்மீகி இராமாயணம் மூலம் அறியப்படுகிறது.

இதன்படி இராவணன் ஸ்தாபித்த சிவலிங்கங்களில் ஏராளமானவை அழிந்து போய் விட்டன. இருப்பினும் கடற்கோளுக்குத் தப்பிய இன்றைய இலங்கையில் எஞ்சிய சிவலிங்கங்கள் இருந்திருக்க வேண்டும். அப்படி எஞ்சிய சிவலிங்கங்கள் எங்கிருந்தன எனத் தேடிய போது, 38 சிவலிங்கங்கள் இருந்த இடங்களை அடையாளம் காண முடிந்தது.

அவற்றில் ஒரு இடம் தான் இலக்கு மலை. இலக்கு மலையின் உச்சியில் உள்ள ஓர் இடத்தில் இராவணன் தனது புஷ்பக விமானத்தை நிறுத்தி வைத்து விட்டு சிவலிங்க வழிபாடு செய்ததாகவும், இப்பகுதியில் உள்ள மக்கள் இராவணனை ஓர் பலம் மிக்க சக்தியாக நம்புவதாகவும் மாத்தளையில் வசிக்கும் நண்பர் ஒருவர் என்னிடம் கூறினார்.



என்.கே.எஸ். திருச்செல்வம்
வரலாற்று ஆய்வாளர்
இலங்கை
nksthirugmail.com

அன்று முதல் இலக்கு மலைக்கும், இராவணனுக்கும் உள்ள தொடர்புகள் பற்றி ஆராய்ந்தேன். அப்போதுதான் பல ஆச்சரியமான விடயங்கள் கிடைத்தன.

இராவணன் இம்மலையில் இருந்து காலை வேளையில் திருக்கேதீஸ்வரப் பெருமானையும், திருக்கோணேசப் பெருமானையும் வணங்குவதாகவும் தகவல்கள் கிடைத்தன.

இத்தனை சிறப்புமிக்க இலக்குமலையைப் பார்க்க வேண்டும் என ஆவலுடன் இருந்தேன். அதற்கான சந்தர்ப்பமும் கிடைத்தது. எனது அலுவலக நண்பர்களுடன் அந்தப் பயணம் அமைந்தது.

மாத்தளை நகரில் இருந்து வடக்கு நோக்கி தம்புள்ளைக்கு செல்லும் வீதியில் உள்ள ரத்தொட்ட சந்தியில் இருந்து கிழக்குப் பக்கமாக செல்லும் வீதியில் 30 கி.மீ தூரத்தில் இலக்கு மலை அமைந்துள்ளது. நக்கீள்ஸ்



மலைத்தொடரில் 900 மீற்றருக்கு மேல் உயரமான 35 முக்கிய மலைக்குன்றுகளில் இலக்கு மலைக் குன்றும் ஒன்றாகும்.

குறிப்பிட்ட நாளில் வான் வண்டி மூலம் பயணம் செய்து பிற்பகல் 2 மணியளவில் இலக்கு மலையில் இராவணன் தியானம் செய்த இடத்தை அடைந்தோம். பாதையின் இடது பக்கம் கொஞ்சம் பற்றைகள் இருந்தன. அவற்றைக் கடந்தவுடன் அந்த இடத்தைப் பார்த்தேன். மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

சுமார் 3000 அடிகள் உயரமான இடத்தில் 25 ஏக்கர் பரப்பளவில் ஓர் சமதரை காணப்பட்டது. இத்தரையின் நடுப்பகுதியில் தரையில் சமதள பாறை அமைந்துள்ளது. உயரமான பகுதியில் இருந்து வரும் நீர்



ஊற்று அப்பாறையின் நடுவில் ஓடிக்கொண்டிருந்தது. நடுப்பகுதியில் இருந்து சுமார் 10 பாகை வடக்கு நோக்கி பாறை உயர்ந்து கொண்டே போனது. கற்பாறையின் மேல் மிகவும் மெல்லிய அளவில் மண் மூடப்பட்டு அதில் புல் வளர்ந்திருந்தது. இளம்பச்சை வெல்வேட் துணி விரித்தது போல புல்தரை காணப்பட்டது.

உண்மையில் அது ஓர் குட்டி விமானத் தளம் போல் தான் இருந்தது. இராவணன் இவ்விடத்தில் தான் தனது புஷ்பக விமானத்தை நிறுத்திவிட்டு இப் புல்தரையின் உச்சிப் பகுதிக்குச் சென்று அங்கிருந்து திருக்கேதீஸ்வரத்தையும், திருக்கோணேஸ் வரத்தையும் தரிசிப்பானாம். சமதரையின் தொடக்கப் பகுதியில் இருந்து சுமார் 600 மீற்றர் தூரம் நடந்து சென்று அதன் உச்சிப் பகுதியை அடைந்தோம். பலமாகக் காற்று வீசியது. அதனால் உச்சியின் ஓரத்துக்குச் செல்ல முடியவில்லை. ஓரத்தில் படுபாதாளம் உள்ளது.

இவ்விடம் தான் இராவணன் தியானம் செய்யும் இடமாம். உண்மையில் பனி, முகில் மூட்டம் இல்லாத தெளிவான வானிலையில், மிகத் தூரம் வரை பார்க்கக்கூடிய தொலை நோக்கிக் கண்ணாடியில் பார்த்தால் வடமேற்கில் திருக்கேதீஸ்வரத்தையும், வடகிழக்கில் திருக்கோணேஸ்வரத்தையும் நாமும் பார்க்கலாம் போல் அவ்விடம் தோன்றியது. ஏனெனில் இலக்கு மலை மத்திய மலை நாட்டின் வடக்குப் பக்கத்தில் உள்ள உயர்ந்த மலைப் பகுதியாகும். இம்மலையின் வடக்குப் பக்கம் உள்ள மலைகள் எல்லாம் இம்மலையை விட உயரம் குறைந்தவைகளாகும்.

சிவனொளிபாதமலை உச்சியில் இருந்து 74 கி.மீ தூரத்தில் இருக்கும் கொழும்புத் துறைமுகத்தை தொலைநோக்கிக் கண்ணாடி இல்லாமல் சாதாரணமாக நான் பார்த்துள்ளேன். இலக்கு மலையில் இவ்விடத்தில் இருந்து வடமேற்கில் 179 கி.மீ தூரத்தில் திருக்கேதீஸ்வரமும், வடகிழக்கில் 126 கி.மீ தூரத்தில் திருக்கோணேஸ்வரமும் அமைந்துள்ளன.

இராவணனால் வழிபடப்பட்ட சிவலிங்கம் ஒன்று இங்கிருந்து கிடைக்கப் பெற்றுள்ளது. இது 6 அடி உயரமும், 3அடி அகலமும் கொண்ட முட்டை வடிவுடைய லிங்கக் கல்லாகும்.

இலக்கு மலை இராவணனின் பாட்டன் புலத்தியரின் மனம் கவர்ந்த மலையாகும். புலத்தியர் இம்மலையிலிருந்த வண்ணம் தனது தலைநகரான புலத்தி



நகரின் அழகைப் பார்த்து ரசிப்பதாக, இம் மலைப்பி ரதேசத்தில் உள்ள மக்கள் கர்ணபரம்பரையாக ஓர் செய்யுளைப்பாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இப்பாடல்

புலத்தி முனிவர் தவம் செய்யும் மலை, இராட்சஷ வீரர்கள் மரியாதையுடன் தலைவணங்கும் மலை, இரவு பகலாக புலத்தி நகரம் தெரியும் மலை, அதுவே இந்த லக்கல மலைஎனக் கூறுகிறது.

இப்பாடலின் படி இராவணனின் பாட்டனாரான புலத்திய முனிவர் இவ்விடத்தில் இருந்து தவம் செய் துள்ளார். அவரைப் பின்பற்றி இராவணனும் இங்கு சிவலிங்கத்தை ஸ்தாபித்து வணங்கியுள்ளான்.

இராவணன் தியானம் செய்ததாகக் கருதப்படும் இப்புல் வெளி சிங்கள மொழியில் பிட்டவல பத்தன எனவும், இவ்விடம் அமைந்துள்ள இலக்கு மலை லக் கல எனவும் அழைக்கப்படுகிறது. இவ்விடத்தில் தான் புஞ்சி லோகாந்தய அல்லது மினி வேல்ஸ் என்ட் என் றழைக்கப்படும் இடம் அமைந்துள்ளது. இப்படிபட்ட உன்னதமான, அழகிய, அரிய இடமான இலக்கு மலையில், இராவணன் தியானம் செய்த இடத்திற்குச் சென்று, பார்த்த பெரும் திருப்பியோடு அங்கிருந்து திரும்பினேன்.



வில்பத்து கடல் அருகில் உள்ள குதிரைமலையில்

# அழிந்த நிலையில் காணப்படும் அஸ்வகிரி சிவாலயம்



சிவ பூமியின் சுவடுகளைத் தேடி புத்தளம் மாவட்டத்திற்கு பல தடவைகள் சென்றுள்ளேன். புத்தளம் மாவட்டத்தில் ஏராளமான பண்டைய சுவடுகள் உள்ளன. அப்படிப்பட்ட சுவடுகள் உள்ள ஓர் இடம் தான் குதிரை மலை. இவ்விடம் வில்பத்து வன விலங்குகள் சரணாலயத்தின் மேற்குக் கரையோரத்தில் அமைந்துள்ளது. இங்கு மிகப் பண்டைய காலத்தில் அஸ்வகிரி சிவாலயம் அமைந்திருந்ததாக குறிப்புகள் கூறுகின்றன. இக்கோயில் கடல் கோளின் போது முற்றாக அழிந்து போனதாகக் கூறப்படுகிறது.

குதிரை மலைக்குச் சென்று ஆய்வுகள் செய்ய வேண்டும் என எண்ணியிருந்தேன். இது பற்றிய பல தகவல்களைத் தேடி எடுத்தேன். இருப்பினும் நேரில் சென்று பார்க்க வேண்டும் என ஆவலுடன் இருந்தேன். ஏனைய இடங்களைப் போல நாம் நினைத்தவுடன் சாதாரணமாக செல்லக் கூடிய இடமல்ல இது.

புத்தளம் நகரின் வடக்கில் 32 கி.மீ தூரத்தில், கலா ஓயா ஆற்றின் கரையில் வில்பத்து சரணாலய நுழைவாசல் உள்ளது. இங்கிருந்து 34 கி.மீ தூரத்தில் குதிரை மலை அமைந்துள்ளது. இவ்விடம் வரையும் தான் எமது சொந்த வாகனத்தில் செல்லலாம். இவ்விடத்தில் இருந்து நுளைவுச் சீட்டைப் பெற்றுக் கொண்டு வனஜீவி திணைக்களத்தின் ஜீப் வண்டியில், அவர்களின் வழிகாட்டி ஒருவரின் துணையுடனேயே காட்டுக்குள் செல்ல வேண்டும்.

இச்சமயத்தில் குதிரைமலைக்குச் செல்வதற்கான ஓர் சந்தர்ப்பமும் வந்தது. வசந்தம் தொலைக்காட்சியில், வழிபாடு எனும் நிகழ்ச்சியில், இலங்கையின் பழமை வாய்ந்த கோயில்கள் பற்றிய ஓர் ஆய்வுத் தொகுப்பு நிகழ்ச்சியை வாரா வாரம் வழங்கி வந்தேன். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 7.30 மணிக்கு இந்நிகழ்ச்சி இடம்பெறும்.

இந்நிகழ்ச்சியில் அடுத்த தடவை குதிரை



என்.கே.எஸ்.
திருச்செல்வம்
வரலாற்று ஆய்வாளர்
இலங்கை
nksthiru@gmail.com



மலையில் இருந்த அஸ்வகிரி சிவாலயம் பற்றிய வரலாற்றுத் தொகுப்பை வழங்கவிருந்தேன். அந்த வகையில் வசந்தம் தொலைக்காட்சியின், வழி பாடு நிகழ்ச்சியின் தயாரிப்பாளர் நண்பர் மூர்த்தி, புத்தளம் பகுதியில் இருந்த ஒளிப்பதிவாளர் ஒரு வரை என்னோடு குதிரைமலைக்கு அனுப்ப ஏற் பாடு செய்தார்.

குறிப்பிட்ட நாளில் இங்கு செல்வதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டேன். புத்தளம், கற்பிட்டியில் வசிக்கும் எனது நண்பர் ஆசிரியர் சுப்பிரமணியம், கற்பிட்டி முருகன் கோயில் செய லாளர் நண்பர் ரவி ஆகியோர் வில்பத்து காட்டிற் குச் செல்வதற்கான வாகன ஏற்பாடுகளைச் செய் தனர்.

எனது பயண தூரம் 203 கி.மீற்றர். ஒரு நாளில் சென்று வர வேண்டும். எனவே முதல் நாள் இரவு 7 மணியளவில் கொழும்பில் இருந்து கிளம்பி 110 கி.மீ தூரத்தில், புத்தளம் வீதியில் அமைந்துள்ள முந்தலுக்குப் பயணமானேன். முந்தலில் இருந்து 93 கி.மீ தூரத்தில் குதிரைமலை அமைந்துள்ளது. எனவே காலையிலேயே குதிரைமலைக்குச் சென்று பார்த்து விட்டு வீடு திரும்ப வேண்டும். அங்கு நண்பர் ராமச்சந்திரன் வீட்டில் தங்கினேன். அவ ரும் என்னோடு குதிரைமலைக்கு வர இருக்கிறார்.

அடுத்த நாள் காலை 6 மணிக்கு முந்தலில் இருந்து இருவரும் கிளம்பினோம். பேரூந்து மூலம் 6.30 க்கு 22 கி.மீ தூரத்தில் உள்ள பாலாவி சந்தியை அடைந்தோம். இச்சந்திக்கு இதே நேரத்திற்கு கற் பிட்டி நண்பர்கள் வருவதாக ஏற்பாடு. 15 நிமிடத் தில் நண்பர் ரவியின் வேனில் நண்பர் ரவி, அவ ரது சாரதி, நண்பர் சுப்பிரமணியம், அவரின் மகன் ஆகியோர் வந்தனர். நாங்கள் இருவரும் வேனில் ஏறியவுடன், அங்கிருந்து 5 கி.மீ தூரத்தில் உள்ள புத்தளம் நகருக்குச் சென்றோம். புத்தளம் நகரில் ஐ.டி.என் தொலைக்காட்சி ஒளிப்பதிவாளரையும், அவரின் உபகரணங்களையும் அவர் வீட்டிற் குச் சென்று ஏற்றிக் கொண்டோம். புத்தளத்தில் தண்ணீர் போத்தல், பிஸ்கற் பக்கெட் ஆகியவற் றையும் வாங்கிக் கொண்டோம். நேரம் 7.30 ஆகி விட்டது. வேன் சாரதி மின்னல் வேகத்தில் வண் டியை செலுத்திக் கொண்டு போனார்.

இது பழைய மன்னார் வீதி. கரடிப்பூவல், வண் ணாத்தி வில்லு, எழுவங்குளம் ஊடாக 25 நிமிடத் தில் வில்பத்து சரணாலய நுழைவாயிலை அடைந் தோம். இங்கிருந்து வில்பத்துக் காட்டை ஊடறுத்து மன்னாருக்குச் செல்லும் இப்பழைய வீதி பல ஆண் டுகளாக மூடப்பட்டிருந்தது. யுத்தம் முடிவுற்ற பின்னரே இப்பாதை திருத்தப்பட்டு, பொது போக் குவரத்து ஆரம்பிக்கப்பட்டது. புத்தளத்தில் இருந்து அனுராதபுரம், மதவாச்சி ஊடாக 180 கி.மீ தூரம் சுற்றி மன்னாருக்கு செல்ல வேண்டும். ஆனால் இந்தப் பாதையில் 115 கி.மீ தூரத்தைக் கடந்து மன்னாருக்குச் சென்று விடலாம். வாயில் கட வையை அடுத்து கலா ஓயா ஆற்று நீர் கொங்கி



ரிட் பாலத்தின் மேலே கரை புரண்டு ஓடிக்கொண் டிருந்தது. ஆற்றைக் கடந்ததும் நுழைவுச் சீட்டு வழங்கும் காரியாலயம் காணப்பட்டது. அவ்விடத் தில் எமது வாகனத்தை நிறுத்திவிட்டு நுழைவுச் சீட்டைப் பெற்றுக் கொண்டோம். நாங்கள் மொத் தமாக 7 பேர். எங்களை சுமந்து செல்ல அங்கே ட்ரக் வண்டி காத்திருந்தது. ட்ரக் வண்டிக்குரிய கட்டணத்தைப் பேசிக் கொண்டு சரியாக 8.10 க்கு குதிரைமலை நோக்கிப் பயணமானோம். 8 பேர் அமரக்கூடிய ட்ரக் வண்டியில் சாரதியின் அரு கில் ஒளிப்பதிவாளர் அமர, நாங்கள் ஆறு பேரும்



பின்னால் உள்ள 6 இருக்கைகளில் அமர்ந்து கொண்டோம். அது காட்டுப் பயணத்திற்காக 6 இருக்கைகளோடு மேலே கூரை போட்டு அமைக்கப்பட்ட ட்ரக் வண்டி.

இங்கிருந்து 40 கி.மீ தூரத்தில் உள்ள மோதரகம் ஆறு வரை அடர்ந்த வில்பத்து காடு அமைந்துள்ளது. இப்பகுதி வனவிலங்குகள் சரணாலயம் என்பதால் வீடுகள், குடியிருப்புக்கள் எதுவும் அமைப்பதற்கு அனுமதி இல்லை. காட்டின் உள்ளே சில குறிப்பிட்ட இடங்களில் மட்டும் வனஜீவி காரியாலயங்கள் உள்ளன. ஒரே ஒரு இடத்தில் ஓர் கிறிஸ்தவ தேவாலயம் அமைக்கப்பட்டுள்ளது. இக்காடு சிறுத்தைப் புலிகளுக்கு பெயர் போன இலங்கைக் காடாகும். இங்கு மேற்குக் கடல் ஓரமாக குதிரைமலை அமைந்துள்ளது.

கிரவல் பாதையில் புழுதியைக் கிளப்பிக் கொண்டு ட்ரக் வண்டி ஓடிக் கொண்டிருந்தது. எனது கையடக்க தொலைபேசியில் கூகிள் மேப்பில் ஒவ்வொரு இடங்களையும் பார்த்துக் கொண்டே வந்தேன். காட்டுப் பாதையில் அய்யனார் குளம், கள்ளக்கண்டல், மூலகண்ட வெளிக் குளம் ஆகிய இடங்களைக் கடந்ததும் பொம்பரிப்பு ஆற்றுப் பாலம் காணப்பட்டது. ஆற்றிலே நீர் நிரம்பி ஓடிக் கொண்டிருந்தது. சற்று பழுதடைந்த இப்பாலத்தின் மேல் வண்டி மெதுவாகச் சென்றது. அங்கிருந்து சற்று தூரத்தில் இடது பக்கம் பெரிய வெளி ஒன்று காணப்பட்டது. வெளியை அடுத்து பொம்பரிப்பு சந்தியை அடைந்தோம். சந்தியில் சாந்த அந்தோனியார் சிலை ஒன்று காணப்பட்டது. இங்கிருந்து உள்ளே சிறிது தூரம் சென்றால் பள்ளக்கண்டல் என்னுமிடம் உள்ளது. இங்குதான் சாந்த அந்தோனியார் தேவாலயம் உள்ளது.

பொம்பரிப்பு சந்தியை அடுத்து 3 கி.மீ தூரத்தில் வெள்ளை முந்தல் சந்தி காணப்பட்டது. இங்கிருந்து கிழக்குப்பக்கம் 3 கி.மீ தூரத்தில் வெள்ளை முந்தல் கடற்கரை அமைந்துள்ளது. இச்சந்தியில் இருந்து 7 கி.மீ தூரம் வரை அடர்ந்த காடு. பாதையின் இரு மருங்கிலும் காட்டைத் தவிர எதுவுமே தெரியவில்லை. அதை அடுத்து பாதையின் வலது பக்கம் ஆத்தா வில்லுக் குளம் காணப்பட்டது. குளத்தின் நடுவில் சிறிதளவு நீர் தெரிந்தது. அதை அடுத்து 2 கி.மீ தூரத்தில் பெரிய உப்பு வில்லு குளம் வறண்டு காணப்பட்டது.

இங்கிருந்து 3 கி.மீ தூரத்தில் பெரிய வில்லு குளம் காணப்பட்டது. வில்பத்து காட்டில் உள்ள பெரிய குளம் இதுவே. அதனால் தான் பெரிய குளம் எனப் பெயர் பெற்றுள்ளது. குளம் தான் பெரியதே தவிர அதில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை நீரைக் காணவில்லை. குளம் வறண்டு போய்க் கிடந்தது. அடுத்தது பெரிய நாக வில்லு குளம். அதன் அருகிலேயே பள்ளுகாதுறை சந்தி காணப்பட்டது. அதையும் கடந்து 6 கி.மீ தூரம் சென்றதும் குதிரைமலைக்குத்



குளக்கரையைக் கடந்ததும் மீண்டும் 2 கி.மீ தூரம் வரை காடு அமைந்திருந்தது. காட்டைக் கடந்ததும் பெரிய அகலமான கிரவல் பாதை காணப்பட்டது. வெள்ளை முந்தல் கடற்கரையில் இருந்து மேற்குக் கரையோரமாக மோதரகம் ஆறு வரை 29 கி.மீ தூரத்திற்கு அமைக்கப்படும் புதிய பாதையே அது. தற்போது வேலைகள் இடைநிறுத்தப் பட்டுள்ளதாம். இப்பாதையை வண்டி ஊடறுத்து 400 மீற்றர் சென்றதும் குதிரைமலை முனை எனும் பெயர்ப்பலகை காணப்பட்டது. அதன் அருகிலே குதிரைமலை பற்றிய விபரப் பலகையும் காணப்பட்டது. சுமார் 2 மணி நேர காட்டுப் பயணத்தின் பின் குதிரைமலையை வந்தடைந்தோம்.

வண்டியை விட்டு இறங்கிப் பார்த்தபோது ஓர் வித்தியாசமான அழகு நிறைந்த இடமாக அப்பிரதேசம் தென்பட்டது. மேற்குப்பக்கம் பள்ளத்தில் கடல், வடக்குப் பக்கம் செந்நிறப் பாறைகளும், பற்றைகளும், கிழக்குப்பக்கம் காடு, தெற்குப்பக்கம் கிரவல் மண். இப்படி நான்கு திசைகளிலும் நான்கு விதமான அழகுத் தோற்றம் கொண்டது இவ்விடம். வந்த எல்லோரிடமும் இருந்த கையடக்க தொலைபேசி கேமராக்கள் வேகமாக இயங்கின. விதவிதமாக புகைப்படங்களை எடுத்துக் கொண்டோம்.

குதிரைமலை எனும் பெயருக்கேற்ற வகையில் எந்த கருங்கல் மலைகளும் அங்கு காணப்படவில்லை. உண்மையில் அது கடல் மட்டத்தில் இருந்து சுமார் 60 அடி உயரமான கபோக் என்றழைக்கப்படும் செந்நிற மணற்கற் பாறைகள் நிறைந்த இடம். இது கடலில் இருந்து பார்க்கும் போது மலை போலத் தெரியும். பண்டைய காலத்தில் இம்மலை இன்று இருப்பதை விட சற்று உயரமாக இருந்துள்ளது. கடல் அரிப்பின் காரணமாக கொஞ்சம் கொஞ்சமாக இம்மலை கரைந்து அழிந்து போயுள்ளது.

அவ்விடத்தில் சிவாலயத்தின் இடிபாடுகளைத் தேடினேன். சாரதியாக வந்த வழிகாட்டி அது இங்கிருந்து 500 மீற்றர் தூரத்தில் உள்ள குதிரைமலை முனையில் உள்ளதாகச் சொன்னார். செந்நிற தனித்தனி கற்பாறைகளும், பற்றைகளும் நிறைந்த இப்பகுதியில் பாறைகளுக்கு நடுவில் சிறிய ஒற்றையடிப்பாதை காணப்பட்டது. ஒளிப்பதிவாளரின் உபகரணங்களை எடுத்துக் கொண்டு எல்லோரும் முனையை நோக்கி அப்பாதை வழியாக நடந்தோம். மிகவும் அவதானமாக இப்பாதையில்

திரும்பும் சந்தி காணப்பட்டது. இங்கிருந்து இடது பக்கம் திரும்பி மலைவில்லுக் குளத்தின் கரை ஓரமாகச் சென்றால் குதிரைமலையை அடையலாம். நேரம் அப்போது காலை 9.15. இன்றைய எனது இலக்கான குதிரைமலையை அடைய இன்னும் 5 கி.மீ தூரம் பயணம் செய்ய வேண்டும்.

குதிரைமலைப் பக்கம் ட்ரக் வண்டி திம்பிய சிறிது நேரத்தில் மலை வில்லு எனும் பெரிய குளத்தைக் கண்டேன். இது வில்பத்து காட்டில் காணப்படும் இரண்டாவது பெரிய வில்லுக் குளம். வில்லுக் குளம் என அழைக்கப்படும் இவை காட்டுக் குளங்களாகும். இக்குளங்களுக்கு அணைக்கட்டு இல்லை, துருசு இல்லை, வடிச்சல் இல்லை. இவை காட்டில் காணப்படும் பள்ளமான வெளிகளாகும். இவற்றில் மழை காலங்களில் நீர் நிரம்பி குளம் போல் காணப்படும். வெயில் காலங்களில் நீர் வற்றிப்போய் வெளியாகக் காணப்படும். இக்குளங்களில் சாப்பை, பன்னம் போன்ற புற்களும், கொட்டி, சூரல் போன்ற நீர்ச் செடிகளும் அதிகளவில் காணப்படும்.

மலைவில்லு குளத்தில் தூரத்தில் நீர் காணப்பட்டது. புற்களும், செடிகளுமே அதிகளவில் காணப்பட்டன. குளத்தின் வடகரை ஓரமாக பாதை அமைந்திருந்தது. சுமார் இரண்டு கி.மீ தூரம் வரை குளக்கரையில் வண்டி ஓடிக்கொண்டிருந்தது. குளத்து வெளியின் இதமான காற்று எம்மை நோக்கி வீசிக்கொண்டிருந்தது. அதுவரை ஒன்றே கால் மணி நேரம் கிரவல் பாதையில் இருந்து கிளம்பிய தூசிக் காற்றை சுவாசித்துக் கொண்டு வந்த எமக்கு, சுத்தமான குளிர்ந்த காற்றை சுவாசிக்கும் வாய்ப்பு கிடைத்தது.



நடக்க வேண்டும். ஏனெனில் சில இடங்களில் இடுப்பு வரை உயரமான தனித்தனி பாறைக ளின் பகுதிகளில் கூரான முனைகள் காணப்பட் டன. அசட்டையாக நடந்தால் முழங்கால்களைக் காயப்படுத்தி விடும்.

சிறிது நேரத்தில் முனையை அடைந்தோம். முனையில் நான் தேடிவந்த சிவாலயத்தின் இடி பாடுகளின் ஓர் சிறிய பகுதி மட்டுமே காணப் பட்டது. கடற்படையினரால் இச்சிதைவுகள் இரும்புக் கம்பி வேலியடைத்து பாதுகாக்கப்பட் டிருந்தன. மேலும் சிதைவுகள் உள்ளனவா எனத் தேடித் பார்த்தோம். அவ்விடத்தில் சுமார் 40 அடி சுற்றளவில் பழமை வாய்ந்த செங்கட்டிகளும், பற்றைகளுக்குள்ளே சில கற்தூண்களின் துண்டு களும் காணப்பட்டன. பெரிய ஆலயத்தின் இடி பாடுகள் கொஞ்சம் கொஞ்சமாக அரிக்கப்பட்டு தற்போது இச்சிறிய பகுதியே எஞ்சியுள்ளது. சரியாக கடல் ஓரத்தில் உள்ள முனையிலேயே இவ்விடிபாடுகள் காணப்பட்டன. இன்னும் சில காலத்தின் பின்பு எஞ்சியுள்ள இந்த சிதைவுகளும் கடல் அரிப்பினால் அழிந்து போக வாய்ப்புண்டு. எஞ்சியுள்ள இப்பகுதியே கோயிலின் முன் பகுதி யாக இருக்க வேண்டும். இவ்விடத்தில் 35 அடி உயரமான ஓர் குதிரையும், அதன் கடிவாளத்தை பிடித்த வண்ணம் ஓர் மனிதன் நிற்பது போன்ற வடிவில் சிலை ஒன்று இருந்ததாகவும் கூறப்படு கிறது.

இவ்வாலயம் 2300 ஆண்டுகளுக்கு முன் அல்லி ராணி எனும் பாண்டிய இளவரசியால் கட்டப் பட்டதாக குறிப்புகள் கூறுகின்றன. இந்தியாவி லிருந்து யாத்திரீகர்கள் இவ்வாலயத்திற்கு வந்து சிவனை தரிசித்து சென்றுள்ளனர். இவ்விடமே விஜயன் தன் தோழர்களுடன் கரைசேர்ந்த இடம் எனவும் சில அறிஞர்கள் கூறியுள்ளனர். பண் டைய காலத்தில் கிரேக்கர், அரேபியர் ஆகியோர் வர்த்தகம் புரிந்த முக்கிய துறைமுகமாக குதிரை மலை விளங்கியுள்ளது.

சிதைவுகளை ஆராய்ந்த பின் இவ்விடத்தில் ஒளிப்பதிவு ஆரம்பமானது. சிதைவுகளின் அரு கில் இருந்து குதிரைமலை சிவாலயத்தின் வரலாற் றைக் கூறிக் கொண்டிருந்தேன். ஒளிப்பதிவாளர் படம் பிடித்துக் கொண்டிருந்தார். சுமார் முக்கால் மணி நேரம் படப்பிடிப்பு நடந்தது. அதன் பின்பு இங்கிருந்து கீழேயுள்ள கடற்கரைக்கு இறங்கி னோம். கடற்கரை ஓரத்தில் தரைமட்டமாக 40 அடி நீளமான ஓர் நினைவுச் சின்னம் சிதைந்த நிலையில் காணப்பட்டது. அது ஓர் இஸ்லாமிய பெரியாரின் சமாதி எனக் கூறப்படுகிறது.

அதை அடுத்து கடல் ஓரத்துக்குச் சென்ற போது சுமார் 40 அடி உயரமான செந்நிற மணற்பாறை அழகாகத் தெரிந்தது. அவ்விடத்தின் அழகிய காட் சிகளோடு எல்லோரும் சேர்ந்து படங்கள் எடுத் துக் கொண்டோம்.

வில்பத்து வனவிலங்குகள் சரணாலயத்தில் வெவ் வேறு இடங்களில் சிவன், முருகன், காளி, விஷ் ணு, வள்ளியம்மன் ஆகிய தெய்வங்களுக்குரிய


கோயில்கள் இருந்தன. முதலாவது தமிழர் குடியிருப்பு இப்பிரதேசத்தில் உள்ள பொம்பரிப்பில் தான் அமைந்திருந்தது. இப்படிப்பட்ட தொன்மை வரலாற்றைக் கொண்ட இவ்விடத்தில் முன்பிருந்த சிவவழிபாட்டின் அடையாளச் சின்னம் மீண்டும் நிறுவப்பட வேண்டும். அழிந்து போன இவ்வாலயத்தை மீண்டும் இவ்விடத்தில் கட்டி எழுப்ப இந்துக்கள் முன்வர வேண்டும்.

இங்கு பெரிய கட்டிடங்கள் எதுவும் கட்ட முடியாது. வனஜீவி திணைக்களத்தின் அனுமதியைப் பெற்று ஆலயம் இருந்த இடத்தில் ஓர் சிவலிங்கத்தை ஸ்தாபித்து அதைப் பாதுகாக்க ஓர் கூரையும், அதைச் சுற்றி ஓர் இரும்பு வேலியும் அமைக்க வேண்டும். இது ஓர் திறந்த வெளி கோயிலாகத்தான் அமையும். முதல் கட்டமாக இதை மட்டும் தான் செய்ய முடியும். இந்த இடம் கடல் ஓரத்தில் இருப்பதால் வனத்துறை அனுமதியுடன் கடற்படையின் அனுமதியையும் பெற வேண்டும். எல்லாவற்றிற்கும் முதலில் இந்துக்கள் இங்கு சென்று சிவாலயம் இருந்த இடத்தைப் பார்க்க வேண்டும்.

இன்றைய தினம் நான் வந்த நோக்கம் இனிதே நிறைவு பெற்றது. அனைவரும் திருப்தியோடு குதிரைமலையை விட்டுத் திரும்பினோம். பகல் ஒரு மணியளவில் பிரதான நுழை வாசலுக்கு வந்தோம். ட்ரக் வண்டிக்குரிய கட்டணத்துக்கு எனது பங்களிப்பையும் வழங்கினேன். அரை மணி நேரத்தில் புத்தளத்தை வந்தடைந்தோம்.

இந்தப் சிறப்பான, முக்கிய பயணத்திற்கு தனது வாகனத்தை வழங்கி, செலவிலும் அதிக பங்களிப்பை வழங்கிய நண்பர் ரவிக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டேன். மற்றும் என்னுடன் வந்த நண்பர்கள் சுப்பிரமணியம், ராமச்சந்திரன் ஆகியோருக்கும் நன்றிகளைத் தெரிவித்து விட்டு வீட்டுக்குத் திரும்பினேன். எனது ஆய்வுப் பயணத்தின் முக்கிய நாட்களில் ஒன்றாக இந்நாள் அமைந்தது.





# தமிழர் நாகரிக வரலாறு பற்றிய ஆய்வில் சுவாமி விபுலாநந்தரின் கருத்து வெளிப்பாடுகள்

தமிழர் நாகரிகம் தொன்மை வாய்ந்தது என்பதில் எவருக்கும் ஐயப்பாடில்லை. ஆனால் அத்தொன்மைமிகபண்பாட்டின் தோற்றக் களம், காலஎல்லை,தமிழர் நாகரிகம் எங்கெல்லாம் நிலைபெற்றிறிருந்தது, என்றபொருண்மைகள் அறியப்பட வேண்டியனவாகும்.ஐரோப்பியரின் வருகையால் தமிழினம் பல்வேறுநன்மைகளையும் முன்னேற்றத்திற்குரியவழிகளையும் பெற்றுக்கொண்டதுஎன்பதுஉண்மை.ஆங்கிலேயரதுவருகையுடன் தமிழ் மொழியும் தமிழ்ப் பண்பாடும் மேனாட்டுஅறிஞர்களின் ஆய்வுக்குரியமுதன்மைப் பொருண்மைகளாகக் கருதப்படலாயின. 19ஆம்நூற்றாண்டிற்கால்டுவெல்ஐயர்**(Robert Caldwell)**இஜி. யு. போப்பாதிரியார்,(**Rev.G.U.Pope**) இவீரமாமுனிவர் (**Constantine Beski**) முதலியோர் தமிழ் மொழியினதும் தமிழ் இலக்கியப் பரப்பினதும் அருமைபெருமைகளை ஆராய்ந்துஎழுதித்,தமிழினத்தின் தொன்மைச் சிறப்புக்களைப் பாரறியச் செய்தனர்.

1920களில் சேர்.ஜோன். மார்ஷல்,எச்.ஹீராஸ் சுவாமிகள்,எல்.இ.முக்கே(1935),ஸ்ரூவாட்பிக்கொட்(1950), சேர் மோர்ட்டிமர் வீலர் (1953) முதலியோர் சிந்துவெளி நாகரிகத்தின் உற்பத்தியிடங்களாகியஹரப்பா,முகிஞ்சதாரோஆகிய இடங்களில் அகழ்வாராய்ச்சிமேற்கொண்டுதிராவிடரின் பண்பாட்டுத் தொன் மைகளைவெளிப்படுத்திக் கொண்டிருந்தனர். திராவிடநாகரிகம் சுமார் கி.மு. 5000 ஆண்டுகளுக்குமுற்பட்டதடயங்களைக் கொண்டிருந்ததரவுகள் அவர்களால் வெளிப்படுத்தப்படலாயின.

சுவாமிவிபுலாநந்தர்இத்தகையஆய்வுகள் நடைபெற்றுக்கொண்டிருந்தகாலக்கட்டத்தில் வாழ்ந்தவர் (1892-1947)ஆவார்.அக்காலப் பகுதியிற் சுவாமிகள் ஈழத்திலிருந்து இமயம் வரையும் பயணம் மேற்கொண்டதோடுமட்டுமல்லாது இந்தியாவிற் பல்லாண்டுகள் தங்கியிருந்துபலதுறைகளில் ஆய்வுகள் மேற்கொண்டவர்;;அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலேமுதல் தமிழ்ப்பேராசிரியராகக் கடமையாற்றியவர்;சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆய்வுரைநிகழ்த்தியும்,கலைச்சொல்லாய்வுமாநாட்டுத்தலைவராகவும்செயற்பட்டவர்;தமிழ்,ஆங்கிலப் பத்திரிகைகளின்ஆசிரியராகவும்பணியாற்றிப் பல்துறைகளிற்பட்டறிவுடையவர். உலகின் பலபாகங்களிலும் ஏற்பட்டுக்கொண்டிருந்தவிளிப்புணர்ச்சி,கல்விவளர்ச்சி,அறிவியல் வளர்ச்சிமுதலானசமகாலநிகழ்வுகள்பற்றிச் சுவாமிகள் நன்கறிந்துகொண்டிருந்தார் என்பதற்குஅவரதுஆய்வுக் கட்டுரைகளும் சொற்பொழிவுகளும்,கலைத்துறை ஆய்வுகளும்சான்றாகின்றன.

**குமரிக்கண்டம்** கடற்கோள்களாற் காலத்திற்குக் காலம் அழிந்தபோது,கடற்கோள்களால் தப்பியமக்கள் வடக்கு,மேற்குகிழக்குத் திசைகள்நோக்கிப்




**பேராசிரியர்**

**பாலசுந்தரம் இளையதம்பி**

**தமிழ்த்துறைத் தலைவர்**
**அண்ணாமலை கனடா வளாகம்.**
**றொறன்ரோ.**

புலம்பெயர்ந்தனர். கடல்வழியாகவும் தரையூடாகவும் இப்புலப்பெயர்ச்சி இடம்பெற்றது. கடல்வழியாகச் சென்றமக்கள் இன்றையதமிழகப் பகுதிகளிலும்,சிந் துநதிப் பள்ளத்தாக்குப் பகுதியிலும்,மேற்கேமத்தித்த ரைக்கடற் பகுதியிலும்குடியேறி,அங்குகாலப்போக் கிலேநாகரிகத்தைத் தோற்றுவித்தனர்என்பதைச் சிந்துவெளிலும்,தமிழகத்திற் கீழடிவரையிலானபல இடங்களிலும். இலங்கையிலும் சுமேரியநாகரிகத் தளங்களிலும் நடைபெற்றுவரும் அகழ்வாய்வுகள் சான்றுபடுத்துகின்றன.பலுக்கிஸ்தானத்திற் பண்டைக் காலம் முதலாகப் பிராஹூய் மொழியைப் பேசினர் என்பதைஅண்மைக் காலத்தில் திராவிடமொழிஆ ராய்ச்சியாளர் அறிந்து,அம்மொழி; திராவிடமொ ழிக் குடும்பத்தைச் சேர்ந்ததுஎனஅடையாளம் கண் டுள்ளனர். பண்டைக் காலத்தில் குமரிக்கண்டமக்கள் எங்கெங்கெல்லாம் புலம்பெயர்ந்துசென்றமக்கள் தம் பண்பாட்டைநிலைநிறுத்தினர் என்றகருத்தினஅ டித்தளத்திலிருந்துதான் சுவாமிவிபுலாநந்தர் தமிழர்; நாகரிகவரலாறு,தமிழர் பரம்பல்,அவர்களதுமொ ழி,பண்பாடுமுதலானபொருண்மைகள் பற்றிவிரிவாகஆ ராய்ந்துதமிழரின் நாகரிகவரலாற்றையும் பண்பாட்டுப் மரபுகளையும் தமதுஆய்வுக்கட்டுரைகளின் வழியாக வெளிப்படுத்தியுள்ளமைகற்றறியத் தக்கவையாகும்.

சுவாமிகளின் காலத்திலும், அதற்குமுன்னரும் பாபி லோனியநாகரிகமக்களதுசுமேரியமொழிக்கும் திராவிடமொழிக்கும் இடையேயுள்ளதொடர்பு கள் பற்றிமேல்நாட்டுமொழியியல் அறிஞர் பலர் ஆராய்ந்துகட்டுரைகளும் நூல்களும் வெளியிட்டி ருந்தனர். பின்னாளிலேதமிழ் அறிஞர்களிற் பேரா சிரியர் ஆ. சதாசிவம் இத்தகுஆய்வில் 1960களில் ஈடுபட்டவர்ஆவார்.(1)சிந்துவெளிஆய்வாளர் களில் ஒருவரானஸ்பானியநாட்டைச் சேர்ந்த எச். ஹராஸ் சுவாமிகள்;திராவிடநாகரிகத்திற்கும் சுமேரியநாகரிகத்திற்குமிடையேஒற்றுமைகண் டார். பாபிலோனியமக்கட் சாதியரானஅக்காதியர துபண்பாட்டுக் கூறுகள் திராவிடப் பண்பாட்டுடன் ஒத்துக்காணப்படுகின்றன்பபிலோனியாவிலுள்ளச ல்டியாஎன்றநாட்டின் தலைநகர் 'ஊர்' என்பதா கும்;அங்குள்ளஒருதேவாலயக்கட்டிடத்திலிருந்து 4000 ஆண்டுப் பழமைவாய்ந்தசேரநாட்டுத் தேக்கு மரத்தூண் ஒன்றுகிடைத்துள்ளதுமுதலானதரவுகள் மட்டுமன்றிமொழிஅடிப்படையிலும் திராவிடநாகரி கத்திற்கும் சுமேரியநாகரிகத்திற்கும் இடையிலான தொடர்புகளைவிளக்கினார்.(2)

இவ்வாறாகத் தமிழர் பண்பாட்டுத் தோற்றம்,பர வல் என்பனபற்றியகருத்துக்கள் தெரிவிக்கப்பட் டகாலக்கட்டத்தில் வாழ்ந்தசுவாமிவிபுலாநந்தர் தமிழ்ப் பண்பாட்டுவரலாற்றைசிந்துவெளிநாகரிகத் தளத்துடனும் பாபிலோனியநாகரிகத் தளத்துடனும் தொடர்புபடுத்தித் தமிழர் நாகரிகத்தின் பழைமை யைநிறுவும்வகையிலானதனதுகருத்துக்களைக் கட் டுரைகளாகவெளியிட்டுவரலானார். சுவாமிகள் எழுதிய'உலகபுராணம்'என்றகட்டுரைதமிழர் நாகரி கம்,பண்பாடுஎன்பனபற்றியறியவிரும்புவோர் படித்த



றியவேண்டியதகவற் களஞ்சியமாகும்.

சுவாமிவிபுலாநந்தர் தன் கருத்தைவெளியிடும்போ துபல்துறைப் பேரறிஞர்களின் கருத்தையும்; பக்கச் ச ன்றாகக் காட்டும் ஆய்வுஉத்தியைநன்குபயன்படுத் திக்கொள்வார். திராவிடர் தமிழர் எனவும்,அவர்கள் இந்தியாவிலிருந்துமத்தித்ரைக்கடல் நாடுகளுக்குப் புலம்பெயர்ந்துசென்று,திராவிடநாகரித்தைப் பரப்பி னார்களெனவும் சுவாமிகள் குறிப்பிடுவர். சுவாமிகள் தனதுகருத்தைஉறுதிப்படுத்தும் வகையில் எச். ஹீராஸ் சுவாமிகளின் கூற்றைச் சான்றாகக் கொள்வதைஅவரது கட்டுரைகளிற் காணலாம் என்பதற்குப் பின்வரும் பந் திசான்றாகும்:

''எனது ஆராய்ச்சியிலே கண்ணுற்றனவற்றைக் கூறுகின்றேன். பழையதிராவிடமக்கள் இந்தி யாவினின்றும் புறம்போந்துகுருகூர்களிலே (அந்நியநாடுகளிலே) சிறப்பாகச்சுமேரியநாட்டிற் குடியேறுகிறார்கள். பெரோஸ் கூறியிருப்பதுபோ லஉவணனும் ஓதக்கோனும் தலைவர்களாக இம் மக்களைஅழைத்துச் செல்கின்றனர். இந்தியாவிலே முஹிஞ்சதரோவிலும் பிறநகரங்களிலும் இவர்கள் செங்கல்லினாலேவீடுகள் கட்டியதுபோலச் சுமே ரியாவிலும் கட்டுகிறார்கள். இச்செய்திஆதியாக மத்திலேகுறிப்பிடப் பட்டிருக்கிறது.அங்கிருந்து இவர்கள் சீரியாநாட்டிற்குச் சென்று ஹித்திய (**Hittite**) மன்னர் பரம்பரைக்குஅடிகோலுகின்ற னர். பின்புமத்தித்தரைக் கடலோரத்திற்குடியேறிப் பாணிகள்என்றும்,பின்னாளிலேபீனீசியர் (**Phoenicians**)என்றும் வழங்கப்பட்டகுலத்தினராய்ப் பழங்காலத்திற்பெருஞ்சிறப்போடுவிளங்கியவாணிகத் தொழிலைநடத்துகிறார்கள். பின்புகிரேக்க, இத்தாலிய



நாடுகளிலும்அணித்தானதீவுகளிலும்குடியேறியமீனவர் (**Minoans**),எத்துருஸ்கர் (**Etruscans**) என்னும் பெயரோடுவாழுகிறார்கள்.(3)

எச்.ஹீராஸ்சுவாமிகள் ஆரியதிராவிடபக்கச்சார்பற்று,சிந்துவெளிநாகரிகஆராய்ச்சியிலீடுபட்டுத் தான்ஆராய்ந்தறிந்தஆய்வு **Indian Culture (April, 1937)** என்றஆய்விதழில் வெளியிட்டிருந்தார். திராவிடரின் பெருமையைஎடுத்துக் கூறிய ஹீராஸ்சுவாமிகளுக்கு ஆரியர்வழியாகஅச்சுறுத்தல்கள் ஏற்பட்டதாகச்சுவாமிகள் குறிப்பிட்டுள்ளார். சிந்துநதியின் வலப்புறத்திருந்த மீன்நாட்டில்வாழ்ந்தோரதுகொடியில் இணைமீன்கள் பொறிக்கப்பட்டிருந்தன. இந்நாட்டுத் தலைநகராகமுன்னர் வழங்கியநண்டூர் என்பதே,பின்னாடளில் நிலத்தை அகழ்ந்தெடுத்துஅறியப்பட்டமுகிஞ்சதரோ (இறந்தோர்தரை) என்னும் இடமாகும். அங்குவாழ்ந்தமக்கள் இசைநூலிலும் வானநூலிலும் அறிவுபெற்றிருந்தனர் என்றதம் கருத்துக்கு ஹீராஸ்சுவாமிகளின் கருத்தைத் துணைக்கொண்டுநிறுவியுள்ளார்.

ஹீராஸ்சுவாமிகளின் கருத்துக்கள்,பழந்தமிழ் இலக்கிய, இலக்கணஉரைகாரர் கூறும் முச்சங்கவரலாற்றுச் செய்திகள்,சிலப்பதிகாரம் கூறும் குமரிக் கோடுங் கொடுங்கடல்கொள்ள,வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டுதென்றிசையாண்டதென்னவன் வாழிஎன்ற பாடல்வரிகள் என்பவற்றைப் படிக்கும்போது,தலைச் சங்க இறுதிக் கடல்கோளின் பின் பாண்டியனதுஆட்சியிலிருந்ததமிழ்மக்களுள் ஒருபகுதியார் கடல்கடந்துபாரசீகக் கடல்வழியாகச் சென்று யூபிறாற்றஸ் ரைகிறிஸ் நதிக்கரையிலிருந்தநாட்டிற் குடியேறிஅதற்குச் சுமேரியாஎன்னும் பெயரிட்டுவழங்கினாரென்பதும்,மற்றொருபகுதியார் வடதிசைக்கங்கையும் இமயமுங்கொண்டு,சிந்துவெளிக்கரையிலேதாம் குடியேறியநாட்டிற்குமீனாடுஎனப்பெயரிட்டு இணைக்கயல் பொறித்தகொடிகளையுடையராய் வாழ்ந்தனரென்பதும் புலனாகின்றன. தலைச்சங்ககாலத்தில் ஏற்பட்டகடற்கோள் கி.மு. 5000 ஆண்டளவில் ஏற்பட்டதென்பதுசுவாமிவிபுலாநந்தரின் கருத்தாகும். இதேகாலத்தையேசிந்துவெளிநாகரிககாலம் என அறிஞர்கள் கருதுவதும் நோக்கத்தக்கது.

சுவாமிவிபுலாநந்தர் இலண்டன் பல்கலைக்கழகவிஞ்ஞானப் பட்டதாரிஆவார். தான் கற்றுக்கொண்டவிஞ்ஞானஅறிவும் ஆய்வுகூடஅனுபங்களும்அவரதுஇசை ஆராய்ச்சிக்குப்; பக்கத் துணையாகஅமைந்தன. அவர் பௌதிகம்,கணிதம் சார்ந்தஅறிவைநன்குபயன்படுத்தி இசைஆராய்ச்சியைமேற்கொண்டிருக்கிறார் என்பதற்குயாழ் நூல் தக்கசான்றாகவிளங்குகிறது.அவரதுதனிப்பட்டஆளுமைகளும் அறிவுப்புலமும் அவரதுஆய்வுமுடிபுகளுக்குப்பக்கத்துணையாயின. விபுலாநந்தரின் ஆளுமையில் ஆங்கிலம்,தமிழ்,வடமொழிஆகியமொழிப் புலமையும்துணைசெய்தன. அத்துடன் கலைகள்,பன்மொழிஇலக்கியங்கள்,இசை-பாட்டு-கூத்துஎன்பனவற்றில் அவருக்கு இருந்தஈடுபாடும்,அக்கறையும் அவரதுஆய்வுப் புலத்தைஅகலவைத்தன. துறவறம் மேற்கொண்டிருந்தசுவாமிகளுக்குப் பண்பும்,ஆன்மீகமும்,அறிவியலும் ஆய்வுநோக்கும் ஒன்றாய் இணைந்திருந்தன. இத்தகையஆளுமைகள் சுவாமிகளின் எழுத்துக்களிலும் செயல்களிலும் தெளிவாகப் புலப்படுவதைஅவதானிக்கலாம்.

ஒருவருடையஆளுமைசமுதாயத்தினதும் சமகாலத்தினதும் செல்வாக்குகளுக்குஆட்படுவதுண்டு. அதேபோற் சிறந்தஆளுமைஉடையவர்களின் செல்வாக்குக்குஅவர்களதுகாலச் சமுதாயமும் ஆட்படுவதுண்டு. சுவாமிவிபுலாநந்தரைப் பொறுத்தவரைஅவர்,தமதுகாலத்துச் சமுதாயத்தின் அடிமைத்தனத்தையும் அறியாமையையும் ஒழித்து,மக்களின் எதிர்காலத்துக்குஒளியூட்டவிழைந்தார். அவரதுஆளுமையும் பெறுமானங்களும் சமுதாயத்திற்குப் புத்துயிரூட்டி,அதனைத் தூண்டுவனவாகஅமைந்தன.

தமிழியல் ஆய்வுசுவாமிகளின் காலத்தில் விரிவடையத் தொடங்கிற்று. மொழி, இலக்கியம்,பண்பாடு,வரலாறு,சமூகம்,தத்துவம் முதலியதுறைகளில் வளர்ச்சிகண்ட தமிழியல் ஆய்வுவரலாற்றில் சுவாமிவிபுலாநந்தருக்குத் தனியானஒரிடமுண்டு. அறிவியலைத் தமிழியலுக்குஅறிமுகப்படுத்தித்,தமிழியல் ஆய்வுநெறியிற் புதியதொரு செயல்திறனைச்; சுவாமிகள் நிறுவினார்.


சுவாமிகள் மேற்கொண்டஅனைத்துஆய்வுத் துறைகளிலும் செம்மைசான்றஆய்வுநெறிகள் **(Research Methodology)**பின்பற்றப்பட்டன. தான் எடுத்துக் கொண்டபொருண்மையைமுழுமையாகவும் வரலாற்றுஅடிப்படையிலும்,ஒப்பியல் நோக்கிலும் அணுகும் ஆய்வுமுறைசுவாமிகளிடம் அமைந்திருந்தது.

தமதுஆய்வுமுடிபுகளைமேலாய்வுக்குவிட்டுச்செல்வதும்,ஆய்வாளரைஆய்வுத்துறைகளுக்குநெறிப்படுத்துவதும் அவரதுஆராய்ச்சிஅணுகுமுறைகளின் செம்மை நெறிகளாகக் காணப்படுகின்றன.

மேலைத்தேயமொழிகளில் நன்குவளர்ந்துள்ளஅறிவியற் செல்வங்களைஆராய்ந்தறிந்து,அவற்றைத் தமிழிலேதரவேண்டும் என்றகுறிக்கோளுடையவராகச் சுவாமிகள்செயற்பட்டார். திருவினாலும் அரசினாலும் மேம்பாடுற்றுப் பிறநாடுகள் பலவற்றிலும் தமது ஆணை செலுத்திவருகின்றஆங்கிலராதிமேலைநாட்டவரதுசெல்வப் பெருக்கத்துக்குஉரியகாரணங்கள் எவை?எனஆராயமுற்பட்டுச் சுவாமிகள் எழுதியகட்டுரைகள்,உலகப் பண்பாட்டுவளர்ச்சிபற்றி; அவர்கண்டஉண்மைகளை வெளிப்படுத்துவனவாகஅமைகின்றன. ஆய்வாளர் ஒருவர்,ஒருபொருள் பற்றிஆராய்கிறார் என்றால்,அந்தஆய்வினால் நாடும் மக்களும் பயனடையவேண்டும். அதுவேஆராய்ச்சியின் பெறுபேறாகும். சுவாமிகள் மேலைநாட்டாரதுபண்பாடுபற்றிஆராய்ந்தமைக்குரியகாரணத்தைஅவர் வருமாறுகுறிப்பிடுகிறார் பரந்த இப்பொருளைஆராயுங்கால் மேலைநாட்டாரதுஅரசியல் முறையும்,புலநெறிவழக்கமும்,கலைபயில்நிலைமையும்,பொருள்செயல்வகையும்,பிறவும் தெற்றெனப் புலப்படுவனவாம். அங்ஙனம் புலப்படவேமனத்தின்கண் ஊக்கம் மேலிட்டுஅவர் படைத்ததிருவையாமும் படைப்பதற்குமுயல்வோமாதலின் இவ்வாராய்ச்சி பெரிதும் பயனுடைத்தாமென்களனக் கூறி,மேனாட்டு அறிவியல் வளர்ச்சிபற்றிசுவாமிகள் ஆராயத் தொடங்கினார்.

தம் நோக்கத்தைநிறைவுசெய்யும் வகையிலேதாம் மேற்கொண்டபண்பாட்டியல் ஆய்வின் பயனாகப் பிறமொழிக் கருவூலங்களைக் கண்டறிந்துஅவற்றைத் தமிழிற் கொண்டுவருவதற்குரியபணிகளில் ஈடுபட்டார். பிறமொழிகளிலுள்ளசிறந்தஅறிவைநாம் பெற்றுஎமதுமொழியைவளம்படுத்துவதற்குஅம்மொழிகளிலுள்ளசிறந்த நூல்களைமொழிபெயர்த்தெடுத்தல் வேண்டும் என்பதைவற்புறுத்திவந்தார். உளவியல்,அறிவியல்,ஆட்சியியல்,கணிதம்,சட்டம் முதலானபல்துறைசார்ந்த நூல்களிலுள்ளகலைச்சொற்களுக்குஒத்தசொற்களைத் தமிழில் ஆக்கிக்கொள்ள வேண்டும் எனவும்,அவ்வாறுகலைச்சொல்லாக்கம் செய்யும்போதுசொற்சுருக்கம்,விளக்கம்,தமிழ் வடிவம் முதலானபண்புகள் மனதிற் கொள்ளப்படவேண்டும். உயிருள்ளமொழியானதுபிறமொழித் தொடர்புகொண்டுதனக்குரியசொற்களஞ்சியத்தைப் பெருக்கிக் கொள்ளுதல் வேண்டும். வினையெஞ்சுகிளவி,தொகைமொழி,தொடர்மொழிஎன்றின்னவற்றிற்கு இலக்கண நூலாசிரியர் கூறியவரம்பினைக் கடைப்பிடிப்பதுஎவ்வாற்றானும் இன்றியமையாததேயாகும்என்றகருத்துக்களையும் சுவாமிகள் வலியுறுத்திவரலானார். (4)

சுவாமிகள் தமிழ் இலக்கியங்களையும் மற்றும் கல்வெட்டுச் சான்றுகளையும் துணைக்கொண்டுபண்பாட்டுவரலாறு, இசைவரலாறுமுதலானஆய்வுகளில் ஈடுபட்டிருந்தார். அதேவேளைசுவாமிகள்தமதுஆய்வைப் பரந்தநோக்குடன் விரிவுபடுத்திமேற்குலகப் பண்பாட்டுவரலாறுபற்றியஆய்விலும்; நாட்டம்கொண்டிருந்தார். அந்தஆய்வின் பயனாக




**'மேற்றிசைச் செல்வம்','விஞ்ஞானதீபம்,' ஆங்கில வாணி' , 'எகிப்தியநாகரிகம்',உலகபுராணம்,'நாகரிகவரலாறு','யவனபுரத்துக் கலைச்செல்வம்'**

முதலான ஆய்வுக் கட்டுரைகளைத் தொடர்ச்சியாக எழுதினார். இந்தஏழுகட்டுரைகளும் தனித்தனியாகஆராயத்தக்கவை. இப்பொருண்மைகளில் மேற்கொண்டபண்பாட்டுஒப்பீட்டுஆய்வின் பயனாகத் தமிழர் பண்பாட்டின் தொன்மை,தமிழ்ப்பண்பாடுமத்தித்தரைக் கடற்பிரதேசங்களுக்குப் பரவியிருந்தமை,அந்நாடுகளின்பண்பாடுகளுக்குத் தமிழர்பண்பாடுஎத்தகையபங்களிப்பினைச் செய்திருந்ததுஎன்பனகுறித்தும் கட்டுரைகள் வாயிலாகவும்,பல்கலைக்கழகத்தில் நடத்தியசொற்பொழிவுகள் வழியாகவும் வெளிப்படுத்தினார். இப்பின்னணியிற் சுவாமிகள் எழுதியஆய்வுக் கட்டுரைகளிலே' தமிழர் நாகரிகத்தின் பழைமை','கடல் கடந்துநாகரிகத்தைப் பரப்பியமை','தமிழ்மொழிவரலாறு' முதலியவைகுறிப்பிடத்தக்கவையாகும்.'உலகபுராணம்பற்றியதமதுகட்டுரையின் பயன்பாடுபற்றிச் சுவாமிகளேவருமாறுகுறிப்பிடுவர்:

**''தமிழரதுநாகரிகம் மிகப் பழமைவாய்ந்தது. உலகசரித்திரத்திலேதமிழரேமுதல் நாகரிகவாழ்க்கையைய் தியசாதியாரென்பதற்கும், கடல் கடந்துசென்றுதமதுநாகரிகத்தைப் பலப்பலநாடுகளிலும் பரப்பினார்**

என்பதற்கும்,வணிகத்துறையிலும் கணித நூல்,வான நூல் முதலியதுறைகளிலும் வல்லுநராய் இருந்தாரென்பதற்கும் பலசான்றுகள் கிடைத்திருக்கின்றன. இவை தம்மைச் சுருக்கமாகஆராய்ந்து கூறுதலே'உலகபுராணம்'' என்னும் இப்பொருளுரையின் நோக்கமாகும்எனச்சுவாமிகள் குறிப்பிடுவதுசிந்திக்கத்தக்கதாகும் (5)

*திராவிடர்,அவர்களின் தொன்மைத் தளங்கள்,திராவிடருக்கும் தமிழருக்கும் உள்ளதொடர்புகள்,தமிழ்மொழியின் தோற்றம்,அதன் வளர்ச்சிப்படிகள்,தமிழ்மொழிஎங்கெங்கெல்லாம் பரவியிருந்தமை,தமிழர் நாகரிகத்தின் தோற்றக் களம்,தமிழ் மொழி பிறமொழிகளுக்குவழங்கியசொற்கள்,அத்தகுசெல்லாட்சிகளின் மூலம் பெறப்படும் வரலாற்றுச் செய்திகள்எனப் பன்முகப்பட்டபொருண்மைகளுக்கெல்லாம் உரியவிளக்கங்களைஅறிந்துகொள்வதற்கு'உலகபுராணம்', 'மேற்றிசைச் செல்வங்கள்'முதலானகட்டுரைகள் துணையாகின்றன.தமிழரதுநாகரிகம் மிகப் பழமை வாய்ந்தது. உலகசரித்திரத்திலேதமிழரேமுதன்முதல் நாகரிகவாழ்க்கைஎய்தியஇனம் அவர்கள் கடல் கடந்துசென்றுதமதுநாகரிகத்தைப் பலப்பலநாடுகளிலும் பரப்பினார்கள்;; வணிகத்துறையிலும்,கணிதம்,வானியல்முதலியபலதுறைகளிலும் வல்லுநராய் விளங்கினர் என்பனபற்றியவிடயங்களைப்பற்றியறியப்பலசான்றுகள் கிடைத்துள்ளன. அவற்றைவிளக்குவதே 'உலகபுராணம் ' என்பதுசுவாமிவிபுலாநந்தரின் கருத்தாகும்.*

*மேலைநாட்டுஅறிஞர்களாகியசேர். எச்.எச். ஜான்சன், எச். ஜி. உவெல்ஸ்,உவில்விறட்ஸ் காவென் பிளனற், ஹக்ஸ்லிமுதலியோர் சுமேரியம்,அக்கேடியம்,பபிலோனியம்,எகிப்தியம்,ஆசுரேயம் முதலியநரகரிகங்கள் பற்றிமுழுமையாகஆராய்ந்துஅவற்றின் வரலாற்றினை நிறுவியுள்ளனர். காலவரிசைஅடிப்படையில்மேற்குறிப்பிட்டநாகரிகங்களைநோக்கும்போதுஅவற்றின் முன்வரிசையிற் சுமேரிய,அக்கேடியநாகரிகங்கள் தென்படுகின்றன. இப்பழையநாகரிகங்களுக்கும் தமிழ் நாட்டுப் பூர்வீகநாகரிகத்திற்;குமிடையேஒற்றுமைகள் காணப்படுவதைச் சுவாமிவிபுலாநந்தர் 'நாகரிகவரலாறு'என்றகட்டுரையில் ஆராய்ந்துவிளக்கியுள்ளார். யவனர்கள் தத்துவம்,எழுத்துக்கலைமுதலானவற்றில் மிகவும் முன்னேற்றம் அடைந்தவர்;களாக இருந்தனர்; என்பதைஅவர்களதுபண்பாட்டுவரலாறு விளக்கிக் கூறுகிறது. ஆயினும்,யவனர் முதலானோர் பரதகண்டத்திலிருந்துபலவிடயங்களைப் பெற்றுத் தமதுநாகரிகங்களைவளம்படுத்திக்கொண்டனர் என்ற தனதுகருத்தைமேனாட்டறிஞர்களின் கருத்துக்களிலிருந்துசான்றுகாட்டிநிறுவியுள்ளமைநோக்கத்தக்கது.*

*பிரித்தானியப் பழம்பொருட் காட்சிச்சாலையி;ல் (*__British Museum__*)எகிப்தியஆசுரேயப் பகுதிக்குஉதவித்தலைவராகப் பணியாற்றியஎச் ஆர்.ஹால் (*__H.R. Hall__ *)என்னும் பேரறிஞர் தாம்எழுதியபுராதனசரித்திர நூலிலே(*__The Ancient History of the near East__*) பின்வருமாறு கூறுகிறார்.*

**''பழையசுமேரியர் திராவிடகுலத்தாரென்பதுசுமேரிய உருவங்களைக் கூர்ந்துநோக்குவோருக்கு இனிதுபுலப்படும். திராவிடமொழிகளை இக்காலத்திலும் வழங்கும் தென்னிந்தியனின் உருவத் தோற்றமேபழையசுமேரியனின் உருவத்தோற்றம். பழையசுமேரியர் இந்தியாவிலிருர்ந்துகரைவழியாகவும்,பாரசீகக் கடல் வழியாகவும் சுமேருநாட்டிற் குடியேறினார்களென்றும் எண்ண இடமுண்டு''. இவர்கள் குடியேறிய புதுநாட்டிற்குக் கொண்டுவந்தநாகரிகம் சிந்துநதிக் கரையில்வளர்ச்சி எய்திருக்கலாம்.(6)**



*இந்தமேற்கோளின் மூலம் சுவாமிகள் சுமேரியருக்கும் திராவிடருக்கும் இடையேயுள்ளபல்வேறுதொடர்புகளைநிலைநிறுத்தும் உத்தியைக் கையாண்டுள்ளமைபுலப்படுகிறது.*

*கி. மு. 2750 ஆம் ஆண்டிற் பாரசீகவிரிகுடாமுதல் மத்தித்தரைக் கடல் வரையுள்ளபகுதியிற் சுமேரியசாம்பிராச்சியம் பரவியிருந்தது. அதன் தலைநகரமாகஏரேக் விளங்கிற்று. உலகிலேமுதன் முதலாகக் கட்டிடங்களையும் பட்டணங்களையும் தோற்றுவித்தவர்கள் சுமேரியரே. இவர்கள் பேசியமொழிதிராவிடமொழிகளோடுமிகநெருங்கியதொடர்புடையவை. சுமேரியர் கோபுரத்தோடு கூடியகோயில்களைக் கட்டியிருந்தார்கள். நிப்பூர் என்னுமிடத்திலேதமதுபிரதானதெய்வமாகிய'எல்-இல்'என்னும் சூரியதேவனுக்கு ஒருகோயில் கட்டியிருந்தனர். பிளனற், ஹக்ஸ்லிஎன்ற இரு அறிஞர்கள் இது பற்றியஆய்வில் ஏற்கனவேஈடுபட்டிருந்தனர். இவர்களின் ஆய்வுத் தரவுகளைத் துணைக்கொண்டுஎகிப்தியரும் திராவிடரும் ஒரேகுலமுறையில் வந்தோராகஇருத்தல் வேண்டும் என்றகருத்தைச் சுவாமிகள் முன்வைத்துள்ளார்.*

*ஒருகாலக்கட்டத்தில் மஞ்சள் நிறத்தையுடையமிகவும் சீர்திருத்தமுடையஒருசாதியார் இங்கிலாந்து,பிரான்சு, ஸ்பானியா,மத்தித்தரைக்கடற் பிரதேசங்கள்,எகிப்து, இந்தியா,சீனத்தின் பசுபிக்கரைப் பிரதேசம்,மெச்சி*



க்கோ,பெருஆகியநாடுகளில் பரவியிருந்தனர். அவர்கள் சூரியனையும் பாம்பையும், இந்தியாவில் வழங்கும் சுவஸ்திகாஎன்றஅடையாளத்தையும் சமயத்தோடுதொடர்புபடுத்திவழிபட்டுவந்தனர். அவர்கள் கி. மு. 15,000 ஆண்டுகளுக்குமுற்பட்டவர்களாவர். அவர்களதுபண்பாட்டுக்குஉட்பட்டகிறீத்தீவில் 1920இல் கிடைத்த கல்வெட்டுக்களின் எழுத்துக்களைஆராய்ந்தஎச். ஜான்ஸ்டன் என்றஅறிஞர்,அவ்வெழுத்துக்கள் கி.மு. 3000 ஆண்டுகளுக்குமுற்பட்டவைஎன்றும்,அக்கல்வெட்டுக்;களில் எழுதப்பட்டமொழிதிராவிடமொழிகளோடுதொடர்புபட்டிருந்ததுஎன்றும் குறிப்பிட்டிருந்தார். அந்தஆய்வின்மூலம் பெறப்பட்டகருத்தினைச் சுவாமிவிபுலாநந்தர் தமிழ்ப் பண்பாட்டியலுடன் தொடர்புபடுத்திஆராய்ந்து கூறும் கருத்துஈண்டுக் குறிப்பிடத்தக்கது:

உற்றுநோக்கும்போதுஎகிப்தின் பிரதானநதியாகியநீலநதி,சுமேரியதலைநகராகியநிப்பூர்,எல்,வேல் என்னுங் கடவுட் பெயர்கள் தமிழ்மொழியாக இருக்கின்றன. பின்னும் யவனமொழிஎழுத்துக்களின் வடிவம்,தமிழ் எழுத்துக்களோடும் கிரந்தலிபியிலுள்ளஎழுத்துக்களோடும் தொடர்புடையதாகக் காணப்படுகிறது. (7)

கி. மு. 2000இல் அமேரியர் இனத்துமுதலாம் முறாபி என்னும் அரசன் சுமேரியரைவென்றுபாபிலோனிய அரசைநிறுவினான். அவ்வரசுமிகவும் நாகரிகமுற்று விளங்கிற்றுஎன்பதைக் கி. பி. 1900இல் அப்பகுதியிற் கண்டுபிடிக்கப்பட்டகற்சாசனத்தில் எழுதப்பட்டிருந்த 282 பிரிவுகளைக்கொண்டபாபிலோனியரதுசட்டப் புத்தகம் சான்றுபடுத்துகின்றது. பாபிலோனியநாகரிகம் கிரேக்கநாகரிகத்திற்குமுன்னோடியாகஅமைவதாயிற்று. அங்குகாணப்பட்டஎல்,வேல்,ஆசுர்,எயா (அயன்) முதலானசொற்கள் தமிழ்மொழியுடன் தொடர்புடையனவாகக் காணப்படுதல் பற்றியும் சுவாமிகள் ஆராய்ந்துள்ளார். சுமேரியம்,பாபிலோனியம்,கிரேக்கம் முதலானநாகரிகங்களைஆராய்ந்தசுவாமிகள் கூறும் கருத்துகூர்ந்துநோக்கத்தக்கது:

நமதுதாய்நாடாகியபரதகண்டத்தின் நாகரிகமோ இவை எல்லாவற்றுக்கும் முற்பட்டதுஎனச் சான்றுகளுடன் நிறுவினர். செல்வச் செருக்கினால் அறிவு மூடுண்டுகிடக்கின்றமேற்றிசைப் பிரபுக்கள் இதனைஅறிந்தாலும் வெளியிடுவதில்லை. எனவேநம் நாட்டுப் பெருமைகளைநாமேகண்டறிந்துவெளிப்படுத்தமுன்வரவேண்டும்.நம்முடையசிறுமைக்கெல்வலாம் காரணமாயிருக்கிறபிரிவிடினையையும் ஒருங்கேகளைந்துவிட்டு,உடல்,பொருள்;,ஆவி மூன்றையும் தேசசேவைக் கேஓப்புக்கொடுத்து,நமதுதேசத்தையும் மொழியையும் பெருக்கமுறப் பண்ணுவோமாயின் நாமும் பெருமைஅடைவோம். நம் முன்னோர்கும் பெருமைஅடைவர்.;- என்றார்.(8)

**சுவாமிகள் இந்தஎழுத்துஒற்றுமைபற்றிக் கூறும் ஆய்வுக் கருத்தினைநோக்கலாம்**

யவனமொழியின் நெடுங்கணக்கு இருபத்துநான்குஎழுத்துக்களைக் கொண்டது. உயிரெழுத்து ஏழு,மெய்யெழுத்துபதினேழு.சந்தியக்கரங்கள் பலவுளவாயினும்அவைஈரெழுத்துக்கூடியவரிவடிவினவாதலின் தனியெழுத்தெனஆராய்தல் வேண்டா. மெய்யெழுத்துப் பதினேழினுள் தமிழ்மொழிக்கும் யவனபுரமொழிக்கும் ஒலியுருவத்தாற் பொதுவெழுத்தாவன ப, க, த, ல, ம, ந, ர, ச என்னும் எட்டுமாம். இருமொழிக்கும் பொதுவாகிய இவ்வெட்டுமெய்களும் ஒத்தவரிவடிவினவாக இருக்கின்றன. உயிரெழுத்துக்களுள் ஏகாரஓகாரங்கள் ஒத்தவடிவின. எகரஓகரங்கள்வேறுபட்டவடிவின. யவனமொழி இகரஉகரங்கள் பழந்தமிழ் யகரவகரங்களைநிகர்த்தன. .. .. .. யவனபுரநெடுங்கணக்குத் தமிழ் நெடுங்கணக்கோடுபூரணஒற்றுமையுடையதென்பது நிறுவப்படுகிறது. இவ்விருமொழியின் வரிவடிவங்கள் ஒன்றினின்றுஒன்றுஎழுந்தனவாமோ,அன்றேல் இவற்றின் வேறாகியமற்றொருமொழியின் வரிவடிவத்தினின்றுஎழுந்தனவோஎன்பதனைமேலாராய்வாம்.(8)

எனக் குறிப்பிடுவதும் அவரதுஆய்வின் பக்குவத்தைக் குறிப்பிடுவதாகும்.

**சேஸ்** (**Sayce:1887**) என்றஅறிஞர்‘ஹிப்பார்ட் சொற்பொழிவு’ என்றதனது நூலிலேதென்னிந்தியாவுக்கும் சுமேரியாவுக்கும் இடையில் கி. மு. 4000 ஆண்டுகளுக்குமேலாகவணிகத் தொடர்பு இருந்ததாகக் கூறுவர். அவர் தம் நூலிற் குறிப்பிடும் செய்தியைச் சுவாமிகள்தனதுகருதுகோளுக்குத் துணையாகஎடுத்துக் கூறியுள்ளதைநோக்கலாம்:

> ‘‘சுமேரியமன்னனின் தலைநகரமான‘ஊர்’’என்ற இடத்தில் சந்திரபகவானுக்குஎழுப்பியகோயிற் சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்தியநாட்டுத் தேக்கமரத்தின் துண்டுஒன்றும் அச்சிதைவுகளிற் காணப்பட்டது. அதன் வயதுஎல்லை கி.மு.3000 ஆண்டுஎனக் கணிக்கப்படுவதால் அதற்குமுன்னரே தேக்குமரம் ஏற்றுமதியாயிற்று.அங்கமைந்திருந்த ‘ஊர்’’என்றநகர் கி.மு. 3000இல்அழிந்தமையால் அதற்கும் பலஆண்டுகளுக்குமுன்னராகவேநாகரிக

வளர்ச்சிகண்டிருக்கவேண்டும். (9)

எனவேசுவாமிவிபுலாநந்தர் கூறுவதுபோன்றுதமிழர் நாகரிகம் கிரேக்கநாகரிகத்திற்கும் முற்பட்டதுஎன்பது இத்தால் நிறுவப்படுகிறது. பெரிப்புளூஸ் என்றஅறிஞர் தமிழர் பண்பாட்டுப் பழமையைமேலும் பல்லாயிரம் ஆண்டுகட்குமுற்பட்டதுஎன்பதை,கிரேக்கமக்கள் அநாகரித்தினின்றும் விழித்தெழுவதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன்பேஎகிப்தும் பண்டைய இந்தியநாடுகளும் வணிகத்தொடர்புகொண்டிருந்தன. பாரசீகவளைகுடாவின்வடபால் இந்நாடுகள் ஒன்றோடொன்றுபண்டமாற்றுச் செய்துகொண்டன.எனக் கூறுவர். இச்செய்தி,பல நூற்றாண்டுகளுக்குமுன்னர் எழுதப்பட்ட'எரித்திரியக் கடலின் பெரிப்ளூஸ் (**Periplus of the Erithraean**) என்ற நூலிற் குறிப்பிடப்பட்டுள்ளது. பாபிலோனியர்களுடன் தமிழ் வணிகர் வர்த்தகத் தொடர்புகொண்டிருந்தமைக்குச் சான்றுகள் கிடைத்துள்ளன. பாபிலோனியாவில் நிப்பூர் என்ற இடத்தில் முரஜூ என்பவரும் அவரதுமக்களும் நடத்திவந்தவணிகத்தில் நாணயங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவர்களதுவணிகத்திற் கணக்குப் பதியப்பட்டகளிமண்ணோடுகள் சிலவற்றிற் பாபிலோனியர் தமிழகவணிகருடன் கொண்டிருந்தபற்றுவரவுகள் குறிக்கப்பட்டுள்ளன. அதேகாலத்தில் தமிழ் வணிகர் பாபிலோனியநகரத்தில் குடியேறி,அங்கேயேதங்கித் தம் தொழிலைநடத்திவந்தமைக்கும் இம்மண்ணோடுகள் சான்றுபகர்கின்றனஎனடாக்டர் கே.கே. பிள்ளை (2000:51),மற்றும் க. ப. அறவாணன் ஆகியோர்குறிப்பிட்டுள்ளமையும் ஈண்டு நோக்கத்தக்கது. (10)

சாலோமன் என்பவன் தாவீதுமன்னனின் புதல்வன் ஆவான். அவனதுஆட்சிக் காலத்திற் (கி.மு.1000) பெரும் பொருட்செலவில் எருசலேம் பட்டணத்தில் மிகப்பெரியதேவாலயம் ஒன்றுகட்டப்பட்டது. சாலோமன் தமிழகத்தாரோடுவர்த்தகத் தொடர்புகொண்டிருந்தான் என்பதுபிறநாட்டார்குறிப்புக்களிலிருந்துஅறியப்படுகிறது. அவர்கள்பாய்மரக்கப்பல்களின் மூலம் இந்தியாவுக்குவந்துஏலம், இலவங்கம்,பட்டுத்துணி,பொன்,வெள்ளி,யானைத்தந்தம்,மயில்தோகை, இரத்தினம் முதலானபொருட்களைப் பெற்றுச் சென்றமைக்கானசான்றுகள் அறியப்படுகின்றன. அவர்களதுமொழியாகியஎபிரேயத்தில் அகில்,தோகை முதலானதமிழ்ச் சொற்கள் இடம்பெற்றுள்ளன. எனவே கிரேக்கநாகரிகம் வளர்ச்சிஅடைந்திருந்தபோதுதமிழரது நாகரிகமும் வளர்ச்சிகண்டிருந்ததுஎன்பதேசுவாமிகளின் கருத்தும் ஆகும்.

பம்பாய் நகர்ப் பல்கலைக்கழகத்துவரலாற்றுப் பேராசியர் எச். ஹீராஸ் சுவாமிகள் இத்தாலியநாட்டைச் சேர்ந்தமதகுருஆவார். அவர் காய்தல் உவத்தலின்றிதனது ஆய்வுக் கருத்துக்களைவெளியிட்டிருந்தார். சிந்துவெளிநாகரிகம் திராவிடருக்கேஉரியதென்றும்,அம்மக்கள் மீனராசியையாழ் என்னும் பழந்தமிழ்ப் பெயரினால் வழங்கினார்கள் என்றும்குறிப்பிட்டிருந்தார். எனவேசிந்துவெளிமக்கள் இசை நூலிலும் வானியல் நூலிலும் அறிவுபெற்றிருந்தமையையும் இது காட்டுகின்றதுஎன்றார். முகிஞ்சதாரோநாகரிகம் பழந்தமிழ்



நாகரிகத்தோடும் யூபிறற்றஸ் - ரைகிறிஸ் நதிக்கரையிலேபல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் விளங்கியசுமேரியநாகரிகத்தோடும் தொடர்புடையதுஎன்பதுஅறிஞர் கருத்து. சுமேரியர் தமிழர் வழிவந்தவர்களேஎன்பதற்குப் பலசான்றுகள் உள்ளனஎனக் கூறி,அதற்குரியசான்றுகள் பலவற்றைத் தம் கட்டுரையிலேதந்துள்ளார்.

ஆர்.எச் ஹோல் (**H.R. Hall**)என்பவரின் **The Ancient History of the Near East** என்ற நூலிலேதரப்பட்டகருத்துக்களின் சாரத்தையும் சுவாமிகள் தனதுகட்டுரையிலேதந்துதம் கருத்தைவருமாறுநிறுவியுள்ளார்:

சுமேரியரதுஉருவச் சாயல் அவர்களதுஓவியங்களாலேதெளிவாகப் புலப்படுகின்றது. இக் காலத்து இந்தியர்களின் உருவச்சாயல் பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன்புவாழ்ந்ததிராவிடமுன்னோரின் உருவச்சாயலைநிகர்த்தது. இக்காலத்துக் கிரேக்கர், இத்தாலியரின் உருவச் சாயல்,ஆரியர் வருகைக்குமுன் அந்நாடுகளில் வாழ்ந்தமுன்னோரின் உருவச்சாயலைநிகர்த்திருப்பதுபோல இந்தியாவிலும் திராவிடஉருவச்சாயலேநிலைபெற்றுநின்றது. பழையசுமேரியர் திராவிடகுலத்தார் என்றுசுமேரியஉருவங்களைக் கூர்ந்துநோக்குவார்க்கு இனிது புலப்படும். .... திராவிடமொழிகளை இக்காலத்திலும் வழங்கும் தென்னிந்தியனின் உருவத் தோற்றமேபழையசுமேரியரின் உருவத் தோற்றம். பழையசுமேரியர் இந்தியாவிலிருந்துதரைவழியாகவும் பாரசீகக் கடல்வழியாகவும் சுமேருநாட்டிற் குடியேறினார்களென்றுஎண்ண இடமுண்டு. இவர்கள் குடியேறிய புது நாட்டிற்குக் கொண்டுவந்தநாகரிகம் சிந்துநதிக்கரையிலேவளர்ச்சிஎய்தியிருக்கலாம் . இவர்கள் சிந்துநதிக்கரையிலிருந்துசுமேருநாட்டிற்குவரும்வழியிலேஏலம் (**ELAM**)என்னும் நாட்டிலேதமதுநாகரிகத்தைப் பரப்பினார்கள்.(11)

மேற்காட்டப்பட்டஆய்வுச் சான்றுகளைத் துணையா




கக்கொண்டுசிலப்பதிகாரம் தரும் நாகரிகவரலாற்றுச் செய்திக்குஉயிரூட்டும் வகையிற் சுவாமிவிபுலாநந் தரின் ஒப்பீட்டுஆய்வுத் திறன் பாராட்டும் வகையில் அமைந்துள்ளமைகாண்க:

குமரிக்கோடுங் கொடுங்கடல் கொள்ளவடதிசைக் கங் கையும் இமயமுங் கொண்டுதென்றிசையாண்டதென் னன் வாழிஎன்னும் சிலப்பதிகாரக் கூற்றையும் நாம் படிக்கும்போதுதலைச்சங்கத்து இறுதிக் கடல்கோளின் பின் பாண்டியனதுஆட்சியிலிருந்ததமிழ் மக்களுள் ஒரு பகுதியார் கடல் கடந்துபாரசீகக்கடல் வழியாகச் சென் றுயூபிறாற்றஸ் ரைகிறிஸ்நதிக் கரையிலிருந்தநாட்டிற் குடியேறிஅதற்குச் சுமேரியாஎன்னும் பெயரிட்டுவழங் கினார்கள் என்பதும்,மற்றொருபகுதியார் வடதிசைக் கங்கையும் இமயமுங்கொண்டு,சிந்துநதிக்கரையிலே தாம் குடியேறியநாட்டிற்குமீனாடுஎனப் பெயரிட்டு இணைக்கயல் பொறித்தகொடியைஉடையராய் வாழ்ந் தாரென்பதும் புலனாகின்றன. இங்குஉறைந்துசிலகா லத்தின்பின் கரைவழியாகவும் சுமேரியாவிற்குச் சென் றிருக்கலாம்.(12)

பிரித்தானியசங்கம் (**British Association**)என்னும் ஆராய்ச்சிக் கழகத் தலைவராகியஸேர். ஜான் எவன்ஸ் (**Sir John Evans**) என்னும் பெரியார் தலைமையுரை யிலேபின்வருமாறு கூறுகிறார்.

மனிதசாதியாரின் தொட்டில் தென்னிந்தியாவாக இருக்கலாம். வடதிசைமக்களின் முன்னோரும் மத்தித்த ரைக் கடற்கரையிலுள்ளநாடுகளில் வாழ்ந்தமக்களின் முன்னோரும் முதலிலே இருந்துசென்ற இடம் தென் னிந்தியாவாக இருக்கலாமென்றுஆராய்ச்சித் துறைகள் காட்;டுகின்றன. (13)

இதுவரைகுறிப்பிடப்பட்டதரவுகளிலிருந்துபின்வரும் உண்மைகள்புலப்படுகின்றன. 19ஆம் 20ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்தமேனாட்டுஅறிஞர்கள் பாபி லோனியநாகரிகம்,திராவிடநாகரிகம் என்பனபற்றிஎ ழுதிய நூல்கள் அனைத்திலும் சிந்துவெளித் திராவிடநா கரிகமேஉலகநாகரிகத்தின்அடிப்படையாகஅமைவதும், திராவிடக்குடியேற்றம்மேற்குலகநாடுகளில் இடம்பெற் றிருந்தனஎன்பதும் பெறப்படுகின்றன. இவற்றைச் ச ான்றுபடுத்தும் ஆவணங்களைசுவாமியின் கட்டுரைக ளின் வழிநின்றுதொகுத்துநோக்கலாம்:

**1.Rev.Fr. H. Heras: Articles in Indian Culture-1937**

**2.Rev.Fr. H. Heras: Articles in New Review – 1941**

**3. Rev. H. Heras,Studies in Proto-Indo-Mediterranean Culture (Vol. I)**

**4.H.R. Hall : The Ancient History of the Near East**


**5.Ragozin: Story of Chaldea**

**6.Periplus of the Erithraean**

**7.AbinashChanndra Das: Rig Vedic India**

இவ்வாறாகத் தமிழர் பண்பாடுதொன்மையும் சீரும் சி றப்பும் பெற்றுபல்லாயிரம் ஆண்டுகள் வழங்கிவந்தபோ து,பின்னாட்களிற் பிராமணியமயப்பட்டஆட்சிவழிச் செல்வாக்கும்,அதனைத் தொடர்ந்துவந்தமேலைத்தே யத்தாரின் மேலாண்மைப் போக்கும்,தமிழ்ப் பண்பாட் டுவலாற்றுஉண்மைகள் மறைக்கப்படுவதற்கும் திரிபடைவதற்கும் காரணமாயினமைகாலத்தின் போக்கு என்பதைஉலகப்பண்பாட்டுவரலாற்றுஅறிவுடையோர் அனைவரும் அறிவா.; சுவாமிவிபுலாநந்தரேஇதனை உணர்ந்து,வருங்காலத் தலைமுறையினர் உணரும் வகையில்,பண்பாட்டுவரலாற்று நூல்கள் தமிழ் மொழியிலேதோன்றவேண்டும். தமிழ் மக்கள் அவை தம்மைச் சிந்தனையோடுபடிக்கவேண்டும். இளமா ணவர்களுக்குக் கல்விபயிற்றும் போதகாசிரியர்கள் தமிழ்க் குலத்தாரின் இளமையையும் செழுமையையும் ஆராய்ந்துஉணர்ந்துமாணவர்க்குஅறிவுறுத்துவாராகஎ னஎழுதியுள்ளமையும் நோக்கத்தக்கதாகும்.(14)

பழமையைப் பேணிஅவற்றிற்புதியஆய்வுகளைமேற் கொள்ளுதல் நமதுதலையாயகடமையாகும். கடல் வாய்ப் பட்டனவும்,காலத்தின் மாறுதலினால் மறைந் துபோயினவுமாகிய நூல்கள் மிகப்பல. அந்நூற் பெயர்களைக்கூறிப் பழமைபாராட்டுவதோடுஅமைந்தி ருப்போமா? இல்லை. முன்னிருந்தகலைச் செல்வத்தை மீண்டும் பெறுவதற்குமுயல்வோம். அத்தகையமுயற்சி நமதுநாட்டுக்குஆக்கமளிக்கும். நாடகம், இசை,சிற்;ப நூல்,சித்திர நூல்,விஞ்ஞானநூல்,வைத்திய நூல்,சே ாதிட நூல்,கணிதம்,உளவுநூல்,நாணயநூல்,அரசி யல்நூல்,தேசசரித்திரநூல்,சட்டநூல் என்னும் இத்து றைகளிலுள்ளபழைய நூல்களைப் புதுக்கிப் பதிப்பித் தல், புதுநூல்கள் ஆக்கித்தருதல் என்பனதமிழர் தம் கடனாகும். அங்ஙனம் செய்வாராயின் தமிழ்க் கல்வி இன்னும் பலதுறைகளிற் சென்றுவிருத்திஅடையும் - எனக் கூறும் சுவாமிகள் தமிழர் நாகரிகவரலாற்றிலும் பண்பாட்டுப் பெருமையிலும் எத்தகுஈடுபாடும் அக்க றையும் கொண்டிருந்தார் என்பதுபுலனாகின்றது.



உடலுறுதிபயக்கும் மருத்துவக்கலைதமிழிலேநிறைந்துகிடக்கின்றது. உடற்கட்டினியல்பு,நோயினியல்பு, நோய் தணிக்கும் மருந்தினியல்பு,என்பவற்றைத் தமிழறிஞர் நன்குணர்ந்து நூலியற்றிவைத்தாராதலினால், இந்நாளிலும,; தமிழ் மொழியாளராகியசித்தவைத்தியம்,வல்லோர் பிறமொழிவைத்தியராலேதீர்த்தற்கரியகருங்குட்டம்,வெண்குட்டம்,கயரோகம்,நீரிழிவுஎன்றின்னவற்றைஎளிதிற் குணப்படுத்திவருகிறனர். இத்தகையவைத்திய நூல்களைச் செவ்விதிற் பதிப்பித்துஉலகிற்குஉதவுதல் அத்துறையில் வல்லஅறிஞர்மேற் பொறுத்தகடனாகும்என்பதையும் குறிப்பிட்டுள்ளார். இனி,நாள்மீன்,கோள்மீன் என்றின்னவற்றினதுசஞ்சரிப்பு, சூரிய சந்திரரது இயக்கம் என்பவற்றையெல்லாம் கணித்தறிந்துநிச்சயித்தற்குரியகணித நூல்கள் தமிழில் இருந்தனஎன்பதற்குப் புறநானூறு,பரிபாடல்,சிலப்பதிகாரம்,சிந்தாமணிஎன்னும் தமிழ் நூல்களுள்ளேகாணப்படும் கணித நூல் முடிபுகள் சான்றுபகர்கின்றன. இவற்றைஆராய்ந்துதொகுதி நூலுருவில் வெளிக்கொண்டுவருதல் தமிழன்னைக்குச் செய்யும் பெருந்தொண்டாகும்என்பதுசுவாமிவிபுலாநந்தர் குறிப்பிட்டுச் சென்றுள்ளஆய்வுநெறிகளாகும்.

**அடிக்குறிப்புக்கள்:**

**1.A. Sathasivam, Proto Sumero Dravidian – The Common Origin of Sumerian and Dravidian languages, History and Heritage Unit Tamil Information Centre, Kingston, UK, 2017.**

**2.Rev. H. Heras,Studies in Proto-Indo-Mediterranean Culture (Vol. I), Indian Historical Research Institute, Bombay, 1953.**

3. சுவாமிவிபுலாநந்தர்,உலகபுராணம்செந்தமிழ்,:39 - 1. 1941, பக் **19-42, Quoted from:(Rev. Herass Father: New Review, Calcutta,Sept. 1941.**

4. தமிழ்க் கலைச் சொல்லாக்கமகநாடு- இலங்கைஉயர்திரு. விபுலாநந்தசுவாமிகள்- தலைமையுரை,சுவாமிவிபுலாநந்தரின் ஆக்கங்கள்- தொகுதி 2,கல்விபண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு,வடக்கு-கிழக்கமாகாணம், 1997.பகுதி -2,பக்:64.

5. அருள் செல்வநாயகம்,விபுலாநந்த இலக்கியம், - விபுலாநந்தஆராய்வு - திருவருள் வெளியீடு,ஆதவன் அச்சகம்,மட்டக்களப்பு, 2008, பக். 40.

6.மேலது. விபுலாநந்த இலக்கியம்,- உலகபுராணம். பக்.41.

7. மேலது:விபுலாநந்த இலக்கியம்,'நாகரிகவரலாறு'. 2008. பக். 17.

8. மேலது. விபுலாநந்த இலக்கியம்,நாகரிகவரலாறு. 2008,பக். 18.

9. மேலது: விபுலாநந்த இலக்கியம்,உலகபுராணம்: 2008, பக்.30.

10. கே. கே. பிள்ளை,தமிழகவரலாறுமக்களும் பண்பாடும்,உலகத் தமிழாராய்ச்சிநிறுவனம்,சென்னை,2000, பக்.51, க. ப. அறவாணன்,தமிழ்ச் சமுதாயவரலாறு- கலப்பியக் காலம்,தமிழ்க் கோட்டம்,பாண்டிச்சேரி, 1994இ பக். 29-43.


11. சுவாமிவிபுலாநந்தரின் ஆக்கங்கள், தொகதி -3,கல்விபண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்ச,வடக்க-கஜழக்குமாகாணம்,திருகோணமலை,1997,பக்:210-211.

12. மேலது,சுவாமிகளின் ஆக்கங்கள். தொகுதி 3: 1997,பக். 211.

13. மேலது,சுவாமிவிபுலாநந்த இலக்கியம்,உலகபுராணம்,2008,பக்:46.

14.மேலது: சுவாமிவிபுலாநந்நதரின் ஆக்கங்கள் தொகுதி 3, 1997, பக். 217.

# மானிடகுல இராவணனாரின் சமாதியை, மனிதகுல சித்தர் காலாங்கிநாதர் தரிசித்துள்ளார் 05



**இலங்கையில் இராவணனார் - வரலாறு :**


தமிழ் காலக்கணிப்புகளின்படி ஒவ்வொரு யுகத்தின் முடிவிலும் ஒரு மாற்றம் ஏற்படுவது வழக்கம். இதனை தமிழ்க் காலக்கணிப்புகளில் பிரளயகாலம் என அழைக்கப்பட்டுள்ளது. அடுத்த மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான ஆரம்பகால நடைமுறைகள் குறிப்பிட்ட யுகத்தின் முடிவு காலத்தில்; இடம்பெறும். குறிப்பிட்ட பிரளயகாலம் அதே யுகத்தின் காலப்பகுதிக்குள் சேர்க்கப்படுவதுதான் வழக்கம்.

கடல்கோள் காவு அல்லது பெரிய யுத்தங்கள் இடம்பெற்று பெருந்தொகையான உயிரிழப்புகள் ஏற்பட்ட பின்னரே புதுயுகம் ஆரம்பிக்கும். புதுயுகம் முதலாம் ஆண்டிலிருந்து ஆரம்பிப்பதை கணிப்புகளில் கவனிக்கக் கூடியதாக இருக்கின்றது. இந்தப் பிரளயங்கள் இடம்பெற்ற காலங்கள் தமிழில் லட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. உதாரணமாக துவாபரயுகத்தில் இடம்பெற்ற பிரளயகாலம் புதுயுகமான கலியுகத்துடன் சேர்க்கப்படுவதில்லை.

தமிழ்க்காலக் கணிப்புகளின்படி துவாபரயுகத்தின் முடிவில் பிரளயகால மாற்றம் வருவதற்கு ஆரம்பமாக கடல்கோள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரலாற்றுக் காலத்திற்கான குறிப்புகளின்படி இதனை முதலாவது கடல்கோள் என்று கொள்ளலாம். தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் கலியுகத்திற்கு முதல் இடம்பெற்ற பிரளயகாலத்தையும் சேர்த்து ஆங்கில காலக்கணிப்புகளின்படி கி.மு.3100 வருடங்கள் என ஆரம்பிக்கப்பட்டு கணக்கிடப்பட்;டுள்ளது. கலியுகத்திற்கான பிரளயகால அழிவுகள் இனிமேல்தான் இடம்பெற இருக்கின்றன. அதற்கு முந்திய துவாபரயுகத்துடன் நடந்து முடிந்த பிரளயகாலம் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்பதற்கு பல ஆதாரங்கள் உள்ளன.

- தமிழ்க் காலக்கணிப்புகளை ஆதாரமாகக்கொண்டு ஆங்கிலக் கணிப்புகள் கணக்கிடப்பட்டு, இராவண மகாராசாவின் ஆட்சி, கலியுகத்தில் கி.மு.3084ம்ஆண்டுகளில் இடம்பெற்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- துவாபரயுகத்தில் முதலாவது கடல்கோள் ஏற்பட்டுள்ளது. இதனை ஆங்கில கணிப்புகளின்படி கி.மு. 1810 ஆண்டு, இராமன் படையெடுத்து வருவதற்கு சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்றதென ஆய்வுகள் கூறுகின்றன.
- இராமன் படையெடுத்து வந்து சில நாட்களில் யுத்தம் ஆரம்பித்து விட்டது. எத்தனை நாட்கள் அல்லது ஆண்டுகள் யுத்தம் இடம்பெற்றது என்பது தெளி


**இலிங்க பூமியிலிருந்து தமிழ்நிதி அருணா செல்லத்துரை**



வில்லை. ஆனால் அவர் காடாள வந்த ஆண்டுகளின் கடைசி நாட்கள் என்பது மட்டும் குறிப்பிடக்கூடியது.

✷பௌத்த மத நூலான ராஜாவளியில் துவாபர யுகத்தின் கி.மு.2387ம் ஆண்டுகளில் இராவண மகா ராசா உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இயக்குதல் என்ற வினைச்சொல்லின் பெயர்ச்செ ால் இயக்குபவர்கள் ஆகும். இயக்குபவர்கள் இயக்கர் கள் என்று அழைக்கப்பட்டுள்ளனர் என்பது பொது வான கருத்தாகும்.. இயக்கர் என்ற பிரிவினர் பின் வரும் பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளனர் என்று பிறிற்றோ தெரிவித்துள்ளார்.

01. இரட்சதர் - தமிழில் ரக்ஷசா என்ற பதம் ரக்ஷா பதத்திலிருந்து இருந்து உருவாகியது. ரக்ஷா என் பது குவேரனுடைய செல்வத்தை பாதுகாப்பவர் கள் என்று பொருள்படும்.

02.அரக்கர் - மேற்கூறிய பத விளக்கத்திற்குரியது.

03.இராக்தர் - மேற்கூறிய பதம் விளக்கத்திற்குரி யது.

**The Iyakkar are also known by the following names:**

**01. Iradchchathar -Tamil form of Rakshasa from the root Raksha to preserve Kuveran's wealth.**

| | |
|---|---|
| **02.Arakkar** | **- same as the above** |
| **03.Irakkthar** | **- same as the above** |
| **04.Idumpar** | **- haughty persons** |
| **05.Salakadangkadar** | **- those who haunt cemeteries.** |
| **06.Pisithasanar** | **-flesh eaters** |
| **07.Yathuthanavar** | **-Children of Danu** |

**ஒட்டக்கூத்தரின் இராமகாதை :**

கி.பி. 08ம், 09ம், 10,ம் நூற்றாண்டுகளில் தென்னிந் தியாவில் சோழர் ஆட்சி எழுச்சி பெற்றிருந்த காலம். அப்போதிருந்த சோழ அரசனின் (குலோத்துங்க சோழன்) காலத்தில் அரசவைக் கவிஞராக ஒட்டக் கூத்தரும், அவைக்கவிஞர் கம்பரும் இருந்தார்கள். கம் பர் வை;ணவ மதத்தைச் சேர்ந்தவர். வான்மீகி முனிவ ரால் எழுதப்பட்ட இராமாயணத்தை மொழிபெயர்த்து பாடும்படி இருவரிடமும் அரசர் கேட்டுக் கொண்டார். ஒட்டக்கூத்தர் குறுகிய காலத்தில் இராமாயணத்தைப் பாடி முடித்து விட்டார். கம்பர் சில மாதங்கள் கழித்தே கம்பராமாயணத்தை பாடி முடித்தார். கம்பரின் 6 காண்டங்கள் தமிழ் மொழிச் சிறப்புடையது. இதனால் அவர் எழுதிய இராமாயணம் பிரபலம் அடையத் தொடங்கியது. இதனால் ஒட்டக்கூத்தர் எழுதிய உத்த ரகாண்டம் ஏழாவது காண்டமாக சேர்த்துக் கொள்ளப் பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

✷ வடஇந்திய இராஜதானிக்கும் இலங்கைத் தீவிலி ருந்த இராஜதானிக்கும் இடையில் இடம்பெற்ற நிகழ் வுகள் இராமாயணமாகும்.

✷ சமஸ்கிருத மொழியில் வான்மீகி முனிவரால் பாடப்பட்டது.

✷ சோழ அரசனின் கட்டளைப்படி தமிழுக்கு மொழி மாற்றம் செய்யப்பட்டது.

✷ வடஇந்தியாவில் இயற்றப்பட்டதாக கூறப்படும் இராமாயணமும், மகாபாரதமும் மனுதர்ம நூல்கள்





என சோழர் ஆட்சியில் வரவேற்கப்பட்டிருந்தன.

★ அத்தோடு சோழ அரசர்கள் வைணவத்தையும் வர வேற்று விணுவையும் வழிபடத் தொடங்கியிருந்ததின் தாக்கமாக, சமஸ்கிருத நூல்களை மொழிபெயர்ப்ப தற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

கி.பி.04ஆம் நூற்றாண்டுகளில் இலங்கை வந்திருந்த சோழ அரசன் (குளக்கோட்டன்) கோணேச்சரத்தில் விஷ்ண வழிபாட்டை ஆரம்பித்து வைத்தார் என்ப தற்கான விணு லக்ஷமி சமேத சிலையும் சிவலிங்கமும் ஆகிய தொல்லியல் சின்னங்கள் கோணேச்சர ஆல யத்;தில் வைக்கப்பட்டுள்ளன. இந்தச் சிலைகள் கட லுக்கு அடியில் இருந்து எடுக்கப்பட்டதாகவும், அவை நாலாம் நூற்றாண்டுக்குரியவை என்பதும் அடிக்கு றிப்புகளாக உள்ளன.

**படம் : கோணேச்சரத்தில் விஷ்ணு லக்ஷ்மி சமேத சிலை**

**உத்தர காண்டம் :** ஒட்டக்கூத்தரால் எழுதப்பட்ட இராமாயண காவியத்தின் உத்தரகாண்டத்தில் இரா வண மகாராசாவுடைய பிறப்பு மற்றும் இலங்கையை மா-நகரம் என்று குறித்து பல விடயங்கள் எழுதப்பட் டுள்ளன. இலங்கையில் கி.பி.1879களில் பிறிற்றோ அவர்களினால் நூலாக வெளியிடப்பட்ட யாழ்ப் பாண வைபவமாலையின் ஆங்கிலமொழித் தொகுப் பில் 'இரட்சதர்' என்ற பிரிவில் ஒட்டக்கூத்தரின் இராமாயணக் கதை கூறப்பட்டுள்ளது. இலங்கடியில் தமிழ் மக்கள் மத்தியில் பிரபலம் பெற்றிருந்த இந்த வர லாற்றை மொழிபெயர்த்து தனது நூலில் சேர்த்திருந்த காரணத்தினால் அதில் பாரபட்சமான சோக்கைகள் இடம்பெற்றிருக்காது என்பதே அது இங்கு சேர்க்கப் பட்டிருப்பதற்கான காரணமாகும்.

**இரட்சதர் : (மூலம் ஆங்கிலம் சி.பிறிற்றோ - கி.பி.1879)**

இரட்சதர் என்பவர்கள் திறமை மிக்க, அசாதாரண சக்தி வாய்ந்த பெரிய உருவமுடைய இனத்தவர்கள். அவர்களுடைய பூர்வீகமும் வரலாறும் தமிழில் எழுதப் பட்ட இராமாயணத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட் டுள்ளது :

'பிரமன் உயிரினங்களை படைத்தபோது, து;ட குணமுடைய இரட்சதர்களையும் படைத்துள்ளார். அவ்வாறு படைக்கப்பட்டவர்களுள்; எத்தி, பிரகதி என்ற இரண்டு சகோதரர்கள் இருந்தார்கள். பிரக திக்கு வித்துக்கேன் என்ற பெயரில் மகன் இருந்தார். வித்துக்கேன் கந்தருவப் பெண்ணொருவரைத் திரு மணம் செய்து கொண்டார். அன்றில் பறவை தனது ஜோடிக்கு, உடல் ஆவி அனைத்தையும் அர்ப்பணித் ததோடு, ஜோடி செல்லுமிடமெல்லாம் தானும் செல் வது போல, வித்துகேனுடைய மனைவியும் கணவன் செல்லுமிடமெல்லாம் உடன் செல்வது வழக்கம்.

வித்துகேனுக்கும் கந்தர்வப் பெண்ணுக்கும் ஒரு மகன் பிறந்தான். தனது கணவனுடன் செல்லுவதை நோக்கமாகக் கொண்ட வித்துகேனின் மனைவி பிறந்த இடத்திலேயே சிசுவை விடுத்து கணவனுடன் சென்றாள். நெறியற்ற முறையில் பிறந்து, யாருமில் லாமல் இருந்த குழந்தையை சிவன் தனது பாதுகாப் பில் வைத்துக் கொண்டார். குழந்தை வளர்ந்து பெரி யவனானதும் கந்தருவப்பெண் ஒருவரை திருமணம் செய்து கொண்டார்.

வித்துகேனுக்கு மூன்று ஆண் குழந்தைகள் பிறந்த னர். மலியவான், சுமாலி, மற்றும் மாலி எனப் பெயர்

வைக்கப்பட்டிருந்தது. இந்த மூன்று சகோதரர்களும் மகா மேருமலைக்குச் சென்று கடுமையான தவஞ் செய்து, கண்களுக்கு புலப்படாத அருவமாக மாறியிருந்தார்கள்.

**பிரளயம் :**

முன்னொரு காலத்தில் வருணனும் (காற்று) வாசுகி என்ற பாம்பும் தமது பலத்தை பரீட்சை செய்தனர். வாசுகிப் பாம்பு தனது தலையை விரித்து பூலோகத்தின் மீது காற்றுப் புகாத வகையில் மறைத்துக் கொண்டது. வருணன் வாசுகிப் பாம்பினுடைய விரிப்பை பல முறை தாக்கினார். ஆனால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

உலகத்தில் உயிரினங்களை படைத்த கடவுள் அவைகளுக்கு சுவாசிப்பதற்கான காற்று இல்லாமல் போன காரணத்தினால் ஏற்படப்போகும் அபாயத்தைப் புரிந்து கொண்டார். வாசுகிப் பாம்பு உயிரினங்கள் பாவம் எனப் புரிந்து கொண்டு, தனது தலையை சற்றுத் தாழ்த்தி சிறிய இடைவெளியை விட்டது. உடனடியாக அந்த இடைவெளியின் ஊடாகப் காற்று பலமாக வீசியது. 1000 மலைகளில் இருந்து மூன்று குன்றுகள் பிடுங்கி எறியப்பட்டன. தங்க மலையில் (மகாமேரு) இருந்து வீசப்பட்ட மூன்று குன்றுகளில் ஒன்று சமுத்திரத்தில் சென்று விழுந்தது.

வீசப்பட்ட குன்றுகளில் பொருத்தமான ஒன்றைத் தெரிவு செய்து படைப்புக் கடவுள் தனக்குப் பொருத்தமான நகரத்தை மலியவானுக்காக கட்டியெழுப்பினார். சுமாலி மற்றும் மாலி ஆகியோருக்கென எட்டிப் பிடிக்க முடியாத தூரத்தில் மற்றுமொரு நகரத்தையும் உருவாக்கினார். கடவுளால் உருவாக்கப்பட்ட பெறுமதி வாய்ந்த நகரமானது 'இலங்கை' என அழைக்கப் பட்டது. இந்த நகரங்களில் மூன்று சகோதரர்களும் அவர்களது மனைவிமாரும் பிள்ளைகளும் வாழ்ந்தனர். இவர்களுடைய பிள்ளைகள் மரணத்தைப் போலவும், தீயைப் போலவும், நஞ்சு போன்ற கொடூர து;ட குணமுடையவர்களாகவும், படிப்பறிவு இல்லாதவர்களாகவும், பாவங்களின் உறைவிடமாகவும் கோபத்தைக் கொண்டவர்களாகவும் வளர்ந்து வந்தனர்.

அவர்கள் ஏனையவர்களிடம் இருந்து ஆறு பங்கு வரிகளை அறவிடுபவர்களாக இருந்தார்கள். இரட்சதர்களால் பாதிக்கப்பட்ட கடவுளரும், ரிஷிகளும், பொறுத்துக் கொள்ள முடியாமல் குழுவாகச் சேர்ந்து சிவனுடைய அரசவைக்குச் சென்று முறையிட்டனர். சிவன் அவர்களை வி;ஷ்ணுவிடம் அனுப்பி வைத்தார். அவர்களுடைய பலத்தை அழிப்பதோடு நரகம் போன்ற இடத்திற்கு விரட்டி விடும்படியும் கூறியிருந்தார்.

**புலஸ்திய முனிவர் :**



பிரமனுடைய படைப்பில் பிறந்த அவரது மகனான புலஸ்திய முனி, மகாமேரு மலையில் சமய அனு;டானங்களிலும், தியானம் செய்வதிலும் ஈடுபட்டு வந்தார். ஆனால் தினமும் அங்கு இளம்பெண்கள் ஒன்றாகக் கூடி பூப்பறிப்பதும் விளையாடுவதும் பாடுவதுமாக இருந்தனர். இது அவரது தியான நடடிவக்கைகளுக்கு இடையூறாக இருந்தது. இதனை நீண்டகாலமாகச் சகித்துக் கொள்ள முடியாமல் இருந்த முனிவர், மீண்டும் அவர்கள் இடையூறுகளைச் செய்வார்களாக இருந்தால் அவர்களைத் தாய்மையடையச் செய்து விடுவேன் என்று சபித்தார். இவ்வாறு சபித்ததை கூட்டத்திலிருந்த ஒருபெண் அறியாமல் இருந்தாள். வேண்டுமென்றே அவள் செய்த செய்கைகளினால் சாபத்திற்கு உள்ளாகி கர்ப்பமடைந்தாள். அதன் பின்னர் தொடர்ச்சியாக மூன்று பிள்ளைகளுக்கு தாயானாள். நான்காவதாக வச்சிரவ என்ற மகனைப் பெற்றெடுத்தாள்.

வச்சிரவ திருமணம் செய்து பெற்ற மகனுக்கு 'வச்சிரவாணன்' அல்லது 'குவேரன்' என்று பெயர் வைக்கப் பட்டது. குவேரன் உணவு உட்கொள்ளாமல் ஓய்வெடுப்பதும், சமய அனு;டானங்களின்போது நித்திரை கொள்வதுமாக இருந்தார். இதற்குப் பரிகாரமாக வடக்கிலிருந்த செல்வங்களுக்கு பாதுகாவலனாக அவர் நியமிக்கப்பட்டார். அத்தோடு அவருக்கு ஆகாயத்தில் பறக்கக்கூடிய மந்திர சக்தியுடைய தேர் ஒன்றும் வழங்கப்பட்டது. அந்தத் தேர், மனத்தின்; வேகத்தை விட அதிவேகமாகச் செல்லக் கூடியது. அதன் மூலம் பூலோகவாசிகளை அடக்கக் கூடியதாகவும் இருந்தது.



குவேரன் விமானத்தில் இலங்கை மா-நகரம் சென்று, அதனைத் தனதாக்கி ஆட்சியாளரின் பிரதிநிதியாகவும் இருந்தான். ஏற்கனவே வி;ணுவின் முதாதையர்கள் அங்கு இருந்தனர். இலங்கை மாநகரத்திலிருந்து வெளியேற வேண்டும் என்று வி;ணு கட்டாயப்படுத்திய காரணத்தால் அவர்கள் அங்கிருந்து வெளியேறினர்.

இலங்கை மா-நகரமான தனது தாய் நாட்டை முன் பின் தெரியாத இரத்த உரித்தில்லாத ஒருவர் ஆட்சி செய்வதை சுமாலியினால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அதற்காக உபாயம் ஒன்றைச் செய்தான் ஆகக் குறைந்தது தனது பரம்பரையைச் சேர்ந்த ஒருவராவது ஆட்சிக்கு வரவேண்டும் என்ற எண்ணினார். அதற்காக தனது மகளை (கைதசி) அருவருக்கத்தக்க வகையில் குவேரனின் தந்தையான வச்சிரவவிடம் அனுப்பி வைத்தார்.

சுமாலியின் மகள் (வைதசி) வச்சிரவுடன் சேர்ந்து, மூன்று ஆண் பிள்ளைகளையும் ஒரு பெண்ணையும் பெற்றெடுத்தாள். மூத்த மகன் பத்துத் தலைகளுடனும், 20 கைகளுடனும் பிறந்தார். இரண்டாவது மகன் கும்பகன்னன் யானைத் தந்தங்கள் போன்று கடைவாய் வழியாக இரண்டு பற்கள் வெளியே தெரிய பிறந்தான். மூன்றாவது மகள் சூர்ப்பனகை. இடிபோன்ற குரலுடையவளாக இருந்தாள். கடைசி மகன் வீடணன் அல்லது விபீணன் பக்தி நிறைந்த ரிணீ போல இருந்தான்.

கும்பகன்னன் மனித மாமிசத்தை உண்டு வாழ்பவன். சூர்ப்பனகை தன்னைத் திருப்திப்படுத்த முடியாதவர்களை அல்லது மறுப்பவர்களை தனது சாப்பாட்டிற்கு பயன்படுத்துவாள். இராவணனும் கும்பகன்னனும் தலா பத்தாயிரம் வருடங்கள் தவஞ் செய்தனர். விபீணன் 5 ஆயிரம் வருடங்கள் தவம் செய்திருந்தார்.

தவத்தின் முடிவில் படைப்புக் கடவுள் பிரமன் அவர்கள் முன் தோன்றி உங்களுக்குத் தேவையானவற்றை கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று வாக்களித்தார்.'கடுமையான துன்பங்கள் வரும் நேரத்திலும் எனது நேர்மையான பாதையில் இருந்து தவறாமல் இருப்பதற்கு வரம் வேண்டும்' என்று விபீணன் கேட்டான். பலவிதமான வரங்களைக் கேட்க வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்த இராவணன் 'தனக்கு யாராலும் உயிரிழப்பு ஏற்படக்கூடாது' எனக் கேட்டார். மனித குலத்தின் மீது கொண்டிருந்த வெறுப்புக் காரணமாக அவர் கேட்ட வரத்தில் மனிதர்களால் தனக்கு மரணம் ஏற்படக்கூடாது என்று கேட்காமல் தவறு விட்டுவிட்டார்.

கும்பகன்னன் அதிவிசேடமான பல வரங்களைக் கேட்க ஆயத்தமாக இருந்தான். கடவுளின் எண்ணத்தின்படி கல்வித்தாய் சரஸ்வதி அவனது உதடுகளில் அமர்ந்திருந்த காரணத்தினால் வாய் உளறி 'நித்திரை' என்று மட்டும் கேட்டுக் கொண்டான். கடவுள் ஒவ்வொருவருடைய உதட்டிலிருந்து வெளிவந்த வார்த்தைகளுக்கேற்ப வரங்களை வழங்கினார்.

மூத்தவரான இராவணன் இந்தியாவிலிருந்து இலங்கை வந்த வரலாறு பின்வருமாறு குறிக்கப்பட்டுள்ளது :

'முன்பின் தெரியாத நரகம் போன்ற இடத்திலிருந்து, விஷ்ணுவால் வெளியேற்றப்பட்டு, பூமிக்குத் திரும்பிய இரட்சதர்கள், இராவணனை தமது தலைவனாக ஏற்றுக் கொண்டனர். குவேரன் ஆட்சி செய்த, தமது புராதன தலைநகரமான 'லங்கா நகரியை' கைப்பற்ற ஆழமாக யோசனை செய்தனர். குவேரன் அவர்களது திட்டத்தை அறிந்து அங்கிருந்து வெளியேறினார். அதற்கு முன்னர் தனது செல்வங்களை இமய மலையிலுள்ள அலக்கை என்ற இடத்திற்கு மாற்றி விட்டார். இதனால் இராவணன் வெற்று நகரமான 'லங்கா நகரியில்' தனது ஆட்சியை நிலைப்படுத்தினார்'. இந்த வரலாற்று விபரங்கள் இராமாயணத்தின் 17 வது நூலான உத்தரகாண்டத்தின்; 1ம் 2ம் படலங்களில் இருந்து தொகுக்கப்பட்டு சுருக்கப்பட்டுள்ளது.' (சி.பிறிற்றோ பக்.டிடிடி)

இந்த வரலாற்றுத் தகவல்களை நிறைவு செய்வதற்கு வில்சன் அவர்கள் எழுதிய வீர சரித்திரம் என்ற மகா நாடகத்தில் உள்ள பின்வரும்; விபரங்களும் சேர்க்கப்படுகின்றன. மிதிலை (அயோத்தி) நாட்டின் அரசன் தசரதனுடைய மகன் இராமனுடைய மனைவி

*சீதாவை, இராவணன் தூக்கி வந்து காவலுடன் சிறை வைத்தான். கோபமடைந்த அவளது கணவன் கடத்தி வந்தவருடன் யுத்தம் செய்தான். கோரைகள் நிறைந்த சதுப்பு நிலப்பகுதியில் இராவணனும் இராமரும்; மட்டும் தனித்து நின்று போர் புரிந்தனர். யுத்தத்தின் பின்னர் இராவணனாரின் இராஜதானியை விபீணனிடம் இராமன் ஒப்படைத்தான். இராவணனுடைய சகோதரரான விபீணன் யுத்தம் ஆரம்பிக்க முன்னர் இராமனுடன் சேர்ந்திருந்தான்.*

**I R A D C H T H E R .**

The Iradchathar, are a race of Titans. Their origin and history are given in the Tamil Iramayanam thus:

When Piraman created all living things, he created the wicked Iradchathar also. Of these there were two brothers Ethi, and Pirakathi. The latter, begat Viththukkesan. Viththukkesan had a wife who was attached to him as the soul to the body and as andil bird to its mate, and she accordingly followed him wherever he went.

In the course of her wanderings she gave birth to a son when she abandoned on the spot in order to follow her husband as was her wont. Sivan took the helpless infant under his protection and him immortality. The infant grew up, married a kantharuva virgin and begat Maliyavan, Sumali, and Mali. These three brothers went to the Maha-Meru mountains, and became invincible.

In a former age of the world in a trial of strength between Varunan (the wind) and the snake Vasuki, the snake spread his hood and shut out wind from the universe. Varunan beat on the outspread hood with all his might but could not displace it.

The gods and all animated creation were in immediate danger of their lives, having nor air to breathe. Vasuki took pity on them and, slightly lowering his hea , allowed a small passage to his adversary who thereupon rushed in with such force that he carried away three of the 1,000 peaks of the golden mountain (MAHA –MERU) and cast one of them into the ocean.

Where the peak fell, there the architect of the gods chose his site to build a city for Mali-



yavan, Sumali, and Mali, and he built one worthy to be called by the god a Ilangkai, from the inaccessible situation. Hence the brothers lived with their wives; and their children grew up like 'Death, Fire, Poison, the anger of the wicked, the wealth of the unlearned, and the sin of the king who exacts a tax of more than a sixth part from his subjects.'

The Gods and sages unable to endure the oppression of the Iradchathar went in a body with their complaints to the court of Sivan. Sivan directed them to Vishnu, destroyed the forces of the Iradchathar and drove them to the infernal reigions.

Pulasthiya Muni, a son of Piraman, sat in religious meditations on the Maha-meru Mountains , but was daily disturbed by the songs and sports of a troop of virgins who went thither to gather flowers. His patience being at length exhausted to pronounced the curse that they should become mothers if they approached him again. One of them did not hear the curse approached him unwittingly. By the effect of the curse she became pregnant, and the due time brought forth a son, Vaichchirava, Vaichchirava begat Vachchirvanan or Kuveran.

The latter denied him-self all food, rest and sleep in the performance of austerities. In reward for them he was appointed guardian of wealth and regent of the North, and was also presented with a magic chariot that moved in the air, was swifter than the swifteness of



the mind and capable of containing the inhabitants of the universe. He went and occupied Ilankai ma-nakaram, from which Vishnu had compelled his forefathers to retire.

But Sumali could not bear to see his own kingdom in the hands of a stranger. He devised that at least one of his progeny should have it, and bade his daughter go to Vachchirava the father of Kuveran. Vachchirava joined her, and she gave birth to three sons and one daughter. Iravanan, the eldest, a son, was born with ten heads and twenty hands. Her second child, also a son, Kumpakannan, had a pair of tusks like the elephant. The third was a daughter, Surpanakai who had a voice like that of thunder. The last was Vidanan, or Vipishanan, a pious sage.

Kumpakannan habitually lived on human flesh. Surpanakai made meal of every man that refused to satisfy her lust. Iravanan and Kumbkannan performed austerities for ten thousand years each, Vidanan for five thousand years.

At last Piraman appeared to them and promised to grant them whatever they might ask. Vidanan said 'grant that I may not swerve from the path of rectitude even in times of the greatest affliction.' Iravanan enumerated a variety of entities and prayed that he might not suffer death from any of them. But as he despised the human race he omitted 'man' in his enumeration.

Kumbakanna was prepared to ask for many and extraordinary gifts, but at the instigation of the the gods, Sarasvathy (the godess of learning) sat on his lips and made him utter the word 'sleep'. The god granted them each his request as it came from his lips.

( ) 'Now all the Iradchathar returned to the earth from the infernal reigions whither they had been driven by Vishnu, and having made Iravanan their king: they meditated an attack on 'Lanka-nakari' their ancient capital. Kuveran evacuated city: and Iravavnan took possession of the vacant city'. The above account has been condensed from the first and second Padalams of the seventeenth book of Iramayanam entitled the 'Uththara kandam'.

To complete the narrative it remains only to add that this Ravanan carried away Sitha , the wife of Raman, the son of the king Thasarathan of Mithilai (Ayodhi), and imprisoned her in Ceylon. The bereaved husband made war upon the ravisher, slew him in single combat and gave his kingdom to Vidanan (the brother of Ravana who had deserted Iravanan and joined the conqurer at the very inception of the war. (Veera cheritra and Mahanataka of Wilson) (The Yalpana Vaipava Malai' by C.Britto-1879. 'Iradchathar'- p.i,ii,iii.).

*வான்மீகி எழுதிய இராமயணத்திலுள்ள கதாபாத்திரங்களைப்பற்றி ஒட்டக்கூத்தருக்கு ஏற்கனவே தெரிந்திருந்தது. இந்தக் கதையிலே காவியத்தின் சிறப்பு நோக்கி பல விடயங்களை மிகைப்படுத்தி புலவர் கூறியுள்ளதை காணக்கூடியதாக இருக்கின்றது. இதிலுள்ளவற்றிலிருந்து வரலாற்றுக்குத் தேவையான விடயங்களை மட்டும் பிரித்து எடுக்க வேண்டியது ஒரு முக்கிய தேவையாகும்.*

-தொடரும்-



# இலங்கையில் சித்த மருத்துவம்

பகுதி: 04

### சித்த மருத்துவ கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள், வைத்தியசாலைகள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயேசித்த மருத்துவத்துக்குகல்லூரிகள் உருவாகின. நலிந்துவந்தசித்தமருத்துவம் இதனால் மறுமலர்ச்சிஅடைந்ததுஎன்றே கூறலாம்.

**1.இலங்காசித்த ஆயுள் வேதகல்லூரி**

வைத்தியகலாநிதி ஜே. பஸ்தியாம்பிள்ளைஎன்பவரால் நல்லூரில் 1920 ஆண்டுஒருவைத்தியசாலையும்,ஆயுள்வேதமாணவர்களுக்குபோதனையும் நடாத்திவந்தார். 1925 ஆம் ஆண்டு இவரால் ஸ்ரான்லிவீதியில் இக்கல்லூரிஆரம்பிக்கப்பட்டது. 1961 ஆம் ஆண்டில் இருந்துனுயு **JDAM (Diploma in Ayurvda Medicine** பட்டம் வழங்கப்பட்டது.



இக்கல்லூரிதற்பொழுது சுன்னாகத்தில் இயங்கிவருகின்றது. இது பரம்பரை வைத்தியர்களுக்கான ஒரு சட்ட ரீதியான அங்கீகாரத்தை வழங்குவதற்காகவே உருவாக்கப்பட்டஒன்றாகும். வடமாகாணசுதேசமருத்துவத்திணைக்களமானது பலவருடங்களாக இக்கல்லூரியின் செயற்பாட்டுக்காகமானியம் வழங்கிவருகின்றது.

இதேபோல், சுதேசவைத்தியக் கல்லூரிஎன்றுதிருநெல்வேலியில் 1935 ஆம் ஆண்டுஉருவாக்கப்பட்டதுபின்னர் 1936 இலேயே அது மூடப்பட்டுவிட்டது.

**2.சித்தமருத்துவத் துறை, யாழ் .பல்கலைக்கழகம்.**

சித்தமருத்துவமானது கொழும்புபொரளையில் ஆயுர்வேத,யுனானிமருத்துவத்துறைகளுடன் சுதேசமருத்துவக்கல்லூரில் 1929 இல் இருந்து 1961 வரை கற்பிக்கப்பட்டு **FmikaDiploma of Ayurvedic Medicine and Surgery (DAMS)** பட்டம் வழங்கப்பட்டுவந்தது.

1961 இல் உருவாக்கப்



சித்தமருத்துவர்
தியாகராஜா சுதர்மன்
BSMS, Dip. in Counseling PG. Dip. in Food Nutrition
மானிப்பாய்.




பட்டஆயுள்வேதநியதிச்சட்ட இல.31 இற்கு அமைய **Ayurvedic Medicine and Surgery (DAMS)**..பட்டமாகமாற்றப்பட்டது.

02.04.1976 இல் ஆயுள்வேதமருத்துவக் கல்லூரியானதுகொழும்புபல்கலைக்கழகத்தின் கீழ் சுதேச மருத்துவநிறுவனமாகஅங்கீகரிக்கப்பட்டு, 1983 இல் பட்டப்படிப்புக்காபல்கலைக்கழகமாணியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தையும் சித்த,ஆயுள்வேதம்,யுனானிஎனதனித்தனியாகபெற்றுக்கொண்டன. சுணீத்தமருத்துவத்துறையினருக்கு **Bachelor of Siddha Medicine and Surgery (BSMS)** பட்டம் வழங்கப்பட்டது.

1983இல் ஏற்பட்ட இனக்கலவரத்தின் பின்னர்,கொழும்புபல்கலைக்கழகத்தின் கீழ் இருந்தசித்தமருத்துவப் பிரிவானதுயாழ் பல்கலைக்கழத்தின் கலைப்பீடத்துடன் சித்தமருத்துவத் துறையாக 02.07.1984 இல் இணைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்துசித்தமருத்துவத் துறையானதுகைதடியில் இயங்கஆரம்பித்தது.

01.10.1993 யாழ் பல்கலைக்கழகத்தின் கீழ் தனியானஅலகாககொண்டுவரப்பட்டுசித்தமருத்துவஅலகாக இயங்கத்தொடங்கியதுடன். சித்தமருத்துவஅலகினை தன்யானதொருபீடமாகவோஅல்லதுநிறுவனமாகவோதரமுயர்த்தமுன்மொழிவுகளும் வழங்கப்பட்டது.

2002 ஆம் ஆண்டளவில் நிறுவனமாகதரமுயர்த்தப்படசித்தமருத்துவஅலகு,சித்தமருத்துவமாணவர்களாளும் தமிழ்ப்பற்றாளர்களாளும் அதனைஎதிர்த்து பீடமாதரமுயர்த்துமாறுவேண்டுகோள் விடு;த்தனர். மாணவர்களின் கோரிக்கைக்கமைவாகஅன்றுநிறுவனமாகமாற்றப்படுவதுநிறுத்தப்பட்டது.

### 3.சித்தமருத்துவ அலகு, திருகோணமலை வளாகம், கிழக்குப் பல்கலைக்கழகம்.

2005 ஆம் ஆண்டளவில் தோன்றியஎண்ணக்கருவில் முதன்முதலாககிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலைவளாகத்தில் 2007 ஆம் ஆண்டுசித்தமருத்துவபட்டப்படிப்புகற்கைநெறிஆரம்பிக்கப்பட்டது. இச்சித்தமருத்துவபட்டப்படிப்பானதுஆங்கில மொழிமூல 5 வருடகற்கைநெறியாகவேஆரம்பிக்கப்பட்டு இயங்கிவருகின்றது.

### சித்த வைத்தியசாலைகள்

முதன்முதலில் யாழ் மாநகரசபையிலேயேசித்த வைத்தியசாலை 20.12.1952 இல் ஸ்ரான்லிவீதியில் திருஆர்.சி. மன்மதராஜன் அவர்களின் முயற்சியினால் நகரபிதாதிருசாம் ஏ சபாபதிஅவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர்படிப்படியாக ஏனைய உள்ளூராட்சிசபைகளிலும் ஆரம்பிக்கப்பட்டன.

### சித்த போதனா வைத்தியசாலை

அரசாங்கத்தினால் 1947 ஆம் ஆண்டுதேசியவைத்





தியத்துறைதொடர்பாகஆராயஉருவாக்கப்பட்ட குப்தாகொமிசன் என்றழைக்கப்பட்ட குழு தமிழ் மன்னர்களாலும்,மருத்துவர்களாலும்,மக்களாலும் வளர்க்கப்பட்டு,பயன்படுத்தப்பட்டுவந்தசித்தமருத்துவம் அந்நியர்ஆட்சியினாலும்,அவர்தந்தநாகரீகத்தினாலும் மங்கிப்போனதைஉணர்ந்துயாழ்ப்பாணத்தில் சித்தவைத்தியசாலைஒன்றுஉருவாக்கப்படவேண்டும் எனபரிந்துரைசெய்தது.

அதற்கமைவாக 1967 இல் யாழ் சித்தவைத்தியசாலைக்குஅடிக்கல் எம். டீ. எச் ஜெயவர்த்தனாவால் நாட்டப்பட்டது. பின்னர் 1973 இல் வெளிநோயாளர்பிரிவும், 1978 இல் உள்நோயாளர்பிரிவும் ஆரம்பிக்கப்பட்டது. 1993 ஆம் ஆண்டேசித்தபோதனா வைத்தியசாலையாகபெயர்மாற்றப்பட்டது.

### சுதேச மருத்துவத்திணைக்களம், மாகாண சபைகளில்

மாகாணசபைகளின் கீழ் சுதேசமருத்துவசேவைஆரம்



பிக்கப்பட்டபோது, வடக்குகி ழக்கு மாகாண சபையில் முதன் முதலாக மருத்துவர் அமரர்ப.உரோமகேஸ்வ ரன் அவர்கள் மாகாண ஆணையாளராகபொறுப்பேற் றுக்கொண்டார். வடக்குகிழக்குமாகாணசபையில் சி த்தமருத்துவம்,சுகாதாரஅமைச்சின் கீழ் உள்ளசுதேச மருத்துவத் திணைக்களத்தினூடாகதனதுசேவையை இலவசமாகவழங்கிவந்தது. 2007 இல் வடக்குகிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்டபின்னர்வடக்குமாகாண சுதேசமருத்துவத் திணைக்களம்,கிழக்குமாகாணசுதேச மருத்துவதிணைக்களங்களில் சித்தமருத்துசேவைகள் இலவசமாகவழங்கப்பட்டுவருகின்து.

தற்பொழுது இலங்கையில் மத்திய,மாகாண,உள்ள +ராட்சிசபைகளின் கீழ் இலவசமாகசித்தமருத்து சேவைகள் இடம்பெற்றுவருகின்றன.அத்துடன் பாரம்பரியமருத்துவர்கள்,லங்காசித்தஆயுள்வேதமருத் துவக்கல்லூரிகற்றமருத்துவர்கள்,பல்கலைக்கழகசித்த மருத்துவபட்டதாரிகள் மூலமாகதனியார்சித்தமருத்து வவைத்தியசாலைகள் இயங்குகின்றன.

# இறையும் இசையும்



### போர்க்கள ஆடல் பற்றி குறிப்பிடும் இலக்கியங்கள்

#### அறிமுகம்

**போ**ர்க்கள ஆடல்கள் பற்றி சங்ககாலம் தொடக்கம் சேஎழர் காலம் வரையிலான இலக்கியங்களில் புறத்திணை சார்ந்து பேசும் இலக்கியங்கள் கூறுகின்றன. அந்த வகையில் சங்ககால இலக்கியங்களான தொல்காப்பியம், புறநானூறு, திருமுருகாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படைஃமலைபடுகடாம் போன்ற ஆற்றுப்படை நூல்களும் பதிற்றுப்பத்து, மதுரைக்காஞ்சி என்பனவும் கூறுகின்றன. சங்கமருவிய காலத்தில் களவழி நாற்பதும், பல்லவர் காலத்தில் முத்தொள்ளாயிரம், பாண்டிக்கோவை போன்றனவும், சோழர் காலத்தில் கலிங்கத்துப்பரணி, தக்கையாகப்பரணி போன்றனவும் அவ்வவ் காலத்து போர் மரபையும், அப்போர்களில் இடம் பெற்ற ஆடல் மரபினையும் விளக்கி நிற்கின்றன. அந்த வகையில் மேற்கூறிய இலக்கியங்களின் வாயிலாக போர்க்கள ஆடல்கள் வெளிப்படும் விதத்தை நோக்குவோம்.

சென்ற இதழ் தொடர்

#### 2.2.6 மலைபடுகடாம்/ கூத்தராற்றுப்படை


பத்துப் பாட்டின் இறுதி நூலாக விளங்கும் இந்நூல் மதுரைக்காஞ்சிக்கு அடுத்தபடியாக பெரிய நூலாகவும் கருதப்படுகின்றது. மலைக்கு யானையை உவமித்து அந்த மலையில் பிறக்கின்ற பல்வேறு ஓசைகளை கடாம் என்று சிறப்பித்ததனால் அதற்கு மலைபடுகடாம் என்று பெயராயிற்று என குறிப்பிடுகின்றனர். இவற்றுள் சிறப்பாக இருபது வகையான ஓசைகளைப் பற்றி இந்நூலில் கூறப்படுகின்றது. இன்னொரு விதத்தில் கூத்தராற்றுப் படை என்றும் அழைக்கப்படுகின்றது.28

பரிசில் பெற்று வரும் கூத்தன் ஒருவன் பரிசில் பெற நினைக்கும் கூத்தன் ஒருவனை நோக்கி செங்கண் மாத்துவோன் நன்னன் எனும் மன்னனிடம் அவனை ஆற்றுப்படுத்துவதாக அமைந்த பாடல்களே கூத்தராற்றுப்படையாக விளங்குகின்றது. இப்பாடல்களைப் பாடியவர் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார் எனும் புலவராவார். ஆசிரியப் பாவாலான ஐந்நூற்று எண் பத்து மூன்று அடிகளை இப்பாடலமைப்பு தன்னகத்தே கொண்டுள்ளது. மலையிலே வாழுகின்ற குறவர் குடியினரின் வாழ்க்கை, நாகபாம்பினை வணங்குகின்ற வணக்க முறைமை, போரில் மானிட வீரர்களுக்கு நடுகற்கள் நாட்டப்பட்டமை, கலை வெளிப்பாடுகளுக்கு முன்னரான வணக்க முறைமை, நற்சகுணம் பார்க்கும் முறை, கூத்தரின் சிறப்புக்களும், அவரின் விருந்தோம்பல் பண்புகளும், நன்னன் எனும் மன்னனது சிறப்புக்களும், அவனது பெருமைகளும், அவனைக் காண்பதற்காக அவன் வாசலில் வந்து நிற்பவர்கள் கொண்டு வந்துள்ள கையுறை வகைகளும், போர்த்திறமும், போர்க்கள ஆடல்கள் போன்ற பல விடயங்களையும் இந்நூல் கொண்டுள்ளது. இவைகளில் போர்க்கள ஆடல் வெளிப்படும் விதத்தை நோக்குவோம்.

போர்க்கள ஆடல்களில் ஒன்றான குரவைக்கூத்துப்


"இளங்கலைமணி" சுரேந்திரா– நரேந்திரா
போதனாசிரியர் (வாய்ப்பாட்டு)
நடன, நாடகத்துறை,
சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
மின்னஞ்சல்:– msnarendra1288@gmail.com
Contact No: 0094764624990 / 0094754340220




பற்றி இந்நூலில் கூறப்பட்டுள்ளது. அதாவது இங்கு இடம் பெற்ற குரவைக்கூத்தானது,மகிழ்ச்சி வெளிப்பாட்டிற்காகவும், ஆணும் பெண்ணும் இணைந்து ஆடியதாகவும், மலை வாழுநரான குறவர்களின் நடனமாக விளங்கியதையும், பறை வாத்திய கருவி பயன்படுத்தப்பட்டிருப்பதையும், ஆரவாரம் மிக்கதாக இக்கூத்தானது இடம் பெற்றதுமான செய்திகள் பல இங்கு கூறப்பட்டுள்ளது. மேலும்,

**நறவு நாட் செய்த குறவர் தம் பெண்டிரொடு**
**மான் தோற் சிறுபறை கறங்கக் கல்லென**
**வான் தோய் மீமிசை அயரும் குரவை29**
**( கூ.ஆ பாடல்வரி 320-322 )**

என்ற வரிகளில் மலையிலே தோன்றுகின்ற பல விதமான ஓசைகளும் அங்குள்ள மக்களுடைய நிலைகளும் தொடர்பான விபரிப்புக்களின் ஊடாக மலையின் கண் இடம் பெற்ற குரவைக் கூத்து பற்றி கூறப்பட்டுள்ளது. அதாவது மலையின் கண் வாழ்ந்த குறவர்கள் காலைப்பொழுதினிலேயே கள்ளினைக் குடித்து தம் மனைவியருடன் இணைந்து மான் தோலால் உருவாக்கப்பட்ட சிறிய பறையை இசைத்து அவ்விசைக்கு ஏற்ப குரவைக் கூத்து ஆடினார்கள் என்று கூறப்படுகிறது.

### 2.2.7 புறநானூறு


தமிழ் மொழியின் சிறப்புக்களைக் கூறுகின்ற சங்க இலக்கியங்களுள் எட்டுத்தொகை நூல்களுள் எட்டாவதாக அமைந்தது புறநானூறு ஆகும். கடவுள் வாழ்த்துடன் தொடங்கி நானூறு அகவற்பாக்களால் ஆன செய்யுட்களை உடையது. இந்நூலிற்குரிய கடவுள் வாழ்த்தினை பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடியிருந்தாலும் மற்றைய முந்நுற்று தொன்னூற்று ஒன்பது பாக்களை முரஞ்சியூர் முடிநாகனார் முதல் கோவூர்க்கிழார் இறுதியாக உள்ள பல புலவர்களால் பாடப்பட்டுள்ளது. சங்ககாலத்தில் நிலவிய அகம், புறம் எனும் பொருட்பிரிவில் புறம் சார்ந்த பண்புகளை விளக்கும் பாடல்களால் அமைந்த இந்நூலை புறப்பாட்டென்றும், புறம் என்றும் கூறுவர். வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞ்ஞை, தும்பை, வாகை, பாடாந்திணை, பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை போன்ற புறத்திணை ஒழுக்கங்கள் இப்பாடல்களுள் விபரிக்கப்பட்டுள்ளன. பண்டைத் தமிழகத்தில் நிலவிய சேர, சோழ, பாண்டிய மன்னர்கள், சிற்றரசர்கள், அமைச்சர்கள், சேனைத் தலைவர்கள், வீரர் முதலிய பலருடைய சரித்திரங்களும், கடைச்சங்கப் புலவர்களுடைய வரலாறுகளும், அக்காலத்தில் வாழ்ந்தவர்களுடைய நடைமுறைகளும் எனப்பல விடயங்கள் இந்நூலில் புதைந்து கிடக்கின்றன. சங்ககாலத்து போர் மரபையும், போர்க்கள ஆடல் மற்றும் அது தொடர்பான பல்வேறு விடயங்களையும் இப்புறநானூறு எடுத்தியம்புகின்றது. இவற்றுள் போர்க்கள ஆடல்கள் வெளிப்படும் விதத்தை நோக்குவோம்.


போர்க்கள ஆடல்களில் ஒன்றாக விளங்கும் குரவைக் கூத்து பற்றி புறநானூறு நூற்று இருபத்து ஒன்பதாம் பாடல் பின்வருமாறு கூறுகின்றது.

*குறி இறைக் குரம்பைக் குறவர்கள் மாக்கள்*
*வாங்கு அமைப் பழுனிய தேறல் மகிழ்ந்து,*
*வேங்கை முன்றில் குரவை அயரும்,*
*தீம் களைப் பலவின், மா மலைக் கிழவன்*
*ஆ அய் அண்டிரன், அடு போர் அண்ணல்...............30*
*( புறநானூறு - 129 )*

இவை தவிர இன்னுமொரு பாடலிலும் குரவைக் கூத்து பற்றி கூறப்படுகின்றது.

*பொலந் தோட்டுப் பைந்தும்பை*
*மிசையலங்குளைய பனைப்போர் செரீ இச்*
*சினமாந்தர் வெறிக்குரவை*
*ஓத நீரிற் பெயர்பு பொங்க*
*வாய் காவாது பரந்து பட்ட............31*
*( புறநானூறு - 22 )*






அதாவது அசைந்த பெருங்கையுடனே தலையெடுத்து நடக்கும் உயர்ந்த நடையையுடையனவும், அந்நடைக் கேற்ப ஒன்றுக்கொன்று மாறுபட்டொலிக்கும் மணியுடனே உயர்ந்த கோட்டினையுடையனவும், பிறை வடிவாக இடப் பட்ட மத்தகத்துடனே சினம் பொருந்திய பார்வையையுடை யனவும், பரந்த அடியுடனே பரிய கழுத்தையுடையனவும், தேனழிந்த மலை போலத் தேனீயொலிக்கும் மணம் நாறும் மதத்துடனே புண் வழலை வடியும் பெரிய தலையையுடை யனவுமாகிய வலிமிக்க இளங்களிறு கம்பத்தைப் பொருத்தித் தான் நின்ற நிலையிலே நின்று அசையப் பக்கத்தே நின்று கிரணத்தை விடுகின்ற வானத்தின் கண்ணே தங்கும் திங் கள் போலும் முத்துமாலையையுடைய வெண்கொற்றக் குடையினது நிழற் கண்ணே தம்பக்கத்து வாளில்லாதோர் அக்குடையே காவலாக உறங்க அசைந்த செந்நெற்கதிரால் வேயப்பட்ட மெல்லிய கரும்பாற் கட்டப்பட்ட ஒழுங்கு பட்ட கூரை விழாவெடுத்துக் கொள்ளப்பட்ட இடம் போல் வேறுவேறாகப் பொலிவு தோன்றக் குற்று அமையாத உலக் கையொலியுடனே மிக்க ஆரவாரத்தையுடைய அகன்றவி டத்துப் பொன்னாற் செய்யப்பட்ட இதழையுடைய பசிய தும்பையுடனே மிசையே அசைந்த தலையினை உடைய பனந்தோட்டச் செருகிச் சினத்தையுடைய வீரர் வெறியாடும் குரவைக் கூத்து என புறநானூறு இருபத்திரெண்டாம் பாட லில் கூறப்படுகின்றது.

மேலும் வெற்றிக்களிப்பில் வேந்தனானவன் தேர்த்தட்டில் நின்று வீரர்களோடு கையிணைந்து குரவை ஆடுகின்றான் என்று புறநானூறு முந்நூற்று எழுபத்து ஓராம் பாடலில் கூறப்படுகின்றது.

மேலும் புறநானூறு இருபத்து நான்காம் பாடலிலும் குர வைக் கூத்தானது ஆடப்பட்டமையை காணமுடிகிறது.

திண் திமில் வன் பரதவர
வெப்பு உடைய மட்டு உண்டு
தன் குரவைச் சீர் தூங்குந்து32
( புறநானூறு 24 )

எனக் கூறுகிறது. அதாவது திண்மையான படகுடைய வன் பரதவர் விரும்பத்தக்க கள்ளையுண்டு மெல்ல ஆடும் குரவைக் கூத்து எனக் கூறுகிறது.

2.2.8 தொல்காப்பியம்

சங்ககாலத்தில் எட்டுத்தொகை பத்துப்பாட்டு நூல் வகுப் பிற்குள் தொல்காப்பியமானது தொல்காப்பியனார் எனும் புலவரால் பாடப்பட்டு காரணப் பெயர் பெற்றது. தமிழில் தோன்றிய முதல் இலக்கண நூல் இதுவாகும். தமிழறிஞர் டாக்டர். சி. இலக்குவனார் கூறுவதைப் போல் தொல் காப்பியம் ஒரு இலக்கண நூல் தான.; என்றாலும் ஏனைய மொழிகளிலுள்ள இலக்கண நூல்களைப் போல் அல்லாது உயிரியல், வாழ்வியல், உளவியல் முதலிய பண்பாட்டுக் கலைகளைத் தம்மகத்தே கொண்டுள்ளது. எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் எனும் மூன்று பிரிவாக பிரிக்கப்பட்டுள்ள இந்நூல் அமைப்பில் பொருளதிகாரத்தில் சங்ககாலத்து மக்களினுடைய அகத்திணை சார்ந்த ஒழுக்கங் களையும், புறத்திணை சார்ந்த வீரதீரச் செயல்களையும் பற் றிப் பாடியிருக்கிறார். அதாவது அரசியல், ஆட்சி, வாணிபம், வீரம், கொடை, உளவியல், மெய்ப்பாடுகள் என்பன புறம் சார்ந்தவையாகும். இவற்றுள் போர்க்களத்தில் ஆடப்பட்ட ஆடல்கள் பற்றி பின்வருமாறு நோக்கலாம்.

போர்க்கள ஆடல்களில் ஒன்றான குரவைக் கூத்து பற்றி தொல்காப்பியம் பின்வருமாறு கூறுகின்றது.

தேரோர் தோற்றிய வென்றியும் தேரோர்
வென்ற கோமான் முன் தேர்க்குரவையும்
ஒன்றி மரபிற் பின்தேர்க் குரவையும்33

என தொல்காப்பியத்தில் புறத்திணையியலில் பதினேழாம் பாடலில் கூறப்படுகிறது.இப்பாடல் மூலம் குரவைக் கூத் தாடும் தலைவர் குறித்தும் தேர் பற்றிய செய்தி குறித்தும் கூறப்படுகின்றது. மற்றும் தேர்ப்படை, காலாட்படை, குதி ரைப்படை என்பன குறித்தும் தொல்காப்பியனார் கூறுகி றார். இதனை தேரும், யானையும், குதிரையும் என்கின்றார். மேலும் தேரின் முன்னே நின்று ஆடியது முன்தேர்க்குரவை என்றும், தேரின் பின்னே நின்று ஆடியது பின்தேர்க்குரவை என்றும் மேற்கூறிய பாடல் கூறுகின்றது.

**போர்க்கள ஆடல் பற்றிக் கூறும்**
**சங்கமருவிய கால இலக்கியங்கள்**

**களவழி நாற்பது**

சங்கமருவிய காலத்தில் எழுந்த பதிணெண்கீழ்க்கணக்கு நூல்களில் களவழி நாற்பதும் ஒன்று. நாநாற்பது வகைக் குள் ஒன்றாக அடங்கும் இக்களவழி நாற்பது போர்க்களத் தின் சிறப்பைப் பாடும் நூலாகும். இங்கே களம் என்பது



போர்க்களத்தைக் குறிக்கும் அதே வேளை உழவர்களின் ஏர்க் களத்தையும் குறிக்கும். வழி என்பது இடம் என்று பொருள் படுகின்றது. அந்த வகையில் களத்தின் கண் நிகழ்ந்த நிகழ்ச் சிகளைப் பாடும் பாட்டினை களவழி என்பர். இக்களவழி நாற்பதில் யானைப் போர் அதிகமாகக் கூறப்பட்டுள்ளது. வெறும் நாற்பத்திரெண்டு செய்யுட்களை உடைய சிறிய நூலாகிய இந்நூல் பொய்கையார் எனப்படும் புலவரால் இயற்றப்பட்டது தொடர்பான சர்ச்சைகள் பலராலும் பல விதமாகக் கூறப்பட்டாலும் இறுதி முடிவாக சங்ககாலத்து புலவராக இல்லாமல் பிற்காலப் புலவரே இவர் என்று திரு. வையாபுரிப் பிள்ளையவர்கள் நிறுவுகிறார்.34 இந்நூலா னது கி.பி எண்ணூறு தொடக்கம் எண்ணூற்று ஐம்பதிற்கு இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டிருக்கின்றது. பிற்காலத் தில் பரணி இலக்கியம் தோன்றுவதற்கு இக்களவழி நாற்பதே வழிகாட்டியாக விளங்கியது என்பர்.

இந்நூலின் பாட்டுடைத் தலைவனாக விளங்குபவன் தஞ்சை விஜையாலய சோழன் என்று குலோத்துங்க சே ாழன் உலாவில் குறிப்பிடப்பட்டிருப்பதாக வையாபுரிப் பிள்ளை ஆதாரம் காட்டினாலும் இந்நூலின் இருபத்து ஒன் று, இருபத்து ஒன்பது, முப்பது மற்றும் நாற்பதாம் பாடலில் இப்பாட்டுடைத் தலைவனை சோழன் செங்கணான் என்று ஊகிக்க முடிவதாக கூறப்படுகின்றது. இதனையே திரு. வேங் கடசாமி நாட்டாரும் ஏற்றுக் கொள்கிறார். இப்பாடல்களின் ஊடாக சோழமன்னனும், சேரமன்னனும் போர் புரிந்ததா கவும், அதில் சோழ மன்னன் வெற்றி பெற்றதையும், இவற் றின் ஊடாக எக்காலத்திற்கும் பொதுவான மக்களுடைய வாழ்க்கை, மற்றும் உணர்ச்சி நிலைகள் போன்ற அம்சங்க ளையும், போரின் கொடுமைகளையும், ஒரு பக்கம் அதன் இன்பங்களையும், களிப்புக்களையும், மறுபக்கம் அதனால் ஏற்பட்ட பரிதாப நிலைகளையும் எடுத்துக்காட்டுகின்ற தன் மையை கண்ணாடி போல காட்டும் இக்களவழி நாற்பதில் அதில் இடம் பெற்ற ஆடல்களையும் அவதானிக்க முடிகின் றது. இதில் போர்க்கள ஆடல்களில் ஒன்றான களவேள்வி பற்றியே அதிகமாக பேசப்படுகின்றன.

இரு சிறக பீர்க்கும் பரப்பி யெருவை
ருருதி பிணங்க வருந்தோற்ற மதிர் விலாச்
சீர்முழாப் பண்ணமைப்பாண் போன்ற புனனாடன்
நேராரை யட்ட களத்து35
( க.நா : 20 )

இக்காட்சியை கவிஞர் மத்தளத்தை வாசிக்கும் தன்மையு டன் இசைவுபடுத்திப் பார்க்கிறார். இப்பாடலில் நேராதார் அட்ட களத்து என்ற வரிகள் பகைவரைக் கொன்ற களம் என்று பொருள்படுகிறது. இதில் வருகின்ற அட்ட என்பது கொன்ற என்றும், சமைத்த என்றும் இரு பொருளில் பயன்ப டுத்தக்கூடிய தன்மையைக் கொண்டுள்ளது.அதன்படி பிராணிகளைக் கொன்று அல்லது பிணத்தினை சமைத்து சாப்பிடுவதாகிய உணவை நினைவூட்டுகின்ற வரலாற் றுக் குறிப்பை ( களவேள்வி சமைத்தல் ) உணர்த்துவதற்கு இச்சொற்பதம் இங்கே பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. இதி லிருந்து களவேள்வி இடம் பெற்றதை அறிய முடிகின்றது.

இவை தவிர களவழி நாற்பதில் களவேள்வி பற்றி வருகின்ற இயல் நான்கில் விரிவாக நோக்குவோம்.

### 2.4 போர்க்கள ஆடல் பற்றிக் கூறும் பல்லவர் கால இலக்கியங்கள்

### 2.4.1 முத்தொள்ளாயிரம்

முத்தொள்ளாயிரம் எனும் நூலினை எழுதியவர் பெயர் அறியப்படவில்லையாயினும் நக்கீரரது பாட்டின் அமைப் புக்களுடன் இம் முத்தொள்ளாயிரப் பாடல்கள் ஒத்திசைவு அடைவதினால் இந்நூல் நக்கீரனாரராலேயே எழுதப்பட்டது என்ற முடிவை தமிழ் அறிஞர்கள் எடுத்துக் காட்டுகின்றார். சேரன், சோழன், பாண்டிய மன்னர்களது சிறப்புக்களை ஒவ் வொருவருக்கும் தொள்ளாயிரம் பாடல்கள் கூறாக அமைத்து மொத்தமாக இரண்டாயிரத்து எழுநூறு செய்யுள்களால் ஆனது இம்முத்தொள்ளாயிரம் எனும் நூலாகும். இது தமிழ் இலக்கியத்தில் தொகை நூல்; வகையைச் சேர்ந்த நூலாகும். பாண்டிய மன்னன், அவனது நாட்டுச் சிறப்பு, நகர்ச்சிறப்பு, ஆட்சிச்சிறப்பு, யானைப்படை, குதிரைப்படை, கண்ட களங் கள், பெற்ற வெற்றிகள் போன்றவற்றையும், சோழ மன்ன னின் நாடு, நகர்ச்சிறப்பு, அவனது கொடை, கண்டகளம், வெற்றி போன்றவற்றையும், சேர மன்னனின் நாட்டுச் சிறப் பும், புகழும், அவனுடைய பகை அரசர்கள் பற்றிய செய்தி களும் இந்நூலில் குறிப்பிடப்பட்டிருப்பதைக் காணலாம்.36 அவற்றுள் போர்க்களத்தில் ஆடப்பட்ட ஆடல்கள் பற்றி பின்வருமாறு நோக்குவோம்.

போர்க்கள ஆடல்களில் ஒன்றான குரவைக் கூத்து பற்றி முத்தொள்ளாயிரம் பின்வருமாறு கூறுகிறது.

பாற்றினம் ஆர்ப்பப் பருந்து வழிபடர
நாற்றிசையும் ஓடி நரிகதிப்ப– ஆற்ற
அலங்கலம் பேய்மகளீர் ஆடவருமே
இலங்கிலை வேல் கிள்ளி களிறு37
( முத்தொள்ளாயிரம் 50வது பாடல் )

அதாவது பிரகாசமான இலை வடிவமைந்த வேலைக் கையிலே கொண்டவனான சோழனின் ஆண் யானையா னது போருக்குப் புறப்படும் போது கழுகினங்கள் ஆர்ப் பரிக்கும். பருந்தினங்கள் பின் தொடரும். நரியினங்கள் நான்கு பக்கங்களிலும் இருந்து வந்து ஊளையிடும். அப் போது வெற்றியோடு மாலையணிந்து பெண் பேய்கள் கூத்தாடுவர். காரணம் எங்கும் பிணம் என்று கூறப்படுகின் றது. இதிலிருந்து பேய்த்துணங்கை ஆடப்பட்டதை அறிய முடிகின்றது.

மேலும் களவேள்வி பற்றியும் முத்தொள்ளாயிரம் விரி வாகக் கூறுகின்றது.அதனை பின்வரும் பாடலடிகள் மூலம் அறிய முடிகின்றது.



முடிந்தலை வெள்ளோட்டு மூளை நெய்யாகத்
துடித்த குடர்திரியா மாட்டி- எடுத்தெடுத்துப்
பே எய் விளக்கயரும் பெற்றித்தே செம்பியன்
சே எய் பொருத களம்38
( முத்தொள்ளாயிரம் 51வது பாடல் )

அதாவது சோழ மன்னர்களை எதிர்த்த பகை மன்னர்கள் அனைவரும் போர்க்களத்தில் மடிந்தனர். முடிசூடிய அவர்களின் மண்டை ஓட்டைப் பேய்கள் அகலாக ஆக்கிக் கொண்டன. அவர்களுடைய தடித்த குடல்களைத் திரியாக்கிக் கொண்டு விளக்கேற்றின என போர்க்களம் விபரிக்கப்படுவதனூடாக களவேள்வி சித்தரிக்கப்படுகின்றது.

இவை தவிர களவேள்வி பற்றி இன்னும் அதிகமான தகவலை முத்தொள்ளாயிரத்தில் காண முடிகிறது. அவை பற்றி வருகின்ற இயல் நான்கில் முத்தொள்ளாயிரத்தில் களவேள்வி எனும் தலைப்பினூடாக விரிவாக நோக்குவோம்.

### 2.5 போர்கள ஆடல் பற்றிக் கூறும் சோழர்கால இலக்கியங்கள்

#### 2.5.1 கலிங்கத்துப்பரணி

பரணி என்பது போர் முனையில் ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றி கொண்ட வீரனைப் புகழ்ந்து பாடுவது. தமிழில் வழங்குகின்ற தொன்னூற்றியாறு வகை பிரபந்தங்களுள் பரணியும் ஒன்றாகும். இன்று கிடைக்கின்ற காலத்தால் முந்திய பரணி நூல்களில் தலையாயது கலிங்கத்துப்பரணி எனும் நூலாகும். பரணி என்றால் கூத்து அல்லது கொண்டாட்டம் என்ற பொருளில் வரும். அந்த வகையில் சோழர் காலத்தில் எழுதப்பட்ட பரணிகள் யாவும் மன்னர்களின் போர் வெற்றியையும், அப் போர்க்களத்திலே இடம் பெற்ற களவேள்வியையும், அவ்வேள்வியில் மகிழ்ந்த பேய்களின் கூத்துக்களையும் விபரிப்பதாகவும் அமைந்துள்ளது.

கலிங்கத்துப்பரணியானது சோழ அரசனாகிய முதலாம் குலோத்துங்கனையும் அவன் கட்டளைக்கு இணங்கி கருணாகரத்தொண்டமான் கலிங்க தேசத்தின் மீது மேற்கொண்ட படையெடுப்பை விளக்கமாகக் கூறுகிறது. கி.பி. ஆயிரத்து நூற்று பத்தாம் ஆண்டளவில் இக்கலிங்கப்போர் இடம் பெற்றதாகக் குறிப்பிடப்படுகிறது. குலோத்துங்க சோழ மன்னனின் நீண்ட ஆயுளும், நல்ல ஆட்சியும், கலிங்கப் போரை மேற்கொண்ட தளபதியாகிய தொண்டமானது வலிமையையும், போர்ச்சிறப்பினையும், போர்களத்தின் காட்சியும், அப்போர்க்களத்திலே பேய்களின் களிப்பும் எனப்பல அம்சங்கள் கலிங்கத்துப்பரணியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நூலை இயற்றியவர் சயங்கொண்டார் எனும் முதலாம் குலோத்துங்கசோழனின் அரசசபைப் புலவர் ஆவார். பதினோராம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழ நாட்டின் கொரடோசேரிக்கு அருகிலுள்ள தீபங்குடி எனும் ஊரைச் சேர்ந்தவர் இச்சயங்கொண்டார். இவர் கலிங்கத்துப்பரணியைத் தவிர இசையாயிரம் என்று குறிப்பிடப்படும் நூலினையும், உலாமடல் எனும் நூலினையும் பாடியுள்ளார்.39

சாளுக்கிய குலத்து இராசராசனுக்கும் கங்கை கொண்ட சோழனின் மகளான அம்மங்கைக்கும் மகனாகப் பிறந்தவன் முதலாம் குலோத்துங்க சோழன். இவனுடைய காலம் கி.பி. ஆயிரத்து எழுபது முதல் ஆயிரத்து நூற்று இருபது வரையான காலம் ஆட்சி அமைத்துக் கொண்டவன். மதுராந்தகி என்பவர் இவனது பட்டத்துராணி. பல்லவர் குலத்தில் தோன்றிய சிற்றரசர்களுள் ஒருவனான கருணாகரத்தொண்டமான் குலோத்துங்கனது அரசியல் அதிகாரியாக நியமனம் பெற்று படிப்படியாக உயர்ந்து இறுதியாக தலைமைப் படைத்தளபதியாக வடகலிங்கத்துக்குச் சென்று போர் நிகழ்த்தி, கலிங்க தேசத்தை அழித்து, அனந்தவர்மனைப் பிடித்து, குலோத்துங்கனுக்கு வெற்றி தேடிக் கொடுத்தவன். இதனால் வேள், தொண்டமான் போன்ற பட்டங்களை பெற்றான். குலோத்துங்க சோழன் பணிப்பின் பெயரில் கருணாகரத்தொண்டமான் மேற்கொண்ட கலிங்கப்போர் வெற்றியின் விளைவாக தோன்றியதே இக்கலிங்கத்தப் பரணியாகும்.

இவ்வாறு போர்க்களத்தையும், மன்னர்களின் போரைப் பற்றியும் கூறும் இக்கலிங்கத்துப் பரணியானது போர்க்களத்தில் நிகழ்ந்த ஆடல்களைப் பற்றி கூற மறக்கவில்லை. அதாவது போர்க்கள வர்ணனையில் பேய்கள் மகிழ்வோடு ஆடும் ஒரு ஆடலாக களவேள்வி காணப்படுகின்றது. இக்களவேள்வி பற்றி வருகின்ற இயல் நான்கில் களவேள்வியும் கலிங்கத்துப்பரணியும் எனும் தலைப்பினூடாக இவ்விலக்கியத்தில் களவேள்வி பற்றிய செய்திகளை விரிவாக நோக்குவோம்.

### துணை நூல்கள்


1) முனைவர்.அ.ஆலீஸ், சங்க இலக்கியம் பதிற்றுப் பத்து மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, பெப்ரவரி, 2007, பக் - 146.

2) அருளம்பலம் . சு, பெரும்பாணாற்றுப்படை - ஆராய்ச்சியுரை, ஸ்ரீசண்முகநாத அச்சியந்திரசாலை - யாழ்ப்பாணம், 1937, பக் - 8.

3) இரா . மோகன், சங்க இலக்கியம் பத்துப்பாட்டு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் - சென்னை, 2007, பக் - 209.

4) சாமி. சிதம்பரனார், பத்துப்பாட்டும் பண்டைத் தமிழரும், அறிவுப்புத்தகம் 142, ஜானி ஜான் கான்ரோடு ராயப் பேட்டை, சென்னை, பக் - 98.

5) நாகராசன் . வி, சங்க இலக்கியம் பத்துப்பாட்டு (இரண்டாம் பகுதி) மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, பக் - 376.

6) அருளம்பலம் . சு, திருமுருகாற்றுப்படை - ஆராய்ச்சியுரை, ஸ்ரீசண்முகநாத அச்சியந்திரசாலை - யாழ்ப்பாணம், 1937, பக் -11.



7) சி.கி. இலட்சுமணன், தமிழ் இலக்கிய வரலாறு, கிரு;ணா வெளியீடு, திருச்சிராப்பள்ளி, ஜீன் - 2008, பக் - 30.

8) க.கைலாசபதி, தமிழ் வீரநிலைக் கவிதை, குமரன் புத்தக இல்லம் கொழும்பு, சென்னை - 2006, பக் - 140.

9) சி.கி. இலட்சுமணன், தமிழ் இலக்கிய வரலாறு, கிரு;ணா வெளியீடு, திருச்சிராப்பள்ளி, ஜீன் - 2008, பக் - 62.

10) சாமி. சிதம்பரனார், பத்துப்பாட்டும் பண்டைத் தமிழரும், அறிவுப்புத்தகம் 142, ஜானி ஜான் கான்ரோடு ராயப்பேட்டை, சென்னை, பக் - 10.

11) இரா . மோகன், சங்க இலக்கியம் பத்துப்பாட்டு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் - சென்னை, 2007, பக் - 13.

12) சண்முகம்பிள்ளை.மு, சங்கத்தமிழர் வாழ்வியல், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் - சென்னை, 1997, பக் - 15.

13) நாகராசன் . வி, சங்கஇலக்கியம் பத்துப்பாட்டு (இரண்டாம் பகுதி), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, பெப்ரவரி - 2007, பக் - 24.

14) சண்முகம்பிள்ளை.மு, சங்கத்தமிழர் வாழ்வியல், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் - சென்னை, 1997, பக் - 19.

15) நாகராசன் . வி, சங்கஇலக்கியம் மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் - சென்னை, 2007, பக் - 376.

16) பாலசுப்பிரமணியன் . கு.வெ, சங்க இலக்கியம் புறநானூறு (மூலமும் உரையும்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் அம்பத்தூர் - சென்னை, ஏப்ரல் - 2004, பக் - 300,301

17) புலியூர்க்கேசிகன், தொல்காப்பியம் பொருளதிகாரம் புறத்திணையியல், பாரி நிலையம், புதிய 9ம் பதிப்பு, சென்னை, பக் - 303.

18) ஸ்ரீ.பி, களவழி நாற்பது, அமுத நிலையம் - சென்னை, மார்கழி - 1963, பக் - 03.

19) ஸ்ரீ.பி, களவழி நாற்பது, அமுத நிலையம் - சென்னை, மார்கழி - 1963, பக் -

20) நாராயண வேலுப்பிள்ளை.ஆ, முத்தொள்ளாயிரம் மூலமும் தெளிவுரையும், வர்த்தமாணன் பதிப்பகம், உஸ்மான் சாலை, தியாகராயநகர் சென்னை, பக் - 52.

21) சயங்கொண்டார் , கலிங்கத்துப்பரணி - தெளிவுரையுடன்,தெளிவுரை : புலியூர்க்கேசிகன், பாரிநிலையம் - சென்னை, தை - 1979, பக் - 6.



# மட்டக்களப்பின் மண்டூர் முருகன் ஆலயத்தில்


# திருச்செந்தூர் புராணமும் மக்களின் ஈடுபாடும்

**கட்டுரைச்சுருக்கம்:**

இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலேயே முருகவழிபாடு நிலைபெற்றுவிட்டது. தொன்மையான முருகன் தலங்களுள் கதிர்காமமும் ஒன்று. அதேபோன்று மட்டக்களப்பிலிருந்து மேற்குப்புறமாக 38 கிலோமீற்றர் தொலைவில் சின்னக்கதிர்காமம் என்று அழைக்கப்படும் பழம்பெரும் முருகன்பதி ஒன்றுள்ளது. இத்தலம் மட்டக்களப்பின் திருப்படைக் கோயில்களில் ஒன்றாகும். இது தில்லை மண்டூர் திருப்பதி என்றும் அழைக்கப்படும். இங்கு வாயில் சீலை கட்டி மௌன பூசை நடைபெறும்.

பூசை செய்பவர்கள் கப்புகனார் என்று அழைக்கப்படுவர். மூலஸ்தானத்தில் இருப்பது பரம இரகசியமாகும். கதிர்காமமும் இத்தகையதே. இங்கு திரை திறந்து பூசை செய்வதில்லை. பூசை முடிவுற்றதும் கப்புகனார் வெளியே வந்து திரை முன்பு நின்று பூசையை ஏற்றருளுமாறு சங்கு முழங்க மணி ஓசை ஒலிக்க கையெடுத்துக் கும்பிடும் காட்சி மனதை உருக்கி மெய்மறக்கச் செய்யும். இவ்வாலய உற்சவம் ஆடி மாத பூரணை கழித்து வரும் பத்தாம் நாள் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 20 நாட்கள் திருவிழா நடைபெற்று ஆவணிமாத பூரணை தினமான 21 ம் நாள் தீர்த்தோற்சவம் நடைபெறும்.

கந்தசஸ்டி காலங்களில் அனேகமான ஆலயங்களில் கந்தபுராண படனம் நடைபெறும்போது மண்டூர் முருகன் ஆலயத்தில் திருச்செந்தூர் புராண படனம் ஓதும் காட்சி அதி அற்புதமாக மக்கள் மனதில் பதிந்துள்ளது. குமரன் கோயில் கொண்டிருக்கும் முக்கிய தலங்க

**சைவப்புலவர்,**
**சைவசித்தாந்த பண்டிதர்,**
**சித்தாந்தரத்தினம்,**
**திருமதி.சிவானந்தஜோதி ஞானசூரியம்– M.A**

25/9, மாரியம்மன்கோயில் வீதி,
கல்லடி, மட்டக்களப்பு.
மின்னஞ்சல்: gpranujaa@yahoo.com
0771768830

ளுள் சிறந்து விளங்குவது திருச்செந்தூர். ஆறுபடை வீட்டினுள் இரண்டாவது படைவீடாகும். செந்திற் பதியிற் பிறந்து சேவை செய்து பெம்மான் அருளுக்கு அருளாகும் திரிசுதந்திர அந்தணர்தம் கால்வழியில் வந்த வென்றிமாலைக் கவிராயர் என்பவர் திருச்செந்தூர்ப் புராணத்தை இயற்றியுள்ளார். இது பொருள் நுட்பம் வாய்ந்தது. தமிழ் நயமும் சமய நலமும் அமைந்து திகழ்கிறது. பலவித சமயக் கதைகளையும் மாத விரத மகிமைகளையும் அறிந்துகொள்ள உதவுகிறது. சமயக் கருத்துக்களையும் தத்துவ நுட்பங்களையும் வாழ்வியல் அனுபவ உண்மைகளையும் இப்புராணமூலம் உணரப்பெறுகின்றோம். இத்திருச்செந்தூர் புராணம் படிப்போருக்கு ஆகாமிய வினை உருவாவதில்லை. இப்புராணம் 18 அத்தியாயங்களையும் 900 பாடல்களையும் கொண்டுள்ளது. மண்டூர் முருகன் ஆலயத்தில் கந்தசஸ்டி காலத்தில் பல கிராமத்து மக்களும் ஆயிரக்கணக்கில் திரண்டுவந்து உபவாச விரதம் அனுட்டித்தும் பக்திவெளிப்பாட்டைக்காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.



### திருச்செந்தூர் பெருமை

கலியுக வரதன் கண்கண்ட தெய்வமாக கோயில் கொண்டிருக்கும் திருச்செந்தூர் சந்தனாசலம், வெண்டலைப்புணரி அலைக்கும் செந்தில, கயிலைமலையனைய செந்தில்பதி, திருச்சீரலைவாய், வேலைநகர், சயந்திபுரி முதலிய திருநாமங்களை உடைய தலம்.. ஆளுடைய அரசுகள் பாடி மகிழ்ந்த பதியும் திருச்செந்தூர். ஆறுபடை வீடுகளில் இரண்டாவது படைவீடு என்ற ஏற்ற கம்பீரகோலத்தோடு இருக்கும் அந்த ஆறுமுகப்பெருமானை மறவாதாரே பிறவாதார். கடலும் அதன் கரையில் அமைந்த இவ்வாலயத்தை சங்கத் தமிழின் தலைமைப்புலவர் நக்கீரர் தமது திருமுருகாற்றுப்படையில் உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீரலை வாய்ச் சேறலும் நிலைஇய பண்பே எனவும் , முருகனே செந்தில் முதல்வனே எனவும் குறிப்பிடுகிறார். இதை கச்சியப்ப சிவாசாரியார் தமது செய்யுளில், சீரலைவாய்ம் என எதுகையாக அமைத்துப் பாடியுள்ளார். சங்கநூல் புறநானூற்றில் மருதர் இளநாகனார் தமது பாடலில் திருச்செந்தூரைப் புகழ்ந்து பாடியுள்ளார். இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்திலும் சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும் என்று முருகனின் தலங்களுள் முதன்மையானது என சிறப்பித்துரைக்கிறார். ஆறுமுகப்பெருமான் இச்செந்தில் திருத்தலத்தில் படைவீடு அமைத்து சூரபதுமன் முதலிய அரக்கர் குலத்தை வேரறுத்த வரலாறு கந்த புராணத்தில் கூறப்படுகிறது. திருநாவுக்கரசு சுவாமிகளும், நம் செந்தில் மேய வள்ளிமணாளற்குத் தாதை கண்டாய் எனத் தேவாரத்தில் பாடியுள்ளார்.

அருணகிரிநாதர் கயிலைமனையனைய செந்திற்பதி வாழ்வே எனத் திருக்கைலையோடு திருச்செந்தூரை ஒப்பிட்டுப் போற்றியுள்ளார்.இவர் 83 திருப்புகழ் பாடல் சிறப்பித்துப் பாடியுள்ளார் . கந்தர் அலங்காரத்திலும் அருணகிரிநாதர் சேல்பட்டழிந்தது செந்தூர் வயற்பொழில் தேங்கடம்பின் எனவும் பாடி மகிழ்ந்தார். ஐந்து வயதில் ஊமையாயிருந்த குமரகுருபரர் முருகனருளால் பேசவும் பாடவும் அருள்பெற்று கந்தர் கலிவெண்பா பாடிய அற்புதம்.நிகழ்ந்ததும் இத்தலமே. இதுதான் முருகனுக்கு முதலில் பிடித்த பாடலாயுள்ளது. வைணவரான பகழிக்கூத்தர் திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழ் பாடி வயிற்று வலி தீர்த்த



தலம் இதுவே. சரவணப்பெருமாள் கவிராயர் பாடிய கந்தவருக்கக் கந்தவெண்பா, சிவப்பிரகாச சுவாமிகள் பாடிய திருச்செந்தில் நீரோட்டக யமகவந்தாதி , சிற்றம் பலநாடிகள் பாடிய வண்ணச்சரபம் திருச்செந்தூரகவல், தண்டபாணி சுவாமிகள் பாடிய வள்ளிநாயகி பிள்ளைத் தமிழ் முதலிய 19 பிரபந்தங்கள், பாம்பன் சுவாமிகள் செந்திலாண்டவனைப் பாடி திருவருள் பெற்ற வர லாறும் உள்ளன. ஆதிசங்கரர் வடமொழியில் இயற்றிய சுப்பிரமணிய புஜங்கம் ஆகியவற்றோடு ஆறு எழுத்து அமுதம் உண்ண திருச்செந்தில் தல புராணத்தையும் தல வரலாற்று நூல்களையும் பாடியுள்ளார்கள். இங்ஙனம் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலம் தொட்டே முருகப் பெருமானுக்கு உகந்த தலமாக விளங்குகிறது.

### திருச்செந்தூர் புராண படனமும் மக்களின் ஈடுபாடும்

மண்டூர்வாழ் கிராம மக்களுடன் அயல் கிராம மக்களும் ஒன்றுசேர்ந்து பக்தி பரவசத்துடன் கந்தசஸ்டி உபவாச விரதம் அனுஸ்டிக்கும் காட்சி உள்ளத்தை கொள்ளை கொள்ளுமாறு அமையும்.முதலாம் நாள் கும்பத்தில் முருகப்பெருமானை ஆவாகனம் செய்து பூசையினை ஆரம்பிப்பர். பூசை முடிவுற்றதும் திருச்செந்தூர் புராணப டனம் ஆரம்பிக்கப்படும். முதலிலே காப்பைச்சொல்லி, சி வபெருமான், உமாதேவியார், விநாயகக் கடவுள், வயி ரவர்,சுப்பிரமணியக்கடவுள், வேலாயுதம், ஐயனார், வீரவாகுதேவர், திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள், மாணிக்கவாசகர், சரசுவதி, போன்றோ ருக்கான வாழ்த்துப் பதிகங்கள் பாடப்படும்.

திருச்செந்தூர் புராணத்தின் 18 அத்தியாயங்களில் எட்டாவது அத்தியாயமான வள்ளியம்மை திருமண அத்தியாயம் என்னும் புராணபடனம் மூன்றாம் நாள் பாடப்படும். இந்நாள் விரதாதிகளுக்கெல்லாம் ஒரு மகிழ்ச்சிமிக்க நாளாகும். அன்றைய தினம் முருகப் பெருமானுக்கும் வளய்ளியம்மையாருக்கும் திருமண நாளாகும். மண்டூர் முருகனாலயத்திலுள்ள சந்தண மண்டபம் என்றழைக்கப்படும் மண்டபத்தின் நடுவிலே பந்தல் ஒன்று அமைத்து நான்கு பக்கங்களும் யானைக் கொம்பு போன்று வெள்ளை வாழை மரத்தினாலே கால் நட்டு தோரணங்கட்டி நடுவிலே வேங்கை மரத்திற்குப் பதிலாக மூங்கில் தடியினாலே ஒரு கால் நட்டு அக்கா லினை அழகிய பட்டுச் சீலைகளினாலே ஒரு பெண் போல அலங்காரம் செய்து வள்ளியம்மையாரின் சாய லிலே ஒரு பொம்மையை வைத்துவிடுவர்.

இந் நிகழ்வு தினைப்புனத்திலே நிகழ்வது போன்ற பாவனையில் அந்த அலங்காரத்தின் அடிப்பகுதியிலே வன விலங்குகள் பறவைகள் போன்றவற்றின் உருவப் பொம்மைகளை செய்து வைப்பர். அன்றைய தினம் பலகாரங்கள் அனைவராலும் செய்யப்பட்டு நான்கு புறமும் குவிக்கப்படும். ஆலயத்திலுள்ளோர் பெண் வீட் டாராகவும் வெளியிலுள்ள ஒரு பகுதியினர் மாப்பிளை வீட்டாராகவும் செயற்பட்டு தாலி, மணம்சேர்க்கப்பட்ட வெற்றிலை பாக்கு முதலியவைகளை கொண்டுவருவர். தாலி கட்டும் வேளை நெருங்கியதும் புராணபடனம் நிறுத்தப்பட்டு தாலியினை பிரதம கப்புகனாரும் ஆலய வண்ணக்கரும் சேர்ந்து வள்ளியம்மையாருக்கு அணி விப்பர். அதனைத் தொடர்ந்து நடைபெறும் பூசையை அடுத்து திருமண பலகாரம் வெற்றிலை பாக்கு என்பன அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்படும். இதன; விளக்கம் தங்கள் வீடுகளிலுள்ள திருமண வயதையுடைய வர்க ளுக்கு நிட்சயம் திருமணம் நடைபெறும் என்ற அசை யாத நம்பிக்கையாகும்.



தொடர்ந்து நான்காம் ஐந்தாம் நாட்களும் புராணப டனம் நடைபெறும். இதில் விசேட அம்சம் யாதெனில் ஆறு நாட்களும் மூலஸ்தான இறைவனுக்கான பிரசாதம் மறைபொருளாக பிரதம கப்புகனாரினால் எடுத்துச்செல லப்படும். இது அமுதுக்கா என்று அழைக்கப்படும். அவ் வேளைகளில் நிலபாவாடை என;;று அழைக்கப்படும் வெள்ளைச் சீலை விரிக்கப்பட்டிருக்கும். அவ்வேளைக ளில் பக்தர்களின் அரோகரா கோசம் விரதாதிகள் மனதில் ஒரு புத்துணர்வை உண்டாக்கும்.இறுதி நாளான ஆறாம் நாள் பொங்கல் தினமாகும். ஆலயத்தின் வெளி வீதி முழுவதும் நூற்றுக்கணக்கான பொங்கல் பானைகள் காணப்படும். அன்று இரவு சுமார் 7.00 மணியளவில் பந்தலுக்கு முன்னால் படைக்கப்பட்ட பாரிய பொங்கலுக் கான பூசை ஆரம்பிக்கப்படும். தொடர்ந்து புராண படனம் இடம்பெறும். இப்படனத்திலே மாதபூசை விதியுரைத்த அத்தியாயம் என்று பாடப்பெறும். இதிலே யுகாதி 4 நாட் கள், மனுவாதி 14 நாட்கள், பூரணை 12 நாட்கள், மகாள யம் 15 நாட்கள், அமாவாசை 12 நாட்கள், சங்கிராந்தி 12 நாட்கள், வைதிருதி 13 நாட்கள் வியதி பாதங்கள் 14 நாட்கள் ஆக மொத்தம் 96 நாட்களாகும். இந்நாட்களில் சிரார்த்தம் செய்யும்படி உரைக்கப்பட்டதை சமய நெறி முறையின்படி நடப்பதற்காக மக்கள் உன்னிப்பாக ஈடுப டுவார்கள். மற்றும் இரவு பகல் என்னும் எட்டு யாமத்தும் இடையறாது நினைந்து மெய்ப்பொருள் வழிபாட்டை மேற்கொள்பவர்கள் எண்மரையும் உரைக்கின்றோம்.

பகல்பொழுதின் முதல் யாமத்தில் அயனும், இரண்டாம் யாமத்தில் முனிவர்கள் பலர் முயன்று செய்யும் வழி பாடு, மூன்றாம் யாமத்தில் கந்தர்வர் சித்தர்கள், நான் காம் யாமத்தில் திக்குப்பாலகருடன் இந்திரன்., இரவுக் கால ஐந்தாம் யாமத்தில் இலக்குமி, ஆறாம் யாமத்தில் அவுணர்களுடன் அரவுக்குத் தலைவனான ஆதிசேடன், ஏழாவது யாமத்தில் வள்ளி தெய்வானை செய்யும் பூசை எட்டாம் யாமத்தில் உயர்ந்த கங்கை முதலிய நதி தேவ தையளுடன் வரத திருமால் பூசை செய்கின்றார். இத்த கைய விசேட சிறப்புக்கள் நடைபெறும் மண்டூர் கந்தச ாமி ஆலயத்திற்கு திருச்செந்துரர் புராண படனத்தினை கேட்டு இன்புற மக்கள் வருடந்தோறும் விரதம் அனுஸ் டிக்க தூண்டப்படுகிறார்கள். மறுநாள் உதயத்தில் விரத நிறைவாகிய பாறணை நடைபெறும். இவ்வாறான திருச் செந்துர் புராண படனத்தை கேட்டு முருகனின் திருவருள் தண்ணளி சுரக்க முயல்வோமாக.

**சுபம்.**


**உசாத்துணை நூல்:**

வென்றிமாலைக் கவிராயர் (1998), திருச்செந்தூர் தல புராணம், திருச்செந்தூர் தேவஸ்தான வெளி யீடு.

கிருபானந்தவாரியார் (2014) கந்தரலங்காரம் வானதி பதிப்பகம் சென்னை.


திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் (2003) புலவர் பி.ரா. நடராசன். உமா பதிப்பகம்.

சைவசமயம் மேற்பிரிவு. (2007) இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

பன்னிருதிருமுறை

திருமுருகாற்றுப்படை

# போலநறுவையில் ஶ்ரீலஶ்ரீ ஆறுமுகநாவலர் விழா





**பொ**லநறுவை சமன்பதியூர் சாரதா அறநெறிப்பள்ளியினுடைய 2020ம் வருடத்திற்கான ஆறுமுக நாவலர் விழா இடர்கால வேளையிலும் மிகச் சிறந்த கட்டுப்பாட்டுடன், சமயபாடசாலையின் பிரதான மண்டபத்தில் சென்றவாரம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சமன்பதியூர் சாரதா அறநெறிப்பள்ளியின் தலைமை ஆசிரியர், அதிபர் சைவப்புலவர் திரு பாலன் சுதாகரன் அவர்கள் ஆறுமுகநாவலரின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து விழாவினைத் தொடக்கி வைத்தார்.

பாடசாலையின் சிவதொண்டர் அணியினர்கள், நாவலர் விழாவினை சிறந்த முறையில் ஏற்பாடு செய்துள்ளனர். மேற்படி விழாவிற்கு பாடசாலை ஆசிரியர்கள் பதினெண்மரின் பங்களிப்பு மிகச்சிறப்பாக அமைந்திருந்தது.

இவ்விழாவில் நாவலர் பெருமானின், வாழ்வியல் வரலாறு மற்றும் நற்சிந்தனைகள் கருத்துரைகள் என்பன மாணவர்களால் வழங்கப்பட்டன. அதுமட்டுமன்றி இவ்வருடம் கொழும்பு ஆறுதுகநாவலர் சபையினால் நடத்தப்பட்ட





கட்டுரைப்போட்டியிலே, பாடசாலை மாணவர்கள் மூவர் தெரிவாகியிருந்தனர். அவர்களுக்குரிய வாழ்த்துக்களும் பரிசில்களும் இவ்வேளையில் மண்டபத்தில் வழங்கப்பட்டது சிறப்பு அம்சமாகும்.

சமன்பதியூர் பாடசாலை மாணவர்கள் 325 பேரும் பதினெட்டு ஆசிரியர்கள் கலந்து கொண்டு நாவலர் விழாவை மிகவும் சிறப்பாகவும் உணர்வுபூர்வமாகவும் நடத்தி வைத்தனர்.



# ஆலய வழிபாடு



**சிவஸ்ரீ தெ.தயமுகன் சர்மா**
(இந்து தர்மாசிரியர், Diploma in teaching Hinduism merit 1st rank)
ஆசிரியர்– மட்/புனித சிசிலியா பெண்கள் கல்லூரி (தே.பாடசாலை)
ஆலய குரு– எருவில் பாரதிபுரம் சிவன் ஆலயம், மகிழூர் ஸ்ரீ வீரையடி விநாயகர் ஆலயம்

**செ**ன்ற தொடர்ச்சியில் ஆலயம் என்பதன் பொருள்,ஆலய அமைப்பு, திருக்கோயில் வழிபாட்டு முறை முதலானவை பற்றி நோக்கினோம். இனி ஆலயக்கிரியை பற்றி நோக்குவோம்.

## கிரியைகள் பற்றிய தத்துவ விளக்கம்

கிரியை என்ற என்ற சொல்லுக்கு நியதிச் செயல்கள்,முறைப்படி செய்யப்படும் பூசைகள் என்று பொருள் கொள்வர். கிரியை செய்யப்படுவதற்கான பிரதான நோக்கம் ஞானம் கிடைப்பதற்காகும்.இதனை சிவப்பிரகாசம் எனும்நூல்

''கிரியையெ மருவுமவை யாவும் ஞானம்
கிடைத்ததற்கு நிமித்தமெனக் கிளக்கும்....''

எனும் பாடல் மூலம் எடுத்தியம்புகிறது.

இத்தகைய கிரியையானது ஒருவன் தனது ஈடேற்றம் கருதியும், பொதுநலம் கருதியும் உலக நன்மையின் பொருட்டும் செய்விப்பது முறையே ஆன்மார்த்த கிரியை, பரார்த்த கிரியை என 2 வகைப்படும்.ஆலயக்கிரியைகள் பெரும்பாலும் பராத்த பலனை நோக்காக கொண்டவை. ஆலயக் கிரியைகளை நித்திய கிரியைகள். நைமித்திய கிரியைகள்,காமிய கிரியைகள் என மூன்றாக வகைப்படுத்துவர்.

## 1.நித்திய கிரியை

நித்திய கிரியையானது ஆலயத்திலே தினந்தோறும் நடைபெறும் கிரியையாகும்.மக்கள்



இதனை நித்திய பூடிஐ எனவும் அழைப்பர்.இப்பூசையானது அவ்வவ் கோயில்களின் தன்மைகளுக்கும் மரபுகளுக்கும் ஏற்ற வகையில் நடைபெறும்.ஒருவேளைப் பூசையாகவும் காலை,மாலை இருவேளையிலும் காலை,உச்சி,மாலை ஆகிய மூன்று வேளையிலும்

ஆறுகாலப்பூசையானது உஷக்காலப்பூசை,காலைச் சந்திப்பூசை, உச்சிக்காலப்பூசை, சாயரட்சைப்பூசை, இரண் டாம் காலப்பூசை,அர்த்தயாமப்பூசை என்பனவாகும்.மேலும் திருச்செந்தூர் முருகன் அலயத்திலே பன்னிரு வேளையிலும் பூசைகள் நடைபெறுகின்றன.இவற்றிலே ஆறுகாலப்பூசைத னைப் பற்றி சிறிது நோக்குவோம்

### I.உஷக்கால பூசை

இப்பூசை சூரியன் உதிக்க மூன்றே முக்கால் நாழிகை களுக்கு முன் நிகழ்வது.அர்ச்சகர் தமது நித்திய கர்மானுஷ் டாங்களை முடித்து கோயிலினை அடைந்து திருநந்தி தேவரையும் பின்னர் துவாரபாலகரையும் பிரார்த்தித்து அவரனுமதியுடன் உட்சென்று புறமண்டபத்தையடை யவர்.அங்கு சகளீகரணம் செய்து சாமான்யார்க்கியம் கூட்டி அத் நீரினால் தன் மீதும் புறத்தே உள்ள பொருள் கள் மீதும் தூய்மையாக்குவர்.பின்னர் பூதசுத்தி,அந்தர் யாமி,சிவோகம்பாவடி ஆகியன கிரியைகளைச் செய்து வைரவரின் ஆலயம் புகுந்து பள்ளியறை திறவுகோலை அங்கு முத்திரையால் எடுத்து மங்கள வாத்தியங்கள் இசை க்க பள்ளியறைக் செல்வர்.

பின்னர் திருப்பள்ளியெழுச்சி பாடி கதவுதிறப்பதற்கு அனுமதிவேண்டி துவார பூசை செய்து கதவினை திறந்து பவித்திரமாக்கப்பட்ட அர்க்கிய நீரினால் உட்புறம் தெளித்து,நிர்மாலியங்களை கலைந்து இறைவனுக்கு பாத்தியம்,அர்;கியம் ஆசமனியம் கொடுத்து வெளியே எழுந்தருளும் வண்ணம் பிரார்த்தனை செய்வர்.பி;ன்னர் இறைவியை விட்டு இறைவனை சிவிகையில் ஏற்றிக் கோவிலை வலமாக எந்தருளச்செய்து மூலலிங்கத்தின் சந்நிதியை அடைவர்.அ;கே கையிலே புஸ்பத்தினை எடுத்து பள்ளியில் இருந்து மூலஸ்தானத்திற்கு வந்தி ருக்கும் இறைவனை உற்பவ முத்திரையால் மூலலிங்கத் திற்கு சேர்ப்பிப்பர்.பின் ஸ்தானசுத்தி செய்து பூதேவியை வழிபட்டு திரவியசுத்தியையும் முடித்து சுவாமிகளை ஸ்நானம் செய்து (மஞ்சன நீரால் முழுகுவித்து) முறைப் படி உஷக்கால பூசை செய்வர்

### II.காலைச்சந்தி பூசை

இதனை காலைப்பூசை எனவும் அழைப்பர். சூரியனுதித்த பின் ஏழரை நாழிகைக்குள் நிகழ்த்தல் வேண்டும.;இங்கே முதலில் சூரியபூசை இடம்பெற்று அதனை தொடர்ந்து விநா யகர் பூசையும் நிகழும்.அதன்பின்னரே மூலமூர்த்திற்கும் பரி வார தெய்வங்களுக்கும் பூசைகள் சிறப்பாக நடைபெறும்.

### III. உச்சிக்காலை

இப்பூசை நடுப்பகலில் நிகழ்வது.குருவானவர் ஐவகை சுத்திபண்ணி பூர்வக் கிரியைகளைச் செய்து,ஸ்நபன பூசை செய்து துவாரபாலகரை வணங்கி உள்ளே சென்று ஆதார சக்தி முதல் ஸ்நபனம்; ஈறாக அபிஷேகித்து வஸ்திரம் மாலை முதலியவற்றால் அலங்கரித்து ஆவரணபூசை முடித்து தூப தீபாராதனை செய்வர்.பூசை நிறைவேறியதும் சிவநிர்மாலி யத்தை சண்டேஸ்வரரிடம சமர்ப்பித்து பூசைதனை முடிப்பர்

### IV.சாயரட்சைப் பூசை

இப்பூசைதனை சாயங்காலப்பூசை, பிரதோஷகாலப் பூசை எனவும் அழைப்பர்.இப்பூசையானது சூரியன் அஸ் தமிப்பதற்கு மூன்றே முக்கால் நாழிகை;கு முன்நிகழும்.விநா யகர்,நடேசரையும் பின் மூலவரையும் சிவபெருமானுடைய ஏனைய மூர்த்திகளையும்,அம்மையையும் உரியவாறு பூசி த்தல் இப்பூசையி;ன் முக்கிய அம்சமாகும்

### V.இரண்டாம் காலப்பூசை

சாயங்காலப்பூசையிலிருந்து மூன்றே முக்கால் நாழிகையில் நிகழ வேண்டும்.விநாயகர் பூசை,மூலவருக்கு அபிஷேக ஆர தனை தீபம் நைவேத்தியம் படையல் என்பன இடம்பெற்று பரிவார தெய்வங்களுக்கு பூசை என்பன இடம்பெற்று நித்தி யாக்கினிகார்யம்,நித்தியோத்சவம்,நித்தியபலி முதலியன இப்பூ சையின் முக்கிய அம்சங்களாக இடம்பெற்று சண்டேஸ்வரர் பூசையுடன் இரண்டாம் காலப்பூசை முடிவடைகிறது.

### VI.அர்த்த சாமப் பூசை

இரண்டாம் காலப்பூசையிலிருந்து மூன்றே முக்கால் நாழிகை வரைக்குள் நிகழ வேண்டும்.இங்கே துவார பூசை கிடையாது.. மூலவருக்கு அபிஷேகம்,ஆராதனை முடிந்ததும் உற்சவமூர்த்திகளை பள்ளியறைக்கு எழுந்தருளச் செய்து அங்கே நறுமலர்கள்,ஏலக்காய்,இலவங்கம்,வெற்றிலை



பாக்கு வைத்து திரையிடப்படும் இதனை பள்ளியறைப் பூசை என்பர். பள்ளியறைப் பூஜை முடிந்நதும் சண்டேஸ் வரர் பூசை இடம்பெற்று பின்னர் வைரவர் சந்நிதியில் பூசை நிகழ்த்தி திறவுகோலை(சாவியை) அவர் முன்னிலையில் வைத்து கோவில் பாதுகாப்பை அவரிடம் ஒப்புவிப்பர். இத னுடன் அர்த்தசாமப் பூசையாது நிறைவடைகின்றது.

## 02.நைமிஷ்த்ய கிரியைகள்

இதனை விசேஷ கிரியை எனவும் அழைப்பர்.வாரபூ சை,மாதபூசை, நட்சத்திரபூசை,
குங்கும பூசை,பிரதோஷபூசை ,கிரகணபூசை,அமாசைப் பூசை பால்குனபூசை சிரவாண்பூசை எனப்பல பூசைகளை நைமித்திய கிரியைகளாக பூர்வ காரணாகமம்,உத்தரகார ணாகம் குறித்துரைக்கின்றது. நைமித்திய கிரியைகளை கீழ்வ ருமாறுவகைப்படுத்தாம்.
1.வாரமொருமுறை- சுக்கிரவாரம்,சோமவாரம்,மங்கள வாரம்
2.இருவாரமொருமுறை- பிரதோஷம்
3.மாதமொருமறை- சதுர்த்தி, மாதப்பிறப்பு, பூரணை
4.வருடமொருமுறை -நவராத்திரி சிவராத்திரி ,தைப்பொங் கல்,வருடப்பிறப்பு,மாசிமகம் திருக்கார்திகை, மகோற்சவம்..
5.பலருடங்களுக்கு ஒருமுறை-கும்பாவிஷேகம்,மகாமகம்
இவற்றுள் சுக்கிரவாரம் பிரதோஷம், நவராத்திரி, திருக்கார்த் திகை, ஆர்த்திரா உற்சவம், சிவராத்திரி, மகோற்சவம்,கும்பா விஷேகம, பண்டிகைக்காலப் பூசைகள் முக்கியமான பூசை களாக எம்மவரால் செய்யப்படுகின்றன.

## 03.காமியக் கிரியை

விருப்பத்தினை அல்லது பயனை விரும்பி செய்யப்படும் கிரியைகள் இதனுள் அடங்கும்.நித்திய நைமித்திய கிரியை களும் பயனை விரும்பிச் செய்யப்படுமாயின் காமியக்கிரி யைகளிலே இடம்பெறும். நோக்கங்களாக கொண்டு செய் யப்படும் நித்தியார்சனை அபிஷேகம் அலங்காரம் நிவேதனம் தீபாராதனை உற்வம் ஆகிய கிரியைகளும் காமியக்கிரியை களிலே அடங்கும்.

இதிலே நிஷ்காமிய கிரியை எனும் பிரிவும் உண்டு .வழிபா டுகள் நிஷ்காமியமாக இடம்பெவதே சிறந்தது என்பதனை அப்பர் பெருமான் தமது தேவாரப்பாடலில் மேல்வருமாறு பாடுகின்றார்

இத்தகைய நிஷ்காமிய கிரியை உயர்நிலை எய்திய ஒருசி லர் மட்டுமே செய்வார்கள்.

### கிரியையின் பொது அம்சங்களும் தத்துவங்களும்

கிரியையின் அம்சங்கள் நித்திய டிமித்திய கிரியைக ளுக்கேற்ப வேறுபடும்.இருப்பினும் பொது அம்சங்களாக பூதசுத்தி,அந் தர்ஜனனம்,ஆவணபூசை, அபிஷேகம், அலங் காரம், நைவேத்யம்,தீபாராதனை,அருச்சனை தோத்திரம் பாடல்,வாழ்த்து என்பன பொதுவானவையாகும்.

**1.பூதசுத்தி**

சுத்தியின்றேல் கிரியையில்லை என பண்டிதர் மு. கந் தையா அவர்கள் தனது சித்தாந்த நோக்கில் சைவக்கிரியை எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.
உடல் என்பது பஞ்ச பூதங்களாகிய நீர், நிலம், நெருப்பு காற்று ஆகாயம் ஆகியவற்றின் பிரதிபலிப்பு.எனவே இந்த பஞ்சபூதங்களான தூலதேகத்தினை மந்திரம்,பாவனை முதலிய சாதனத்தால் தகித்து சூக்கும சரீரத்தை தூய அம்ச ங்களுடன் கூடிய புது உருப்பெற அமைப்பது இக்கிரியை யின் கோக்கமாகும். இது மூன்று பகுதிகளில் நடைபெறுகின் றது.
I. தருப்பை, மான்தோல், வெண்பட்டு முதலியவற் றால் கூர்மாசனத் நிமிர்ந்த உடலினனாக கண்களை மூடிய வாறு ஆன்மாவை இறைவனுடைய திருவருளிற் சேர்த்தல்.
II. தத்துவாக்கள் அனைத்தையும் மகாமாயையில் ஒடுக்கி சூக்குமசரப் பகுதிகளையும் விந்துவையும் சிவத்தில் ஒடுக்குதல்.
III. புற உடலைஉரிய மந்திரத்தினை உச்சரிப்பதன் மூல மாக வலிகெடச் செய்து திருவருளபாகிய அமிர்தத்தினால் சுத்தமாகச் செய்தல்.

**2.ஆவரணபூசை**

மூலமூர்த்தியை சூழ்ந்துள்ள மூர்த்தங்களுக்கு செய்யப் படும் பூசையாகும்.இத்தகைய ஆவரணபூசையானது த்ரி யாவரணம், சதுர்த்தாவாரணம்,பங்சமாவரணம் முதலான மந்திரங்களைக் கூறுவர்.மேலும் ஸ்ரீ சக்கர பூசையின் போது நவாபரண பூசையும் அஷ்ட வைரவருக்கு .அஷ்டாபரண பூசையும் உண்டு.

**3.அந்தர்யஜனனம்**

வெளியிலே இறைவனுக்கு பூசை செய்வது போல் மன திலே இறைவனுக்கு பூசை செய்யும் அகவழிபாடாகும். ஆந் தர்ய யாகாத்தினை நிறைவேற்றிய பின்னரே மற்ற யாகத் தினை தொடங்க வேண்டும் என்று அசீதாகமம் கூறுகின்றது என சைவமும் நாமும் எனும் நூலில் சைவப்புலவர் எஸ். தில் லைநாதன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



# சிவ தீட்சை (தீக்கை)



சித்தாந்த இரத்தினம்
திருமதி. செல்வராஜ் உதய கௌரி

தீட்சை, என்றால் உயிரை பற்றிய ஆணவ மலத்தைக்கெடுத்து சிவஞானத்தைக்கொடுப்பது எனப்பொருள். உடலுக்கு பல சடங்குகள் செய்யப்படுகின்றன அது போல உயிராகிய ஆன்மாவுக்கு செய்யக்கூடிய சடங்கே தீக்கை ஆகும். எப்படி வாகனம் ஓட உரிமம் தேவையோ நிலம் வாங்க நிலப்பதிவு அவசியமோ அது போல சிவ சம்பந்தமெனும் ஆரம்ப படிநிலையை உறுதிபடுத்திக்கொள்ள சிவபெருமானின் திருவருள் பெற உரிமை ( தீட்சை ) தேவை.

தீட்க்ஷா என்ற சொல் ஞானத்தை கொடுத்து மலத்தை கெடுப்பது எனப்பொருள்படுமென ஆகம நூல்கள் கூறுகின்றன. இச்சொல்லில்,

தீ கொடுத்தல் ஷ அழித்தலைக் குறிக்கிறது.

மலங்களை அழித்து ஞானமாகிய நற்பேற்றையளிப்பதனால் இது தீஷா எனப்படுகிறது.

நாம் எப்போதும் நமது உடம்பிற்கு வெளியே உள்ள அழுக்குகள் பற்றியே கவனம் செலுத்துகிறோம். உடம்பை வளர்த்தே உயிர் வளர்த்தேன் என ஆகாரம் ஊட்டி உடம்பை வளர்த்தலும் நீராடி வெளியுடம்பினை சுத்தம் செய்கிறோம். உள்ளிருக்கும் உடம்பு சூக்கும உடம்பு, அதிலுள்ள அழுக்குகளை,ஆசனம், மந்திரம் ,ஜெபம் முதலிய அனுட்டான கிரியைகளினாலேயே போக்க முடியும். இதை உணர்ந்து நம் சமயத்தில் ஏழு வயதில் தீட்சை பெற வேண்டும் என்ற விதி கூறப்படுகிறது.ஏனெனில் கை கால்களை அடக்கி ஆளும் பக்குவம், மனதில் ஆசைகள் தோன்றி வளர்ச்சி அடைந்து வரக்கூடிய காலமும் அவ் வயதிலிருந்துதான் தோன்றும் என்பது கருதியே ஏழு வயதில் தீட்சை பெற்றிருந்தால் தேகத்தையும் மனதையும் அடக்கி தம் வசப்படுத்தவும் தீய செயல்கள் தோன்றாமல் செய்ய முடியும்.



படிப்படியாக சொல்லப்பட்ட தீட்சைகளைப்பெற்று அத்தீட்சைகளுக்குரிய கிரியைகளையும் சாதனங்களையும் பயிற்சிப்படுத்திவர இறைவனின் திருவருளைப் பெறுவது திண்ணம்.

**தீட்சை பெற தகுதியுடையவர்கள்**

சைவ சமயத்தில் பிறந்த அனைவரும். (ஆண் பெண் இருபாலருக்கும்) மற்றும் ஏனைய மதத்தவர்களும் தீட்சை பெற்று சைவ சமயிகளாகலாம். மனிதர்கள் மாத்திரமன்றி புல், பூண்டு, பறவை,மிருகங்களும் தீட்சை செய்யப்படுகிறன. ஆசாரியனுடைய ஞானநிலை எவ்வளவோ அவ்வளவு ஆற்றலால் அவரால் தீட்சிக்கப்படும் ஆன்மாவிற்கு மலமாசு நீங்கி தூய்மை உண்டாகும்.

தீட்சை பெற விரும்புவோர் ஒழுக்க சீலராக இருப்பதோடு பண்பும், ஆசாரமும், குரு பக்தியும் கொண்டவராக இருத்தல் வேண்டும். உலக பற்றுக்களைக்குறைத்து தியானத்தில் ஈடுபடுபவராக இருத்தல் வேண்டும். மனம்,வாக்கு,காயம் மூன்றையும் தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும்.

தீட்சையளிக்கின்ற சிவாச்சாரியார் , சமய தீட்சை, விசேட தீட்சை,நிர்வாண தீட்சை,ஆச்சார்ய அபிஷேகம் என்ற நான்கினையும் பெற்றவராக இருத்தல் வேண்டும் என சிவாகமங்கள் கூறுகிறன.

## சமய தீக்கை

சைவ சமயி ஆகும் உரிமையைத் தருவது சமயத்தீட்சை எனப்படுகிறது. சமய தீட்சை பெற்றவன் சமயி எனப் பெயர் பெறுகிறான். இத்தீட்சை பெறுவதால் சிவனின் சிறப்பு மூலமந்திரமாகிய திருவைந்தெழுத்தை ஸ்தூலமாக உணர்ந்து கணிக்கும் உரிமையும்,சரியா பாதத்தில் நிற்கும் உரிமையும் கிட்டும். இதன் மூலம் சிவனின் முதன்மையை ஒருவாறு உணரும் நிலை உண்டாகும்.

## விசேட தீக்கை

சிவலிங்க பூசை செய்வதற்கு தகுதியளிப்பது விசேட தீக்கை எனப்படும். சமய தீட்சை பெற்று அதன் வழி நிற்கும் போது ஆணவ மலம் வலுவிழக்க சிவனை சிவலிங்க வடிவில் கண்டு வழிபடுதலாகிய கிரியை நெறியில் விருப்பு உண்டாக ,முன்னர் சமய தீட்சை பெற்றுக் கொண்ட ஆசாரியரிடமோ அல்லது வேறு ஒருவரிடமோ விசேட தீட்சை பெறலாம். இதன் மூலம் சிவலிங்க மூர்த்திக்கு அகப்பூசை,புறப்பூசை செய்யும் முறைகளோடு யோக முறைகளையும் சொல்லுவதாகும்.

## நிர்வாண தீக்கை

சமய தீட்சை,விசேட தீட்சை பெற்றவர் இறுதியாக பெறும் தீட்சை இதுவாகும். இதன் மூலம் அத்துவாக்களை அடக்கும் முறைகளையும் முப்பொருள் உணரும் தன்மையையும்,உயிரை ஞான நிலைக்கு உயரச்செய்யும் நிலையையும் ஞானாசிரியரிடமிருந்து கிடைக்கும்.

நிர்வாண தீட்சை இருவகைப்படும்.

**அ. சத்தியோ நிர்வாண தீட்சை**

ஆன்மாக்கள் பிரார்த்த வினைப்பயனை அனுபவித்து முடித்தபின் அவை முக்திப்பேறு அடையும் வகையில் செய்யப்படுவது.

**ஆ. அசத்தியோ நிர்வாண தீட்சை**

முற்றாக பற்றற்ற நிலையில் இருப்பவர்களுக்கு உடனே முக்திப்பேறு கிடைக்கும் வகையில் செய்யப்படுவது.

## ஆச்சார்ய அபிஷேகம்

நிர்வாகண தீட்சை பெற்ற ஒருவர் குரு பட்டம் பெறுவதற்காக செய்யப்படும் கிரியை ஆச்சார்ய அபிஷேகம் ஆகும். குரு பட்டம் பெற்றவர், பிறருக்கு தீட்சை கொடுக்கவும் பரார்த்த பூசை செய்யவும் தகுதியைப் பெறுகின்றனர்.இவர் சிவாச்சாரியார் எனவும் அழைக்கப்படுவார்.

## சிவாச்சாரியாருக்கு இருக்கவேண்டிய தகுதிகள்.

1. திருமணம் செய்து இல்லறம் நடத்துபவராக இருத்தல் வேண்டும்.
2. உடல் அங்கம் குறைவற்றவராக இருத்தல் வேண்டும்.
3.உளம் பாதிப்பற்றவராக இருத்தல் வேண்டும்.
4.கல்வியறிவும் ஒழுக்க மேம்பாடு மிக்கவராக இருத்தல்.
5. சைவநாற்பாதங்களில் பயிற்சியுடையவராக இருத்தல்.
6.சீடர்களுக்கு சிறந்த ஒழுக்கத்தையும் சைவ பாரம்பரியத்தையும் போதிப்பவராய் இருத்தல் வேண்டும்.



7.பதினாறு வயதிற்கு மேற்பட்டவராயும் எழுபது வயதிற்கும் உடபட்டவராயுமிருத்தல் வேண்டும்.

தீட்சையை நாம் இரண்டு வகையாகப்பிரித்து நோக்குவோம்.

**அ. ஆதார தீட்சை**

இறைவன், ஞானாசிரியன் ஒருவர் மூலம் மும்மலங்களை உடைய நம் போன்ற சகலருக்கு அளிக்கும் தீட்சையாகும் . இதனை சபீச தீட்சை எனவும் கூறுவர். இதனை நாம் ஏழு வகையாகப்பிரிக்கலாம் .

1. நயன தீட்சை
2. பரிச தீட்சை
3. வாசக தீட்சை
4. மானச தீட்சை
5. சாத்திர தீட்சை
6. யோக தீட்சை
7. ஔத்திரி தீட்சை

**ஆ. நிராதார தீட்சை(நிர்பீஜ தீட்சை)**

இறைவன் தானே குருவாய் நின்று ஆணவம், கன்மம் ஆகிய இரு மலங்களையும் உடைய பிரளயாகழருக்கு முக்தியளிக்கும் தீட்சை இதுவாகும்.

## 1.நயன தீட்சை

குரு தன்னை சிவமாக பாவித்து அப்பாவனையுடன் மாணாக்கனை கண்ணால் நோக்கி அவன் செய்த கருமங்களை அழித்தொழிப்பது நயன தீட்சையாகும். சிவபெருமானிடம் திருத்தோணிபுரத்தில் திருஞானசம்பந்தர் பெற்றது நயன தீட்சையாகும். உமாபதி சிவாச்சாரியார் முள்ளிச்செடிக்கு கொடுத்தது.நயன தீட்சை.

## 2.பரிச தீட்சை

குரு தன் வலது கையை சிவனுடைய கையாக பாவித்து மாணாக்கனது தலையில் வைத்து அவனை சிவமாகச் செய்தல் பரிச தீட்சையாகும். சுந்தரமூர்த்தி நாயனாருக்கு சிவபெருமான் திருவெண்ணெய் நல்லூரில் வழங்கிய தீட்சையாகும்.

## 3. வாசக தீட்சை

குரு மந்திரங்களை சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு,பொருந்துமாறும் மாணவனுக்கு உபதேசிப்பது.

மாணிக்கவாசகர் பெருமானுக்கு சிவபெருமானால் திருப்பெருந்துறையில் முப்பொருள் விளக்கம் வழங்கியமை.

## யோக தீட்சை

குரு மாணாக்கனை சிவயோகம் பயிலச்செய்தல்.

தட்சணாமூர்த்தியாகிய சிவபெருமான் சனகாதி முனிவர்களுக்கு மெய்மை புரிய வைத்தமை.

## ஔத்திரி தீட்சை

பொதுவாக சைவ சமயிகளுக்கு செய்யப்படுவது ஔத்திரி தீட்சையாகும். ஆன்மாக்களாகிய உயிர்களை வீடுபேற்றை அமையும் பொருட்டு ஆச்சாரியரால் அக்கினி காரியத்துடன் செய்யும் தீட்சை இதுவாகும்.இது ஞானாவதி,கிரியாவதி எனும் இருவகைகளில் ஒரு வகையாற் செய்யப்படல் வேண்டும் என சிவாகமங்கள் கூறுகின்றன.

ஆறுமுக நாவலரும் தீட்சையின் முக்கியத்துவம் பற்றி சைவ.வினாவிடையில் குறிப்பிட்டுள்ளார்.

சிவஞானபோதம் நிர்பீஜ தீக்கை இலக்கணம் பற்றி இவ்வாறு கூறுகிறதது

✱ **பாலர்**

சமயசாரங்கள் அநுட்டிக்கும் சாமத்தியமிலாராயும் ஓதியுணராதவர்களாயும் ஏழு வயதிற்குட்பட்வராயிருத்தல்

✱ **வாலீசர்**

( அறிவீனர் அல்லது ஓதி உணராதவர்களாய் இருப்பவர் )

சத்திநிபாத இலக்கணங்களையுடையவராயும்,ஓதி உணராதவர்களாயும் இருப்பவர்.

✱ **விருத்தர்**

சமயாசாரங்களை அனுட்டிக்கும் வலிமையில்லாதவரும் எழுபது வயதிற்கு மேற்பட்டவராயிருப்பவர

✱ **பனிமொழியார்**

சத்திநிபாத லக்கணங்களையுடையவரேனும் ஓதியுணர்ந்தும் சமயாசாரங்களை அனுட்டிக்கும் சாத்தியமில்லாதவராயிருக்கும் மகளிர்.

✱ **பலபோகத்தவர்**

சாத்திர அறிவும் சத்திநிபாத இலக்கணமுடையவரா



யினும் போக வாஞ்சையைப்போக்கும் ஊக்கமில்லாதவர் மாறிமாறி வருவதும் நிலையாய இன்பத்தைத்தராததுமாகிய விடயப்போக்கில் அழுந்தி அதனின்றும் கரையேர முடியாதவர்.வெகுவிதமாக புசிப்புக்களை இச்சித்தவர்கள்.

மேலே கூறியனவெல்லாம் நிர்பீஜ தீட்சையில் சலுகைகளாக வழங்கப்பட்டுள்ளவை.எனவை ஆகக்குறைந்தது நிர்பீஜ தீட்சை பெற்று சைவ சமயத்தவராய் பெருமைகொள்வோம். ஏனெனில்,

- சமய தீட்சை பெற்றவர்களுக்கே விரத அனுட்டானங்களினால் கிடைக்கும் பலன் சிறப்பாக சித்திக்கும்.
- சமய தீட்சை பெற்றவரே சைவ நாற்பாதங்களினால் பெறும் பலன்களுக்கு ஆட்படுவர்
- தீட்சை பெற்றவருக்கும் இறைவனுக்கும் இடையிலான தொடர்பு மிகவும் நெருக்கமானதெனவும் உணரலாம் கிருஸ்தவர்கள் ஞானஸ்நானம் பெற்று கிருஸ்தவராய் வாழ்கின்றனர்..இஸ்ஸாமியர் சுண்ணத்துச்சடங்குமூலம் , பௌத்தர்கள் பஞ்ச சீலம்,அட்ட சீலம் காத்து சில்லெடுப்பதன் மூலம் பௌத்தர்கள் என்பதையும் நிருபிக்கின்றனர். நாம் ஏன் தீட்சை பெற்று சைவர்களாக வாழக்கூடாது. நாம் இறந்தபின்னர் எமது பூதவூடல்கள் தீட்சை வைக்கப்பட்டு பின் அகற்றப்பட்டே தகனம் செய்யப்படுகின்றது.இதை நாம் வாழும் நாட்களிலே பெற்றக்கொண்டால் என்ன. சிந்திப்போம்.செலற்படுத்துவோம். சிவ சின்னங்கள் அணிந்து சைவனாய் வாழுவோம்.

# சக்தி தத்துவம்

சைவசித்தாந்தம் நிலைநிறுத்திக் கூறும் பதி,பசு, பாசம் ஆகிய முப்பொருள்களில் உண்மையில் முதன்மை பெற்றதாகவும் அனைத்திலும் மேன்மையானதாகவும் விளங்குவது பதிக் கொள்கையாகும். இவ்வாறு விளங்கும் பதிக் கொள்கையில் சக்திக்குத் தனிச்சிறப்பு உண்டு. சைவசித்தாந்தத்தில் இறையருள் எனப்படும் திருவருளே சக்தி எனப்படுகின்றது. அந்த வகையில் இச் சக்தியைப் பெண்ணாகக் கொள்வது சித்தாந்தத்தின் மரபாகும். அதனாலேயே சித்தாந்த மரபில் இறைவனின் திருவருட் சக்திகளாக உமை, கௌரி, காளி, பிராஹ்மி, மஹேஷ்வரி... முதலான பல பெண் சக்திகள் பற்றிக் குறிப்பிடப்படுகின்றன. தத்துவம் என்ற சொல்லுக்கு உண்மை என்பது பொருளாகும். இதனால் சக்தியின் உண்மைத் தன்மை பற்றிய சிந்தனையாக சக்தி தத்துவம் என்பதைக் கொள்ளலாம். 'சுத்த தத்துவங்களுள் ஒன்றாய்ச் சிவனது கிரியாசக்திக்கு இடமாக சுத்தமாயை காரியப்படுவதாயுள்ள விருத்தியே சக்தி தத்துவம்' என்றும் கூறுவர் அறிஞர்.

சிவம் , சக்தி என்பன இரண்டு சொற்களாக இருந்தாலும், சித்தாந்த நோக்கில் இவை இரண்டும் சிவ பரம்பொருளை இரு நிலைகளில் குறிப்பதாக அமைகின்றது. ஒன்றிலும் தோய்வின்றிச் சுயம்பிரகாசமாய் நிற்கும் நிலையில் பரம்பொருளை 'சிவம்' என்றும்இ அதே சிவம் உயிர்களுக்குப் பொது வகையில் உதவி செய்ய முற்படுகையில் 'சக்தி' எனப் பெயர் பெறுகின்றது. எனவே, உயிர்களுக்கு உதவும் முதல்வனது உருவத்திருமேனி அருள்வடிவம் என்பது சித்தாந்திகளின் கருத்தாகும்.

திருவருள் எனப்படும் சக்தியும் அதன் கூறுகளுமே இறைவனுக்குக் குணமும், சொரூபமும் மற்றும் உடம்பு, இடம், ஆடை, அணி முதலியனவும் ஆகும்.



சைவசித்தாந்தம் இறைவனின் சக்தியை அருள் என்று குறிப்பிடுகின்றது. அருள் என்ற சொல் மிகவும் ஆழமான பொருளைக் கொண்டது. ஆன்மாக்களின் பக்குவ நிலைக்கேற்றவாறும், பயன்படு தன்மைக்கேற்பவும் கொண்டு இறைவனிடத்திலுள்ள பிரிவற்ற இயல்பாகிய கருணையாக விளக்கி அதனை



**சிவத்திரு. சற்குணலிங்கம் ஹோபிநாத்**
**BA Hons (Hindu Civilization), PGDE, MPhil(r)**
ஆசிரியர்,
தி/கந்/பேராறு பரமேஸ்வரா மகா வித்தியாலயம்,
கந்தளாய், திருக்கோணமலை.
ஆன்மீக சொற்பொழிவாளர்,
வரலாற்று ஆய்வாளர், எழுத்தாளர், கவிஞர்
ஸ்தாபகர், "சிவபுத்திரர்கள்"
சைவசமய சமூக அபிவிருத்தி அமையம்.

அருட்சக்தி என்கின்றனர். இச் சக்தி சிவனுக்கு அபின்னமாய் இருப்பது. சித் சக்தி என்றும் இத னை அழைப்பர். சித் என்பது ஞானம். எனவே, சித்சக்தி என்பது ஞானசக்தி எனப்பொருள் கொள்ளப்படும்.

இறைவன் தானே நேரில் நின்று ஐந்தொழில்களை இயற்றாமல், தன் ஆற்றலாகிய சக்தியின் துணைக் கொண்டே இவற்றை இயற்றுகின்றான். தன் நிலையில் எவ்வித விருப்பும் வெறுப்பும் இல்லாதவனாகிய இறைவன் , ஞானமே வடிவாகியவன். இவன், உயிர்கள் ஆணவ மறைப்பிற்கு உள்ளாகி இருப்பதால், அவற்றிற்கு அறிவு விளக்கம் செய்யும் பொருட்டு தன் நிலையிலிருந்தும் கீழிறங்கி வரவேண்டியுள்ளது. எனவே , தன் நிலையில் எவ்விதக் குறையும் ஏற்படாமல் ஐந்தொழிலைச் செய்தற்காய் தான் நேரடியாக நின்று இவற்றைச் செய்யாமல், தன் குணமாகிய அருளைக் கொண்டு செய்கின்றான். இதனை அப்பர் சுவாமிகள்,

'மன்னும் மலைமகள் கையால் வருடின மாமறைகள்'என்கின்றார். இதனையே சித்தாந்திகளின்பால், திருக்களிற்றுப் படியார்,

**'தாரத்தோடு ஒன்றாவர் தாரத்துஓர் கூறாவர்**
**தாரத்தோடு எங்கும் தலைநிற்பர் – தாரத்தின்**
**நாதாந்தத் தேஇருப்பர் நல்தானத் தேஇருப்பர்**
**வேதாந்தத் தே இருப்பர் வேறு'**

சிவனும் சக்தியும் உயிர்கள் உய்வதற்காகப் படைத்தலின்போது நாயகன் நாயகியாக ஒன்றுபட்டிருப்பர். உயிர்கள் ஆண், பெண்ணாகி வாழ்வதற்கு முன் தாமே மங்கைமங்கனாக (அர்த்தநாரீஸ்வரக் கோலத்தில்) இருப்பர். உயிர்களுக்கு மலசம்பந்தம் நீக்குவதற்காக தத்து வங்களைத் தன் சக்தியினால் உருவாக்கி அவற்றைத் தொழிற்படுத்த அவற்றுக்கு மேம்பட்டு நிற்பர். இந் நிலையில் சக்தியானவள் தத்துவங்களிற்குச் சார்பாக



நிற்பாள். வினைகளால் களைத்த உயிர்களுக்கு இளைப்பாற்றல் செய்வதற்காக விந்து என்ற சக்தியாகவும், நாதம் என்ற சிவமாகவும் நிற்பர். அவ்வாறே வேள்வி பூஜைகளிலும், தியானம் செய்யும் இடங்கள் ஆகியவற்றிலும் ஆறாதாரங்களிலும் என எங்கிலுமே சக்தியோடே சிவன் இருப்பார். ஈற்றில் வீடுபேறு அருளுவதற்காக வேதத்தைப் பற்றி அதன் நாத முடிவிலே இருப்பார்; என்கின்றது.

இதனைச் சித்தாந்திகள் விளக்குமிடத்து, சிவ பராக்கிரம் எனும் பஞ்ச கிருத்தியத் தொழிலை இறைவன் ஆன்மாக்களின் பொருட்டு நிகழ்த்துதற்கு உமையே காரணமாக அமைகின்றாள். அதாவது, ஆன்மாக்களை அநாதியாகத் தொடர்ந்துள்ள பாச த்தைப் போக்கி, அவை முக்தியடைதற் பொருட்டு அருள்வடிவமாகிய அம்மையார்,அடியார்களுக்குப் பஞ்சாக்கர வடிவமாகிய ஆனந்தத் திருநடனத்தை இறைவனின் இடப்பாகத்திலிருந்து தரிசிப்பார் என்பர்.



# வேருகல் முகத்துவாரம் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம் மடைப்பள்ளிக்கான அடிக்கல் நாட்டு நிகழ்வு

**வெ**ருகல் முகத்துவாரம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் மடைப்பள்ளிக் கான அடிக்கல் நாட்டு நிகழ்வு 08 12 2020 செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது. மேற்படி நிகழ்வில் தென் கியிலை ஆதீனம் முதற் குருமகாசந் நிதானம் தவத்திருரு.அகத்தியர் அடி களார் தலைமையில் இடம் பெற்றது.

இளையபட்டம் தவத்திரு திருமூலர் தம்பிரான் மற்றும் மனோஜ் ஐயா ஆகியோர் மடப்பள்ளிக்கான அடிக் கல் நாட்டும் பூசைகளை நடாத்தினர்.

இவ் வைபவத்தில் ஆலய நிர்வா கத்தினர் உட்பட பல அடியார்கள் கலந்து கொண்டனர்.









# அருளாளர்கள் அறுபத்தி மூவர்

## சிவனடியார் அருள் வரலாறு 02



**மணிவாசகப் பெருமான்**

மணிவாக்குத் தந்த மணிவாசகர் பக்திநெறி அறிவித்து, பலவினைகள் பாறும் வண்ணம் சித்தமலம் அறிவித்துச் சிவமாக்கியெனை ஆண்ட அத்தனாம் இறைவன் தான் பெற்றபெரும் பேறாகிய சாயுச்சிய முத்திப் பேறை அழகாகப் பாடியருளியவர் மணிவாசகர்.

அவரது நாமத்திலும் மணி, வாசகத்திலும் மணி,அவரது திருவாசகப் பாடல்களை தனது திருக்கரங்களால் எழுதியருள ஏடும் கையுமாக மணிவாசகரிடம் தில்லைக்கு எழுந்தருளியவர் எம்பெருமான்.

சென்ற இதழ் தொடர்....

### செம்மனச் செல்வி

இவள் மதுரையில் தனித்து வாழ்ந்த ஒரு முதியவள். பிட்டு விற்று சீவனம் செய்பவள் யாருமற்றவள். ஆனால் சிவன் மேல் பக்தி பூண்ட ஒரு சிவபக்தையாவாள். அவளுக்கும் அணை கட்டுவதற்காக ஆற்றங்கரையில் பங்கு அளந்து விடப்பட்டது. அவளுக்கு உதவ கூலியாட்கள் ஒருவருமில்லை யாது செய்வேன் எவ்வண்ணம் பணி முடிப்பேன!; என ஆலவாய்ப் பெருமானிடம் சென்று தன் குறை கூறி இரந்து வேண்டினாள், இந்த



கலாபூஷணம் சாஹித்தியமணி
திருமதி. இராஜேஸ்வரி ஜெகானந்த குரு M.A,
கொழும்பு



முதியவள். கருணைக்கடலான எம்பெருமான் அருள்புரிய விழைந்தார்.

## ஈசன் பிட்டுக்கு மண் சுமந்தமை

எம்பெருமான் ஒரு அழகிய இளைஞனாக வடிவெடுத்து கூடையுடனும்,மண்வெட்டியுடனும் ஒரு கூலியாளாக, வந்தி என அழைக்கப்பெறும் செம்மனச்செல்வி அம்மையார் இருந்த குடிசை பக்கம் செல்வாராயினார். கூலி வேணுமா கூலி!எனக் கூவினார், கூலியாளாக வந்த ஈசன். இவ்வொலி வந்தியம்மையின் செவிகளில் தேனாக ஒலித்தது. வெளியே ஓடிவந்தாள். சாட்சாத் சிவபெருமானே கண்டதுபோல் இருந்தது. அவளுக்கு அகோரிகளின் வடிவம். தம்பி எனது பணியை நீ செய்து விடு!நான் கூலி தருவேன் என்றாள் பாட்டி' கூலியை முதலில் தா, உன் பணியைச் செய்து தருகிறேன். இது கூலியாளாக வந்த ஆலவாயான் சொன்னது. தம்பி கண்ணா! நான் பிட்டு விற்று சீவனம் நடத்துபவள் பிட்டு விற்ற பணம் மாலையில் தானே எனக்குச் சேரும். அப்போது தருகிறேன். நீ முதலில் வேலையை ஆரம்பி இது பாட்டி சொன்னது.பாட்டி! பணம் இல்லாவிட்டால் பரவாயில்லை நீ உனது சுவையான பிட்டையே தா நான் உண்ட பின் வேலையை ஆரம்பிக்கிறேன். இது ஆலவாயானது அருள்வாக்கு.நல்லது! இதோ நான் பிட்டை அவித்து தருகின்றேன்!சற்றுப் பொறு! பாட்டீ எனக்கு உதிர்ந்த பிட்டு தந்தால் போதுமானது. சரி, பாட்டி பிட்டு அவித்து குழலால் தள்ளினாள். என்ன ஆச்சரியம் அத்தனையும் உதிர்ந்த பிட்டு தான். பாட்டி வியந்தாள் ஐயன் புன்முறுவல் பூத்தான். பிட்டு முழுவதும் அவனுக்கே வழங்கப்பட்டது. பிட்டைத் திருவமுதாக உண்ட எம்பெருமான் எஞ்சியவற்றை தன் தோள் துண்டிலே முடிந்து கொண்டு அணை கட்ட ஆற்றங் கரை நோக்கி விரைந்தார். எம்பெருமான் கூலியாளராக ஓடி ஓடி பாடிப்பாடி ஒரு குட்டி அணை கட்டி எழுப்பினார் அவருக்கு களைப்பு வந்துவிட்டது.

உண்ட களைப்பு தொண்டருக்கும் உண்டல்லவா?' ஐயனுக்கும் வந்தது அலுப்பு. சற்று கண்ணயர்வோம் என்று மரத்தின் கீழே ஒரு குட்டித் தூக்கம் போட்டார்ஈசன். என்ன சுகம்! ஆற்றுமணலிலே குளிர்ந்த மரநிழலிலே, பிட்டுண்டு, பசியாறி, தூங்கலானார்.

## இறைவன் பிரம்படி பெற்றமை

மக்கள் எல்லோருமாக அணை கட்டி முடித்துவிட்டார்கள். ஆற்று வெள்ளத்தின் வேகம் தணிந்தது. ஆற்றங்கரை அணைகளை மேற்பார்வை செய்து வருமாறு பாண்டிய மன்னன் சேவகர்களை அனுப்பி வைத்தான். சேவகர்கள் வந்தனர் அணைகள் எல்லாம் செவ்வனே கட்டப்பட்டிருந்தது அவதானித்தனர். திருப்தி அடைந்தனர். ஆனால் அது என்ன அங்கே மாத்திரம் ஒரு குட்டி சுவர் அணையாக எழுப்பப்பட்டிருக்கிறதே! இது யாருடைய பங்கு? இதன் கூலியாள் யார்? சேவகர்கள் விசாரித்தனர். வந்தியம்மையின் பங்குதான் அந்த குட்டி அணை விழுந்த பகுதி. வந்தியம்மையை விசாரித்தனர். பாட்டி சொன்னாள் என்னுடைய கூலிப்பையன் தான் அதிகாலையிலேயே தன் பணியை ஆரம்பித்து விட்டானே! இது பாட்டி சொன்னது.

மீண்டும் அரச சேவகர்கள் ஆற்றங்கரையை நோக்கி விரைந்தனர். வந்தியின் பங்கினை அடைந்தனர் அதோ! மரநிழலில் கூலியாள் சுகமாக துயில் கொள்கிறார். என்ன சுகம்! என்ன சுகம்! செய்தி மன்னன் செவிகளுக்கு எட்டியது. அவனுக்குத் தண்டனை வழங்கப்பட்டது. முதுகிலே ஊண்டி உறைக்க வழங்கப்பட வேண்டும்' யாருக்கு? கூலியாளாக வந்த மதுரை சோமசுந்தரப் பெருமானுக்கு! இதுவும் ஆலவாயனின் திருவிளையாடல் அன்றோ! தண்டலாளன் பிரம்பை ஓங்கி கூலியாளின் முதுகில் பிரம்படி வழங்க, அந்த அடி முதலில் தண்டலாளன் மேல்பட்டது. பாண்டிய மன்னன் மேல்பட்டது. மணிவாசகர் மேல்பட்டது. சகல ஜீவராசிகள் மேலும் பட்டு உறைத்தது. கூலியாளை அங்கு காணவில்லை. கூலியாளாக

வந்த சோமசுந்தரப் பெருமான் மாயமாய் அங்கிருந்து மறைந்து விட்டார். இந்த அதிசய அருள் நிகழ்வை,ஈச னின் கருணையை திருவிளையாடலை வாதவூரர் மணிவாசகர் தனது அருள் வாசகர் திருவாசகத்தில் போற்றி பாடியுள்ளார் பாருங்கள்.

''பொன் சுமந்து கூலிகொண்டு அக்கோலால்
மொத்துண்டு
புண் சுமந்த பொன் மேனி அம்மானாய்''
''மண் பால் மதுரையிற் பிட்டமுது செய்தருளித்
தண்டாலே பாண்டியன் தன்னைப்
பணிகொண்ட''
''ஆங்கது பன்னில் அடியவர்க்காக
பாங்காய் மண்சுமந்தருளிய பரிவும்''
பண்சுமந்த பாடல் பரிசு படைத்தருளும்
பெண் சுமந்த பாகத்தன் பெம்மான்
பெருந்துறையான்
விண் சுமந்த கீர்த்தி வியன்மண்டலத்து ஈசன்
கண் சுமந்த நெற்றிக் கடவுள் கலி மதுரை
மண்சுமந்து கூலிக்கொண்டு அக்
கோலால் மொத்துண்டு
புண் சுமந்த பொன் மேனி பாடுதும்
காண் அம்மானாய்.

மன்னன் பாண்டியன் அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி அடைந்தான். இப்போது தான் அவனுக்கு சகலதும் புரிந்தது. தனது முதல் அமைச்சர் உடைய பெருமையும் மேன்மையும் வெகுவாக புரிந்தது. அரி மர்த்தன பாண்டியனுக்கு. பாண்டியன், தான் மணிவா சகர் பெருமானுக்கு இழைத்த பல தவறுகளுக்கு மன் னிப்பு கேட்டான். மனம் மிக நொந்தான். அவரது பாதக்கமலங்களில் விழுந்து வணங்கி நாட்டின் அரச பதவியை ஏற்று நடத்தும்படி வாதவூரரை வேண்டி னான். ஆனால் அவர் அதற்கு இசையவில்லை. சி வபோக இன்பத்தில் திளைத்த மணிவாசகர் சாதாரண மண்ணுலக அரச போகத்துக்கு இசைவாரா? பிறவிப் பிணி அறுத்து பெருமானே அடையவே, விழைந்தார் மணிவாசகர்.

பின்னர் மணிவாசகர் தனது அமைச்சர் பதவியை முற்றும் துறந்தார். சுதந்திரப் பறவையாக திருப்பெ ருந்துறையை நோக்கி விரைந்தார். அருட்குரவரை அன்று கண்டதுபோல் அடியார் கூட்டத்தோடு குருந்த மரநிழலில் தன் குருவானவரை கண்டார். ஐயனே! சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை யாண்டு கொண்ட அத்தனோடு எனை, சேர்த்தருள் வாய் எனப் பணிந்து இறைஞ்சினார், வேண்டி னார்.நீ இன்னமும் சிறிது காலம் பூமியில் வாழ்ந்து



அன்பாகிய சிவநெறியை, உலகிற்கு அறிவுறுத்தி பின் னர் தில்லைக்கு வா! அங்கு நாம் உனக்கு முத்தி அளிப் போம் என அவர் பணிந்தார். சிறிது நேரத்தில் அவர் மறைந்தருளினார். சிறிது நேரத்தில் அருட்குரவர் ஒரு பொய்கையிலே தீப்பிழம்பு தோன்ற, அவருடன் இருந்த அடியார்களும் அதனுள் இறங்கி சோதியுட் கலந்து மறைந்தனர்.

தனிமரமாய் நிற்பது போன்ற ஒரு உணர்வு. அடி களாருக்கு. தன்னை விட்டு சென்ற எம்பிரானை நினைத்து நினைத்து புலம்பினார்.மனம் உருகி உருகி தீஞ்சுவைப் பாடல்களை ஐயன் மேற்பாடினார். சிவா னுபோக முதிர்ச்சியையும் பெற்றார். முத்தி நெறியை தன்னைச் சூழ்ந்து வாழ்ந்தவருக்கு விளக்கினார். சிவபுராணம் மக்கள் மனதில் இடம் பெறலாயிற்று.

**முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனை**
**பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்**
**சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட**
**அத்தன் எனக்கு அருளியவாறு யார் பெறுவார் அச்சோவே.**

தன்பால் இறைவன் தொடர்ந்து காட்டி வரும் கரு ணையை நினைத்து நினைத்து நெஞ்சம் நெகிழ்ந்தார் அடிகளார் இறைவன். சிந்தனையே அவர் உள்ள மெல்லாம் நிறைப் பெற்று எப்படியாவது ஐயனை

தான் பிரியாது.அவனுடன் இரண்டறக் கலந்து விட வேண்டும் என, பல பாடல்களை ஈசன் மேல் பாடினார். திருப்பெருந்துறையில் இருந்து தில்லையை நோக்கி பயணித்தார் வழியில் திருவாரூரில் தங்கி திருப்புலம்பல்'' எனும் பதிகத்தைப் பாடியருளினார்.

**சடையானே தழல் ஆடீ**
**தயங்கு மூவிலைச் சூலப்**
**படையானே!பரஞ்சோதி!**
**பசுபதீ! மழ வெள்ளை**
**விடையானே! விரி பொழில் சூழ்**
**பெருந்துறை யாய்! அடியேன்**
**நான் உடையானே உன்னையல்லாமல்**
**உறுதுணை மற்று அறியேனே!**

**உற்றாரை யான் வேண்டேன்**
**ஊர் வேண்டேன் பேர் வேண்டேன்**
**கற்றாரை யான் வேண்டேன்**
**கற்பனையும் இனி அமையும்**
**குற்றாலத்து அமர்ந்து உறையும் கூத்தா**
**உன் குரலை கழற்கே**
**கற்றாவின் மனம் போல**
**கசிந்துருக வேண்டுவனே!**

**திருப்புலம்பல்- திருவாசகம்**

தேனுறும் அவரது கன்னற்றமிழ்ப் பாடல்கள் பல சித்தாந்தக் கருத்துக்களை கொண்டிருந்தன. முதன் முதலில் தான் திருப்பெருந்துறையில் சந்தித்த அந்த அருட்குருவின் அருட்தோற்றத்தை அவரால் மறக்க முடியவில்லை. கண்ணை மூடினால் அவரது தோற்றம் தியானத்தின் போது அவரது தோற்றம் இதன் காரணமாக வழி நெடுவே பயணிக்கையில், திருஉத்திரகோசமங்கையிலும், திருக்கழுக்குன்றத்திலும் தன் விருப்பப்படி அருட்குரு வடிவத்திலேயே ஈசனை அடிகளார் கண்டு களித்தார்.

சில சமயங்களில் தன்னை பெண்ணாக பாவனை செய்து இறைவனை தலைவனாக பாவனை செய்து பணிந்து பாடி பரவசம் எய்தினார். பெண்கள் கூட்டத்தில் தன்னையும் ஒருத்தியாக பாவனை செய்து இறைவன் புகழ் பாடுவதாக திரு அம்மானை, திருவுந்தியார், திருப்பாவை, திருச்சாழல், திருத்தௌ;ளேணம், திருப்பூவல்லி, திருப்பொன்னூரஞ்சல், திருப்பொற்சுண்ணம், அன்னைப்பத்து ஆகிய அருமருந்தன்ன திருவாசகப் பாடல்களைப் பாடிப்பரவினார். இதனால் சிவ நெறியை மக்களிடையே பரப்பும் சீரிய தொண்டினை அடிகளார் செய்யலானார்.

## தில்லைச் சிதம்பரத்தில் அடிகளார்

இவ்வண்ணம் பல தலங்களையும் தரிசித்து வந்த அடிகளார் ஈற்றில் தில்லை சிதம்பரத்தையடைந்தார். அங்கு கூத்தர் பெருமானது திருநடனக்காட்சி கண்டு, பரவசம் அடைந்தார். ஞாக நிட்டை கூடிய பரவச நிலையில் தன் பாமாலைகளினை தில்லைக்கூத்தன் மேல் சூடித் தன் காலத்தைச் சிவ சூழலில் கழிப்பாராயினர்.




## பௌத்தரை வாதில் வென்றமை

இக்காலத்தில் பௌத்தர்கள் சைவத்தின் வளர்ச்சிக்கு தடையாய் இருந்தார்கள். பொது இடங்களில் வாதம் செய்து சைவத்தை இழிவு படுத்தினார்கள். சீலத்தை முக்கிய பொருளாகக் கொண்ட புத்த மத வாதிகள், கண்ணுக்கு எட்டாத ஒரு பொருளை நம்பி வீண் பொழுது போக்காதே. என்று சைவர்களோடு வாதாடினார்கள். இச்சந்தர்ப்பத்திலே இப்படி ஒரு நிகழ்வு புலியூரில் இடம்பெற்றது. புலியூரில் ஈழதேசத்து அரசனுடன் சோழ மன்னரும் கூடியிருந்த சமயத்தில் தன்னுடன் சைவத்தை இழிவுபடுத்தி வாதிட வந்த பௌத்த வாதிகளுடன் வாதிட்டு,உண்மைச் சமயமே சைவம் என நிரூபித்தார் மணிவாசகர் அடிகள். வாதிட்டோரும் செருக்கடங்கினர். அதோடு நில்லாமல் அவர்கள் விடுத்த குதர்க்கமான வினாக்களுக்கு, இதுவரை பேசாமல் இருந்த ஊமைப் பெண்ணை பேச வைத்து,அவளைக் கொண்ட அவர்களது வினாக்களுக்கு தக்க பதிலளித்து, தனது பெருமையையும், சைவத்தின் பெருமையையும், உண்மையையும் நிலைநாட்டினார் அடிகளார். இதனால் சைவம் மேலோங்கியது.

யாத்திரைப்பத்து என்னும் தனது திருவாசகப் பகுதியில் அடிகளார்,அடியார்கள் எல்லோரையும் பேரின்பயாத்திரைக்கு ஆயத்தமாகுமாறு அறிவுரை



கூறியுள்ளவற்றை பாருங்கள்.

**''போவோம் காலம் வந்தது காண் பொய்விட்டு**
**உடையான் கழல் புகவே''**

பிறப்பு, இறப்பு எனும் பெருங்கடலில் மூழ்கிவி டாது,மேலே மேலே எழுந்து சிவத்துடன் கலக்க முயற்சி செய்யுங்கள், சிவத்தை நோக்கி பயணிப்பதே இனி உங்கள் யாத்திரையாக அமைய வேண்டும்.

**புகழ்மின் தொழுமின் பூப் புனைமின்**
**புயங்கள் தாளே புந்தி வைத்திட்டு**
**இகழ்மின் எல்லா அல்லலையும்**
**இனி ஓர் இடையூறு அடையாமே**
**நிகழும் சீர் ஆர் சிவபுரத்து**
**சென்று சிவன் தாள் வணங்கி நாம்**
**திகழும் அடியார் முன் சென்று**
**நெஞ்சம் உருகி நிற்போமே.**
**-திருவாசகம்-யாத்திரைப்பத்து-**

இறைவன் அடியை அடைதலேயே சிந்தனையா கக் கொண்டு, தில்லையிலே, சிதம்பரத்திலே ஓர் ஆசி ரமத்தில் வாழ்ந்திருந்த மணிவாசகப் பெருமானிடம் ஒரு அந்தணர் வந்தார். அவரது புனித தோற்றத்தைக் கண்டு மனமகிழ்ந்து அவரை வரவேற்று வணங்கிய அடிகளாரிடம,; அப்புனிதமானவர் நீர் அருளிச் செய்த அருள் நிறைந்த, பயன் நிறைந்த திருப்பாசுரங்களை ஓத விரும்பினேன். எனவே அவற்றை உம்மிடம் கேட்டு ஏட்டில் எழுதி பத்திரப்படுத்தவே வந்தேன்'' என வினயமாக கேட்டுக்கொண்டார். அடிகளாரும் சம்மதித்தார். அத்தோடு பாவை பாடிய வாயால் கோவையும் பாடித் தர வேண்டுமென வேண்டி, திருக் கோவையாரையும் மாணிவாசகரை பாடவைத்தார் ஈசன். இவ்வண்ணம் திருச்சிற்றம்பலத் திருக்கோவை யாரும் தோன்றியது. அத்தனையும் அடிகளார் கேட்டு இன்புற்று அவற்றை ஏட்டில் எழுதி முடிக்க வந்த அந் தணப் பெரியவர் யாவும் எழுதி முடிந்ததும் மாயமாய் மறைந்துவிட்டார். அடிகளார் அதிர்ச்சியுற்றார்.

அந்தணராக வந்தவர் சாட்சாத் தில்லையம்பலத்தா னேதான். மாணிவாசகரின் அரிய படைப்புகளான திருவாசகம், திருக்கோவையார் யாவும் உலக மக்க ளுக்கும் கிடைத்தாக வேண்டும் என்பதே ஐயனது பெரும் நோக்கமாகும்.

மறுநாட் காலை அந்த வீடுகள் சிதம்பரத்திலே, பொன்னம்பலத்திலே,ஆலய பீடத்திலேஈசனால் வைக்கப்பட்டிருந்தது. பூசை செய்ய அங்கு சென்ற அந்தணர்கள் அவற்றை கண்டெடுத்தனர். வாதவூரன் சொல்ல பொன்னம்பலவன் எழுதியது'' என்று அந்த ஏட்டில் ஒப்பமும் இடப்பட்டிருந்தது. அழகிய சிற்றம் பலமுடையான்'' என ஒப்பம் காணப்பட்டது. இந்தச் செய்தி அறிந்த மணிவாசகர் மனம் நெகிழ்ந்து கண் ணீர் வடித்தார்.

## அடிகளார் இறையுடன் இரண்டறக் கலத்தல்

அந்தணப் பெருமக்கள் அடிகளாரிடம் சென்று அவர் பாடிய பாடல்களுக்கு பொருள் கூறுமாறு வேண்டி னார். அடிகளாரும் அதற்கும் சம்மதித்து, வாருங்கள்! சொல்கிறேன,; காட்டுகிறேன் என்று கூறி அவர் களை அழைத்துக்கொண்டு, ஆலயம் சென்று தில் லைக்கூத்தனின் திருவுருவை சுட்டிக்காட்டி,இவரே அவற்றின் பொருள் என கூறியவாரே ஆலயக் கருவ றையில் புகுந்து எம்பெருமானுடன் இரண்டறக் கலந் துவிட்டார். அப்போது வயது அவருக்கு 32 அவரது குருபூசை தினம் ஆனி மாதம் மகம் நட்சத்திரம் ஆகும்.

அடிகளாரின் திருப்பாடல்கள் இனிமையும, பக்தியு ம, அருளும், சுவையும் கலந்துள்ளமை, யாம் அறிந்த தே! இதன் காரணமாகவே,

**''திருவாசகத்திற்கு உருகாதார்**
**ஒரு வாசகத்திற்கும் உருகார்'**

என்று கூறப்பட்டது.

**முத்தன்ன வெண்ணகையாய் முன்வந்து எதிர் எழுந்து என்**
**அத்தன் ஆனந்தன் அமுதன் என்றள்ளூறித்**
**தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்**
**பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்**
**புத்தடியோம் புன்மை தீர்த்து ஆட்கொண்டாற் போதாதோ**
**எத்தோ நின் அன்புடைமை எல்லோம் அறியோமோ**
**சித்தம் அழகியார் பாடாரோநம் சிவனை**
**இத்தனையும் வேண்டும் எமக்கு ஏல்ஓர் எம்பாவாய்.**
**-திருவாசகம் - திருவெம்பாவை-**



# மதுரை எரிகிறது

மலை, காடு, களனி, ஆறுகளாலும் கிடைக்கும் வளத்தை விடவும், பெரும் கோயில்களால் தோன்றும் மாண்பை விடவும், புலவர் பெருமக்களால் யாக்கப் பெற்ற காப்பியங்களால் ஏற்படுகின்ற புகழ் பீடும், பெருமையும் தருபவையாகும். அனைத்துலகும் இன்பமுற எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெரும் தமிழ் அணங்கு என்றார் மனோன்மணீயம் பேரா.சுந்தரம்பிள்ளை. அதாவது உலகெல்லாம் இன்பமுறவும், திசையெல்லாம் புகழ் பரவவும் திகழும் தமிழன்னையை நல்லபல அணிகலங்களால் அழகு செய்து,தமிழருக்குக் கிடைத்த அரும்பெரும் கருவூலங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி போன்ற ஐம்பெரும் காப்பியங்கள் போற்றிப் பாதுகாக்கப் படவேண்டியவை. இவைதான் ஒருபெண்ணிற்கு உரிய அணிகலங்கள் என அவற்றின் பெயர்கள் உறுதிசெய்யும். தமிழ்க் குமுகம் வேற்றினத்தார் நுழைவால் தாக்குண்டு, அதிர்வுண்டு, நிலை குலைந்து, தடம் மாறித் தடுமாறி நிற்கிறது. தமிழர் தம் பண்பாட்டுச் செழுமையை, நாகரிக மேன்மையை, கலையின் பெருமையை, இசையின் தொன்மையை வாழும் தலைமுறையும், வருங்காலத் தலைமுறையும் கற்றுணர்ந்து அவற்றைத் தக்க வைத்துக் கொள்வதற்கு தொடர்ந்த பரப்புரையும் தேவைப் படுகிறது.



கலைவல்லார் (கலாபூசணம்)
**நா. வை. குமரிவேந்தன் (மகேந்திரராசா)**
நிறுவநர் இலங்கைக் குமரித் தமிழ்ப் பணிமன்றம்
மின்பொறியியல் கண்காணிப்பாளர் (ஓய்வு)
கிளிநொச்சி.

உலகத் தமிழாராச்சிக்கு வித்திட்டு, நீரூற்றி, வளர்த்து பல நாடுகளில் தமிழாராச்சி மாநாடுகள் நடைபெற செயல்வடிவம் கொடுத்து, முன்னின்று உழைத்தவரும், உலகத் தமிழாராச்சி நிறுவனம் ஒன்று உருவாக அடித்தளம் அமைத்து வினைத் திட்பத்துடன் செயற்பட்டவருமான உலகத்தமிழன், நண்பகல் ஞாயிறு தனிநாயகம் அடிகளார் குறிப்பிடும் போது ஓமரின் ஒடிசியையும், வெர்சிலின் இலியத்தையும் மக்கள் போற்றுவது போல் இளங்கோ அடிகளின் சிலப்பதிகாரத்தை, அதன் ஒப்புயர்வற்ற முத்தமிழ்த் தொடர்நிலை செய்யுளை உலகம் போற்றுமாறு செய்தல் வேண்டும். கொன்பிசியசு, செனக்கா முதலாய நீதிநூல் ஆசிரியர்களை உலக மாந்தர் எங்ஙனம் அறிந்து படிக்கின்றனரோ, அங்ஙனமே திருவள்ளுவரையும் அவர்கள் அறிந்து படிக்குமாறு செய்வித்தல் வேண்டும். சாபோ, எலிசபெத்து, பிரௌனிங், சேக்சுபியர் முதலானோரின் காதற்பாக்களை மக்கள் காதலித்துப் படித்து இன்புறுவது போல்,தமிழஅகத்துறை இலக்கிய நூல்களையும் அன்னார் படித்து



இன்புறும் நாள் தோன்றவேண்டும்என்றும் ஆதங்கம் கொள்கின்றார்.

பேரா.இரா.இளவரசு (தமிழ்நாடு)அவர்கள் குறிப் பிடும் போது உலகச் செய்யுளியல் கலைக் களஞ்சி யம் என்றொரு வெளிவந்ததாம் அதில் இந்திய மொழி களில் செய்யுளியல் பற்றி ஒரு ஐயங்கார் கட்டுரை எழுதியுள்ளதாகவும் அதில் 2000 ஆண்டுகளுக்கு மேல்தொடர்ந்துவரும் செய்யுளியல் வளம் இந்திய மொழிகளில் தமிழுக்கு மட்டுமே இருந்தும் அது திட்ட மிட்டே புறக்கணிக்கப்படுகிறது. சங்ககாலத் தமிழர் களின் பண்பு மக்களை மக்களைக் கொண்டே ஆற் றுப்படுத்தினர்.சங்காலப் புலவர்கள் மெய்யுணர்வு கொண்டவர்களாகவே காட்சி தருகின்றனர். தம்புல மைத் திறனைக் காட்டுவதற்கு முதற்பொருளாக மக்க ளையும் துணைப்பொருளாக இயற்கையையுமே கையாண்டனர் எனலாம்.

சிலப்பதிகாரக் காப்பியத் தலைவியான கண்ணகி யின் நிலை, தமது கணவன்மாரின் கொடுமைகளை யும்,புறக்கணிப்புக்களையும் தாங்கி அவர்களுக்குப் பணிபுரிவதே கற்பு என்பதாக வலியுறுத்தம் நூலே சிலப்பதிகாரம் என்பது பல பெண்ணியப் போராளி களின் குற்றச் சாட்டாகும். ஆனால் கண்ணகி ஒரு பெண்ணுரிமை இயக்கத்தின் தலைமகளாகக் காணப் படுகின்றாள் என்பதை அவர்களால் புரிந்து கொள்ள முடிவதில்லை. உலகில் எந்த ஒரு இனத்திற்கும் இல்லாத தலை சிறந்த ஒழுக்கவியல் தமிழனுக்கே உரித்தானது. தமிழரின் அனைத்து நூல்களும் ஒழுக் கவியலை அடிப்படையாகக் கொண்டே யாக்கப்பெற் றவை. தொல்காப்பியம், சங்க இலக்கிய நூல்களான பதிணெண் மேற்கணக்கு, திருக்குறள், ஐம்பெரும் காப் பியங்கள், பதிணெண் கீழ்க் கணக்கு நூல்கள், தமி ழனின் ஒழுக்கவியலை பண்பாட்டை ,நாகரிகத்தை உலகின் உச்சிகளெனத் தொட்டுக் காட்டும் செம் மொழி இலக்கியங்கள்.

மாதவியை விட்டு விலகி வந்த கோவலனிடம் தனக்கு உடலின்பம் மறுக்கப் பட்டதாகக் குறைப டவிடி;லை, திருக்குறள் கூறும் இல்வாழ்க்கை உரி மைகளையே இடித்துரைக்கின்றாள். அறவோர்க்கு அளித்தலும் சிலம்.16: 71-73ஆன செயற்பாடு துணையுடன் வாழும் இல்லக் கிளத்தியர்க்கே உரித் தானதாகும். அத்தோடு நின்றுவிடாமல் போற்றா ஒழுக்கம் புரிந்தீர்-- சிலம்16:81என்று அவனது சீர்கெட்ட நடத்தையை முகத்திற்கு நேரானச் சுட்டு கின்றாள். அத்தோடு மாற்றா உள்ள வாழ்க்கையென் ஆதலின் ஏற்றெழுந்தனன் யான் --சிலம்16:82,83 அதாவது நீர் கேட்ட உடனேயே உம்முடன் வருவ தற்குக் காரணம் உம்மைப்போல் என்னுள்ளத்தில் தடு மாற்றம் இல்லை என்கிறார். அண்மைக் காலம்வரை தமிழர் குமுகாயத்தின் நிலைப்பாடு அதுதான். கணவன் திருந்துவான் குடும்பத்தின் மேல் அன்பு செலுத்துவான் என எதிர்பார்க்கின்றாள் அதுவே அவளது பொறுமை யின் இலக்கணம். அவள் பெருமையடைகின்றாள். ஆனால் இன்றோ கற்பென்னும் திண்மை திரட்டி நீ திமன்ற வாசலில் நிற்கிறது.கண்டதும் காதல் கொண் டது கோலமென திருமணமாகி ஓரிரு பிள்ளைகளுடன் மணவிலக்குப்(யீவனாம்சம்) பெற்று,அவன்மூலம் மாதாமாதம் கிடைக்கும் பணத்தில் இளம்மனைவியர் களிகூர்கின்றனர். இதற்கு முதன்மைக் காரணியாய் இருப்பது கண்ணகி கூறுகின்ற அறவோர்க்கு அளித் தல் .. ,இருமுது குரவர் ஏவலும் பிழைத்தேன்,என்ப வற்றிற்கு எதிரிடையாக கணவன் இருக்க வேண்டும், அதாவது அவர் தன் பெற்றோருடன், உடன்பிறப்புக ளுடன், உறவுகளுடன் சேரவோ அன்பு செலுத்தவோ கூடாதென்பதும், அவரது உழைப்பு முழுவதும் தன் கைக்கு வரவேண்டும் என்பதும் தான்.அரசுச் சட்டங் களும் முழுமையாக அவர்களுக்குச் சார்பானதாக இருப்பதால் ஆண்கள் பெட்டிப் பாம்பாகின்றனர். இது தொல்பழம் காலம் தொட்டு தமிழர் கட்டிக் காத்த நாகரிக, பண்பாட்டு, ஒழுக்கவியல் விழுமியங்களை ஆட்டம் கணச் செய்துள்ளது எனலாம்.

மேற்குறித்த கண்ணகியின் கூற்றுக்கள் புரட்சிக ரமானது. கோவலன் பலமுறை மாதவியை விட் டுப் பிரிந்து வந்தபோது அவனது நெருங்கிய உற வினர் உதவியின் ஊடாக அவனை அடைந்ததாக சிலம்18:102-109வரையான பாடல் வரிகள் துலக்கும். இந்த நெருங்கிய உறவினர் கண்ணகியாகத் தான் இருக்க வேண்டும். ஏனெனில் குழந்தை மணிமே கலையைக் காரணம் காட்டி இது நடைபெற்று இருக் கலாம். இதனால் அப்படி ஒரு நிலை மீண்டும் ஏற்படா

மல் இருக்க, கண்ணகி கோவலன் புறப்படு என்ற உடனேயே புறப் பட்டு இருக்கவேண்டும். மாதவி குற்றமற்றவள் என்பதை கோவலன் பின் தெளிந்து கொள்கின்றான். கணிகையர் குடும்பப் பெண்ணொருவள் குடும்ப வாழ்வுக்காக ஏங்குவதை சிலம்பு வெளிப்படுத் துகின்றது. அதேநேரம் அவளின்



பொது வாழ்வு பலர்முன் நடன மாடி அவர்களை மகிழ்விப்பதே. கோவலன் இதை விரும்பாதவ னாகவே காணப்படுகின்றான். மாதவியோ தனதுரிமையை விட் டுக் கொடாதவளாக பெண்ணு ரிமைப் போராளியாகக் காணப்ப டுகின்றாள். கடலாடு காதையில் விளக்கமாகவும், வேனிற் காதை யில் குறிப்பாகவும் கோவலனை அமைதிப் படுத்த முனைகின் றாள். இதுவே இவர்கள் பிரிவாக கானல்வரி வெளிப்படுத்தும். அதா வது கோவலன் வேறொருத்தியை நினைத்துப்பாடிய பாடலுக்குப் பகரமாக(பதிலாக) மாதவி தானும் வேறொருவனை நினைத்துப் பாடியது போன்று காட்டிய செய லானது ஆண்மேலாண்மைக்கு எதிரான அறைகூவல் என்றே கொள்ளலாம்.

கண்ணகி வெளியுலகே தெரி யாதவள் என்று கருதியபோது தன் கணவன் கொலையுண்டான் என்ற செய்தி கேட்டு கொதித்து எழுந்து அரசிற்கு எதிரான மக் கள் போராட்டமாக அதை மாற்றி விடுகின்றாள். மறவ(வீர)ற்கு ரியனவென தொல்காப்பியம் இயம்பும் காட்சி, கால்கோள், நீ ர்ப்படை, நடுகல், பெரும்படை, வாழ்த்து என்பவற்றில் பெரும் படை தவிர்த்து ஏனை ஐந்துறை களையும் சிலப்பதிகாரக் கண்ணகி யின் பெண்ணிய முழக்கமாகவே சூழுரைக்கின்றார் இளங்கோ வடிகள். சங்க இலக்கியங்கள், திருக்குறள் பெண்ணியம் பற்றி முழங்கினாலும் சிலப்பதிகாரம் பெண்ணுரிமைக் கோட்பாட்டின் பழந்தமிழ் இலக்கியத்தின் முதல் இடியோசை எனலாம். சிலப்பதிகா ரத்தைத் தொடர்ந்து சீத்தலைச்ச ாத்தனாரின் மணிமேகலைக் காப் பியம்,மணிமேகலை தன் தாய் மாதவியின் துன்பநிலை கண்டு குடும்ப வாழ்வை வெறுத்து, புத்தத் துறவியாகி மக்கட் பணிசெய்து, ஆட்சியாளரின் பகைமையையும் வென்று பெருமை அடைகின் றாள். அடுத்து வருவது திருத்தக்க தேவரின் சீவகசிந்தாமணியாகும். இங்கு விசையையின் அழகில் தீராக் காதலும், காமமும் கொண்டு கிடந்த சச்சந்தன் கொல்லப்பட்டு அரசிழந்ததும்(மாவீரன், பேரரசன் யூலியசீசர் அழகி கிளியோபெற்றா வின் காலடியில் தன்னை மறந்து மயங்கிக் கிடந்ததால் நண்பர் களால் கொல்லப்பட்டது போல்), விசயை சீவகனை காட்டில்பெறு வதும், அவன் வளர்ந்து அரசுரிமை பெற்று, பலரை மணம் முடித்து நல்லாட்சி செய்வதும், கடைசி நாட்களில் விசயை மகனிடம் இவன் தந்தை தன்மீது அளவு கடந்த காதல் கொண்டு ஆட்சி மறந்து கிடந்ததால் ஏற்பட்ட விளைவுகளைக் கூறி அத்தகைய தகாத காதலில் தலையிடுவது அறிவுடைமை ஆகாது எனக்கூறி அவனை நல்வழிப் படுத்துகின் றார். அவனும் அவ்வழி ஒழுகி துறவு பூணுகின்றான்.

தன்கணவனின் தாங்க முடியாத சொல்லொணா இன்னல்களை பட்டறிந்து (அனுபவித்து) அவன் அவளைக் கொல்ல முயலும்போது ,தற்கொல்லியை முற்கொல்லி என்ற சிந்தனை ஆற்றலால் தான் முந்திக்கொண்டு தன்னுரிமையை நிலைநாட்ட அவனைக் கொன்று விடுகின்றாள். ஏனெனில் அன்று மநுநெறிப்படி எந்த உரிமையு மற்ற இழிபிறவி; பெண். எனவே பெண் தன்னுரிமையை நிலை நாட்ட தானே தீர்பெழுத வேண் டும் என்பதைக் கருப்பொருளா கக் கொண்டு யாக்கப் பெற்றதே குண்டலகேசிக் காப்பியமாகும். குண்டலகேசிக்குப் போட்டியாக யாக்கப் பெற்ற ஐஞ்சிறு காப்பி யங்களில் ஒரு நூலே நீலகேசி என்பர். இங்கு காதலனால் கொல் லப்பட்ட நீலி என்பாள் மறுபிறப் பெடுத்து அவனைக் கொன்று பழி தீர்த்தபின் சமண சமயம் தழுவி துறவியாகிப் பெரும் புகழடைகின் றாள். வளையாபதிக் காப்பியம், தன்தாயை வஞ்சித்து கைவிட்டுச் சென்ற தந்தையுடன் போராடி வென்ற ஒரு மகனின் கதையை

கூறுவதாகும். இவ் ஐம்பெரும் காப்பியங்கள் அனைத்தும் பெண்ணியத்தின் உரிமை நோக்கி சமண, பௌத்த சமயத்தினரால் யாக்கப்பெற்றவை.

பல இழிவுத் தொன்ம(புராண)ங்கள் மூலமாகவும்,மத சாதிய மேலாண்மையை அடிப்படையாகவும் கொண்ட கற்பனை இலக்கியங்கள் இடைவிடாத வானொலி, தொலைக் காட்சி, இதழ்கள், செய்தித்தாள்வாயிலாக போற்ற, பரப்புரை செய்யப்படுகின்றன. இதற்கு மூளைச்சலவை செய்யப்பெற்ற அல்லது மதம்பிடித்த தமிழ்க் காழ்ப்புணர்வு கொண்டவர்கள் பணத்தை வாரி இறைக்கின்றனர். ஆனால் மேற்குறித்த காப்பியங்களின் சிறப்பை, ஆழத்தை, அடக்கத்தை, அறியாமையினாலும் புறக்கணிப்புக்கு உள்ளாகின்றன. சிலப்பதிகாரம் பல சிறந்த இலக்கிய உத்திகளைத் தன்னகத்தே கொண்டது.இன்றைய இதழியலுக்கு ஒத்ததுமாகும். அறிவு, அறிவியல், இலக்கியம் எது வாயினும் சான்றுகள் கட்டாயம் தேவையான ஒன்று. சான்று என்பது வாசகர்களின் கவனத்தை ஈர்ப்பதற்கான நடைமுறையே.



அதாவது தகவலை அல்லது தொழிற்பாட்டை மெய்பீடு செய்வதற்கான ஏரண(அளவையியல்) அடிப்படையில் அமைந்த ஒரு நடைமுறையே ஆகும். சிலவேளைகளில் சிலசெய்திகளை இலைமறைகாய் போல அடக்கியும், சிலகூற்றுக்களை சான்று படுத்திக் கூறவேண்டியும் உள்ளது. இன்றைய நடைமுறையும் அதுவே.

சிலப்பதிகார காலத்தில் தமிழ் நாட்டு அரசியல்(சேர,சோழ,பாண்டிய) ஒரு குழப்ப நிலையில்இருந்தது போன்ற தோற்பாடே வெளிப்பட்டு நிற்கிறது. அந்திமாலை சிறப்புச் செய்த காதையில் கதிரவன் மறைந்ததால் கவிந்த(சூழ்ந்த) இருளை நிலவு தோன்றி அகற்றுவதைப் போல் கறைகெழு குடிகள் மீனரச ஈண்ட வெள்ளி விளக்கத்து, சிலம் 4: 10--- 26, என்ற வரிகளுடாக முதன்மையான செய்தி ஒன்றை உவமையாக அடிகள் கூறுவதைக் காணலாம்.ஞாயிற்றுக்குல சோழ மன்னன் இறந்தபின் அங்கிருந்த குழப்ப நிலையைப் பயன்படுத்திபுகாரை வேறொருவன் பிடித்ததால் நிலவுக் குலத்தவரான பாண்டிய இளவரசன் சோழனுக்கு உதவியாக புகாரை மீட்டுக் கொடுத்தான் என்ற செய்தி இதில் இடங்கி இருப்பதைக் காணலாம். அதேபோல் மூலக்கதையிலும் ஏதாவதொரு நிகழ்வு புதைக்கப்பட்டு இருக்கலாமென சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

பொற்கொல்லன் கோப்பெருந்தேவியின் அரண்மனை வாயில் வரை செல்லக்கூடிய தகுதி உடையவனாக இருப்பதால், இப்படிப்பட்ட கொடியவர்களை மன்னன் நெருக்கமாக வைத்திருந்ததால், மன்னனும் அவன்போன்ற குணமுடையவனாக இருக்க வேண்டும் என சில ஆய்வாளர்கள் ஐயப்படுகின்றனர். அன்று தொழில் நிலைப் பிரிப்பே அன்றி சாதிய ஏற்றத் தாழ்வு போற்றப்படவில்லை எனலாம். முடிவெட்டுவோர், வண்ணத்தார், பொற்கொல்லர், பல்லக்குச் சுமப்போர், மருத்துவர் போன்றோர் அரசனின் ,அரசியின் அரண்மனை வாயில் வரை செல்லக் கூடியவர்களாகவே இருந்தனர். ஆகையால் இவர்கள் அரசன், அரசிக்கு சமதகுதி உடையவர் எனக் கொள்ள முடியாது. அரசன் நெடுஞ்செழியனில் சில குறைபாடுகள் இருந்திருக்கலாம் ஆனால் அவன் கொடூரமானவன் என்றோ, நடுநிலை அற்றவனென்றோ சிலம்பில் எச்சான்றும் காட்டப்படவில்லை. வைதீகப் பிராமணரைத் தனக்கு அணுக்கமாக வைத்திருந்தாலும் அவன் நடுநிலையோடு தான் செயற்பட்டுள்ளான். இவன் ஆரியப்படையை வென்றவன். திருட்டுப் பொருள் சேர்த்தான் என்ற காரணத்திற்காக வார்த்திகன் என்ற பிராமணனைச் சிறையில் இட்டவன். இதனால் கடும் சினம்கொண்ட பிராமணர் மக்களையும் சேர்த்துக் கொண்டு ஐயை கோயிலைப் பூட்டி கிளர்ச்சி செய்தனர். வேறுவழி இன்றி அவனை

விடுவித்தான். ஆனாலும் அவர்கள் கோபம் தணியாமல் வார்த்திகன் காலில் வழுந்து பொறுத்தருள்(மன்னிப்பு) கோரவேண்டும் என்றும், கொடை வழங்க வேண்டும் என்றும் அரசனைக் கோரினர். அரசனும் அவன் காலில் விழுந்ததோடல்லாது தங்கால் என்ற ஊரையும், இன்னும் பலபரிசில்களையும் வழங்கினான். அவர்களின் மேலாண்மைக்கு அடிபணிந்தான். இப்பிராணர்களாலே நெடுஞ்செழியனின் ஆட்சியில் ஒரு தளம்பல் நிலை ஏற்பட்டது எனலாம். அன்று முடியாட்சியில் பிராமணன், மக்கள் கூட்டிற்கு அடிபணிந்தான் மன்னன். இன்று மக்கள் ஆட்சியாம், ஆட்சித் தலைவர்கள் துமுக்கியும், குண்டுகளும் தான் மக்களுக்கு பரிசாகக் கொடுக்கின்றனர்.

மாடல மறையோனின் செல்வாக்கு சிலம்பு முழுவதும் பரந்துபடக் காணப்படுகிறது.இவனின் கூற்றாக கோவலன் பிராமணர்க்கு பலவகையிலும்,பலவேளைகளிலும் உதவியதாக இளங்கோ வடிகள் வெளிப்படுத்துகின்றார். கோவலன் கண்ணகி திருமணம்கூட வைதீகத் திருமணமாகவே நிறைவேற்றப் பட்டதாகும். ஏற்கனவே வார்த்திகன்சிறைவைப்பில்கொதிப்புற்று இருந்த பிராமணர்க்கு கோவலனின் கொலையானது அக்குமுகத்திற்கு பெரிய மனக்கொதிப்பை ஏற்படுத்தியிருக்கலாம். இதனால் அரசனுக்கு எதிரான கிளர்ச்சியில் மக்களைத் தூண்டித் தாமும் அதில் இணைந்து கொண்டு இருக்கலாம். அத்தோடு அன்றைய நிலையில் தமிழகத்தின் ஏற்றுமதி வாணிகம் பலவகையிலும் சிறப்புற்று இருந்திருக்கிறது. குறிப்பாக தோகை, சந்தனம், முத்து, பொன்போன்றன பெருமளவில் ஏற்றுமதி ஆகின. நுண்வினைக் கொல்லர் நூற்றுவர் பின்வர என சிலம்16:106 செப்புவதானது பொற்கொல்லரின் பங்கு பெருமளவில் இருந்ததை சுட்டுவதாகும். அவர்களில் பெரு முதலாளிகளாகவும் பலர் இருந்திருக்க முடீயும். இவர்களின் கீழ் பல்லாயிரம் நுண்வினைக் கொல்லர் இருந்திருக்கவும் கூடும். எனவே கோவலனின் இறப்பைத் தமக்கு ஏற்றதாக்கி அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து மதுரை எரிப்பிற்கு இவர்களும் காரணராய் இருந்திருக்கலாம்.இதனால் வெகுண்ட கொற்கையில் இருந்த வெற்றிவேற்செழியன் மதுரைக்கு வந்து ஆயிரவரை நங்கைக்குப் பலிகொடுத்ததாக சிலம்பு கூறுவதாக சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.



இந்திய முதலமைச்சராய் இருந்த இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் அவரது மெய்க் காப்பாளர்களால் சுட்டுக் கொல்லப்பட்டபோது சீக்கியர்களுக்கு எதிரான வன்செயல் உருவாகி கிட்டத்தட்ட மூவாயிரம் சீக்கியர்களின் உயிர்களைக் காவுகொண்தது. அதே போன்று 1983இல் யாழ்ப்பாணத் திருநெல்வேலிச் சந்தியில் 13 பாதுகாப்புப் படையினர் சென்ற ஊர்தி கண்ணி வெடியில் சிக்கியதால் அவர்கள் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டதன் காரணமாய் தமிழருக்கு எதிரான நாடுதழுவிய இனவன்செயல் உருவாகி பல நூறு பேர்கொல்லப்பட்டும்(எனது உடன்பிறப்பு நா.வை.அரியராசா உட்பட), பலகோடி உரூபா சொத்தழிவும் ஏற்பட்டது. இதுபோன்ற நேரங்களில் இப்படியான விளைவுகள் ஏற்படும்போது அரசு வலுவிழந்து அல்லது பாராமுகமாகவும் விட்டு விடுகிறது. எனவே பொற்கொல்லரக்கு எதிரான கிளர்ச்சி ஏற்பட்டு பலர் இறந்திருக்கவும் கூடும். கோவலன், அரசி, அரசன் இறக்கக் காரணமான பொற்கொல்லர்க்கு எதிரான கிளர்ச்சி ஏற்பட்டு அதை சாக்காக வைத்து பழிவாங்கும் உள்ளுணர்வோடு காத்திருந்தவர்கள் மக்களைத் தூண்டி மதுரையை எரித்திருக்கவேண்டும்.

கோவலன் கொலையுண்டபின் கண்ணகி வீதியில் ஒற்றைச் சிலம்புடன் வருகிறாள். அவளைத் தொடர்ந்து மக்களும் பின்தொடர்கின்றனர். கம்பலை மாக்கள் கணவனைத் தாண்காட்ட சிலம்19:29 என்ற அடிகளால் இதைச் சுட்டுகின்றார் ஆசிரியர்.(கம்பலை -ஒலி ஆரவாரம்) கொலை உண்டதன் கணவனைக் கண்டபின், அன்று மாலையில் இருந்து அடுத்த நாள் அரசவை கூடுமட்டும் பெருங்கூட்டம் சேர்ந்திருக்க வேண்டும். இக்கூட்டமே மேற்குறித்த செயற்பாட்டில் இறங்கியதெனலாம். அத்

தோடு மணிமேகலையின் கூற்றுப்படி பொதுவாக அரச குலத்தினர் மீது மணிமேகலை ஆசிரியர் சாத்தனார்க்கு வெறுப்பு இருந்ததாகவும் இதனால் மதுரைப் புரட்சியில் மறைமுகமான பங்கு இருந்திருக்கலாம் என்றும் சிலர் கருதுகின்றனர். அன்று பாண்டிய நாடும் சேர நாட்டிற்கு உட்பட்டதாய் இருந்திருக்கிறது. தென்னரிட்ட திறையொடு கொணர்ந்து சிலம்26:169பாடலடிகள் இதை உணர்த்தும். மதுரைக் கிளர்ச்சி அறிந்தே செங்குட்டுவன் பெரியாற்றங் கரைக்கு வந்திருக்க வேண்டும். இங்குதான் சாத்தனாரையும், வேட்டுவர்களையும் சந்தித்ததாகவும், அவர்கள் ஊடாகவே கண்ணகி பற்றியும், மதுரை எரியூட்டல் பற்றி அறிந்ததாகவும் கூறப்படுகிறது. மதுரை எரிந்து 14நாட்களின் பின்னரே கண்ணகி இறந்திருக்கின்றாள். எனவே பல இடங்களிலும் ஒற்றர்களைக் கொண்டு இருந்த சேரன் மதுரைக் கலம்பகம் பற்றி அறியாது இருந்திருக்க முடியாது. ஆனாலும் இதற்குக் காரணம் கண்ணகிதான் என்பதை அறிந்திருக்க வாய்ப்பில்லை. கிளர்ச்சிக் காலத்தில் அதன் உடனடிக் காரணம் தெரியாமலும், கண்ணகியின் பங்கு முகாமை அற்றதாகவும் இருந்து இருக்க முடியும். எனவேதான் சாத்தனார் கிளர்ச்சியின் கரு கண்ணகி தான் என்பதை முலை முகத்தெழுந்த தீ தான் என்பதை செங்குட்டுவனுக்கு வெளிப்படுத்துகின்றார். சேரன் வருகையால் அழிந்துபோயுள்ள மதுரையும் மக்களும்(கிளர்ச்சிக்குத் தூண்டுதலாய் இருந்தவர்களும்) தண்டிக்கப்படலாம், இன்னும் அரத்த ஆறு ஓடலாம் என்பதைத் தடுத்து நிறுத்தும் நோக்கோடு அல்லது செங்குட்டுவனின் கோபத்தைத் தணிக்க இவரை அரச எதிர்ப்பாளர்கள் தூதாகவும் அனுப்பி இருக்கலாம்.

அடிகளும் பல இடங்களில்



உண்மைகளை நேரடியாகச் சுட்டுபவராய் இல்லாமல், இதனால் முரண்பாடுகள், இடர்பாடுகள், குழப்பங்கள் ஏற்படலாம் என்ற காரணத்தினால் மறைமுகமாகவே வெளிப்படுத்துகின்றார்.அதனாலேயே வினைவிளைவு பற்றிய புனைகதையை(பழம்பிறப்பு)க் கூறி , இது மக்கள் எழுச்சி அல்ல ஒரு பத்தினிப் பெண் நடத்திய இறும்பூதே(அற்புதம்) என முடிக்கின்றார் சாத்தனார். சேரனும் இதை நம்பி இருக்கவேண்டும் அல்லது தன்னாட்டிலும் அரசுக்கு எதிரான பிராமணர்களால் ஒரு கிளர்ச்சி தொடங்காமல் இருக்க இக்கதை உதவுமெனக் கருதினான் போலும் .அதேநேரம் மக்கள் மனதைத் திசைதிருப்ப தமிழனை இகழ்ந்த வடநாட்டு மன்னர் கனக வியாசரைத் தண்டிக்கவும் கண்ணகிக்குச் சிலை வடிக்கக் கல்லெடுக்கவும்(இன்றும் பலநாடுகளில் அரசிற்கு எதிரான போராட்டங்கள், கிளர்ச்சிகள் ஏற்படும்போது மக்கள் மனதைத் திசைதிருப்ப பெரும்எடுப்பில் களியாட்ட விழாக்களை, கால் பந்து, மட்டைப் பந்து போன்ற விளையாட்டுப் போட்டிகளை ஏற்படுத்தல் போன்று) போர் முரசு கொட்டிப் புறப்படுகின்றான்.

நாக இனத்தவனும் சந்திர மரபினனுமாகிய வடநாட்டு மன்னன் சதகர்னி(சேரர் மரபு) தான் படிமம் அமைக்க கல்லெடுத்து அனுப்புவதாகக் கூறியும் அதற்கு இசையாமல் கங்கையைக் கடக்க ஓடம் மட்டும் கேட்டுப் புறப்படுகின்றான். இதை அறிந்து செல்லும் வழியில் உள்ள பிராமணர்க்கு எத்தீங்கும் நேராதபடி பாதுகாக்குமாறு வேண்டுகின்றனர் சேரநாட்டுப் பிராமணர்(கால்கோள் காதை சிலம்26:92-104). இது மதுரைக் கிளர்ச்சியில் இவர்களின் உள்ளீட்டை சிலவேளை செங்குட்டுவன் அறிந்திருக்கலாம் என்பதினாலேயோ தெரியவில்லை. கண்ணாடி வீட்டில் இருந்துகொண்டு கல்லெறிபவர்கள் போல கனக வியாசர் செயற்பட்டு இருக்கவேண்டும், ஏனெனில் அவர்களைக் கீழ்ப்படுத்த செங்குட்டுவனுக்கு 18 நாழிகைகளே போதுமானதாய் இருந்துள்ளது. வெகு குறுகிய நேரத்தில் இவ்வெற்றி எப்படி ஏற்புடையதாகும் என சில ஆய்வாளர்கள் கேள்வி எழுப்புகின்றனர். இலங்கை அரசபடையின் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிப் போரின்போது (2008-2009) வன்னியின் பெரும் பகுதி எந்த எதிர்ப்பும் இன்றி அரச படையினரால் கைப்பற்றப்பட்டன என்பது இங்கு குறிப்பிடத் தக்கதகும்.

சூரியகுலத்து கிருதவீரியனுக்கும் சுகந்தைக்கும் பிறந்தவன் சத்திரியனான(அரசர்) கார்த்தவீரியன் இவன் சமதக்கனி என்ற துறவரிடம் இருந்த காமதேனு என்ற ஆ(பசு)வைக் கவர்ந்ததால் அவரின் மகனான மழுவாள் நெடியோனாகிய பரசுராமன் கார்த்தவீரியனைக் கொன்றுவிட்டதால், கோபங் கொண்ட கார்த்தவீரியனின் உடன் பிறப்புக்கள் சமதக்கனியைக் கொன்று விட்டனர். இதனால் கடும் சினங்கொண்ட பரசுராமன் சத்திரிய(சேர, சோழ,



பாண்டிய) குலத்தைவேரோடு அழிக்கச் சூளுரைத்து(சபதம்) 21அரச தலைமுறையினரை கருவறுக்கின்றான். இதில் தப்பியவர்கள் கார்த்தவீரியனின் மக்களான சயத்துவசன்,வீரசேனன்,விருடன்,மதுகுரன் என மச்சதொன்மம் கூறுகின்றதாம். இதை அடிப்படையாகக் கொண்டு மணிமேகலையில் சிறைசெய்த காதை22:25-35வரையான பாடலடிகளில் புகாரின் கன்னித் தெய்வம் சத்திரிய மன்னனாகிய காந்மனிடம் பரசுராமன் கொலைவெறி கொண்டு வருவதாகவும் உனது கணிகையின் மகனாகிய சுகந்தனிடம் ஆட்சியை ஒப்படைத்து விட்டு நீ ஒழிந்துகொள் எனக் கூறுவதாக சாத்தனார் வெளிப்படுத்துவார். இதுபரசுராமனும், அவன் தலைமுறையினரான பிராமணரும் குறிப்பாக சோழர்களின் மேல் பழி தீர்க்க முயன்று கொண்டு இருந்தார்கள் என்பதை துலக்கும். கற்றறிந்த வைதீக வேதமரபார் கூட அரசர்கள் மீதும், தமிழ் மக்கள் மீதும், தமிழ்மொழி மீதும் வெறுப்பும், மனக்கசப்பும்(இலங்கை பெரும்பான்மையர் போல்) கொண்டு 2000 ஆண்டுகளுக்கு மேல் செயற்படுவதால் மனது துன்புறுகின்றது. மாறாக இது அவர்கள் மேல் தமிழருக்குத்தான் இருக்கவேண்டியது.ஏனெனில் இவர்கள் தானே தமிழரின் அனைத்தையும் பறித்து ஒடுக்குகின்றனர். இதை செப்புப் பட்டயங்கள், கல்வெட்டுக்கள், தொன்மங்கள் சான்று பகரும்(கடம்பவடுகப் பிராமணனான மயூரவர்மன் தனக்கு எல்லாத் தகுதிகள் இருந்தும், குருத்துவம் பெற அரசனைச் சார்ந்திருக்க வேண்டி இருந்ததை பெருமனவலியாகவும், வெறுப்பாகவும் கொண்டதாகபல்லவர்கால தாலகுண்டாக் கல்வெட்டு வெளிப்படுத்துவதாக தொல்லியல் அறிஞர் நடனகாசிநாதன்(தமிழ்நாடு) தெரிவிக்கின்றார்.

அடுத்து மதுரை எரியூட்டல் கண்ணகி தனது இடது மார்பை திருகி எறிந்ததால் அல்லது கிளர்ச்சியாளர்களால் அறுத்து எறியப்பட்டதால் நிகழ்ந்ததா? என்ற ஒரு கேள்வியும் எழுகின்றது. ஆனால் இது கட்டாயமாக நிகழ்ந்திருக்க முடியாது, ஏனெனில் அவர்கள் கண்ணகியைக் கொன்றே இருக்கலாம்(சீக்கியர்களின் புகழ்மிக்க பொற்கோயில் தாக்கப் பட்டதற்காகஅந் நாட்டின் தலைவி இந்திராகாந்தி அம்மையார் கொல்லப்பட்டது போல்). இருப்பினும் அந்நாட்களில் கணவனை இழந்த பெண்கள் நோற்கும் கைமைநோன்பை விட(அவ்வளவு கொடூரமானது,விரிக்க நீளும்)கணவனை எரிக்கும் தீயிலே விழுந்து உடன்கட்டை ஏறி இறப்பது மகிழ்வூட்டும் செயலாகும் எனக்கூறி தன் கணவனுக்கு மூட்டிய தீயிலே விழுந்து உடன்கட்டை ஏறுகின்றாள் பூதப்பாண்டியனின் தேவி பெருங் கோப்பெண்டு(அரசிக்கே இந்நிலை எனின் சாதாரணப் பெண்களுக்கு!!!). எனவே கணவனை இழந்த கண்ணகி உலகில் வாழப்பிடிக்காமல் தனது மார்பை அறுத்து எறிந்திருக்க வேண்டும். திருமாவுண்ணிஒரு முலை குறைத்தவள் என்பது திருகி எறிந்தாள்,அறுத்து எறிந்தாள் என்ற சொல்லாட்சியின் பண்பட்ட ஒரு கூற்றேயாகும்.

சிலர் ஆய்வு என்று கூறிக்கொண்டு முட்டையில் மயிர் பிடுங்கி அதில் பேன் பார்க்க முனைகின்றனர். இவை குட்டையைக் குழப்பும் செயற்பாடு என்றே கொள்ள முடியும். ஆய்வைத் தொடங்கும் பொழுது பொதுப்படையாய்த் தொடங்கி உட்செல்லும்போது தமது பக்கச்சார்பான ,நடுநிலையற்ற, கொச்சைப் படுத்தும் அல்லது இழிவுபடுத்தும் செயற்பாட்டில் இறங்கி விடுகின்றனர். இவை ஒரு இலக்கியத்தின், வரலாற்றின் உண்மைகளை மழுங்கடிக்கும் செயலாகும். அறிவியல் சார்ந்த பருப்பொருட்களாலான வரலாற்றுக் கருப்பொருட்களின் நம்பகத்தன்மை இலக்கியம், தொன்மம், பண்பாட்டுக் கருப்பொருட்களின் நம்பகத் தன்மையில் இருந்து எந்தவகையிலும் மேம்படவில்லை என்பதே பல அறிஞர்களின் இன்றைய கருத்தாய் உள்ளது.மாந்தப் பதிவுகளே உண்மையின் ஊற்றுக்களென நம்பலாம்.

கோவலன் மூதலிப்பு(உசாவல்) இன்றிக் கொல்லப் படுகின்றான். இதற்குச் சிலர் இவன் சமண சமயத்தவனாக இருக்காலம் என எதிர்வு கூறுகின்றனர். ஏனெனில் கோவலன், கண்ணகி இருவரும் முதலில் சமணத் துறவியான கவுந்தி அடிகளிடமே அடைக்கலம் பெறுகின்றனர்.இவர்கள் ஊருக்குப் புதியவர்கள், இவர்களின் சாதி, சமயம் தெரியாது.பிராமண மேலாண்மை, எனவே யாரிடமும் அடைக்கலம் பெறமுடியாது. இன்றைய தமிழர் நடுவிலும் இதுதானே நிலை. கவுந்தியடிகளும் ஆயர் முதுமகள்(வேதநெறிப்படி 3ஆம் சாதிக்காரர்-- ஆநிரை, உழவு, இழிதொழில்), மாதிரியிடம் இவர்கள் தங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்ய அடைக்கலம் தருகிறார். மாதிரியும் கோவ

லனை மதித்து சாவக நோன்பிகள் அடிகளாதலின் (சிலம்16:28)எனச் சுட்டுகின்றாள். தமிழ் நாட்டரசர் கள் சமண சமயத்தவரை வடநாட்டு ஒற்றர்களாகவே நோக்கினர். கோவலனின் முற்பிறப்புச் செய்தியில் வரும் நீலியின் கணவன் சங்கமனும் ஒற்றனென்றே கொல்லப்படுகின்றான். எனவே இப்பிறப்புக் கோவ லனும் ஒற்றனாக இருக்கலாம் என்ற ஐயுறவில் கொல் லப்பட்டுள்ளான் என்கின்றனர் சில ஆய்வாளர்கள். ஆனால் கோவலன் தொடக்கத்தில் இருந்தே பிராம ணர் சார்பானவனாகவே காணப்படுகின்றான். இதை மாடல மறையோனின் கூற்றுக்கள் உறுதிசெய்யும்.

வைதீகவேத மரபாரின் அரச(சத்திரிய) எதிர்ப்பா னது பரசுராமன் காலம் தொட்டே முளைவிட்டு இருந் தது(குறிப்பாக இதை ஆராய வேண்டிய தேவையும் இங்கு முதன்மையான காரணியாக வெளிப்பட்டு நிற்கிறது). பிராமண மன்னர்களும், பிராமணர்களும் வெளியிற் காட்டிக் கொள்ளாத பகையுணர்வைக் கொண்டு இருந்தனர் என்பது அந்தப் பரசுராம னின் அரச(சத்திரிய) அழிப்பின் ஒரு கூறேயெனக் கொள்ளலாம். இவன் கதை ஒரு தொன்மம் போல் தோன்றினாலும் அதில் பொதிந்து இருப்பது வரலா றுதான் என்பதை மறுக்க இயலாது. பரந்தகனின் மகன் கண்டராதித்த சோழன் காலத்தில் கண்டராதித்த பெரும்பள்ளி என்ற புறச்சமய(புத்த மதமாய் இருக் கலாம்) கோயில் முதன் முதலாக ஏற்படுத்தப்பட் டது. இதனால் சோழநாட்டின் மேற்குப் பகுதியான சேரநாட்டுக் கந்தளூர் சாலையில் இருந்த பிராமணர் இவன்மீது வெறுப்புற்று இருந்தனர். இவன் 9ஆம் திருமுறையில் உள்ள திருவிசைப்பா பாடியவன். அவர்களை அமைதிப்படுத்த கண்டராதித்தன் அங்கு சென்றபோது அவனைக் கொன்று விட்டனர். இவன் சோழநாடு திரும்பாததால் அவனுக்கு மேற்கெழுந்து அருளிய தேவர் என்ற அடைமொழிப் பெயரும் வழங்கப்பட்டது. இச்செய்தியானது இவனின் தம்பி யின் மகனான சுந்தரசோழனின் ஆட்சிக்காலத்தின் இறுதியில் தெரிய வந்துள்ளது. இதனால் வெகுண்ட சுந்தரசோழன் தன்மூத்த மகன் ஆதித்த கரிகாலனை கொலையாளிகளைத் தண்டிக்க கந்தளூர் சாலைக்கு அனுப்பினான். இதை முதலே அறிந்த உடையார் குடியில் வாழ்ந்து வந்த பரசுராமனின் வழித்தோன் றல்கள்(பிராமணர்) கரிகாலனையும் கொன்றனர். இந்தச் சுந்தரசோழனை மிகுந்த தமிழ்ப் பற்றாளனாக புத்தமித்திரரின் வீரசோழியம் என்ற இலக்கண நூல் புகழ்ந்து உரைக்கின்றதாம்.

கரிகாலச்சோழனை கொன்றவர்களைக் கண்டறி வதிலும் கால இடைவெளி உண்டாயிற்று. இச் செய் தியானது கடலூர் மாவட்டம் உடையார்குடி அனந்தீ



சுவரன் கல்வெட்டால் தெரியவரும். இதில் கரிகாலச் சோழனை கொலை செய்து துரோகிகள் ஆனவர்கள் என்றும் பொறிக்கப்பட்டு உள்ளதாம்.கொலையாளி கள் பிராமணர்கள். இவர்களை சுந்தரசோழன், உத் தமசோழன் காலத்தில் கண்டறிந்து தண்டிக்க முடிய விடி;லை. இவர்களின் பின் அருண்மொழி தேவர் என்ற தமிழ்(தீட்டு)ப் பெயரைக் கொண்டிருந்து பிராமணரின் வற்புறுத்தலால் இராசராசன் என்ற வடமொழிப் பெயரைச் சூடி கி.பி.985 இல் ஆட்சிப் பொறுப்பை ஏற்றான். பொறுப்பேற்ற சில ஆண்டு களிலேயே கந்தளூர்ச் சாலையைக் கைப்பற்றி தன் அண்ணனை கொன்ற அத்தனை துரோகிகளையும் கண்டறிந்து அவர்களின், அவர் உறவுகளின் நிலங்க ளைப் பறித்து விற்று அரச கருவூலத்தில் சேர்த்தபின் அக்கயவர்களுக்குத் தண்டனையும் வழங்கி பரசுரா மன் தலைமுறையினரின் உடையார்குடி, காந்தளூர்ச் சாலையையும் நிலைகுலையச் செய்தானாம்.

தனது புகழ்பூத்த பட்டியலில் முதலாவதாக காந்த ளூர்ச்சாலை கலமறுத்தருளி எனக் குறிப்பிட்டுள்ளா னாம். திருவாலங்காட்டுச் செப்பேடு இவ்வெற்றியை பரசுராமனது நாட்டை வென்றது எனக் குறிப்பிட் டுள்ளதாம்.அதுமட்டும் அல்லாது மூவர்(அப்பர்,சம்பந் தர்,சுந்தரர்) பாடிய தேவார பனுவல்கள் தில்லையம் பலத்தில் ஓர் அறையில் பூட்டி வைக்கப்பட்டுள்ளதை நம்பியாண்டார் நம்பியின் மூலமாக அறிந்த இராசரா சன் அவற்றை வெளிக்கொணர முயற்சித்த போது, தில்லைவாழ் பிராமணர்(உடையார்குடி, காந்தளூர்ச் சாலையைச் சேர்ந்தவர்கள்) அம்மூவருடன் வந்தே அதைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று மறுத் துவிட்டதால், பின் அவர்களின் படிமங்களுடன் சென்று பெற்றுக் கொண்டானாம். ஆனாலும் பெற் றுக்கொண்ட பனுவல்களில் அரைவாசிக்கு(ஆயிரக் கணக்கானவை) மேற்பட்டவை செல்(கறையான்) அரித்தும், உக்கியும், ஒடிந்தும் காணப்பட்டதால்;

நம்பியாண்டார் நம்பியைக் கொண்டே அவற்றைத் தொகுத்துள்ளான்.

ஆதிதிராவிடப் பெண்ணான இசைஞானியாரைக் (ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்வரை இசை, சாதி இறக்கம் செய்யப்பட்ட ஆதி திராவிடரிடமே இருந்தது என்பதை இது உறுதி செய்யப் போதுமானதாகும.;) கொண்டே பண் அமைப்பித்தான். அத்தோடு கோயில் களில் வேதங்கள் ஒலிப்பதற்குப் பகரமாக திருமறை ஓதுவதற்கு முதன்மை கொடுத்தான். பலநாடுகளை வென்று சோழராட்சியை நிலைநாட்டிய இப்பேர ரசனின் ஒரேயொரு செப்பேடுதான் இதுவரையில் கிடைத்து உள்ளதாம். அதுவும் நாகபட்டினத்தில் அமைக்கப் பெற்ற புத்தபள்ளி ஒன்றிற்கு அளிக்கப் பட்ட நிலக்கொடை பற்றியதாம். இவன் காலத்தில் பிராமணர்க்கு வழங்கப்பட்ட கொடைகள் பற்றிய எந்தவொரு தடையமும் கிடைக்கவில்லை என்பர் அறிஞர்.இது அவன் பிராமணர் மீதுகொண்ட வெறுப் பை(கண்டராதித்தன், ஆதித்த கரிகாலன் கொலை யால்) வெளிப்படுத்துவதாய் உள்ளது. அப்படி அவன் வழங்கி இருந்தாலும் அவை மறைக்கப்பட்டு இருக்கலாம் ஏனெனில் பிராமணர்கள் மேல் சத்திரி யர் என்றும் வெறுப்பு உடையவர் என்பதைத் தம் தலை முறையினர்க்கு வெளிப்படுத்தி ஒருவித கசப்பு உணர்வை மனதில் வளர்ப்பதற்காயும் இருக்கலாம்.

இராசராசனின் மகனான முதலாம் இராசேந்திரன் சேர(இன்றைய கேரளம்)நாட்டையும், பலபழம் தீவுகளையும், சேரரின் முடி, மாலைகளையும், பரசு ராமனால் சாந்திமத் தீவில் ஒழித்து வைக்கப்பட்ட செம்பொன் முடியையும் கவர்ந்து கொண்டானென கல்வெட்டுகள் கூறுவதாக தெல்லியல் ஆய்வாளர் நடனகாசிநாதன்(தமிழ்நாடு) விளம்புகின்றார். அந் தத் தமிழ்சேரநாடே பரசுராம, நம்பூரிதிரிப் பிராமணர் வரவால் தமிழ்மொழி சிதைக்கப்பட்டு மணிப்பவள நடையாகி புதுமொழி மலயாளமொழியால் ஆளப்ப டுகிறது. இவர்கள் கலப்பினத்தவர்கள்(நம்பூதிரிகள், நாயர்,வேளாளர், பிரமணர் என பலரும்)ஆவர். இக்கூட்டை ஏற்காத உண்மை, உணர்வுத் தமிழர்கள் சொல்லொணாக் கொடுமைகளையும், கொடூரங் களையும் பலநூற்றாண்டு காலமாகப் பட்டறிந்து (அநுபவித்து) காமராசர் அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராய் இருந்தபோது மார்சல் நேசமணிய வர்களின் தொடர்ந்த போராட்டத்தின் பயனாய் குமரி மாவட்டத்துடன் இணைந்து கொண்டனர.

ஆங்கிலேயர் ஆட்சியின்போது கல்வி கற்று உயர்ந் தபோதும் இவ் வைதீகவேத பிராமணரின் இயல்புக் குணம் மாறவிடி;லை. திருவையாறு தியாகராசர் அரங்கில் தண்டபாணி தேசிகர் தமிழில்(தீட்டுமொழி) பாடிவிட்டார் என்பதற்காக அரங்கு தீட்டுப்பட்ட தாகக் கூறி தீட்டுக் கழித்தனர். மாகவி சுப்பிரமணிய பாரதியார் தமிழ் வைதீக பிராமணக் குடும்பத்தில் பிறந் தவர். புரட்சியாளர், விடுதலைப் போராட்ட வீரர், சீர்திருத்தவாதி, தனது பூநூலை அறுத்து எறிந்து தாழ்த்தப் பட்ட ஒரு சிறுவனுக்கு பூநூல் அணிவித்து சாதிய மேலாண்மையைக் களைந்தெறிய முயற்சி த்துப் போராடியவர். இவர் பாரத்தசாரதி கோயில் யானையால் தாக்குண்டு இறந்தபோது அவரது மர ணச் சடங்கில் அவரது சாதிப் பிராமணர்கள் கலந்து கொள்ளவில்லை. அவர் உடல் சுமக்க ஆள்கூட இல் லையாம்.

காந்தியடிகளிடம், அறிஞர் அண்ணாவிடம் பெரு மதிப்பு வைத்திருந்தவர் வைத்திநாதப் பிராமணர். சிறந்த சீர்திருத்தவாதி. மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுள் எல்லாச் சாதியினரும் சென்று வழி பட போராடி அதில் வெற்றியும் கண்டவர்(1939). இவர்1955இல் காலமானபோது இவருக்குக் கடன் செய்ய அவரின் மக்களும், வளர்ப்பு மகனான அமைச் சர் கக்கன் அவர்களும் மொட்டையடித்து நின்றனர். இதைக்கண்டு வெகுண்டனர் மரணக் கரணத்திற்கு வந் திருந்த உறவினர். தாழ்த்தப்பட்ட சாதிக்காரர் இறந்த வருக்குக் கடன் செய்யக் கூடாதென்றனர். ஆனால் வைத்தியநாதரின் மனைவியும் மக்களும் அவர்கள் கூற்றை ஏற்றுக் கொள்ளாததால்மரணவீட்டுக்கு வந்தி ருந்த உறவினர் கரணத்தில் கலந்து கொள்ளாது அங் கிருந்து வெளிநடப்புச் செய்தனர். இவற்றை எல்லாம் அமைதியாக ஆராய்ந்து பார்த்தால் பிராமணர்கள் எவ்வளவு மூர்க்கத் தனமாகவும் வெறித்தனத்தோடும் சாதிய மேலாண்மை கர்வத்துடன் அரசர்(சத்திரியர்) க்கு எதிராகச் செயற்பட்டு இருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். இலங்கைத் தீவில் பிராம ணர்கள் இருந்தாலும் அவர்கள் தமிழர்களாவே உள்ள னர். அவர்களிடம் எந்தவிதத்திலும் சாதி சமயவெறி இல்லை என்றே கூறமுடியும். ஆனால் அடுத்தபடி யில் உள்ளவர்கள்(தற்குறிகள்) ஊடாக அது சற்றுத் தலையை வெளிக்காட்டுவதாய் உள்ளது.

**வாழ்க தமிழ்! வளர்க பகுத்தறிவு!**
**மறுமலர்ச்சிபெறுக தமிழர் பண்பாடு!**



### அன்பும் பக்தியும்

# மனித நேயம் ஓர் பார்வை

## பார்வை:– 02

உலகில் தோன்றி மறையும் உயிர்கள் யாவற்றுள்ளும் மனிதன் மேலான சிறப்பிடம் பெற்று விளங்குகிறான். மனிதப் பிறவி மகத்தானது, பெறுதற்க ரியது என்பதை சான்றோர்கள் பலகாலும் வலியுறுத்தியுள்ளனர். அரிது அரிது மானிடராய்ப் பிறத் தலரிது’’ என்பது ஔவையின் வாக்கு. அம்மானிடப் பிறப்பும் வானமற்றதாய், ஞானமும் கல் வியும் கூடியதாய், தானமும் தவ மும் மிக்கதாய் அமைதல் மிகவரிது என்பார். இறைவனின் எடுத்த பொற்பாதங்களை எஞ்ஞான்றும் சிந்தித்திருக்கும் பேறு கிட்டுமா னால் தனக்கு மீண்டும் மனிதப்பி றவியே அருளும்படி வேண்டுகி றார் திருநாவுக்கரசர். இங்ஙனம் மானிடப் பிறவியானது போற்றத் தக்கதாய் இருப்பதற்கும் பிற உயிர் களினின்று மேம்பட்டு விளங்குவ தற்கும் மனிதம் எனப்படும் உயர் பண்பே காரணமாய் அமைகிறது.

சென்ற இதழ் தொடர் ..

இலக்கியங்களில் மனிதநேயம்

தமிழிலக்கியங்கள் காலந்தோறும் வியக்கத்தக்க மாற்றங்களுடன் பல புதிய பரிணாமங்களை அடைந்து வருகின்றன. என்றபோதிலும், அவை அடிப்படையான மானுட அறங்களையும் மனிதகுலத்தின் மீதான நேசத்தினையும் தன்னுள் ஊடிழையாகக் கொண்டிருக்கத் தவறுவதில்லை. அதே போல் மனித இனத்தின் மீதான படைப்பா ளியின் உள்ளார்ந்த அக்கறையை அன்பினை பிரதிபலிக்காத இலக்கியம் எதுவும் காலவோட் டத்தை எதிர்த்து நின்று நடிக்க இய லுவதில்லை.

ஓர் இலக்கியமெனில் அது மனித நேயத்தை மையமாகக் கொண்டு தான் எழுதப்பட வேண்டும் என்ற கருத்துடைய ந. பிச்சமுத்து . மனித நேயம். அற உணர்வு, வாய் மை,சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றைப் பற்றிய உணர்ச்




கலாநிதி பொன் ஜெயரூபன்
விரிவுரையாளர்,
தேசிய கல்வி நிறுவகம்,
இலங்கை.
PhD, ME.d, BA, PGDE(Merit),National Diploma in Teaching (Merit),Dip.in.Sp.Edu,Dip.in.HR
Lecturer / Project Leader
Department of Religions & Value Education
National Institute of Education
Maharagama



சிகள் நிலையான உணர்ச்சிகள் , வரவேற்கத் தக்க உணர்ச்சிகள்"30 என்று கூறியுள்ளார்.

அவ்வகையில், தமிழகத்தில் தொன்று தொட்டு தோன்றி வரும் ஆகச்சிறந்த இலக்கியங்கள் அனைத்தும் இத்தகைய உணர்ச்சிகளை உள்ளடக்கி யனவாகவே அமைந்துள்ளன.

**யாம் இரப்பவை**
**பொன்னும் பொருளும் போகமும் அல்ல நின்பால்**
**அன்பும் அருளும் அறனுமிம் மூன்றும்**
**உருளிணர்க் கடம்பின் ஒலிதாரோயே31**

என்று இறைவனிடம் பொருள் வேண்டுதற்கு பதி லாய் அருள் வேண்டி நிற்பது தமிழ்மரபாகும். போர்க் களத்திலும், எத்தகைய இடர்ப்பாட்டிலும், மனநெ ருக்கடிகள் மிகுந்த உணர்வெழுச்சிக் காலங்களிலும் கூட தமிழர்கள் அடிப்படையான மானுட அறத்தைக் கைவிடாத திறத்தினை, சங்ககால புற இலக்கியங் கள் அறியத் தருகின்றன. சங்க இலக்கியங்களுள் வீரத்தை மட்டுமல்லாது மனித வாழ்வியலையும், போரின் மறுபக்கத்தினையும், நிலையான அறக்கருத் துக்களையும் எடுத்துரைக்கும் நூலாக புறநானூறு திகழ்கிறது.

**யாதும் ஊரே யாவரும் கேளிர்32**
**என் உலகம் முழுவதையும் ஒரு குடும்பமாய்க் கருதும் பரந்த நோக்கினை முன்வைக்கும் இந்நூல்,**
**உண்டாலம்ம இவ்வுலகம்......**
**தமக்கென முயலா நோன்றாள்**
**பிறர்க்கென வாழுநர் உண்மையானே"33**

என்று உலகம் நிலைபெற்று விளங்குவதற்கான காரணத்தை ஆராய்ந்து கூறுகிறது. காவிரிப் பூம்பட்டி னத்தின் சிறப்பினைக் கூறும் பட்டினப்பாலை, நக ரின் வளத்தைச் சிறப்பித்த பின்னாக,

**மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்**
**புலம்பெயர் மாக்கள் கலந்து இனிது உறையும்**
**முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்**
**வார் இரும் கூந்தல் வயங்கு இழை ஒழிய**
**வாரேன் வாழிய நெஞ்சே....34**

என்று தலைவன் உரைப்பதாகக் கூறுகிறது. மொழி யாலும், இனத்தாலும், தேசத்தாலும், இன்ன பிறவற் றாலும் வேறுபாடுகள் இருந்தபோதிலும் அவ்வூரில் மக்கள் அனைவரும் இனிது உறைந்திருந்தனர் என் பதும் அத்தகைய அமைதியான வாழ்விற்கு அனைவர் மனதிலும் நிறைந்திருந்த அன்பும் மனிதநேயமுமே அடிப்படைக் காரணம் காரணம் என்பதும் இவ்வரி களால் உணரப்படுகிறது.

தமிழின் காப்பிய நூல்களுள் காலத்தால் முற்பட் டதும், குடிமக்கள் காப்பியம் என்று போற்றப்படுவ துமான சிலப்பதிகாரம், பிறர்க்கின்னா முற்பகல் செய் யின் தமக்கின்னா பிற்பகல் தாமே வரும் 35 என்ற உலகப்பொதுமறையின் பொருளை அடிப்படையா கக் கொண்டு எழுந்த நூலாகும். இக்காப்பியத்துள் இந்திர விழவு ஊர் எடுத்த காதையில் இடம்பெறும்,

**பெருநில மன்னன் இருநிலம் அடங்கலும்**
**பசியும் பிணியும் பகையும் நீங்கி**
**வசியும் வளனும் சுரக்க என வாழ்த்தி38**

என்ற வரிகள் மனிதநேயச் செம்பொருளைப் புலப்படுத்துவனவாக அமைகின்றன. நாட்டு மக்கள் அனைவரும் பசியும் பிணியும் பகைமையும் அற்று வளம் பெருக வாழ வேண்டும் என்ற தூய நோக்கத் தினை இவ்வடிகள் அறியத் தருகின்றன. மேலும்,

**அறவோர்க்களித்தலும் அந்தணர் ஓம்பலும்**
**துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்**
**விருந்தெதிர் கோடலும்...37**

என்று இல்லறக் கடமைகளாக மனிதநேயச் செயல் களை வரிசைப்படுத்துகிறது சிலப்பதிகாரம். இவை யன்றி, இக்காப்பியத்தினூடாக இடை வரும் முற்பி றப்புக் கதைகள் பலவற்றில் மாற்றாள் மகவுக்குப் பாலூட்டிய பெண், மாற்றாளின் குழந்தை கிணற்றுக் குள் விழுந்துவிட தன் குழந்தையையும் கிணற்றுக்குள் வீழ்த்துப் பின் இரு குழந்தைகளையும் கேடின்றித் திரும்பப் பெற்றவள், வீட்டிற்குள் புகுந்து உணவும்

நீரும் அருந்திய குரங்கைத் தன் மக்களைப் போல ஓம்பும்படி மனையாளுக்கு அறிவுறுத்திய சாயலன் என் போன் என நேயமிகு மாந்தர்கள் இடம்பெற்றுள்ளனர். சாயலனின் இல்லத்தில் நாடோறும் விரதம் மேற்கொண்ட பக்தர்கள் வந்து பசியாறிச் செல்வதையும், அவன் மனைவி குரங்கினை மகவாய்க் கருதி வளர்த்து, அது இறந்த பின்பாய் அவள் தானம் செய்யும் போதெல்லாம் அந்தக் குரங்கிற்கும் ஒருபகுதி தானம் செய்ததையும்,

**எட்டி சாயலன் இருந்தோன் தனது**
**பட்டினி நோன்பிகள் பலர்புகு மனையில்...38**
**என்றும்**
**காதற்குரங்கு கடைநாள் எய்தவும்**
**தானம் செய்வழி அதற்கு ஒரு கூறு**
**‘தீது அறுக’ என்றே செய்தனர்.39**

என்றும் வரும் அடிகளால் அறியலாம். மேலும் அரசியல் பிழையால் கணவனை இழந்த கண்ணகி வெகுண்டு மதுரை நகருக்கு எரியூட்டும் போதிலும்,

**பார்ப்பார் அறவோர் பசு பத்தினிப் பெண்டிர்**
**மூத்தோர் குழவி எனும் இவரைக் கைவிட்டு**
**தீத்திறத்தார் பக்கமே சேர்க.....40**

என்று தாளவியலாத இழப்பினூடேயும் பெருங் கோபத்துள்ளும் கூட கருணை மறவாதவளாய் தீக்கடவுளை ஏவுகின்றாள். மற்றுமோர் பெருங்காப்பியமான வளையாபதி,

**பொய்யன்மின் புறம் கூறன்மின் யாரையும்**
**வையன்மின் வடிவல்லன சொல்லி நீர்**
**உய்யன்மின் உயிர்கொன்று உண்டு வாழும் நாள்**
**செய்யன்மின் சிறியாரோடு தியன்மின்**
**கள்ளனமின் களவு ஆயின யாவையும்**
**கொள்ளன் மின்.......41**

என்று மனிதநேய அறவுரைகளை மனிதகுலத்தின் முன் வைக்கிறது. சிலம்புடன் பிறந்த சிறந்ததோர் இலக்கியமாய்த் திகழும் மற்றுமோர் காப்பியம் மணிமேகலை. எவ்வுயிரிடத்தும் அன்பாய் இரு என்று வலியுறுத்தும் இந்நூல், ஒழுக்கமுடைய சமுதாயம் உருவாக உள்நின்று உடற்றும் பசிப்பிணியை போக்க வேண்டும் என்று உணர்த்தும் அருநூலாகும்.

**அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின்**
**மறவாது இதுகேள் மன்னுயிர்க்கெல்லாம்**
**உண்டியும் உடையும் உறையுளும் அல்லது**
**கண்ட து இல்...42**

என்று அறத்தின் திறத்தினைப் பறைசாற்றும் மணிமேகலைக் காப்பியம் உலகில் தலையாய மனித நேயச் செயலாக விளங்குவது ‘அற்றார் அழி பசி



தீர்த்தலே’ என்று வலியுறுத்துகிறது.

**மண்டிணி ஞாலத்து மக்கட்கெல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே’ 43**

என்று உணவளித்தலின் பெருமையைப் பேசுவதோடு,

**காணார் கேளார் கால் முடப்பட்டோர்**
**பேணுநர் இல்லோர் பிணிநடுக்குற்றோர்**
**யாவரும் வருகவென்று இசைத்துடன் ஊட்டி44**

என்பதன் மூலம் உடல் ஊனமுற்றோருக்கும் ஆதரவற்றோருக்கும் நோயாளிகளுக்கும், மணிமேகலை தாயினும் சாலப்பரிந்து உணவூட்டிய காட்சியையும் கண்முன் கொணர்ந்து நிறுத்துகின்றார் சீத்தலைச் சாத்தனார். குலத்தால் பயனில்லை. குணமும் ஒழுக்கமும் மக்கள் தொண்டுமே இறைவன் விழைப்பவை. அதன் மூலமே வீடுபேற்றினை அடைய முடியும் என்பதை ஆபுத்திரன், மணிமேகலை வாயிலாக விளக்கும் இக்காப்பியம் ஆருயிர் மேல் அன்பு கொண்டு அறம் செய்து ஐம்புலன்களை அடக்கி அறிவுடன் வாழ்ந்து இன்னா செய்தாரையும் அன்புடன் திருத்துக என்று கூறுகிறது. மேலும் சாதி வேற்றுமையைச் சாடும், வேள்விக்காகவேனும் உயிர்க்கொலை புரிதலை எதிர்க்கும் மாபெரும் மனிதநேய இலக்கியமாக விளங்குகின்றது.



ஆவுக்காயினும் அந்தணர்க்காயினும்
யாவர்க்காயினும் எளியவர்க்காயினும்
சாவப்பெற்றவரே தகை வானுறை
தேவர்க்கும் தொழும் தேவர்கள் ஆவார்11 45

என்பது கம்பரின் மனிதநேய வாக்காகும்.

தமிழின் அறஇலக்கியங்கள் தொடர்ந்து வலியுறுத்தும் அறநெறிகள் பலவற்றுள்ளும் அன்பும் அகிம்சையுமே தலையாய அறங்களாகப் போற்றப்படுகின்றன. முன்னர்க் கண்டது போல உலகப் பொதுமறையாம் வள்ளுவம் நேர்மறையாகவும் எதிர்மறையாகவும் மனிதநேயத்தை ஓம்பும் முறைகளையும் தவிர்க்க வேண்டிய நேயமற்ற தீக்குணங்களையும் தனித்தனி அதிகாரங்களாக வைத்துப் புகல்கிறது.

மன்னுயிரோம்பியருவாற் கில்லென்ப
**தன்னுயிரஞ்சும் வினை11 46**
**எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்**
**மாணாசெய் யாமை தலை11 47**

என்பனவற்றைச் சிறந்த எடுத்துக்காட்டுக்களாகக் கொள்ளலாம். பிற உயிர்களின் துன்பம் கண்டவிடத்து அதனை விரைந்து களைய முற்படுபவனும், பசித்தவரின் பசித்துன்பம் போக்குபவனும், இகழ்தல், தீத்திறத்தாரோடு சேர்தல் முதலிய உலகம் பழிக்கும் செயல்களை ஒழித்தவனும், இன்சொலாளனுமாகிய ஒருவன் பிற நூல்களைக் கற்று அறிய வேண்டிய பொருள் ஏதுமற்றவனாவான் என்பதை,

**இடர்தீர்த்தல் எள்ளாமை கீழ்இனம் சேராமை**
**படர்தீர்த்தல் யார்க்கும் பழிப்பின் நடை தீர்த்தல்**
**கண்டவர் காமுறும் சொல் காணின் கல்வியின்கண்**
**விண்டவர் நூல் வேண்டாவிடும்11 48**
**என்கிறது ஏலாதி.**
**இம்மி அரிசித் துணையானும் வைகலும்**
**நும்மில் இயைவ கொடுத்துண் மின்49**
**என்று பகுத்துண்ணலின் சிறப்பையும் தானத்தின் மேன்மையையும் வலியுறுத்துகிறது நாலடியார்.**
**பொருளினால் ஆகுமாம் போகம் நெகிழ்ந்த**
**அருளினால் ஆகும் அறம்11 50**

என்று அருளின் மேன்மையை உணர்த்துகிறது நான்மணிக்கடிகை

நெறிபிறழும் மக்களை நன்நெறிக்கண் உய்க்கவும். அவர்களை துன்பச் சுழலினின்று மீட்டெடுக்கவும் அருளாளர்கள் கண்ட உத்தியே பக்தி இயக்கமாகும். பக்தி இயக்கம் கடவுட் கொள்கையை விதந்தோதியது. இறைவனை மையப் புள்ளியாய்க் கொண்டு இறைவனை நேசிக்கவும், இறைவனுக்கு அஞ்சி நடக்கவும், அவனிடத்து முழுமையாய் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளவும் மனிதனுக்குக் கற்பித்தது. மனிதனின் மனத்தில் இறைவன் பால் உருவாகும் அளவிறந்த அன்பினை இறைவனது படைப்புக்களான அனைத்து உயிர்களிடமும் செலுத்தும்படி அறிவுறுத்தியது. மக்கள் தொண்டே மகேசன் தொண்டெனக் கூறி இறைவனின் பெயரால் சமுதாயம் முழுவதையும் அன்பால் பிணைத்தது. இறை பக்தியின் வாயிலாக சமய அருளாளர்கள் கண்ட வெற்றி இதுவேயாகும். அன்பே கடவுள். கண்ணில் காணும் உயிர்கள் யாவையும் அக்கடவுளின் வடிவங்கள் என்ற கருத்தினை சமூகத்தில் விதைத்ததன் மூலம் அன்பை உலகின் ஆதார சுருதியாக்கினர்.

**நேயத்தே நின்ற நிமலனடி போற்றி 51**
**அம்மையே அப்பா ஒப்பில்லா மணியே**
**அன்பினில் விளைந்த ஆரமுதே - 52**
**என்று இறைவனை அன்புருவாய் நினைந்து போற்றிப் பரவுகிறார் மாணிக்கவாசகர்.**
**படமாடக் கோயில் பகவற்கொன் றியில்**
**நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா**
**நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றியில்**
**படமாடக் கோயில் பகவற்க தாமே11 53**
**என்பதன் மூலம் மனிதநேயத்தை பக்தியோடிணைத்துக் காட்டுகிறார் திருமூலர்.**
**அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக**
**இன்புருகு சிந்தையே இடுதிரியா..11 54**

கொண்டு திருமாலை அன்பின் வழி நின்று வணங்கு வதாகக் கூறுகின்றனர் ஆழ்வார்கள்.

இங்ஙனம் இறைபக்தியின் வாயிலாக மனிதகு லத்தின் மீதான உள்ளார்ந்த அன்பினை பலகாலும் வலியுறுத்திய சமயச் சான்றோர் பக்தியின் பயனாய் சமுகத்தில் மறுமலர்ச்சியைத் தோற்றுவித்தனர். இறை வனை அடைய வருணபேதங்கள் அவசியமற்றவை, செல்வமோ. ஞானமோ, பதவியோ அதிகாரமோ தேவையில்லை. தூய்மையான மனனும் இறைவனி டத்தும் அடியார்களிடத்தும் பக்தியும் உயிர்களிடத்து அன்பும் கொண்டிருத்தலே போதுமான தகுதிகள் என்றனர். சமூகத்தில் சாதியாலும், செல்வ வளத் தாலும், தொழில் முறையாலும் மேலோர் கீழோர் என பிரிக்கப்பட்டிருந்த பாகுபாடுகளை ஒழித்து இறைவ னின் பால் அன்பு பூண்டவர் மேலோர் அல்லாதவர் கீழோர் என்ற புதிய பகுப்பை உருவாக்கினர். தாழ்ந்த குலத்தார் என்று கருதி ஒதுக்கப்பட்டு வந்த சாதிகளி னின்று தோன்றி வந்த நந்தனாரும், திருநீலகண்ட யாழ்ப்பாணரும், திருப்பாணாழ்வாரும் இறைவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டு இன்றளவும் கோவில்களில் அடியார்களாக பூசிக்கப்பட்டு வருவது மனிதநேயத் தின் அடிப்படையில் பக்தியின் துணை கொண்டு நிகழ்த்தப்பட்ட பெரும் சாதனைகளாகும்.

சமுதாயத்தில் சாதி முறையின் அடிப்படையில் நிலவிய ஏற்றத்தாழ்வுகளையும், தாழ்நிலை அடைந்த வர்களின் இயலாமை நிலைகளையும் கண்ணுற்ற பக்தி இலக்கியச் சான்றோர்கள் சமுதாயத்தில் நிலவிய சாதி வேறுபாடுகளை அகற்றி இறையன்பு என்ற குளிர் மர நிழலின் கீழ் மக்கள் அனைவரையும் ஒன்றுபட்டு நிற்கச் செய்து சமநிலையான சமுதாயம் அமையப் பாடுபட்ட மையைப் பக்தி இலக்கியம் உணர்த்துகின்றது. மக்களுக்கு இறைவனின் பெருமைகளையும் திருவருட்செயல்க ளையும் எடுத்துக் கூறியும், அறிவுரைகள் இயம்பியும் தம் வாழ்க்கையில் நடந்து காட்டியும் நாயன்மார்களும் ஆழ் வார்களும் அமைதியான முறையில் சாதி வேறுபாடற்ற சமுதாயத்தைப் படைக்க முயன்ற முனைப்பைக் காண்கி றோம்'' என்ற முனைவர். ஈசுவரபிள்ளையின் கூற்று மேற்கண்ட கருத்திற்கு வலுச் சேர்ப்பதாக அமைகிறது.

வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடி யவரும் அனைத்து உயிர்களுக்காகவும் அருள்நெறி சுரந்து ஜீவகாருண்யமே வீடுபேற்றிற்கு வழி

என்று உணர்த்தியவருமான வள்ளலார் உயிர்கள் யாவையும் சமமெனக் கண்டார். எல்லா உயிர்களி டத்தும் பாகுபாடின்றி அன்பு செலுத்தும் நிலையை அவர் ஆன்மநேய ஒருமைப்பாடு எனக் குறிப்பிட் டார்.

**மண்ணுலகத்திலே உயிர்கள் தாம் வருந்தும்**
**வருத்தத்தை ஒருசிறிதெனினும்**
**கண்ணுறப் பார்த்தும் செவியுறக் கேட்டும்**



**கணமும் நான் சகித்திட மாட்டேன்1150**

என்று தன் அன்பு நிலையைப் புலப்படுத்துகிறார் வள்ளலார். சமய அருளாளர்கள் மட்டுமின்றி சித்தர் களும் அன்பு நெறியையே வலியுறுத்தினர்.

**வைதாரைக் கூட வையாதே - இந்த**
**வையம் முழுவதும் பொய்த்தாலும் பொய்யாதே**
**வெய்ய வினைகள் செய்யாதே - கல்லை**
**வீணிற் பறவைகள் மீதில் எய்யாதே1157**

என்று கருணையையும் அகிம்சையையும் வாழ்வி யல் நெறியாகக் கைக்கொள்ளும்படி அறிவுறுத்து கின்றனர். பொருளுடையாரை அவர்களின் தான தரு மச் செயல்களின் மூலமாகவும், வீரர்களின் வீரத்தை போர்க்களத்திலும், தெளிவுடையாரை அவர் முகத் தில் காணும் ஒளியாலும் அறிந்து கொள்வது போல இறைவனின் அருள் பெற்றவர்களை அவர்களின் தவ ஒழுக்கத்தாலும், நல்ல குணத்தாலும் மட்டுமின்றி துயருறும் உயிர்களிடத்துக் காட்டும் அருளாலும் எஞ் ஞான்றும் மனத்திடைப் பெருகும் அன்பாலும் குற்ற மற்ற சொல்லாலும் அடையாளம் காணலாம் என் பார் பட்டினத்தடிகள். இதனை,

**பொருளுடை யோரைச் செயலினும்**
**வீரரைப் போர்க் களத்தும்**
**தெருளுடை யோரை முகத்தினும்**
**தேர்ந்து தெளிவது போல்**
**அருளுடை யோரைத் தவத்தில்**
**குணத்தில் அருளில் அன்பில்**
**இருளறு சொல்லினும் காணத்**
**தகும் கச்சி ஏகம்பனே1158**

என்னும் பாடலால் அறியலாம்.

### பசிப்பிணி தீர்த்தல்

உலகில் உயிர்கள் யாவற்றையும் இயங்கச் செய் வது பசியாகும். மனிதனுக்கு பசியின் பொருட்டு



உருவாகும் தேடலே வாழ்வியல் தேவைகள் அனைத்திற்கும் முதற்படியாய் அமைகின்றது. பசியின் கொடுமைகளை,'இடும்பைகூர் வயிறே உன்னோடு வாழ்தலரிது'59 என்று ஔவையாரும்,

**குடிப்பிறப்பழிக்கும் விழுப்பங் கொல்லும்**
**பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்**
**நாண்ணி களையும் மாணெழில் சிதைக்கும்**
**பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்**
**பசிப்பிணி என்னும் பாவி80**

என்று மணிமேகலையும் எடுத்துக் காட்டுகின்றன. மிகச்சிறந்த மனிதாபிமானிகளாக போற்றப்பட்ட அறிஞர்களும் அருளாளர்களும் பசிப்பிணி போக்குதலையே தலையாய அறமெனக் கூறியுள்ளனர். திருக்குறளில் ஈதலின் சிறப்புணர்த்தும்,ஈகை என்னும் அதிகாரத்தில் 3 குறள்கள் வறியவரின் பசிப்பிணியைப் போக்குதலின் அவசியம் குறித்து எடுத்துரைக்கின்றன. பசியால் வீடு தோறும் இரந்து இளைத்திருக்கும் மானிடரைக் கண்டால் மனம் வருந்தித் துன்புறுவதாக கூறுகின்றார் வள்ளலார். வடலூரில் அவர் நிறுவிய சத்திய தருமசாலை, பசித்தவர் எவராயினும் , எந்நேரமாயினும் அவருக்கு உணவிட்டு பசி போக்குதலை இன்றளவும் நல்லறமாகப் பின்பற்றி வருகின்றது. அப்பூதியடிகள் திருநாவுக்கரசர் பெயரால் ஊரில் பல அன்ன சத்திரங்கள் நாட்டியதையும், சிறுத்தொண்டர் , இளையான்குடி மாற நாயனார். காரைக்காலம்மையார் உட்பட இறை அடியார்கள் பலரும் பசித்தார்க்குச் சோறிடுதலையே வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு அறம் பேணியதையும் பெரியபுராணத்தால் அறிய முடிகிறது. புறநானூற்றில், அன்னதானத்தில் சிறந்தவனான சிறுகுடி கிழான் பண்ணன் என்பவனைக் காணச் செல்லும் புலவர்.

**பசிப்பிணி மருத்துவன் இல்லம்**
**அணித்தோ சேய்த்தோ கூறுமின் எமக்கே 81**

**என்று எதிர் வருவோரிடம் விசாரிக்கின்றார். மேலும் அன்னமிடுதலாகிய அருட்செயல் புரியும் பண்ணனை,**
**யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய''82**
**என்று வாழ்த்துகின்றார். திருப்பாவையில்,**
**அம்பரமே தண்ணரே சோறே அறஞ்செய்யும்**
**நம்பெருமாள் நந்தகோபாலா..''83**

என்று அழைத்து, நந்தகோபர் வறியவர்க்கு உண்ணச் சோறும், உடுக்க உடையும், அருந்த நீரும் கொடுத்து அறஞ்செய்பவர் என்பதையுணர்த்துகிறாள் ஆண்டாள் . பசி தீர்த்தல் என்னும் செயல் ஒன்றையே மாபெரும் அறமாகக் கருதும் மணிமேகலை பலவிடங்களில் அன்னமிடுதலின் சிறப்பினை வலியுறுத்துவதோடு ஏழு இடங்களில் உணவை 'ஆருயிர் மருந்து' என்னும் தொடரால் குறிப்பிடுகிறது. மேலும்,

**ஆற்றுநர்க்களிப்போர் அறவிலை பகர்வோர்**
**ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்**
**மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை64**


என்று அறுதியிட்டுக் கூறுகிறது. இவற்றினின்று பசி தீர்த்தல் மாபெரும் அறமாகவும், பண்பாட்டுச் சின்னமாகவும், மனிதநேயமிக்க அரும்பண்பாகவும் விளங்குவதை உணரலாம்.

தொடரும்....

# சிவபுராணத்தில் சைவசித்தாந்தச் சிந்தனைகள்

ஆக்கியோன் : அருட்சொல்செம்மணி,
சொல்லழுதவாரி
சைவப்புலவர் இரா.ஜீவன்பிரசான்
MA (SAIVASIDDHANTHA) Reading





**அ). அறிமுகம்**

சிவனை முழுமுதற்கடவுளாக் கொண்டு வழிபாடாற்றும் சமயம் சைவசமயமாகும். சைவமானது சிவசம்பந்தமுடையது, அன்பு வழிப்பட்டது, சநாதனமாது, ஆதி அந்தமற்ற மெய்ச்சமயமாகவும், முதுபெரும் சமயமாகவும் திகழ்கின்றது.

**சைவம் சிவனுடன் சம்பந்தமாகுதல்**
**சைவம் தனைஅறிந்தேசிவம் சாருதல்**
**சைவம் சிவன் தன்னைச் சாராமல் நீங்குதல்**
**சைவம் சிவானந்தம் சாயுச்சியமே.**
**(திருமந்திரம்:-1512)**

ஏன திருமூலநாயனாரின் வாக்கினுடாக சைவசமயத்தின் உண்மை நிலை எடுத்தியம்பட்டுள்ளது.

இவ்வண்ணமாக சைவசமயத்தின் உண்மைகளையும், உயிர்கள் இறைவனிடத்திலே சேர்வதற்கான உபாயங்களையும், சைவசமயம் அதன் தத்துவமாக சைவசித்தாந்த்தை கொண்டு இறையருளால் அருளாளர்களினூடாக, ஞான நூல்களில் வாயிலாக சைவசமய உண்மைத்தன்மைகளை புகட்டுகின்றது.

சைவப்பெருமக்களின் இருக்கண்களாக பக்தியை வளர்க்க திருமுறைகளும், அறிவை வளர்க்க மெய்கண்டசாத்திரங்களும் விளங்குகின்றன. காலத்தால் திருமுறைகள் முந்தியது. திருமுறைகள் பன்னிரெண்டாக வைப்புச் செய்யப்பட்டுள்ளது. இவை இலக்கியங்களாகவும், இவற்றுக்குரிய இலக்கணங்களாக மெய்கண்ட சாத்திரங்கள் விளங்குகின்றன.

பன்னிருதிருமுறைகளுள் எட்டாதஞானச் செழுமையை தரவல்ல நிலையின் கண் நின்று பரமாசாரியால் ஆட்கொள்ளப்பட்ட மாணிக்கவாசக சுவாமிகளினால் திருவாசகம் அமையப்பெறுகின்றது. அருள் நிறைவாசகங்களாக திரு வாசகம் விளங்குகின்றது. இவை ஐம்பதொருதிருப்பதிகங்களை அதாவது சிவபுராணம் முதலாக அச்சோப் பதிகம் ஈறாககொண்டு அறநூற்றி ஐம்பத்தாறு (656) பாடல்களையும் (ஒருசாரார் 658 பாடல்கள் எனவும் கொள்வர்) கொண்டு நிரம்பிய சைவசித்தாந்தக் கருத்துக்களையும் (Saivasiddhanta thoughts) உள்ளடக்கி இன்மை மறுமை பயன்களை தரவல்ல ஞான நூலாக அமையப்பெற்றுள்ள சிறப்புடையது.

இத்தகைய சிறப்புடைய ஞானநோக்க நூலாகி திருவாசகத்தின் நுளைவு பதிகமாக சிவபுராணம் அமையப் பெறுகின்றது. சிவபுரானமாது திருவாசகத்தின் அறிமுகத்தை நல்கும் முகவுரையாக மணிவாசகரினால் அருளப்பட்டது என்பது ஆய்வாளர்ளின் கருத்தாகவுள்ளது. சிவபுராணத்தில் காணப்படும் சைவசித்தாந்தச் சிந்தனைகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**ஆ). சிவபுராண அமைப்பு**
**(STRUCTURE OF SIVAPURANAM)**

திருவாசகத்தின் நுளைவாயிலாகியசிவபுராணபதிகமானதுஈற்றடிமுச்சீராகவும் ஏனைய அடிகள் நாற்சீராகவும் கொண்டவாறு 95 அடிகளைஉடைய கலிவெண்பாவாய் ஆனது. இது பின்வரும் உறுப்புக்களையுடையவாறு நூன்முகம் (கழசநறழசன)போலஅமையப்பெற்றுள்ளது.



**அவையாவன:-**

- வாழ்த்து (1-5 அடிகள்)
- வணக்கம் (6-16 அடிகள்)
- வருபொருளுரைத்தல் (17-22 அடிகள்)
- அவையடக்கம் (32-35 அடிகள்)
- பயிலுவோர் நிலை
- பயிலும் திறன்　　　84-95 அடிகள்
- பயில்வதன் பயன்

இவ்விதமாக அமைந்துள்ளது. மேலும் சிவபுராணத்தில் வருகின்ற

நமசிவாய வாழ்க நாதன்தான் வாழ்க
இமைப்பொழுது என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழியாண்ட குருமனிதன் தாள் வாழ்க
ஆகமாகி நின்ற அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க

எனவரும் 1-5 வரையிலான அடிகள் தோறும் வாழ்கஎன்றபதம் ஆறும் (06)

வேகங் கெடுத்து ஆண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்கிவிக்கும் சீரோன் கழல் வெல்க

எனவரும் 6-10 வரையான அடிகள் தோறும் வெல்கஎன்ற பதம் ஐந்தும் (05)

ஈசனடி போற்றி எந்தை அடி போற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயாப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி

எனவரும் 11-16 வரையான அடிகள் தோறும் போற்றி என்றபதம் எட்டும் (08) முறையே வாழ்க ஆறும் (06) வெல்க ஐந்தும் (05) போற்றி எட்டும் (08) ஒருமிக்க 5+8ஸ்ரீ658 அறநூற்றி ஐம்பத்தெட்டு எனவருவது திருவாசகத்தில் அறுநூற்றி ஐம்பத்தெட்டு (658) பாடல்களை குறிக்கின்றது,என மணிவாசகர் அகசான்றாக திருவாசக அமைப்பை Structure of the Thiruvasagam பற்றி விளம்பியுள்ளார். என துணிய முடிகின்றது.

மணிவாசகரின் வாக்கிற்கமைய திருவாசகப் பாடல்கள் சிவபுராணம் 658 பாடல்கள் கொண்டது என்பதை அகச்சான்றாக கொள்ளதக்கது. ஒரு சாரார் 656 பாடல்கள் எனவும் கொள்வர்.

### இ). சிவபுராணம் - பெயர்க்காரணம்

மணிவாசகரின் சிவபுராணமானது அதனுடைய 23 -25 வரையான அடிகளினூடக மெய்ப்பொருளாகிய சிவபெருமானின் அநாதியான பழமையை பற்றி கூறுவதாக அவருடைய அகவாக்கிற்கமைய துணிய முடிகின்றது.

***விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கு ஒளியாய்***
***எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்***
***பொல்லாவினையேன் புகழுமாறு ஒன்றறியேன்***

**(சிவபுராணஅடிகள் :- 23-25)**

இங்கு,நெற்றிக் கண்ணுடைய சிவபெருமான் அவருடைய திருவருட் கண்ணை எனக்கக்காட்டி அருள் செய்தான். மீபின் அவனே என் சிந்தையுள் நீங்காது நிலைபெற்றான். அவ்வருளினால் அவன் திருவடியையும் வணங்கும் பேற்றினைப் பெற்றேன். என்னுடைய அகமானது (உள்ளம்) மகிழ்வைடையும் படியும்,என் முற்பிறவியின் பழவினைகள் யாவும் மாயும்படி அருள் செய்தான். எனேவ சிவபெருமானது அநாதி முறைமையான பழமை முழுவதையும் நான் முறைப்படி கூறுவேன் என விளம்புகின்றார். இதற்கிணங்க சிவபுராணம் எனப் பெயர் வரலாயிற்று. சுணீவ என்றசொல் சிவபெருமானையும்,புராணம் என்பது பழமை என்பதையும் குறிக்க,அநாதியானவர் சிவபெருமான் அவனுடைய பழமைத்தன்மையை கூறும் திருவாசகத்தின் முதல் பதிகமாகும். இதுவே சிவபுராணம் எனபெயர் வரக்காரணமாகும்.

# இந்து தர்மாசிரியர் வழிகாட்டி
# சமய ஞானிகளும் பெரியார்களும்


வான்மீகி முனிவர்


வேதவியாசர்


அகத்தியர்


ஆறுமுகநாவலர்


சுவாமி விபுலானந்தர்


ஆதிசங்கரர்


மத்துவர்


இராமகிருஷ்ணர்



இராமானுஜர்


சுவாமி விவேகானந்தர்


ராஜாராம் மோகன் றோய்


தயானந்த சரசுவதி



மீராபாய்


துளசிதாசர்


அருணகிரி நாதர்


தாயுமானவர்


குமரகுருபர்



# இலங்கை இந்து தர்மாசிரியர் வழிகாட்டி

## வேதகால ரிஷிகள்

**வே**தங்களில் முதன்மை வேதமான இருக்கு வேதத்தில் சுமார் 350க்கு மேற்பட்ட ரிஷிகளைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அவர்களில் அங்கிரா, ரஹீக்கள், குஷிகர் போன்ற ரிஷிகள் மிகப் புராதனமானவர்கள் என்று அவர்கள் இயற்றிய மந்திரப் பாடல்கள் மூலமாக அறிய முடிகிறது.

இருக்கு வேதம் 10 மண்டலங்களை (அத்தியாயங்கள்) கொண்டது அதில்,

**இரண்டாம் மண்டலத்தில் - கிருத்ஸமத்ஷி**
**மூன்றாம் மண்டலத்தில் - விசுவாமித்திரர்ரிஷி**
**நான்காம் மண்டலத்தில் - வாமதேவர்ரிஷி**
**ஐந்தாம் மண்டலத்தில் - அத்தி ரிஷி**
**ஆறாம் மண்டலத்தில் - பரத்வாஜர் ரிஷி**
**ஏழாம் மண்டலத்தில் - வசிஸ்டர் ரிஷி**
**எட்டாம் மண்டலத்தில் - கண்வர்ரிஷி**

போன்ற பெயருடைய ரிஷிகள் முக்கியம் வாய்ந்தவர்களாக குறிப்பிடப்பட்டுள்ளனர். இவர்களின் வரிசையாக கஸ்யபர்,கோதமர், ஜமதக்னி ஆகியோரும் முக்கியம் பெற்ற புராதனமான ரிஷிகளாக இருக்கு வேதத்தில் வருகின்றனர். இவர்களில் அதிக இருக்கு வேத சுலோகங்களை பாடியருளியவர்கள் வாமதே




**சைவப்புலவர் சு . துஷ்யந்த்**
**BA (Hons) PGDE, MA**
**முன்னாள் ஆசிரியர்.**
**பாரீஸ் நகர் – பிரான்சு**




**பரத்வாஜர்**

வர், விசுவாமித்திரர், பரத்வாஜர், வசிஷ்டர் முதலிய ரிஷிகள் ஆவர். குறிப்பாக 103 சூக்தங்களை அதிகமாக பாடியவர் வசிஷ்டர்தான். இவரைத் தொடர்ந்து பரத்வாஜர் 60 சூக்தங்கள், வாமதேவர் 55 சூக்தங்கள், விசுவாமித்திரர் 48 சூக்தங்கள், கிருத்ஸமத் 40 சூக்தங்கள் என்பவற்றைப் படைத்தனர்.

இருக்கு வேத ரிஷிகளும் அவர்களது பாடல்களும்

## 01. பரத்வாஜர்

இருக்கு வேதத்தில் இவரைப் பற்றி பல குறிப்புகள் வரையப்பட்டுள்ளது. பரத்வாஜர் ரிக் வேத ரிஷிகள் கூட்டத்தில் இரண்டாம் இடத்தினைப் பெற்று விளங்குகின்றார். இவரின் தந்தை பிரகஸ்பதி தேவன். கர்க், ரிஜிஷ்வா ஆகிய புத்திரர்களுக்குத் தந்தை இவர்களும் ரிஷிகளானவர்கள். திவோதாஸின் சாணக்கியர், செல்வாக்கு படைத்த புரோகிதர் ஒரு உயர்ந்த கவிஞரும் கூட, பரத இனத்தாருக்கு மட்டுமின்றி மற்ற இனக் குழுவினருக்கும் மரியாதைக்குரியவராக இருந்தார்.

இலக்கிய ரீதியில் நோக்கினால் ரிக் வேத ஆறாம் மண்டலத்தில் அறுபது சூக்தங்களைப் பாடியவர். இதனால் அம் மண்டலத்திற்கு பரத்வாஜ மண்டலம்; என்றும் பெயர். அவருடைய பாடல்கள் அரசர்களின் போர், வெற்றியை போற்றும் விதம், யாகங்கள், தேவர்கள், இயற்கை வளங்கள் என்பவற்றைச் சுட்டிக் காட்டுவதாகவே காணப்படுகின்றன.

ரிக் வேதத்தில் தேவர்களின் எண்ணிக்கை பலவிதமாக உள்ளது. பரத்வாஜர் கீழ்க்கண்ட தேவர்களை குறிப்பிடுகின்றார். (6மண்- 50 சூக்தம்). அதிதி, வருண், அக்கினி, அர்யமா, சவிதா(பக்1) ருத்ர, வசுக்கள், மருத்(4) ரோதஸி(தியௌ-பிருத்வி) (6) இரு பிஷகர்கள் (அஸ்வினிகள்) (7) நாஸத்ய(10 ) சரஸ்வதி, வாயு, ரிபுட்சா, பர்ஜன்ய(12) அவர் த்யௌவை தந்தை (வானம்) என்றும், பிருத்வி யை தாய் (பூமி) என்றும் அக்கினியை சகோதரர் என்றும் சொல்கிறார். (6-51-5). மேலும் உஷை(விடியற் காலை) , மலைகள், நதிகள், பிதிரர்களுடன் சரஸ்வதி நதியையும் காப்பாற்றும்படி வேண்டினார்.

இதேபோல் இந்திரனின் பெருமையை இவ்வாறு பாடியுள்ளார். (6-17-2)

'இந்திரனே! எங்களைக் காப்பாற்றும்! நீர் எங்களை பகைவர்களிடமிருந்து பாதுகாப்பவர். நீர் எங்கள் விருப்பங்களை நிறைவேற்றுபவர். மலைகளைத் தூளாக்கும் வஜ்ராயுதம் படைத்தவர் நீர்! குதிரைகள் மேல் சவாரி செய்யும் நீர் எங்களுக்கு பல வித உணவு வகைகளையும் செல்வங்களையும் வழங்குவீர்! '

மற்றும் அக்கினியும் பெருமையையும் இவ்வாறு பாடியுள்ளார். (6-8-2)

விரதங்களைப் பாவிக்கும் அக்கினி எல்லையற்ற ஆகாயத்தில் தோன்றி, விரதங்களைக் காக்கின்றார். நற்காரியங்களைப் புரியும் அவர் வானத்தை அளக்கின்றார். அக்கினி தனது மகிமையால் சொர்க்கத்தைத் தொடுகிறார்.

அரசியலில் வரும் சபை பற்றியும் குறிப்பிடப்படுகின்றது. அது சபை உறுப்பினர்களை குறிக்கும். ராச்சிங்களை ஆளும் ராஜாவை பற்றியும் (6-4-4) குறிப்பிடுகின்றார். மற்றும் திவோதாஸ் பெற்ற வெற்றிகள், கவசம், வில், நாண், அம்புப்பொதி, குதிரைகள், ரதங்கள், கோடாலி போன்ற சாதனங்கள் பற்றியும் அஸ்வமேதயாகம் சோமயாகங்கள் பற்றியும் சோம பானம் பற்றியும், வயல், காடு பற்றியும் குறிப்பிடுகின்றார். விவசாயம், பசுக்கள், பால் தயிர், பற்றிய திரவியங்கள் சவ்வரிசி, தினை முதலிய தானியங்கள் பற்றியும் மேய்ச்சல் நிலங்கள் பற்றியும் தனது சூக்த பாடல்களில் குறிப்பிட்டுள்ளார்.



மும்மூர்த்திகளின் ரிஷிகளில் மூத்தவர் என்று வர்ணிக்கப்படும் பரத்வாஜரின் பாடல்களில் இருக்கு வேத காலத்தின் அரசியல், சமயம், வழிபாட்டு முறைகள், மக்களின் வாழ்க்கை முறைகள் பற்றி அறிந்து கொள்வதற்கு ஏதுவாக அமைந்தது எனலாம்.

## 02. வசிஷ்டர்

இருக்கு வேதத்தில் போற்றப்படும் ரிஷிகளில் அதிகம் கவனிக்கத்தக்கவர் வசிஷ்டர் ஆவார். இவர் பல்லாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்தவர் எனக் கருதப்படுகின்ற முனிபுங்கவர். பிரம்மனின் மானச புத்திரர்களுள் ஒருவர் இவரின் தந்தை மித்திரா வருணர்தேவர் எனச் சொல்லப்படுகின்றது. இவர் மனைவி அருந்

ததி, அகத்தியர் இவருடைய சகோதரர். சுணீத்ரமஹா, ம்ருலீக் என்பவர்கள் இவரின் புத்திரர்கள் என்றும் சொல்லப்படுகின்றது.

ரிக் வேதத்தின் ஏழாவது மண்டலத்தில் உள்ள அனைத்து சூக்தப் பாடல்களையும் இவரே பாடியுள்ளார். எல்லா ரிஷிகளையும் விட 103 சூக்தங்களை குறிப்பாக அதிக எண்ணிக்கையான பாடல்களைப் பாடியவர் என்ற பெருமைக்குரியவர். ரிக் வேத ஐதரேய பிராமணத்தில் ஆறுக்கும் அதிகமான இடங்களிலும் புராண இதிகாச கதைகளிலும் வஷிட்டரின் பெயர் வருகின்றது.



**விசுவாமித்திரர்**

வஷிட்டரின் பாடல்களால் அக்காலத்தில் நிலவிய அரசியல்வரலாறு, தேவர் வணக்க முறைகள் நிலவியல், வாழ்வியல் முறைகள் தெளிவாக கூறப்பட்டதை போல் வேறெந்த ரிஷிகளின் செய்யுள்களில் தெளிவுபடுத்தப்படவில்லை என்ற ரீதியில் வஷிட்டர் வேதகால ரிஷிகளில் முன்னிலைப் படுத்தப்படுகிறார்.புராணங்களின் காலத்தில் வஷிட்டர் ''வேதி புத்திரர்'' எனப் போற்றப்பட்டார். வஷிட்டரை 'நமத்ராவருணர்' (மித்திரன் இந்திரன் ஆகியோரின் மகன்) என்றும் ஊர்வசிக்குப் பிறந்தவர். இந்திரனை தனது பூஜைக்குரிய தெய்வமாகக் கொண்டவர் என்றும் (7-33-11) சொல்லப்பட்டுள்ளன.

இவரின் பாடல்களில் சுதாஸ் என்னும் அரசனின் வரலாறு கூறப்பட்டுள்ளது. சுதாஸின் வெற்றிக்காக ஒரு வேள்விமுறை செய்தார். அவருக்கு மகாபிஷேகம் செய்தார். அவன் பூமி முழுவதும் வெற்றி பெற அஸ்வமேதயாகம் புரிந்தார். 10 அரசர் போரிலே சுதாஸின் வெற்றியால் வசிட்டர் தம் வாழ்வில் நடந்த மாபெரும் நிகழ்ச்சி என்று கருதினார் என்று கூறப்படுகின்றது. இதேபோல் குத்ஸ- சுஷ்ணனின் யுத்தம் பற்றியும் (7-20-5) குறிப்பிடுகின்றார். மேலும் சம்பரனுடன் நடந்த 'தஸ்யுஹத்யா' எனும் யுத்தம் பற்றியும் வர்ணித்துள்ளார். திவோதாஸ் காலத்தில் பரத்வாஜர் மிகவும் செல்வாக்குள்ளவர் என்றாலும் 'பத்து மன்னர் யுத்தி' காலத்தில் வசிட்டர் அவரை விடவும் மிக அதிக செல்வாக்கு படைத்தவராக இருந்தார். குறிப்பாக வசிட்டர் பரத இனமக்களின் புரோகிதராக விளங்கினார். இவ்வாறு இவரின் சூக்தப்பாடல்களில் கால்வாசி வரலாறு பற்றியே பேசப்படுகின்றன.

வசிட்டர் ஒரு இந்திர பக்தர். இந்திரனுக்கு அலங்காரமுடைய துதிப்பாடல்களை (சூக்தமாக) ஓதியவர். வசிட்டர் (7.35) என்ற சூக்ததில் வேத சமூகம் ஒன்றை பாடியுள்ளார். அதில் பின்வரும் தேவர்களைப் பட்டியல் படுத்தியுள்ளார்.இந்திர- அக்கினி- வருண்- சோம்- பூஷா- பக் -புரந்தி - அர்யமா- தாதா- ரோதஸி- அத்ரி- மித்ர- அஸ்வினி இரட்டையர் -அந்தரிச்ச - ருத்ர - துவஷ்டா -கிராமி -பிரம்மா - கிராவா - யக்ரு- சூர்ய- நான்கு திசைகள் - மலைகள் -நதிகள் -ஆப்- அதிதி- மருத்துகள்- விஷ்ணு -பூஷன்- வாயு- சவிதா- உஷா- பர்ஜன்ய- சேத்திரபதி- விசுவதேவர்.

தேவர்களை தூதிக்கும் வேண்டல் சூக்தங்களையும் வணக்க தூதி முறைகளையும் வஷிட்டரின் ரிக்வேத சூக்தங்களில் அறியமுடிகின்றது வசிட்டர் ஆதித்ய தேவரிடம் நூற்றாண்டு வாழ்வதாக விண்ணப்பம் செய்கின்றார். (7.66.15) 'சோமம்' தேவர்களின் தெய்வீக என்று புகழ்கின்றார்.(7:65-13) சரஸ்வதி நதியினை பல பிரார்த்தனைப் பாடல்களில் ஓதியுள்ளார். இதனால் சரஸ்வதியின் உருவகத்தின் ஒரு பகுதி வஷிட்டர்(7-95-96) என மகிமைப்படுத்தப்பட்டார். உணவுகளைத் தூண்டவும் பசுக்களும் பெண்களிலும் கர்ப்பத்தை உண்டு பண்ணவும் பர்ஜன்னியன் அறுசுவை வேள்விப்பொருட்களை அர்ப்பணியுங்கள். (7-102-1-23 ) எனப் பாடியுள்ளார். இவ்வாறு வேத கால சமய வரலாறுகளைப் பற்றியும் வசிட்டர் விளக்கியுள்ளார்.

வஷிட்டரின் சூக்தங்கள் பல வேத கால சமூக நிலவரங்களைப் பற்றியும் குறிப்பிடுகின்றது. வஷிட்டரின் ஒரு சுலோகத்தில் (7-10-35) கல்வியின் பொருள் பற்றி விளக்கப்பட்டுள்ளது. 'இந்தத் தவளைகள் ஒன்று சொன்னதையே மற்றொன்று குருவைப் போல் மீண்டும் சொல்கிறது தவளைகளே! நீங்கள் அனைவரும் அழகாகச் சொல்லும் போது நீரின் அனைத்துப் பகுதியும் நன்றாகிவிடுகிறது இங்கே மழைகாலத்தில் தவளைகளின் கத்தலை

ரிக்வேத காலத்து சீடர்களின் பாடத்துடன் ஒப்பிட்டு இருக்கின்றது. இதேபோல் உடல்நலம் பேணுதல், ஆரோக்கிய வாழ்வு, மலை, நீர்நிலைப் பிரதேசங்கள், ஆடை, முடி அலங்காரங்கள், பசுக்களுக்கான இடம் என்பவற்றையும் சூக்தப் பாடல்களில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இவரைப் பற்றி சில குறிப்புகள் இராமாயணத்திலுள்ளது. இராமனுக்கு பட்டாபிஷேகம் நடத்தி வைத்தவர். சூரிய குல மன்னர்களின் குல குருவாக விளங்கியவர். அதேபோல் புராணத்தில், இவர் வானில் வஷிட்ட நட்சத்திரமாக விளங்கியவர். காம தேனுப் பசுவின் வரலாற்றோடு தொடர்புடையவர் சப்தரிஷிகளில் ஒருவராகவும் போற்றப்படுகின்றார்.

## 03. விசுவாமித்திரர்

வஷிட்டர், பரத்வாஜர் ஆகியோரைப் போன்று முக்கியத்துவம் வாய்ந்த ரிஷி விசுவாமித்திரர் ஆவார். இவர் காதியின் புத்திரர். குஷிகரின் பேரர் என்றும் குறிப்பிடப்படுகிறது. ரிக் வேதத்தின் மூன்றாம் மண்டலத்தில் வரும் சூக்தப் பாடல்களைப் பாடியவர்.

முதன் முதலில் வேத மக்கள் போற்றிய 33 தேவர்களை பற்றிப் முதல் முதலில் (3-9-90) குறிப்பிட்டவர் . இவர் இந்திரன், வருணன், பிரகஸ்பதி, சவிதா, சோம், மித்ரா ஆகிய தேவர்களை துதித்தார். நதிகளைப் பற்றி ஜனரஞ்சகமாக கவிதைகளை நீளமாக வடித்த (3-33) ரிஷி என்ற பெருமையை பெற்றவர். இவர் இயற்றிய நதி- சூக்தம் இதற்கு சான்றாகும். இதில் சிந்துநதி, சரஸ்வதி, ஜம்முனை, விபாஷ், சதுர்த்தி, பியாஸ், சட்லஜ் போன்ற நதிகளை துதித்து பிரார்த்தனை செய்துள்ளார். இவர் சுதாஸைக் கொண்டு அஸ்வமேதயாகம் செய்வித்தார். அக்கினியிடம் செல்வம் வேண்டியும் (3- 26- 11) போரிலே வெற்றி பெறுவதற்காக இந்திரனை வேள்வியில் அழைத்தும்(3-30-22), உணவுகளை வேண்ட இளாவையும் சரஸ்வதியையும் (3-4) துதிக்கின்றார். இவ்வாறு அமைந்த அவரது ரிக் வேதப் பாடல்கள் அக்காலத்து வேதகால சமய வரலாற்றை காட்டி நிற்கின்றது.

விசுவாமித்திரரின் சூக்தங்களில் அரசர்களின் வரலாறுகளும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. சுதாஸ் வஷிட்டரை விட்டு விசுவாமித்திரரை நாடினார் அவரும் சுதாஸைப் பெரியவராக்கினார். சுதாஸ் பின்னுக்கு ஈட்டிய வெற்றிகளுக்கெல்லாம் உதவி புரிந்தார். பரதவர்களின் மன்னனான சுதாஸீக்கு இறுதி வரை புரோகிதராக இருந்தார். இதனால் பரத இனக்கு முவை பாதுகாக்க பூமி, வானத்துடன் இந்திரனையும் பிரார்த்தனை செய்து நதிகளைத் தடுத்து நிறுத்தி எதிரிகளிடமிருந்து பாதுகாத்தார். (3- 53- 9) விசுவாமித்திரர் ஐந்து விதமான ஜனக்குழுக்களை உருவாக்கினர். அக்குழுவின் தலைவர்களாக பூரு, மது ,துர்வாஸ, அனு, துருக்யு என்போர்கள் விளங்கினார்கள் என்றும் அவரின் பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புராண நூல்களில் ராஜரிஷி, சப்தரிஷி, பிரம்மரிஷி போன்ற பட்டங்களைப் பெற்றவராக புகழப்படுகிறார். குறிப்பாக விஷ்ணு புராணத்திலும் இவரைப் பற்றிய பல ஜனரஞ்சகமான கதைகளும் கூறப்பட்டுள்ளது. மகாபாரதத்தின் ஆதி பர்வம் பகுதி 72 இல் இவரைப் பற்றிய கதைகள் கூறப்பட்டுள்ளது. இவரின் கதை வால்மீகி இராமாயணத்திலும் உரைக்கப் பட்டுள்ளது. இவரே காயத்திரிமந்திரப் பாடலையும் பாடியவர் என்ற கருத்தும் உள்ளது.



## 04. வாமதேவர்

கௌதம முனிவரின் மகன். வசிட்டர், விசுவாமித்திரர் ஆகிய முனிவர்களுக்கு பிற்பட்டவர் ஆயினும் அவர்களுக்கு குறைந்தவர் இல்லை. ரிக் வேதத்தில் நான்காம் மண்டலத்தில் 55 சூக்தங்களைப் பாடியவர்.

இவரும் திவோதாஸின் அவரது மகன் சுதாஸின் வெற்றிகளை விவரிக்கின்றார். திவோதாஸ் நூறுபுரங்களை வெற்றி கொண்டவன். அவருக்காக நூறு மலை கோட்டைகளை இந்திரன் வெற்றி கொண்டான். இவ்வாறு (4-30-20) பரதரின் பெருமையை வாமதேவர் பாடித் துதித்தார். மேலும் சகதேவபுத்திரன், குமாரசோமகன், ஸ்ருஞ்சயர்களின் மன்னன் தேவ வாத், பைதகி, ரிஜிஷ்வா ஆகிய அரசர்களையும் புகழ்ந்து குறிப்பிடுகின்றார்.

இதேபோல் தேவர் வழிபாடுகளை பற்றியும் வாமதேவர் தனது சூக்தம் பாடல்களில் துதித்துள்ளார். அக்கினியை நோக்கி தோத்திரம் (4-3-2) செய்துள்ளார். இந்திரனின் புகழை இசைத்துள்ளார். (4-16-4), சோமம் கடவுளர்களின் தெய்வீக பானம் என்று புகழ்ந்தனர் என்கின்றார். விடியற்காலை தேவியாக உஷா வானத்தில் ஊர்தியாக ஊர்பவள்(4-3011) என்றும் குறிப்பிடுகின்றார்.

ஏர் உழுதலையும் மேழியையும் குறிப்பிடுகின்றார். (4-19) அதாவது ஆரியர்கள் ஏரைப் பயன்ப



டுத்தி விவசாயம் செய்துள்ளனர். நன்னீர் பற்றியும் தனது சூக்தப் பாடலில் குறிப்பிட்டுள்ளார். காரி, பதுரோன் போன்ற மிகப் பழங் கால அளவைகள் (4-32-17) பற்றியும் பதிவு செய்துள்ளார். வாம தேவர் வேதகாலரிஷிகளில் சிறந்த கவிஞராகவும் விளங்கினார். (4-51, 4-52) சூக்தங்களில் உஷை தேவியை அனைவரும் விருப்பமான காயத்ரி சங்கத் தில் பாடியுள்ளார். இவரின் ஒரு சூக்தத்தால் ரிஷிக ளின் படைப்புகளை காவியம் என்று கூறியுள்ளார்.

## முடிவுரை

இருக்கு வேத கால முனிவர்கள் கி.மு 1500 - 1100 காலகட்டத்தில் வாழ்ந்தவர்களாக கருதப்படுகின்றது. இவர்கள் நூற்றுக்கும் அதிகமானவர்கள் இவர்கள் 10647 இருக்கும், 2024 வர்க்கங்கள், 1028 சூக்தங் கள், 85 அனுவாகம், 64 அத்தியாயம், 10 மண்டலங் கள் கொண்ட இருக்குவேதத்தைப் படைத்துள்ளனர். ரிக் வேதத்தில் 'அபாரா' என்னும் பெண் ரிஷி பாடிய ஒரு சூத்தமும் உள்ளது. இருப்பினும் இக் கட்டுரை முக்கியத்துவம் பெற்ற பல ரிஷிகளின் பணிகளுடன் நிறைவு பெற்றுள்ளது.

# இலங்கை இந்து தர்மாசிரியர் வழிகாட்டி



## பாட அலகு 03
## திராவிடக் கலைப்பாணி


சைவப்புலவர் சு . துஷ்யந்த்
BA (Hons) PGDE, MA
முன்னாள் ஆசிரியர்.
பாரீஸ் நகர் – பிரான்சு


**கோ**யிற் கட்டுமான முறைகளில் திராவிடப் பாணியும் ஒன்று . விமானம் எண் கோணமாக அமைந்திருக்கும் கட்டுமானத்தைத் திராவிடப் பாணி என்று சிற்ப நூல்கள் சொல்லும் . இத்தகைய பாணியில் அமைந்துள்ள கோயில்களை கிருஷ்ணா நதிக்குத் தெற்கிலுள்ள பகுதிகளில் காணலாம் .

திராவிடக் கலைப்பாணியில் நான்கு வகையான



கோயிலமைப்புக்கள் உள்ளன . அவை முறையே மண் டளி , குடபோகம் ( குடைவரை ) , மலை தளி ( செதுக் குதளி ) , கற்றளி என்பனவாகும் . இந் நான்கு கோயில் களிலும் மண்டளிக் கோயில்கள் மிகப் பழமையானது அவை களிமண் , செங்கல் கொண்டு உருவாக்கப்பட் டவை . 7 ஆம் , 8 ஆம் நூற்றாண்டுகளிற் சைவ நாயன் மார்களினால் பாடப்பட்ட கோயில்களுள் பெரும்பா லானவை செங்கற் கோயில்களாகும் .

திராவிடப் பாணியில் உருவாக்கப்பட்ட கோயில் களை மேல்வருமாறு பிரித்து நோக்கலாம் , அவை தமிழ் நாட்டுக் கோயில்களாகும் .

01. பல்லவர் காலக் கட்டடக் கலை.
02 சோழர் காலக் கட்டடக் கலை.
03 விஜய நகர , நாயக்கர் காலக் கட்டடக் கலை.

## பல்லவர் காலக் கட்டடக் கலை

### 1. அறிமுகம்

தமிழக வரலாற்றிலே பல்லவர் காலம் பக்தி நெறிக் காலம் என்று அழைக்கப்படுகின்றது . கி.பி 6 ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 9 ஆம் நூற்றாண்டு

வரையான காலப் பகுதியாகும் , நாயன்மார்களாலும், ஆழ்வார்களினாலும் சைவ, வைணவ சமய நெறிகள் இயக்கங்களாக உருவெடுத்தன . அவர்கள் இறையிருப்பை நிலை நிறுத்த திருக்கோயில்களின் வழிபாட்டிற்கு முக்கியத்துவம் அளித்தனர் . தங்களின் பாடல்களில் கோயில் வழியாட்டின் அவசியத்தை எடுத்துரைத்தனர். மற்றும் கோயில் கலைகளையும் உயிர்ப்புறச் செய்தனர். இதனால் பல்லவர் காலத்தில் கோயில்கள் பிரதான வகிபாகம் பெற்றது. அக்காலத்தில் ஆட்சி புரிந்த அரசர்கள், கலைகளை ஆதரித்தும் போற்றும் கலைநர்களாகவும் சமய அபிமானிகளாகவும் விளங்கினர். இதனால் தமிழ் நாட்டில் முதல் முதலாக குடபோகம் , மலைதளி , கற்றளி என பல்வேறுபட்ட பாணிகளில் கோயில்களை உருவாக்கி சைவ நாயன்மார்கள் ஆழ்வார்களின் பக்தி நெறிக்கும் , அதன் இயக்கத்திற்கும் செழுமை சேர்த்தனர் . காஞ்சிபுரம் , தொண்டை நாட்டிலும் இவர்களின் ஆட்சி பரவியமையால் அங்கு சிவன் , திருமால் , பிரம்மன் , மகிஷாசுர தேவி , ஆகியோருக்கு கோயில்கள் எழுப்பப்பட்டன . இதனால் திராவிடக் கலைப்பாணி பல்லவர் காலம் முதற் கொண்டு வளர்ச்சி பெறலாகியது .

## பல்லவ அரசர்களும் , கோயில் கட்டுமான முறைகளும்

பல்லவர் காலத்தில் அரசாட்சி புரிந்த அரசர்களின் வரிசைக் கிரம அடிப்படையில் , பல்லவர் காலக் கோயிற் கட்டுமானத்தை வகைப் படுத்துவது வழக்கம் . அந்த அடிப்படையில்




1) மகேந்திரவர்மன் பாணி: குடபோகம்

(கி.பி 600 கி.பி 650 வரை )

2) மாமல்லன் ( நரசிம்மவர்மன் ) பாணி : குடபோகம்

(கி.பி 650 கி.பி 700 வரை ): மலைதளி

3) இராஜசிம்மன் பாணி: கற்றளிகள்.

(கி.பி 650 கி.பி 700 வரை )

4) நந்திவர்மன் பாணி : கற்றளிகள்

(கி.பி 800 கி.பி 900 வரை )

எனவே பல்லவர் காலத்தில் குடபோகம் , மலைதளி , கற்றளி என மூவகை கோயிற் கட்டுமான முறைகள் வளர்ச்சி பெற்றுள்ளன. இவை மூன்றும் திராவிடக் கலைப்பாணியை சேர்ந்தவை . இம் மூன்று பாணியையும் தனித்தனியாக ஆராய்வதன் ஊடாக பல்லவர் காலக் கட்டடக் கலையையும் அதன் சிறப்புக்களையும் உணர்ந்து கொள்ளலாம்.

## குகைக் கோயில்களும் அதன் பண்புகளும்

பல்லவர் காலக் கட்டடக்கலையின் வளர்ச்சியில் உதயமாக அமைவது குகைக் கோயில்களாகும் . இதனைக் குடைவரை ,



குடபோகம் என்றும் கூறுவர் , குடைவரைக் கோயில்கள் என்பது மலைகளைக் குடைந்து உருவாக்கப்படும் கோயில்கள் ஆகும் .

தொண்டை நாட்டில் முதன் முதலாக மகேந்திரவர்மனே குடைவரைக் கோயில்களை அமைப்பித்தான்.



மண்டகப்பட்டு என்னும் ஊரில் உள்ள கோயில் அவனால் அமைக்கப்பட்ட முதலாவது குடைவரைக் கோயிலாகும் . அக் கோயிலின் சமஷ்கிருத மொழிச் சாசனத்திலே பிரமா , ஈஸ்வரன் , விஷ்ணு என்போருக்கு

உரியதான லக்ஷிதாயதனம் என்னும் கோயில் செங்கல் , மரம் , உலோகம் , சுதை என்பன இல்லாது விசித்திர சித்தன் என்னும் அரசனால் அமைக்கப் பட்டுள்ளது’.

என்று சொல்லப்பட்டுள்ளது . இது மட்டுமன்றி மாமண்டூர் குரங்கணில் முட்டம் , மகேந்திரவாடியம் , பல்லாவரம் முதலான இடங்களிலும் குகைக் கோயில்கள் வடிவமைக்கப்பட்டன . இவற்றை விட சற்று வளர்ச்சி பொருந்தியதாக வல்லம் , தளவானூர் , சீயமங்கலம் , திருச்சிராப்பள்ளி முதலிய இடங்களில் உள்ளவை காணப்படுகின்றன . ஆக தமிழகத்தில் மட்டுமன்றிப் பரத கண்டம் முழுவதிலும் மிகக் கூடியளவான குகைக் கோயில்களை அமைத்த அரசன் என்ற வகையிலே இந்தியக் கட்டடக் கலை வரலாற்றில் மகேந்திரவர்மன் சிறப்பிடம் பெறுகின்றான் .

மகேந்திரவர்மன் காலத்துக் குடபோகங்கள் அளவில் சிறியவை . கட்டடம் சதுரமாகவோ , நீள்சதுரமாகவோ காணப்படும் , பொதுவாக அவற்றில் இரண்டு தூண் வரிசைகள் அமைந்திருக்கும் . தூண்களின் வரிசைப்படி கருவறை , அர்த்த மண்டபம் , முகப்பு மண்டபம் என்பனவற்றையும் ஒரு பிரதான வாயிலையும் கொண்டிருக்கும் . பொதுவாகத் தூண்கள் 7 அடி உயரங் கொண்டவை . தூண்களின் மேற்பகுதியும் , அடிப்பகுதியும் 2 அடி நீளமாகவும் , நடுப்பகுதி எண்கோணமாயிருக்கும் . சதுரமான பாகத்தில் தாமரை மலர் வடிவங்கள் அமைந்திருக்கும் . மேலும் , மண்டகப்பட்டு , மாமண்டூர் , குரங்கனில் முட்டம் ஆகிய இடங்களில் மூன்று கருவறைகள் அமைந்திருக்கின்றன . மண்டகப்பட்டு மூன்று கருவறைகள் மும்மூர்த்திகளை வழிபடுவதற்குரியவாறு அமைந்துள்ளது இதே போல் பல்லாவரத்தில் ஐந்து கருவறைகள் உள்ளன . இக் கருவறையின் அடியில் அதிஷ்டானமும் அதன் பகுதிகளான ஜகதி , குமுதம் , கண்டம் , கம்பம் , என்பன அமைந்திருக்கின்றன . மாமண்டூரிலுள்ள உருத்திரவாலீஸ்வரம் என்னும் குடபோகத்தின் முகப்பிலும் , கருவறையின் வாயிற் புறங்களில் துவாரபாலகரின் சிற்பங்களும் செதுக்கப்பட்டுளன.






மகேந்திரவர்மனின் பிற்காலத்து குடபோகங்கள் சற்று வளர்ச்சி பொருந்தியவை . வல்லம் , தளவானுர், சீயமங்கலம் , திருச்சிராப்பள்ளி முதலியவை இதற்குச் சான்றாகும் . வல்லம் என்னும் ஊரில் இவ் அரசன் காலத்து மூன்று குடபோகங்கள் உள்ளன . அதில் வசந்தீஸ்வரம் என்னும் குடபோகத்தில் வாயிற் காவலர் உருவங்கள் , விநாயகர் , சுப்பிரமணியர் , திருமால் , ஸ்ரீதேவி , பூதேவி ஆகியோரின் படிமக் கோலங்களும் காணப்படுகின்றன . திருச்சிராப்பள்ளியில் அமைந்துள்ள லலிதாங்குர பல்லவேஸ்வரம் மகேந்திரவர்மனால் அமைக்கப்பட்ட குடபோகங்களில் மிக முக்கியமானது . மண்டபத்தின் முகப்பில் நான்கு தூண்கள் , வாயிற்புறத்தில் துவாரபாலகர் உருவங்கள் , துண்களிலும் , வேறிடங்களிலும் மீன் , யானை வடிவங்கள் , சுவர்களில் வனப்பு மிகுந்த சிற்பங்கள் , அரைத் துண்களின் நடுப்பகுதியில் போதிகை , அதின் மேல் பூதகணங்கள் என்பன அமைத்துள்ளன . இவ் ஆலயத்தின் கல்வெட்டில் மகேந்திரவர்மனுக்குரிய சங்கீர்ணஜாதி , அவனிபாஜன் , சித்திரகாரப்புலி , லலிதாங்குரன் , குணபரன், மத்தவிலாசன் முதலிய விருதுப் பெயர்களும் பொறிக்கப்பட்டுள்ளன .

மகேந்திரவர்மனைப் போல



மாமல்லன் என்னும் நரசிம்மவர்மனாலும் மாமல்ல புரத்திலும் , வேறு ஊர்களிலும் குடபோகங்கள் அமைக்கப்பட்டுள்ளன . வேலைப்பாட்டில் மகேந் திரவர்மனின் குடபோகங்களை விட அளவுப் பிரமா ணத்தில் சற்றுப் பெரியவை , முன்னேற்றமானவை . மாமல்ல புரத்தில் மட்டும் 10 குடபோகங்களை அமைத்துள்ளான் . அவை பெரும்பாலும் மண்டபக் கோயில்களாகவே பெயர் பெற்றுள்ளன . அவை வருமாறு;

- கோனேரி மண்டபம்
- பஞ்சபாண்டவர் மண்டபம்
- வராக மண்டபம்
- இராமானுஜ மண்டபம்
- மகிஷாசுரமர்த்தனி மண்டபம்
- யாளி மண்டபம்
- மகாவராக விஷ்ணு கிருகம் .
- தர்மராஜ மண்டபம்
- மும்மூர்த்தி மண்டபம்
- கொடிக்கால் மண்டபம்

இத்தகைய குடபோகங்களில் பல பெரியவை. அவை பொதுவாக 25 அடி நீளமும் , 25 அடி அக லமும் , 1520 அடி உயரமுங் கொண்டவை . அவற் றின் தூண்கள் சராசரி 9 அடி உயரமானவை. தூண்களின் அடிப்பாகத்தில் பின்னங்கால்களை மடித்தும் முன்னங் கால்களை நிலத்தில் ஊன்றிய வாறு யாளித் தூண்கள் அமைந்திருக்கும் . தூண்க ளில் கலசம் , தடி , கண்டம் , கும்பம் , பத்மம் ஆகிய அம்சங்கள் அமைந்து தூண்களை மேலும் வனப்புப் படுத்தியுள்ளன .

கோனேரி மண்டபத்தில் 5 கருவறைகள் உள்ளன மண்டபத்தின் முகப்பின் மேலே கபோதம் , பிரஸ் தரம் , சாலை வரி . சாலாசிகரம் , அல்ப நாசிகம் முதலிய அம்சங்கள் தோரண வளைவு கோலத்தில் அமைந்துள்ளது. கருவறையின் முன் வாயிற் காவ லரின் தோற்றம் அசான் கோலம் போன்றது .

வராக மண்டபத்தின் வடக்குச் சுவரிலே வராகபு ராணக் கதை சிற்பக் கோலத்தில் அமைந்துள்ளது . தென்புறச் சுவரில் உலகளந்த பெருமாள், திரிவிக் கிரமர் ஆகியோரின் வடிவங்கள் , வடக்குப் பக்க கோட்டத்தில் துர்க்கை , கஜலஷ்மி ஆகியோரின் உருவங்களும் உள்ளன .


மகிஷாசுர மண்டபத்தில் மூன்று கருவறைகள் உள்ளன . முகப்பில் நான்கு தூண்களும் , சுவர் களை ஒட்டி இரண்டு அரைத் தூண்களும் உள்ளன . அரைத்தூண்கள் நாற் கோண வடிவில் அமைத் துள்ளது. அதன் மேற்பரப்பில் தாமரை , கும்பம் , பத்மம் ஆகியனவும் அமைந்துள்ளன . வடக்குச் சுவ ரில் மகிஷாசுரதேவியின் போர்க் காட்சி சிறப்பான சிற்பமாக நுட்பமாக வடிவமைக்கப்பட்டுள்ளது . தென்புறச் சுவரில் திருமாலின் அனந்த சயனக் கோலமும் அழகுற அமைந்துள்ளது.

மும்மூர்த்தி மண்டபத்தில் மூன்று கருவறைகள் மும்மூர்த்திகளுக்காக அமைக்கப்பட்டுள்ளது . சிவன் , திருமால் , ஆகியோரின் கோலங்கள் சிற்பங்களாக உள்ளன .

பஞ்சபாண்டவர் மண்டபம் என்று சொல்லப்படும் கிருஷ்ண மண்டபத்தில் 6 தூண்கள் உள்ளன . அவை யாவும் யாளித் தூண்கள் . அவற்றின் மேலே போதிகை , குதிரை வீரரின் சிற்பங்கள் , உத்திரம் போன்ற அம்சங்கள் உள்ளன . மண்டப முகப் பிலே சாலைகள் கூடுகள் போன்ற அமைப்புக்கள் செதுக்கப் பட்டுள்ளன . இங்கு ஆயர்பாடிக்காட்சி. கிருஷ்ண அவதாரக் காட்சிகள் அற்புதக்கோலமாக செதுக்கப்பட்டுள்ளன.

மகாவராக மண்டபம் என்று சொல்லப்படும் பரமேஸ்வர கிருகம் குடைவரை அமைப்பில் முன்னேற்றகரமான அம்சங்கள் பலவற்றைக் கொண்டுள்ளன . இக் கோயிலின் மண்டபத்தின் மேலே சிறு கோயில் போன்றதொரு அமைப்பு காணப்படுகின்றது . மண்டப முகப்பில் கபோதம் , நாசிகை , கூடு , சாலை முதலியவற்றோடு கோபுர வடிவங்களும் செதுக்கப்பட்டுள்ளது . யாளித் தூண்கள் , வாயிற் காவலர் வடிவங்கள் , தேவ கோட்டங்கள் , சிற்ப வேலைப்பாடுகள் , போன்ற அம்சங்களும் காணப்படுகின்றன .

கொடிக்கால் மண்டபத்தின் கருவறையின் இரு புறம் காவற்பெண்கள் காணப்படுவதால் அது



கொற்றவைக்குரிய கோயிலாக இருக்கலாம் என் பர் . இவ்வாறு மாமல்ல புரத்தில் குடபோகங்கள் ஏராளமானவற்றை உருவாக்கிய மாமல்லன் , மகேந்திரவர்மனின் குடபோககளைக் காட்டிலும் பல முன்னேற்றமான புதிய அம்சங்களையும் தனது குடவரையில் புகுத்தி தனக்கென்று ஓர் கீர்த்தியைப் பெற்றுக் கொண்டான் .

## மலைதளிக் கோயில்களும் அதன் பண்புகளும்

பல்லவர் காலக் கட்டிடக் கலை வளர்ச்சியின் இரண்டாவது கட்டத்தை மலைதளிகளிற் காண லாம் . மலைகளை மேலிருந்து கீழாக வெட்டியும் , செதுக்கியும் அமைக்கப்படுபவை மலைதளிகள் ஆகும் . இதனை ரதக்கோயில்கள் , பாறைக் கோயில்கள் , செதுக்கு தளிகள் , ஒற்றைக் கோயில் கள் எனவும் அழைப்பர் . இத்தகைய கோயில்கள் மாமல்லன் காலம் முதல் முதலாம் பரமேஸ்வரவர்ம னின் ஆட்சி முடியும் வரையுள்ள காலத்தில் அமைக் கப்பெற்றவை ஆகும் .

மாமல்ல புரத்தில் ஒன்பது மலைதளிகள் உள்ளன. அவற்றுள் ஐந்து மகாபாரதத்தில் வரும் கதாபாத்தி ரங்களின் பெயர்களினால் அழைக்கப்படுகின்றன. அவை பின்வருமாறு ,



* தருமராசர் ரதம்
* வீமன் ரதம்
* அருச்சுனன் ரதம்
* நகுல , சகாதேவ ரதம்
* திரௌபதை ( பிடாரி ) ரதம் .

இவற்றைத் தவிர கணேசர் ரதம் , வடக்கு பிடாரி ரதம் , வலையான் குட்டை ரதம் , கொற்றவைத் தளி என்னும் பெயர்களாலும் பலதளிக்கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மாமல்லபுரத்து மலைதளிகள் அளவுப் பிரமா ணங்களிலும் கட்டுமானத்திலும் வேறுபாடுகளுடன் காணப்படுகின்றன . அவற்றுள் மிகப் பெரிய தளி யான தருமராசரதம் என்னும் அவனி பாஜன பல்ல வேஸ்வரம் 42 அடி நீளமும் 32 அடி அகலமும் 40 அடி உயரமும் கொண்ட விமானத்தையும் கொண் டதாகும் . மிகச் சிறியது திரௌபதிரதமாகும் . தரும ராச ரதமானது விமானம் மூன்று தளங்களையும் , அதன் மேல் எட்டு பட்டைகளையுடைய கிரீடத் தையும் , சிகரத்தையும் கொண்டுள்ளது . மூன்று தளங்களிலும் இந்து சமயச் சார்புடைய சிற்பங் கள் காணப்படுகின்றன . இதனால் சிற்பக் கலைக் களஞ்சியம்' என்று போற்றப்படும் தருமராச ரதம் , காஞ்சி கைலாசநாதர் கோயிலுக்கு முன்னோடியா கவும் விளங்கியுள்ளது .

மலை தளிக் கோயில்களில் பிரதான அம்சமாக விளங்குவது சிகரம் எனப்படும் விமானம் ஆகும் . விமானம் வெவ்வேறு கலைப்பாணிகளைப் பிரதி



பலிப்பதாக அமைந்துள்ளது . தருமர் . அருச்சுனர் , தெற்குப் பிடாரி ரதம் என்பன திராவிட கலைப் பாணியையும் , வடக்கு பிடாரி ரதம் , வலையான் குட்டை ரதம் , கொற்றவை ரதம் என்பன நாகர கலைப்பாணியை , கணேச , வீம ரதங்கள் என்பன சாலை விமான அமைப்பினை பிரதி பலிப்பவை யாக உள்ளன . நகுல சகாதேவ ரதம் தூரங்கானை மாட கலைப்பாணியில் அமைந்திருப்பது குறிப் பிடத்தக்கது . அது தமிழகத்தின் முதலாவது தூய திராவிட விமானம் என்ற வகையில் சிறப்பிடம் பெறுகின்றது . மாமல்ல புரத்து மலை தளிகள் பலவற்றில் அதிஷ்டானம் அமைக்கப்படவில்லை



. அங்குள்ள ஆறு விமானங்களும் அத்தகையன வாகும் . ஏழு மலை தளிகளில் அரைத் தூண்கள் பொருந்திய சுவரமைப்புகள் காணப்படுகின்றன . கொற்றவை , வடக்கு பிடாரி ரதங்களில் மகர தோர ணங்கள் அமைந்துள்ள கோட்டங்கள் சுவர்களில் குடையப்பட்டுள்ளன .அர்ச்சுனர் , கொற்றவை , நகுல சகாதேவர் ரதங்களில் மட்டும் ஆதிதளக் கருவ றைகள் அமைந்துள்ளன .

## கற்றளிக் கோயில்களும் அதன் பண்புகளும்

திராவிடக் கலைப்பாணியின் வரலாற்றின் உன் னதமான வளர்ச்சிக் கட்டம் ஒன்றை ஆரம்பித்த தோடு மட்டுமன்றி , திராவிட கட்டுமானத்தில் ஒரு புதிய சகாப்தத்தை தொடக்கிவைத்தது பல்லவர்க ளின் கற்றளிப்பாணி ஆகும் . கற்றளிப்பாணி என் பது . கருங்கற்களைச் சீராகப் பொழிந்தெடுத்து ஒன்றின் மேல் ஒன்றாக வைத்து அடுக்கிக் கட்டிப் படுகின்ற கட்டுமான முறையே கட்டுத்தளியாகும் . இராஜசிம்ம பல்லவ மன்னனின் காலத்திலிருந்து கற்றளிகளாக கோயில்களைக் கட்டும் வழக்கம் தொடங்கியது எனலாம் . இதே போல் இவன் பின் வந்த நந்திவர்மனும் பல கற்றளிக் கோயிகளை அமைத்தான் .

இராஜசிம்மன் ஆகமப்பிரியன் , வைசமயத்தின் மீது பற்றுக் கொண்டவன் , கலையார்வம் மிக்கவன் அதனால் காஞ்சிபுரம் , மாமல்லபுரம் , பனைமலை முதலான இடங்களில் கற்றளிக் கோயில்களை சி றியதும் , பெரியதுமாகக் கட்டிப் புகழ் பெற்றான் . மாமல்லபுரத்தில் உள்ள உலக்ணேஸ்வரம் , முகுந்த நாயனார் கோயில் , காஞ்சிபுரத்து இறவாதான் ஈஸ்வரம் , மகேந்திரவர் மேஸ்வரம் என்பனவும் , திருக்களுக்குன்றத்து வேதகிரீஸ்வரம் என்னும் கோயிலும் ராஜசிம்மன் காலத்துச் சிறு கற்றளிகள் ஆகும் . மாமல்லபுரத்து கடற்கரைக் கோயிலும் , பனைமலைக் கோயிலும் , காஞ்சிபுரத்து கைலாச நாதர் கோயிலும் (ராஜசிம்மேஸ்வரம்) . அவனது காலத்துப் பெருங் கோயில்களாகும் .

## மாமல்ல புரத்துக் கற்றளிகள்

மகாபலிபுரத்தில் உள்ள கற்றளிகள் மூன்று கடற் கரையை நோக்கிய வண்ணம் திறந்த வெளியில் கடல் நீராலும் , மண்ணாலும் சிதைவடையாது காணப்படுகின்றது . இவ்வாறு பல்லவரின் கட்டு மானம் உறுதியாக விளங்கியிருந்துள்ளது.

மாமல்ல புரத்திலுள்ள கடற்கரைக் கோயில் மூன்று கோயில்களின் தொகுப்பாகும் . அவை கிழக்கு நோக்கியுள்ள கோயில் ' சத்திரிய சிம்மப் பல்லவேசுவரக் கிருஹம் ' என்று சொல்லப்படும் . மேற்கு நோக்கியுள்ள கோயில் ' இராச சிம்மப் பல்ல வேசுரக் கிருஹம் ' என்பதாகும் . கிழக்கு மற்றும் மேற்கு நோக்கிய கோயில்களுக்கு இடையே உள்ள கோயில் ' நரபதி சிம்ம பல்லவ விஷ்ணுக் கிருஹம் ' என்று சொல்லப்படும் . அதன் இறையகத்தில் மகா



விஷ்ணுவின் சயனக் கோலம் அமைந்திருக்கின்றது . அதனால் இக் கோயில் ' ஜலசயனம் ' என்னும் பெயராலும் அழைக்கப்படுகின்றது .

கிழக்கில் அமைந்துள்ள கோயிலில் நான்கு தள விமானம் அமைய மேற்கில் அமைந்தள்ள கோயி லில் முத்தள விமானமும் அமைந்துள்ளது . இவை இரண்டும் பத்மபந்தத் தளத்தின் மேல் அமைந்த திராவிட விமானங்களாகும் . அவை மிகுந்த வனப் புடன் அமைந்துள்ளன . சில அம்சங்களில் அவற் றின் சிறப்பினை வேறு விமானங்களில் காண முடியவில்லை மேற்றளங்கள் ஆரமின்றி அகலம் குறைந்தும் , போதிய உயரங் கொண்டும் பொருத்



தமான அளவுடைய இடைவெளிகளோடு அமைந் துள்ளன . விமானம் கூம்பிய வடிவத்தோடும் காணப்படுகின்றன .

மாமல்லபுரத்துச் சிம்மேஸ்வரங்கள் ஒவ்வொன் றினதும் பின் சுவரிலே சோமாஸ்கந்த வடிவம் வனப்பு மிகு கோலத்தில் அமைந்துள்ளது . சத்திரிய சிம்மேஸ்வரத்தில் சிவலிங்கமும் , பல்லவ விஷ்ணு கிருஹத்தில் திருமால் பள்ளி கொள்ளும் காட்சியும் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளன .

## காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயில்

பல்லவர் காலக் கலையின் உன்னதமான கோலத்தையும், திராவிடக் கட்டுமானத்தின் சிறப்பினையும் இராஜ சிம்மனால் கட்டுவித்த இக் கோயில் சான்றாக விளங்குகின்றது. சாசனங்க ளில் இக் கோயில் 'பெரிய கற்றளி' என்றும் குறிப் பிடப்பட்டு வந்துள்ளது . பல்வேறு வடிவங்களில் கிரந்த எழுத்துக்களில் கல் வெட்டுக்கள் காணப்படும் ஒரே கோயில் என்ற பெருமையையும் பெற்றது. சாளுக்கிய அரசன் இரண்டாம் விக்கிரமாதித்த னால் பெரிதும் கவரப் பெற்ற இக் கோயிலுக்கு பல சிறப்புக்களைச் செய்தான் என இக் கோயிலின் கன் னட மொழிக் கல்வெட்டுச் செப்புகின்றது . மேலும் வரலாற்றுப் பின்னனியோடு கூடிய கட்டட சிற்ப , ஓவிய , நாட்டிய இலக்கியம் சார்ந்த விரிவான விளக்கங்களுக்கு விடை பகரும் தமிழ் நாட்டுக்கோ யில்களில் இக் கற்றளிக் கோயிலுக்கும் தனியான தோர் இடமுண்டு .

காஞ்சி கைலாச நாதர் கோயில் தமிழக திராவிடக் கட்டடக்கலையின் பிரதான அம்சங்களான சாந் தார விமானம் , மண்டபம் , சுற்றாலை , பரிவார தேவர் கோட்டங்கள் , நந்திபீடம் , கொடித் தம்பம் , கோபுரம் , பிரகாரம் முதலானவற்றைக் கொண் டுள்ளது . கருவறையில் 16 பட்டை கொண்ட இலிங்கம் உள்ளது கருவறையின் பின் சுவரில் சே ாமாஸ்கந்த வடிவமும் உள்ளது . சுவர்ப்பிரிப்பு , சுவ ரிற் கோட்ட அமைப்பு , கோட்டங்களின் உட்பகுப்பு , அலங்கரிப்பு , தோரணங்கள் எனப் பல சிறப்பு மிகுந்த அம்சம்களைக் கொண்டிருக்கின்றன .

இக் கோயிலின் சிறப்பான உறுப்பு விமானமாகும் , விமானம் பல தள அமைப்பும் அது உள் நோக்கிய சரிவுடன் மேலே ஓங்கியெழும் பாங்கில் அமைக் கப்பட்டுள்ளது . இது பல்லவர் காலத்தில் எழுந்த முதற் சாந்தார விமானம் என்ற சிறப்பையும் பெற் றுள்ளது . விமானம் நான்கு தளங்களுடன் விளங் குகின்றது . இதனைச் சுற்றி 7 ஏகதளம் (ஒருதளம்) விமானங்களும் அமைந்துள்ளது . விமானங்களின்



சுவர்ப்பகுதிகள் எண் கோணத் தாவும் யாளித் தூண் களால் அணைக்கப்பட்டுள்ளன . மேலும் சுவர்ப்ப குதிகளில் தேவ கோட்டங்களும் அதில் சைவ சம யம் சார்பான சிற்பங்களும் அமைக்கப்பட்டுள்ளன . இக் கோயிலின் திருச்சுற்றாலையிலே பிரகாரச் சுவரோடு அணைந்த வண்ணமாக 58 சிறு விமா னங்கள் உருவாக்கப்பட்டுள்ளன . அவற்றில் சில



திராவிட விமானங்களாகவும் , வேறு சில சாலை விமானங்களாவும் அமைந்துள்ளன .

விமானத்தின் பாதபந்தத் தாங்கு தளம் கருங்கல் உபானத்தின் மீது அமைந்துளளது . தாங்கு தளத்தின் பட்டிகையும் கருங்கல் வேலைப்பாடு ஆகும் . ஏனைய விமான உறுப்புக்கள் மணற்கற்களால் ஆனவை . தாங்கு தளம் ஜகதி என்னும் உறுப்பு சிறப்பிடம் , பெறுகின்றது . அதில் கணவடிவங்களான யாளியின் உருவங்கள் , மனித , அசுர , விலங்கு முகக்கணங்களின் உருவங்கள் , யானை முகங்கள் என்பன அமைந்துள்ளன .

சைவசமயம் சார்பான , புராணக்கதை சார்ந்த சிந்தனைகளைப் பிரதிபலிக்கும் கஜசம்கார மூர்த்தி , கிராதார்ச்சுனர் , பிரம்ம சிரச்சேத மூர்த்தி , உமா மகேஸ்வர் , பிரம்ம இந்தி காம அனுக்கிரக மூர்த்திகள் , கௌரி பிரசாதர் முதலான வடிவங்கள் முதன் முதலாக இக் கற்றளிக் கோயிலிலேயே முகம் காட்டுகின்றன . மேலும் சிவனது நடனக் கோலங்களான குஞ்சிதபாத நடனம் கர்ப்பகிருகச் சுவரில் உள்ளன . இதே போல் விருச்சிகம் , ஊர்த்துவ தாண்டவம் , அர்த்தஸ்வஸ்திகம் முதலிய கரணங்களும் சிற்பங்களாக உள்ளன . மேலும் இசை வாணரின் உருவங்களும் முதன் முதலில் இக் கோயிலில்தான் காணப்படுகின்றன . இவ்வாறு பல்லவர் காலத்து நுண்கலைகளின் உன்னதமான வளர்ச்சிக் கோலத்தைப் பிரதிபலிக்கும் ஆலயமாக பெரிய கற்றளி விளங்குவதைக் காணலாம் .

## காஞ்சிபுரத்து வைகுந்தப் பெருமாள் கோயில்

பல்லவர் காலக் கட்டடக்கலையின் வளர்ச்சியில் மிக முதிர்ச்சி பெற்ற படைப்பாக விளங்குவது பரமேஸ்வர விண்ணகரம் 'என்னும் பெயராலும் வழங்கப்படுகின்து . இது இரண்டாம் நந்திவர்மன் காலத்துக் கோயிலாகும் . பல்லவர் காலத்துக் கோயில்களில் சற்றும் பெரியதாகும் அது 90 அடி நீளமும் அகலமும் கொண்ட சதுர அமைப்பாகும் . கருவறை ஏறக் குறைய 90 அடி நீளமுள்ள பக்கங்களைக் கொண்டதாக சதுர வடிவில் அமைந்துள்ளது . அதன் மேல் உள்ள விமானம் 60 அடி உயரமானது . விமானம் நான்கு தளங்களைக் கொண்டது . அதைச் சுற்றிலும் நடைவழியும் உள்ளது. விமானத்தினை சிற்பங்கள் அழகுபடுத்தியுள்ளன .

கோயில் கருவறை , முகமண்டபம் , பிரதகூஷிண பாதை . திருச்சுற்றுமாளிகை, சுற்றுமதில் , தூண்வரிசை , தேவகோட்டங்களும் அதில் அமைந்துள்ள சிற்பங்கள் . போன்ற முக்கிய உறுப்புக்களைக் கொண்டுள்ளது . திருச்சுற்றுமாளிகையில் சிம்மத் தூண்கள் அமைந்துள்ளன . அதன் சுவரின் உட்புறத்தில் பல்லவரின் வரலாறு தொடர்பான ஐதீகங்கள் சிற்ப கோலத்தில் உள்ளன . ஆலய பிரகாரத்தின் உட்புறத்தில் உள்ள திருச்சுற்று கூடங்கள் பொருந்திய சாலைகளுடன் காணப்படுகின்றது . சாலை நெடுகிலும் யாளித் தூண் நிரைகள் உள்ளன . தூணின் பாரத்தை யாழிதாங்குவது போல மிக தத்ரூபமாக சிற்பி தன் கை வினைத்திறத்தைக் காட்டியுள்ளான் . இவ்வாறு தென் இந்தியக் கலை வரலாற்றைப் பொறுத்தவரையில் பல சிறப்பம்சங்களைக் கொண்ட நிலைக்களமாக இக் கோயில் விளங்குகின்றது .

## நந்திவர்மன் காலத்துக் கற்றளிகள்

பல்லவர் காலத்தின் இறுதிக் கட்டத்தில் ஆட்சி புரிந்த நந்திவர்மன் காலத்தில் அமைக்கப்பட்ட கோயில்கள் , இவ் அரசன் அமைத்த காலத்துக்குரியவை ஆகும் . அத்தகைய ஆலயங்கள் அளவிற் சிறியவை . மிதமான கலைப் பண்புகளுடன் சிறப்பாக அமைந்தவை ஆகும் . அத்தகைய ஆலயங்கள் காஞ்சிபுரத்திலுள்ள முக்தேஸ்வரம் , மாதங்கேஸ்வரம் உத்தர மேரூர் சுந்தரவரதப் பெருமாள் கோயில் , செங்கற்பட்டிற்கு அருகிலுள்ள ஓரகடத்திலுள்ள வாடாமல்லீஸ்வரர் கோயில் , திருத்தணியிலுள்ள வீரட்டானேஸ்வரர் கோயில் , திருப்பட்டூர்க் கைலாச நாதர் கோயில் போன்றவற்றைக் குறிப்பிடலாம் .

மாமல்லபுர கணேசரதத்தில் உள்ளவற்றைப் போன்று முக்தேஸ்வர மண்டபம் அமைந்துள்ளது . விமானம் முத்தளத்துடன் மேற்கு நோக்கியதாக அமைந்துள்ளது . விமானம் வேஸ்ர விமானமாய்

உள்ளது . உபானம் , அதிஷ்டானம் என்பனவற்றோடு விமானம் அமைந்துள்ளது . முக மண்டபத்தின் உட் சுவரில் சிற்பங்கள் மிகுந்து காணப்படுகின்றன . மதங்கேஸ்வர கோயில் முக்தேஸ்வரத்திற்கு முற்பட்டது . அதன் நுழைவாயிலில் இரு தூண்கள் தாங்கிக்கொண்டிருக்கும் முக மண்டபம் அமைந்துள்ளது . இதன் அருகாமையில் நான்கு கோயில்கள் அரை வட்டவடிவில் அமைந்துள்ளது . அவை மாமல்லபுரத்திலுள்ள சகாதேவரதத்தை முன் மாதிரியாகக் கொண்டது .

## முடிவுரை

திராவிட கட்டுமானத்தில் பல்லவர்கள் தமிழ் நாட்டில் முதல் முத்திரை பதித்துள்ளனர் வெவ்வேறு கோயில் பாணிகளை உருவாக்கி திராவிட கலைப்பாணியை மெருகேற்றியவர்கள் விமானம் , தூண்கள் , சிற்பங்கள் போன்ற உறுப்புக்களில் தனித்துவம் பல வற்றைக் காட்டியவர்கள் . பல்லவ அரசர்கள் தங்களின் சமய கலை அபிமானங்களை கோயில்களில் கலைகளாக உருவாக்கி உயிரூட்டியவர்கள் . குறிப்பாக பாறைகளுக்கு கலை உயிர் ஊட்டியவர்கள் . இவ்வாறு பல்லவர்கள் உருவாக்கிய திராவிட கலைப்பாணியின் அடித்தளத்திலிருந்து சோழர்கள் திராவிடக் கலைப்பாணியை திறப்பட வளர்த்தார்கள் . குறிப்பாக சோழரின் கட்டுமானத்திற்கு பல்லவர்கள் கைவிளக்காகத் திகழ்ந்தார்கள் .



**நன்றி**

## மாதிரிவினாக்கள்

01 ) பல்லவர் காலக் கட்டடக் கலையின் சிறப்புக்களை மேல்வரும் தலைப்புகளில் விளக்குக.

**( அ ) குகைக் கோயில்கள்**

**( ஆ ) மலைதளிக் கோயில்கள்**

**( இ ) கற்றளிக் கோயில்கள்**

02 ) பல்லவர் காலத்தில் ஏற்பட்ட கோயிற்கட்டடக் கலை வளர்ச்சியினை மேல் வருவனவற்றின் அடிப்படையில் விபரிக்குக .

**( அ ) அரசர்களின் பங்களிப்பு**

**(ஆ) பல்வகை கோயிற் கட்டடக் கலை அமைப்புக்கள்**

**( இ ) காஞ்சி கைலாசநாதர் கோயில் கட்டுமானம் .**

03) பல்லவர் காலக் கற்றளிக் கோயில்களின் சிறப்பம்சங்களை ஆராய்க





# அகஸ்தியர் இரண்டாயிரமும் சேகராசசேகரமும்


தமிழ் நாட்டின் பழம் பெரும் நூலகமான தஞ்சை சரஸ்வதி மஹால் நூல்நிலையம் 1958ஆம் ஆண்டில் அகஸ்தியர் 2000 என்னும் பெயரில் தமிழ் மருத்துவ நூல் ஒன்றை வெளியிட்டது.

சரஸ்வதி மஹால் நிலையத்தின் அப்போதைய கௌரவ காரியதரிசியாகவிருந்த திரு. எஸ். கோபாலன் அவர்கள் அகஸ்தியர் 2000 நூல் பற்றி அந்நூலின் முகவுரையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

**‘‘அகஸ்தியர் வைத்திய நூல்கள் பல இதுவரையில் அச்சிடப்பட்டிருக்கின்றன. இன்னும் சில சுவடிகளிலேயே கிடைக்கின்றன. ஆனால் இந்தநூல் இதுவரையில் அச்சிடப் படவில்லை. சுவடிகளிலும் நமது சரஸ்வதி மஹால் நூல் நிலையத்தைத் தவிர வேறு இடத்தில் இருப்பதாகத் தெரியவில்லை.’’1**

திரு. கோபாலன் அவர்களின் கூற்று மிகமிக முக்கியமான செய்தி ஒன்றை எமக்கு உணர்த்தி நிற்கின்றது. தஞ்சை சரஸ்வதி மஹால் நிலையத்தாருக்குக் கிடைத்த அகஸ்தியர் 2000 என்னும் நூலின் ஒரேஒரு பிரதி இலங்கையில் இருந்தே சென்றிருக்க வாய்ப்புண்டு. பல்வேறு சான்றுகள் மூலம் இதனை உறுதிப்படுத்த முடிகின்றது.

முதலாவதாக, அகஸ்தியர் இரண்டாயிரத்தில் இடம்பெற்றுள்ள பாடல்களை உள்ளடக்கிய ஏட்டுச் சுவடிகளை இலங்கையில் இன்றும் காணக்கூடியதாக உள்ளது. இவற்றுள் ஐந்து ஏட்டுப் பிரதிகளை 1975க்கும் 2020ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் நான் நேரடியாக வாசித்தறிந்து கொள்ள முடிந்தது. இவை அனைத்துக்கும் பொதுவான மூலநூல் இலங்கையிலேயே தோன்றியிருக்க முடியும். ஈழத்தில் இந்தத் தமிழ் மருத்துவ நூல் செகராசசேகரம் என்றே அறியப்பட்டு வந்துள்ளது.



**கலாநிதி**
**பாலை. சிவகடாட்சம்**

இற்றைக்கு நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர், யாழ்ப்பாணத்தின் மேற்கே உள்ள தீவுக்கூட்டங்களில் ஒன்றான வேலணைத் தீவில் உள்ள ஒருகிராமமான சரவணையில் வாழ்ந்த வைத்தியர் அருளம்பலம் என்பவரிடம் இருந்த ஏட்டுச்வடி ஒன்றைப் பார்வையிடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இச்சுவடிபற்றி 1978 இல் நான் எழுதி வெளியிட்ட பண்டையமருத்துவமும் பயன்தரு மூலிகைகளும் என்னும் நூலில் குறிப்பிட்டிருந்தேன்.2

வைத்தியர் அருளம்பலத்தின் ஏட்டுச்சுவடியில் உள்ள பாடல்களுட் மிகப் பெரும்பாலானவை சரஸ்வதி மஹால் வெளியீடான அகச்தியர் இரண்டாயிரத்தில் இருப்பதை அவதானித்தேன். அதேசமயம் ஒருமிக முக்கியமான விடயத்தையும் என்னால் அவதானிக்க முடிந்தது. வைத்தியர் அருளம்பலத்தின் ஏட்டுச்சுவடியில் இடம்பெற்றுள்ள மன்னன் செகராசசேகரன் புகழ்பாடும் பாடல்களுள் ஒன்றையேனும் அகஸ்தியர் இரண்டாயிரத்தில் காணமுடியவில்லை. இவற்றுள் இரண்டு பாடல்களை மட்டும் முதலில் இங்கு நோக்குவோம்.

**ஆக்கியேதிப்பலியுடன் அருந்தப் போகும் ஆமசுரம்**
**நோக்கியவாகடம்பயின்று நோய துயிருண் காலனையும்**
**நீக்கியே ஆருயிரை நிலையாக்கும் நரபாலன்**
**சேக்கொடியோன் செகராசசேகரனை வணங்கிடுமே3**

காதலித்து இருகையால் பருகிடின் அரச
கங்கைக்கரை வேந்தர்தம் பிரான்
வேதமொத்த செகராசசேகரன்
வேங்கையாளி மிகையாய் உலவவே
ஓதமுற்றும் புவி ஓடுமாறு
உள்ளே காய்ந்து சேர்
வாத பித்த சுரமோடும் என்று தான்
வாகடத்தை வல்லோர் மொழிவரே4

மேற்காணும் இரண்டு பாடல்களும் தவிர்ந்த குறிப்பிட்ட பாடத்துக்குரிய ஏனைய பாடல்கள் சரஸ்வதி மஹால் நூல் நிலையத்தவரால் வெளியிடப்பட்டுள்ள அகஸ்தியர் இரண்டாயிரத்தில் இடம் பெற்றுள்ளன.

செகராசசேகரம் என்னும் ஈழத்துத் தமிழ் மருத்துவ நூலின் ஒருசில பாகங்களே இதுவரை அச்சில் வெளிவந்துள்ளன. இவற்றுள் ஒன்றுதான் 1932ஆம் ஆண்டில் ச. தம்பிமுத்துப் பிள்ளை என்பவர் பதிப்பித்து வெளியிட்ட செகராசசேகர வைத்தியம். இந்நூலின் அங்காதி பாதம் பற்றிய பாடத்தில் செகராசசேகர மன்னன் புகழ்பாடும் பாடல் ஒன்று இடம் பெற்றுள்ளது.

சிங்கை நாட்டு மன்னன் செகராச சேகரன் தன்னோடு போர்புரிந்து இறந்து போன எதிரிகளின் உடல்களின் உதவியோடு மனிதரின் உள்ளுடல் அங்கங்களின் அளவுகள் குறித்து ஆராய்ந்ததாகக் குறிப்பிடுகின்றது.

இயம்பியகுடலும் ஊனும் என்புநாடிகளும் மற்றும்
செயம்பெறு சிங்கைநாடன் செகராசசேகரன் தான்
உயர்ந்தவாள்வடக்கர் ஆகம் உருட்டிய களத்தின் மீதே
அயஞ்சிறிதுளது தீர அளந்து கண்டறிந்த தாமே.5

ஐ.பொன்னையாபிள்ளை என்பார் பதிப்பித்த செகராச சேகரவைத்தியம் என்னும் நூல் இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணத்தின் சுகாதார அமைச்சினால் 2000ஆம் ஆண்டில் மீள்பதிப்பு செய்யப் பெற்றது. இப்பதிப்பில் மேற்கண்ட பாடலுடன் கூடவே சிங்கைச் செகராச மன்னன் புகழ் பாடும் மேலும் பல பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

அகஸ்தியர் இரண்டாயிரத்தில் செகராசசேகரன் பெயரை உள்ளடக்கிய பாடல்கள் சில முற்றாகத் தவிர்க்கப்பட்டுள்ளதுடன் மற்றும் சிலபாடல்களில் செகராசசேகரன் பெயர்வரும் இடங்களில் வேறு பெயர்கள் இடம்பெற்றிருப்பதையும் காணமுடியும்.

இலங்கை ஆயுர்வேதத்திணைக்கள வெளியீடான செகராசசேகரப் பதிப்பில் 'விஷசுரத்துக்குநெய்' என்னும் தலைப்பில் பின்வரும் பாடல் இடம்பெற்றுள்ளது.

கரைத்தரைத்துப் பதந்தனிலே வடித்து நேரங்
கழஞ்சு நெய்தானருந்து வீரேற்கமலமானே
வரைத்தடந் தோள் மன்னவர்கள் வணங்குகின்ற
செகராசசேகரன்றான் மனதிலோர்ந்து
தரைக்குளவன் தனக்கடங்காச் சத்துருக்
கடங்களைக் காய்ந்திடுவதென்னத் தரணி மீதில்
விரைக்கு விஷமவனடக்குவதே போல
விஷசுரத்தை மாற்றுமிந்த மருந்து பாரே6

இதே பாடல் சரவணையூர் வைத்தியர் அருளம்பத்தின் செகராசசேகர ஏட்டுப் பிரதியிலும் நூலக இணையத்தளம் சேகரித்த செகராசசேகரம் ஏட்டுச் சுவடியிலும் (இல. **EA-P1056_C-O12-_F017**) பின்வருமாறு காணப்படுகின்றது.

கரைத்து எரித்துப் பதந்தனிலே வடித்து நேரங்
களஞ்சு நெய்தான் அருந்து வீரேற்க மலமான
விரைத்தொடையிற் செகராசசேகரன் சீர்
மெய் கருணையெனக் குளிர்ந்து மெள்ள
வரைத் தடந்தோளவன் மதிபோலே யாராய்ந்து
வஞ்சரைத் தானவன் காய்வதெனவே
தரை தானுளோர் விஷமடக்குந்தன்மை போலத்
தானடக்கும் விஷசுரந் தன்னைத் தானே7

மேற்காணும் பாடல் அகஸ்தியர் இரண்டாயிரத்தில் பின்வருமாறு காணப்படுகின்றது. இப்பாடலில் செகராசசேகரன் என்னும் பெயர் திருமாலன்பர் என்று மாற்றம் பெற்றுள்ளதைக் கவனிக்கலாம்.

கரைத்தரைத்துப் பதத்தினிலே வடித்துத்தோரங்
கழஞ்சு நெய்தானருந்து வீரேகமலமாதின்
விரைத்தோடையற் புயமேவு திருமாலன்பர்
மெய்க் கருணையெனக் குளிர்ந்து மெள்ள மெள்ள
விரைத் தடந்தோள் வனமதிப் போமேலாராய்ந்து
வஞ்சரைத்தான சாய்வதெனவே சாய்ந்து
தரைக்குள்ளோர் விஷனவனடக்குவதே போலத்
தானடக்கும் விஷமசுரந்தன்னைத் தானே8

செகராச சேகரத்தில் முழுத்தசுரத்திலெண்ணெய் என்னும் தலைப்பில் பின்வரும் பாடல் காணப்படுகின்றது.

புகலும் முழுத்த சுரம்வரட்சி போகாப் பித்தமுள்ளுமுலை
இகலும் பழைய வெதுப்பிவைதான் எட்டினுடனே இரண்டென்னும்
திசையும் புகழும் செகராசசேகரனின் செற்றார் எனப்போய்
அகலுமெனவே வாகடநூல் அறிந்தே புகன்றார் அவனியிலே9

'முழுத்தசுரம்' என்பது எதனைக் குறிக்கின்றது என்பது அறியப்படவில்லை. எனினும் இந்தக் காய்ச்சலுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ள எண்ணையைப் பூசிவர நோயானது பத்துத்திசையும் புகழும் செகராசசேகரமன்னனின் பகைவர்கள் போல் ஓடிப்போய் விடும் என்று இப்பாடலில் கூறப்படுகின்றது.

இதேபாடல் அகஸ்தியர் இரண்டாயிரத்தில் முழுத்த சுரத்திற்குச் சகதேவி எண்ணேய் என்னும் தலைப்பின் கீழ் ஒரு சிறு மாறுதலுடன் இடம் பெற்றுள்ளது.

புகலு முழுத்தச் சுரவரட்சி போகாப் பித்தமுள் வெட்கை
இகலும் பழய வெதுப்பிது தான் எட்டினுடனே யிரண்டொன்று
திசையும் புகழுந் திருஞானசம்மந்தன் தான் துதித்திடவே
அகலுமெனவே வாகடநூல் அறிந்தே புகன்றார் அவனியிலே10

மேற்காணும் பாடலில் செகராசசேகரன் என்னும் பெயருக்குப் பதிலாகத் திருஞானசம்மந்தன் என்னும் பெயர் இடம் பெற்றிருப்பதைக் கவனிக் கலாம்.

செகராச சேகரத்தில் பரிதாபசுரம், பித்தசுரம், விஷசுரம், சன்னிசுரம் என்பவற்றுக்கு மருந்தாகப் பயன்படும் முலைப்பாலெண்ணெய் தயாரிக்கும் முறை பற்றிக் கூறும் இரு பாடல்களை அடுத்து நோக்குவோம்.

மங்கையர் பால் நானாழி இருநாழி பசுப்பால்
வளர் இளநீர் இருநாழி ஒருநாழி யெண்ணெய்
செங்கை கொடுபிடுங்கும் வேர் சிற்ற மட்டி
சீதேவியார் முத்தக் காசோடிரு வேரியிலா மிச்சு
சங்கை பெறு நன்னாரி அமுக்கிராயரத்தை
சதகுப்பை நாகம் பூச்சந்தமகில் கோட்டஞ்
சிங்கைவளர் செகராசசேகரன்புகலும்
சித்திதரு வெண்காரமர மஞ்சள் கொள்ளே.

கொள்ளு மதிமதுரங்கச் சோலஞ் செவ்வள்ளிக்
கொடியேலங்கு ரோசனிவேற் கொம்போடிலவங்கம்
விள்ளு மரமஞ்சளுடனே தேவதாரமிக
வொன்றிரு கழஞ்சு வேற்கொம்பைங் கழஞ்சு
மெள்ள வரைத்துக் கரைத்துப் பதந்தனிலே வடித்து
மேலிலும் பூசித் தலைதனிலும் வார்த்திடவே
துள்ளு பரிதாப சுரம் விஷசுரஞ் சன்னி
சுரம்பித்த சுரம் சன்னிவாத சுரம் போமே.11

சிங்கைநகர் வாழும் செகராசசேகரன்கூறியவாறுசிற்றமட்டி, சீதேவியார், முத்தக்காசு (கோரைக்கிழங்கு), இருவேரி, இலாமிச்சு, நன்னாரி, அமுக்கிராய், அரத்தை, சதகுப்பை, நாகம்பூ, சந்தனம், அகில், கோட்டம், வெண்காரம், மரமஞ்சள்அதிமதுரம், கச்சோலம், செவ்வள்ளிக்கொடி, ஏலம், குறுசானிஓமம், வேர்க்கொம்பு, இலவங்கம், தேவதாரம் இவற்றைச் சேகரித்துக் கொள்ளவும். இவற்றுள் ஒவ்வொன்றும் இரு களஞ்சும் வேர்க்கொம்பு ஐந்து களஞ்சும் சேர்த்து

இவற்றுடன் முலைப்பால் நான்குநாழியும் பசுப்பால் இரண்டுநாழியும் இளநீர் இருநாழியும் சேர்த்து கரைத்து எரித்துப் பதத்தினிலே காய்ச்சி வடித்து எடுத்த எண்ணெயை உடல் மேல் பூசியும் தலையில் வார்த்துத் தேய்த்தும் வரப் பரிதாபசுரம், விஷசுரம் சன்னிசுரம் பித்தசுரம் வாதசுரம் ஆகிய நோய்கள் மாறிவிடும் என்பது மேற் காணும் இரு பாடல்களிலும் கூறப்படுகின்றது. இப்பாடல்கள் சரஸ்வதி மஹால் வெளியிட்ட அகஸ்தியர் இரண்டாயிரத்திலும் இடம்பெற்றுள்ளன. எனினும் இங்கும் மன்னன் செகராசசேகரன் பெயர் மட்டும் தவிர்க்கப் பட்டிருப்பதை அவதானிக் கலாம்.

மங்கையர் பால் நானாழி பசுப்பால் வளரிள
நீரும் நாழி ஒரு நாழியெண்ணெய்
வேங்கை கொடுபிடுங்கும் வேர் சிற்றமட்டி
சீதேவியார் முத்தக்காசு காற்றோட்டிலாமிச்சு
சங்கை பெறு நன்னாரி அமுக்கிராயரத்தை
சதகுப்பை நாகம் பூச்சந்தமகில் கோட்டஞ்
திங்களணி சடைமுடியாரருள் சேரு மருந்து
சித்திக்க வென்றே பச்சிலை மாஞ்சில் கொள்ளே.

கொள்ளு மதுரங்கச்சோலஞ் கொண்டே செவ்வள்ளிக்
கொடியேல முரோகணி வேர்க் கொம்போடி லவங்கம்
வுள்ளு மரமஞ்சலுடனே தேவதாரம் வோரொன்
றிரு கழஞ்சு வேர்க் கொம்பைங் கழஞ்சு
மெள்ள வரைத்துக் கரைத்துப் பதத்தி லேவடித்து
மேலும் பூசித் தலைமேலும் வார்த்திடவே
துள்ளு பரிதாப சுரம் விஷசுரம் சன்னி
வாதசுரந் தணிந்து போமே12

'முழுத்தசுரத்திற்கு முந்திரிகை ப்பழக் குடிநீர்' செய்யும் முறைபற்றி செகராசசேகரம் ஏட்டுப் பிரதி (**E-A-P1056-_-C-O12-_-F017**) ஒன்றில் காணப்படுகின்றது, இப் பாடலின் முதல் இரண்டு வரிகளைக் கொண்ட ஏடு தொலைந்து விட்டது.

பெயர்த்தோ ரொன்றிரு களஞ்சாகவே
பொருந்து நீர்இருநாழிகொண்டங்கிதிற்
போட்டெரித்தெட்டில் ஒன்றான போதுதான்
அருந்துவோர் அருந்திற் தீருமென்று தான்
ஆனசேகரன் வாகடம் சொல்லுமே13

ஏட்டில் தவறிப்போன முதலிரண்டு வரிகளுடன் கூடிய முழுப்பாடலும் அகஸ்தியர் 2000 நூலில் கிடைக்கின்றது. அதேசமயம் பாடலின் இறுதி வரியில் வரும்சேகரன் வாகடம் சொல்லுமே என்பது சேவற்காந்தன் சொன்ன வாகடம் சொல்லுமே என்று மாற்றம் பெற்றுள்ளது.

அருந்து முந்திரிகைப் பழம் பேய்ப் பீர்க்கு
நற்சந்தம் இருவேலி சுக்குடனே
பெருங் குரும்பை மரமஞ்சள் நன்னாரி வேர்
போர்த் தோரொன்றிரு களஞ்சாகவே
பொருந்து நீர் அங்கிரு நாழி கொண்டங்கிதிற்
போட்டெரித் தெட்டி லொன்றான போது
வருந்து வோருகிற் தீருமென்று சேவற்காந்தன்
சொன்ன வாகடம் சொல்லுமே14

தமிழில் மருத்துவ நூல்களை ஆக்கும் முயற்சிகள் சில பொதுசகாப்தம் 16 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் 17 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப் பட்டன. தனி ஒரு புலவரால் இயற்றப்படாது அரசனால் தெரிவு செய்யப்பட்ட பாவலர் குழு ஒன்றின் கூட்டு முயற்சியில் உருவான தமிழ் மருத்துவ நூல்கள் ஆக்குவித்தோனின் பெயரால் செகராசசேகரம் என்றும் பரராசசேகரம் என்றும் அறியப்பட்டன.

வாகடம் தமிழ் செய்யும் முயற்சிகளுக்கு வேண்டிய ஊக்கமும் ஆதரவும் கொடுத்தவர்கள் அப்போது யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்டு கொண்டிருந்த தமிழரசர்களாவர். இம்மன்னர்கள் செகராசசேகரன், பரராசசேகரன் என்னும் அரியணைப் பெயர்களைச் சூடியிருந்தனர். யாழ்ப்பாண மன்னர்கள் தாம் ஆட்சி செலுத்திய பிரதேசத்தை 'சிங்கை' என்று குறிப்பிட்டனர். பொ.ச. 1500ஆம் ஆண்டளவில் நல்லூரில் இருந்து ஆட்சி செலுத்திய மன்னன் ஒருவன் சிங்கைச் செகராசசேகரன் என்னும் பெயரால் அறியப்பட்டான். இலங்கையில் தமிழ்நூல்கள் பல தோன்றுவதற்குக் காரணமாய் இருந்தவன் இம்மன்னனே ஆவான்.

போர்த்துக்கேயரால் 'செகராஜ' என்றும் 'சிங்கையாரி' (சியங்கெரி) என்றும்அறியப்பட்ட இம்மன்னன் பதினாறாம் நூற்றாண்டின் முற்பகுதியில் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்தவன். இம்மன்னனுக்குமுற்பட்டஈழத்தின்தமிழரசர்களுள்எவரும்தமிழில்நூல்களைஆக்குவதற்குஊக்கமளித்தார்கள் என்பதற்கானவலுவானசான்றுகள்எதுவும்இற்றைவரைகிடைக்கவில்லை.

சிங்கைச் செகராசசேகரன் மிகுந்த தமிழ்ப்பற்று உடையவன் என்றும் செந்தமிழை வளம்படுத்த உதவும் நூல்களை இயற்றும் பாவலர்கட்கு அவரவர்

தகுதிக்கேற்ப பொன்னிறைந்த வெற்றிலைத்தட்டம், கெண்டி, பொன்னாபரணம் என்று பரிசில்களை வாரி வழங்குபவன் என்றும் இம்மன்னன் காலத்தில் ஆக்கப்பெற்ற செகராசசேகர மாலை என்னும் சோதிட நூலின் ஆசிரியர் புகழ்மாலை சூட்டியுள்ளார்.

**மன்னர் மன்னுசெக ராசசேகரன்**
**மணவை யாரியவ ரோதயன்**
**பன்னு செந்தமிழ் வளம் பெறற்குதவு**
**பரிசிலங்கவர் சித்தியாம்**
**பொன்னின் மிஞ்சிய காளாஞ்சி கெண்டிகை**
**பொலங் கலன் பிறவு மாம்பரிச்**
**சின்ன முள்ளதொகை யாவுமிவ்விதி**
**சிறந்த நிந்துரை சேயிழையாய்15**

சிங்கைச் செகராசசேகரன் ஆயுள்வேதம், சோதிடம் ஆகிய துறைகளில் விசேட தேர்ச்சி பெற்றிருந்தான் என்னும் செய்தியை இவனது காலத்தில் ஆக்கப் பெற்ற ஒன்றுக்கு மேற்பட்ட தமிழ்நூல்கள் வலியுறுத்துகின்றன. முத்தமிழ் வித்தகன் செகராசசேகரன் ஆயுள்வேதம், சோதிடம் உள்ளிட்ட பல்வேறு துறைகளையும் கற்றறிந்தவன் என்று தட்சணகைலாசபுராணத்தின் சிறப்புப் பாயிரத்தில் கூறப்பட்டுள்ளது.

**சிங்கையாரியன் சேதுகாவலன்**
**கங்கைநாடன் கற்றவர் திலகன்**
**ஆயுள்மறையுடன் அரியநற் சோதிடம்**
**பாய்திரைக் கடலுட் பலவுமுணர்ந்தோன்**
**ஒப்பிலா முத்தமிழோர்ந்த**
**செப்பருஞ் செகராசசேகரனே16**

எருதுக் கொடியுடைய செகராசசேகரன் வாகடத்தை (ஆயுள்வேத மருத்துவநூலினை) நன்கு பயின்று மக்களின் நோய் தீர்த்துப் பல உயிர்களைக் காப்பாற்றினான் என்று இம்மன்னன் பெயரில் ஆக்கப்பெற்ற மருத்துவநூலான செகராசசேகரம் கூறுகின்றது.17

சிங்கைநாடாளும் செகராசசேகரன் போர்க்களத்தில் இறந்து கிடந்த எதிரிகளின் உடல்களை ஆராய்ந்து மனித உடலில் உள்ள எலும்புகள், நாடிகள் போன்ற பலவற்றையும் ஐயத்துக்கு இடமின்றித் தானே அளந்து கண்டறிந்துகொண்டதாக செகராசசேகரத்தின் அங்காதிபாதப்பிரிவில் வரும் பாடல் வரும் பாடல் ஒன்று தெரிவிக்கின்றது.18

செகராச சேகர வாகடத் தொகுப்பின்சர்ப்பசாஸ்திரப் பிரிவில் வரும் பாடல் ஒன்று இம்மன்னன் இலங்கையின் பிற பகுதிகளை ஆட்சி புரிந்து வந்த மன்னர்களிடம் திறைவாங்கும் அளவுக்கு வலிமை பெற்றிருந்தான் என்பதை உணர்த்துகின்றது.

**பாரிலுள்ள சூத்திரனாம் பாம்புபுற்றிற்**
**பரிந்திருக்கும் இரையெடுக்கிற் பலவும் தின்னும்**
**மேருடனே தானாடிற் பத்மராக**
**மிலங்கு மணிமுடி புனையும் இலங்கை வேந்தர்**
**சீரிய பொன் திறையளக்கச் செங்கோலோச்சும்**
**செகராசசேகர மன்சிங்கைமேவும்**
**ஆரியர்கோன் வெண்குடையில் நிழலே செய்யும்**
**அவனிதனைப் பார்த்துநின்றே அமர்ந்தாடும்மே19**

சிங்கைச் செகராசசேகரன் கொடுத்த ஆதரவின் மூலம் செகராசசேகரமாலை என்னும் ஒருசோதிடநூலும் செகராசேகரம் என்னும் தமிழ்வாகடமும் (மருத்துவநூலும்) யாழ்ப்பாணத்தில் ஆக்கப்பெற்றன.

செகராசசேகர வாகடத்தொகுப்பு காலப் போக்கில் சிதைவுண்டு நூலின் பாகங்கள் பல்வேறு திசைகளிலும் சிதறுண்டு போய்விட்டன. ஒரு சிலர் தமக்குத் தேவையான பகுதிகளை மட்டும் மூலஓலைச்சுவடிகளில் இருந்து எடுத்துப் பிரதி பண்ணி வைத்துக் கொண்டார்கள். பல பகுதிகள் உள்நாட்டுப்போர்களின் காரணமாக முற்றிலும் அழிந்துப்போயின. மற்றும் பல பிரதிகள் மேலைத்தேய மருத்துவம் இலங்கையில் அறிமுகப்படுவதைத் தொடர்ந்து ஏற்பட்ட மாற்றங்களினால் பேணுவாரற்று மறைந்து போயின.

செகராசசேகரத்துக்குரிய பொதுமருத்துவம் தொடர்பான பகுதிகள் பலவும் யாழ்ப்பாணத்துப் பாரம்பரிய மருத்துவர்களிடம் ஏட்டுச்சுவடிகளாகவே இன்னமும் உள்ளன. இவற்றுள் ஒருசில பகுதிகளே செகராசசேகர வைத்தியம் என்னும் பெயரில் அச்சில் வெளிவந்துள்ளன. செகராசசேகரத்தின் அங்காதிபாதப் பிரிவும் சர்ப்பசாஸ்திரப்பிரிவும் இன்று முழுமையாகக் கிடைக்கப் பெறவில்லை.

யாழ்ப்பாணத்து அரசர்கள் காலத்தில் ஆக்கப்பெற்ற தமிழ்மருத்துவநூல்கள் தஞ்சாவூர் சரபோஜி மகாராசாவின் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டதாக டாக்டர் ஜோன் முத்தையா என்னும் சுதேச மருத்துவர் 1972 ஆம் ஆண்டில் தாம் எழுதி வெளியிட்ட சித்த வைத்திய சிகிச்சைக்கிரமம் என்னும் நூலில் குறிப்பிட்டிருப்பது இங்கு கவனத்தில் கொள்ளப்படவேண்டிய ஒன்று.20

தஞ்சையை ஆண்ட கடைசி மராட்டிய வம்சத்து அரசனாகிய இரண்டாம் சரபோஜி(**17981832 CE**) சம்ஸ்கிருதம், தமிழ், மராட்டியம், ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் ஆகிய பலமொழிகளில் தேர்ச்சி பெற்றவர். மருத்துவத் துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். கண் அறுவைச்சிகிச்சை செய்வதில் நிபுணத்துவம் பெற்றவர். தன்வந்தரி மஹால் என்னும் பெயரில்

ஒரு வைத்தியசாலையை நிறுவியதோடு இந்தியா முழுவதிலும் இருந்தும் பிறநாடுகளில் இருந்தும் ஏட்டுசுவடிகளையும் நூல்களையும் தருவித்துத் தஞ்சாவூரின் புகழ்பெற்ற பழைய நூலகமான சரஸ்வதி மஹால் நூல் நிலையத்தை வளம்படுத்தியவர். இவரது காலத்தில் இலங்கையில் இருந்தும் ஏட்டுச்சுவடிகள் பெறப்பட்டு சரஸ்வதி மஹால் நூல்நிலையத்தில் பேணப்பட்டதில் ஆச்சரியம் இல்லை. இத்தகையசுவடிகளுள் ஒன்றே அகஸ்தியர் 2000 என்னும் பெயரில் இன்று அறியப்படும் தமிழ் மருத்துவ நூலாகும்.

மேற்படி நூலில் செகராசசேகரமன்னன் பெயர் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக வேறுபெயர்களைத் திணிக்கும் முயற்சி ஒருசிலரால் இலங்கையிலேயே மேற்கொள்ளப் பட்டிருத்தல் கூடும் என நம்புவதற்கு இடமுண்டு. இலங்கையில் உள்ள ஏட்டுச் சுவடியொன்றில் இத்தகைய திருத்தங்களைக் காணமுடிந்தது.


அச்சில் வெளிவந்துள்ள செகராசசேகரத்தில் ''புகலுமுழுத்தசுரம் என்னும்'' தொடங்கும் பாடலில் வரும் செகராசசேகரனின் செற்றார் எனப்போய் அகலுமெனவேஎன்பதற்குப் பதிலாக அகஸ்தியர் இரண்டாயிரத்தில் திருஞானசம்மந்தன் தான்துதித்திடவே என்னும் சொற்றொடர் இடம்பெற்றுள்ளதை ஏற்கெனவே சுட்டிக்காட்டியுள்ளேன் நூலக இணையத்தளத்தை நடத்துபவர்களால் சேகரிக்கப்பட்ட **EA-P1056-_-C-O12-_-F001** இலக்க ஏட்டுச் சுவடியில் இதே பாடலில் செகராசசேகரம், திருஞானசம்மந்தன் ஆகிய இரண்டு பெயர்களுமே தவிர்க்கப்பட்டு அவ்விடத்துக்கு திருச்சிற்றம்பலவன் திருத்தாள் தொழுதிடவேஎன்னும் தொடர் இடம்பெற்றிருப்பதைக் காணலாம்.21

**EA-P1056-_-C-O12-_-F001** போன்ற ஏட்டுச் சுவடியொன்றே தஞ்சாவூர் சரஸ்வதி மஹால் நூல் நிலையத்தினரைச் சென்றடைந்திருக்க வேண்டும். செகராசசேகரன் பெயர் நீக்கப்பட்ட பின்னர் இந்த மருத்துவ நூலுக்கு அகஸ்தியர்நூல் என்னும் பெயர் வழங்கப்படுவதில் எந்த முரண்பாடும் இருக்கமுடியாது.


செகராசசேகர மன்னனை எதிர்த்தவர்கள் ஒடி ஒளிந்தமை பற்றியும் அவர்கள் தமது செயலுக்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்ட பின்னர் அவர்கள் துயரம் நீங்கப் பெற்றமை குறித்தும் கூறும் பாடல்கள் செகராசசேகரத்தில் காணப்படுகின்றன. நூலக இணையத் தலத்தோரால் சேகரிக்கப்பட்ட **EA-P1056-_-C-O12-_-F017** இலக்க செகராசசேகரம் ஏட்டுச்சுவடியில் இதுவரை வெளிவராத பாடல் ஒன்று முழுமையாகக் கிடைக்காவிடினும் ஒரு சிறு வரலாற்றுக் குறிப்பொன்றைத் தந்துள்ளது.

அருந்தும் வொடிபுரிவாரைசாகளு
கிறுந்ணிச்செயத்
திருந்து மொழிதவறாத பெருமான் எங்கள்
செகராசசேகரன்றான் சீறிவரவே
பொருந்துதிரிந்துள்ளவருந்தேடும்
பொன்னடியைத் தொழத்துயர மற்றாப்போலே
வருந்து முடலுளவுதிரம் பருகுஞ்சேட்டும
சுரத்தோடிளைப்பிருமல் மாறிப்போமே22


செகராசசேகர மன்னனுக்கு எதிரிகள் பலர் இருந்தார்கள் என்பது தெரிகின்றது. இவர்களுள் இம் மன்னனது உறவினர் சிலரும் சிற்றரசர்கள் சிலரும் இருந்தனர். போர்த்துக்கேயரின் முழு எதிரியாகவும் இம்மன்னன் செயல்பட்டான். போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைத் தம்ஆதிக்கத்தின் கீழ்கொண்டு வந்த பின்னர் அவர்களால் மிகவும் வெறுக்கப்பட்ட சிங்கைச் செகராசசேகரன் பெயரைச் சொல்லவே பலரும் பயப்பட்டிருத்தல் கூடும். இக்காலகட்டத்தில் சிலர் தம்வசமிருந்த செகராசசேகர வாகடப் பிரதிகளில் இம்மன்னனின் பெயருக்குப் பதிலாக பொருத்தமான வேறு பெயர்களை எழுதிச்சேர்த்திருக்க வாய்ப்புண்டு.



ஏட்டில்ஆறாவதுவரி: தம்பிரான் வேதமொத்தசெகராசசேகரன்வேங்கை
செகராசசேகரம்வாகடத்தொகுப்பு.
ஓலைச்சுவடி.**EA-P1056-_-C012-_-F017**, ஏடு 26, பாடல்எண் 12 (நூலகநிறுவனம்)



*ஏட்டில்மூன்றாவதுவரி*: *மொளிதவறாதபெருமானெங்கள்செகராசசேகரன்றான்*
*செகராசசேகரம்வாகடத்தொகுப்பு*.
ஓலைச்சுவடி.**EA-P1056-_-C012-_-F017**, *ஏடு 20*, *பாடல்எண் 9*
*(நூலகநிறுவனம்)*



*ஏட்டில்முதலாவதுவரி*: *புகலும்திருச்சிற்றம்பலவன்றிருத்தாள்தொளு*
*செகராசசேகரம்வாகடத்தொகுப்பு*.
ஓலைச்சுவடி. **EAP1056_C012_F001**, *பாடல் 108*, *(நூலகநிறுவனம்)*

# சிவஒளிப் பேரிகை வெண்பா (நேரிசை)




பவவினை போக்கிடும் பரம்பொருளே

பதிஒளி மேவிடும் இல்லறமே
சுவையெனும் அருளொளிச் சொல்நிசமே

சிவஒளி சிவஒளித் தூரிகையே
தவிசெனத் துல்லியம் தந்திடுமே

குவிந்திடும் குவிந்திடும் குவலயமே
புவியிலே மலர்ந்திடும் சிவவலமே

தவிசென மன்பதைத் தத்துவங்கள்
அவிசெனத் தந்திடும் வித்துவங்கள்

குவிகரம் மலர்ந்திடும் திருக்கயிலை
புவியொடும் தருக்களின் பெருநிழலே

சைவமும் மன்பதைத் தரும்வேதம்
மெய்வதம் ஆக்கியே வினைகாயும்


திவ்வியக் கருணையின் சிவஒளியே
எவ்வித மாகிலும் இறைநிழலே

சிவஒளி போற்றுஞ் சிவனடி யார்க்குப்
பவஒளி ஆக்குமாம் பற்றே - தவமேயாம்
தூரிகை ஏற்றும் சிவத்தமி ழன்பர்க்குக்
காரணப் பிள்ளையே காப்பு !

சிவஒளிஒளி வாழ்த்து
சிவஒளி சிவஒளி சிவஒளியே
சிவஒளி விஞ்சிடும் தவநெறியே

நவஒளி மண்டலப் பிரபஞ்சம்
சிவனொளி கொண்டதே சிவமஞ்சம்

கவலையும் நோயெலாம் கணப்பொழுதே



ஞானக்கவி
தேசபாரதி தீவகம்
வே.இராசலிங்கம்
கனடா

கைலையும் சிவபுரி காண்பரிதே
தைமுதல் மரபிலே தரும்நெறியே

சித்தர்கள் தோன்றினர் சிவஒளியே
செப்பினர் நான்மறை அனுதினமே
சிவஒளி பூமியின் சித்திரமே
கவினொளி துலங்கிடும் கயிலையிலே

குருபரர் வள்ளலார் குலவுதமிழ்
அருவமும் உருவமும் தெரிசனமே

பட்டினத் தடிகளும் அவ்வையுமாய்
தொட்டனைத் தூறிய வெண்பாவே

பாலக னாகவே சம்பந்தன்
ஏலவும் தமிழொடும் இறைகண்டான்

அப்பரும் சுந்தரர் வாசகரும்
முப்புரம் கண்டனர் முழுமுதலே

தீர்க்கமும் தெரிசனம் சிவஒளியும்
மார்க்கமும் சுவர்க்கமும் மன்பதைக்கே

சிவஒளி தவவலி பவஒளியே
அவனியில் இசைதரும் அருள்ஒளியே

கைலையும் மானச ரோவருடன்
மைலையின் மாபுரி தோன்றிடுமே !

கைலையும் தில்லையும் காஞ்சியிலும்
காளகஸ்தி திருவண்ணா மலையருளே

ஈச்வரம் ஈழமும் கோணமலை
வீச்சிலே சிவஒளி வென்றிடுமே

சிவஒளி தோன்றிடும் காப்பியமே
புவியொளி ஆக்கிடும் புத்தகமே

சிவஒளி சிவஒளித் திருமறையே
புவியினில் உதித்தது நான்மறையே!

சிவஒளி சிவஒளி முற்றிலுமே
அவனியைச் சார்ந்திடும் அற்புதமே

தொடுவினை அகன்றிடும் தொல்லியலே
சிவவினை யாக்கிடும் சீவிதமே

தோன்றவும் காண்பதும் தேறிவரும்
ஈன்றது சொல்லிடும் ஈச்வரமே !

சிவத்தால் மலர்ந்தது தொடுநிலமே
சிவத்திலே மறைந்தது திருநிலமே !

மானச ரோவர் மழைபோல்வாம்
ஈனசுனை ராட்சதம் இன்னொன்றாம்

உச்சிக் கைலை ஏரருளே
மெச்சும் அடியொடும் பேரருளே


தென்கயிலை அடிகளார் திசைப்பணியே
மன்பதை அனைத்திலும் வடிகாலே

சிவஒளி இன்பத் திருக்கயிலை
புவியெலாம் அருள்தரும் பூம்பொழிலே !



# சிவஒளி ஆன்மீக மாதாந்த மின்னிதழ்
# புரட்டாதி- ஐப்பசி- 2020

## ஒரு கண்ணோட்டம்




பேராசிரியர்
**பாலசுந்தரம் இளையதம்பி**
தமிழ்த்துறைத் தலைவர்
அண்ணாமலை கனடா வளாகம்.
ரொறன்ரோ.


**த**மிழ் மொழியும் கடவுளும் இணைந்த தமிழேமுருகன் என்ற அழகிய முன் அட்டைப் படத்துடன் வெளிவந்துள்ள சிவஒளி ஆன்மீக மாதாந்த மின்னிதழ்,பார்ப்பதற்கு அழகாகவும்,அதன் உட்சென்று வாசிப்பதற்குத் தூண்டும் வகையிலும் அமைந்துள்ளது. சிவஒளிவாசகருக்குத் தீபத்திருநாள் வாழ்த்துடன் இவ்விதழ் வெளிவந்திருப்பது மகிழ்வைத் தருகின்றது.நம்பிக்கை இல்லையேல் வாழ்க்கை இல்லை என்ற தத்துவ விசாரணையில் சிவஒளி ஆசிரியரின் உரையும், அதில் மாண்புறு அப்துல் கலாம் அவர்களின் உருவப்படங்கள் இணைக்கப்பட்டுள்ளமையும் மிகப் பொருத்தமாகவே உள்ளன.

சொத்துக்களைவிடச் சொந்தங்களை நேசிப்பபோம். பேராசையைக் கலைத்து பேரின்பத்தைப் போற்றுவோம்.அன்பு. இரக்கம்,உண்மை,நேர்மை,அமைதி, இறைபக்தி என்னும் வழிகளிலே பயனித்து இப்பிறவியின் பயனை அடைவோம். அன்பேசிவமாகி அனைத்தையும் நேசிப்போம். என்னும் குறிக்கோள்களைக் கொண்ட வாசகங்களோடு அமைந்த இதழாசிரியின் முன்னுரை, வாசகரை இதழில் மனங்கொள்ள வழிகாட்டுகின்றது. இவ்விதழில் முதலில் தென்கயிலை ஆதீனத்தலைவரின் கிரமியம் நோக்கிய பயணம் விளிம்புநிலைமக்களின் வாழ்வியல், கல்வி, தொழில்வாய்ப்பு என்பவற்றில் அக்கறை கொண்டு இயங்கும் அடிப்படையிலான செயற்பாடுகளை வாசகருக்கு அறிமுகப்படுத்துவதோடு, வாசகரையும் அத்தகையோர்பால் அன்புகாட்ட வழிவகுப்பதாகவும் அமைகிறது. அவ்வகையில் மட்டக்களப்பு செங்கலடிப்பகுதியிலுள்ள ஐயன்கேணி கிராமதரிசனம் பற்றிய கட்டுரை யாவராலும் சமூகம் நோக்கிய செயற்பாட்டில் ஈடுபடவைப்பதாகும். இன்றைய பின்தங்கிய மக்களின் கல்வி,சமூக மேம்பாட்டு நோக்கில் தென்கயிலை ஆதீனத்தின் செயற்பாடுகள் முதன்மை பெறுகின்றன.




நல்லூரர் தவத்திரு வேலன்சுவாமிகள் தென்கயிலை ஆதீனத்திற்கு வருகைதந்து, சிவலிங்கம் நிறுவியமை தென்கயிலை ஆதீனம் முதற் குருமகாசந்நிதானம் திருகோணமலை ஈச்சிலம் பற்று இலங்கைத்துறை என்ற குக்கிராமத்திற்கு வருகைதந்து அக்கிராமமாணவர்களை ஊக்கப்படுத்தியமை,அம்மாணவர்களின் பசியைப் போக்கிக், கல்வி புகட்டுதல் முதலான திட்டங்களை மேற்கொள்ளுல், தாயகத்தில் சிவவழிபாடு தொடர்பான பல்வேறு செயல் திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருத்தல் முதலான தகவல்களைச் சிவஒளியில் பதிவு செய்திருப்பது இளையோருக்கு உளவியல் அடிப்படையில் உறுதியும் நம்பிக்கையும் அளிக்கும் செயல்களாகும்.

இன்றைய காலக்கட்;டத்தில் ஈழவரலாற்றுச் சிந்தனை மிகவும் வேண்டப்படுவதாகும். அவ்வகையில் என்,கே. எஸ்.திருச்செல்வம் அவர்கள் எழுதியுள்ள இரு கட்டுரைகள் முதன்மை வாய்ந்தவை. அவரது தேடலின் பயனாக எழுதப்பட்டஅனுராதபுரமாவட்டத்தின் பண்டைய தமிழ்க் கிராமங்கள்பற்றிய கட்டுரை ஈழத்தமிழர் ஒவ்வொருவரும் வாசிக்க வேண்டிய ஒன்றாகும். அவரது,இலங்கையில் 2300 ஆண்டுகளுக்கு முன்பு தமிழர்கள் வாழ்ந்தார்கள்? என்பதை நிரூபிக்கும் ஐந்து பிராமிக் கல்வெட்டுக்கள் என்ற தலைப்பிலான கட்டுரையும் குறிப்பிடத்தக்கது. இலங்கையிலே தொல்லியல் திணைக்கள ஆணையாளராகப் பணியாற்றிய பேராசிரியர் பரணவிதான இலங்கையில் பல பகுதிகளிலும் அகழாய்வு செய்து 1500 கல்வெட்டுக்களைக் கண்டு பிடித்து அவற்றை வாசித்துப் பதிப்பித்தவர் ஆவார்.அவற்றில் ஐந்து கல்வெட்டுக்களில் தமெத எனக்குறிப்பிட்டிருப்பது (தெமிள) தமிழ் என்பதன் திரிபு ஆகும். இதனை இக் கட்டுரை விளக்குவது தற்காலத்திற்குத் தேவையான வரலாற்றுத் தகவலாகவும் உள்ளது.

சைவசமயம் பற்றிப் பல கட்டுரைகள் சிவஒளியில் இடம்பெற்றுள்ளன.சிவத்தமிழ் வித்தகர் சுந்தரலிங்கம் அவர்களின் திருக்கேதீஸ்வரம் பற்றிய கட்டுரை இவ்விதழுக்கு மகிமை சேர்க்கிறது. சைவ அருளாளர் 63பேர் பற்றி எழுதிவரும் கட்டுரைத் தொடரில் மாணிக்கவாசகர் பற்றிய கட்டுரை மாணவர்களுக்கும் வளர்ந்தோருக்கும் பயன் தருவதாகும். சைவப் புலவர் திருமதி சிவானந்தஜோதி எழுதியுள்ள தமிழேமுருகன் என்ற கட்டுரை முருகவழிபாட்டையும்,முருகன் பற்றிய இலக்கியச் செய்யுள்களையும் பக்திச் சுவையுடன் எடுத்தியம்பும் ஆழ்ந்த இலக்;கியப் புலமையுடைய படைப்பாகும். கோபுரம் அமைத்தல் கோடி புண்ணியம்என்ற தலைப்பில் சைவப்புலவர் கந்தையா பத்மானந்தனின் கட்டுரை கோபுர அமைப்பின் தத்துவம், அறிவியல், அரசியல் ஆன்மீகம், சமூகம், பொருண்மியம், கலை,கல்வி, வரலாறு என்ற பல்வேறு பொருண்மை அடிப்படையில் நுட்பமாக ஆராயந்து எழுதப்பட்டுள்ளது. கட்டிடக்கலையின் நுட்பம்,சமய சித்தாந்தக் கருத்து, மக்கள் நம்பிக்கை என்பனவற்றை எல்லாம் கோபுரத்துடன் இணைத்து ஆராய்திருப்பதும் பாராட்டுதலுக்குரியது. அடுத்து, சைவப்புலவர் துஷ்யந்த் எழுதியுள்ள இலங்கை இந்து தருமாசிரியர் பரீட்சை வழிகாட்டிஎன்ற கட்டுரையில் அத்தேர்வுக்குப் படிக்கும் மாணவருக்குரிய பாடவிதானங்கள் மிகச் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளன. ஏனைய மதங்களைச் சேர்ந்த மாணவர்கள்; தத்தம் மதங்களிற் காட்டும் அக்கறையைச்




கோபுரம் ஓர் அறிமுகம் :

கோபுரம் என்பதுதூய தமிழ் சொல்லென்று தேவநேயப் பாவாணர் போன்ற தமிழ் அறிஞர்கள் கூறும்போது வேறு சில அறிஞர்கள் இல்லையில்லைஇச் சொல் சமஸ்கிருதம் அல்லது வேறு பிராகிருத மொழியிலிருந்து தமிழுக்கு வந்ததிருக்க வேண்டும் என்கின்றனர். இதற்கு ஆதாரமாக அவர்கள் மகாபாரதம் போன்ற சமஸ்கிருத நூல்களில் கோபுரம் என்ற சொல் காணப்படும் அதேவேளை சங்க கால அல்லது சங்க மருவிய காலத் தமிழ் நூல்களில் அச் சொல் காணப்படவில்லை என்கிறார்கள் . மேலும்வேதகாலத்தில் பசுக்களை அடைத்து வைக்கும் பட்டிகளுக்கு மூங்கிலால் வேலியிடப்பட்டு அதன் வாயிலில் மூங்கிலாலேயே ஒரு வாயில் அமைப்பு அமைக்கப்பட்டிருந்ததாகவும் கோ என்றால் பசு, புரம் என்றால் காத்தல் என்னும் பொருளுடையது ஆகவே பசுக்களைக் காக்கும் இடத்தின் வாயில் கோபுரம் எனப்பட்டதாகவும் இவர்கள் கூறுகிறார்கள். காலப்போக்கில்அரண்மனை, நகரங்கள் முதலியவற்றின் வாயில் அமைப்புக்களையும் கோபுரம் என்று அழைக்கத்தொடங்கி ஈற்றில் கோயில்களின் வாயில் கட்டிட அமைப்புக்களையே கோபுரம் என்னும் சொல் குறிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்றும் கூறுகிறார்கள் .

சைவப்புலவர்
சித்தாந்தரத்தினம்
கந்தையா பத்மானந்தன்

ஆயினும் சுற்றுமதில்களையும் உயர்ந்த வாயில்களையும் கொண்டிருந்த அரசர்களின் அரண்மனைகளும் கோவில்களும் அவ் வாயில்கள் மீது உயர்ந்த மண்ணீடுகளைக் (கோபுரங்கள்) கொண்டிருந்தன என்றும் அம் மண்ணீடுகளில் வண்ணம் தீட்டப்பெற்ற வடிவங்கள் அமைந்திருந்தன என்றும் மணிமேகலையில் சக்கரவாளக்கோட்டம் பகுதியின் 4248, 5859 ம் வரிகளும் மலர்வனம் புக்க காதை பகுதியின் 113127 ம் வரிகளும் மதுரைக்காஞ்சியின் 352355 வரிகளும் சொல்லும் செய்திகளாகும். இவ்வாறு அமைந்திருந்த உயர்ந்த கோபுரங்களையுடைய வாயில்களுக்கு துருப்பிடியாதபடி செந்நிறம் பூசப்பட்ட இரும்புக் கதவுகள் பொருத்தப்பட்டிருந்தன என்பது நெடுநல்வாடையில் 7688 வரிகள் சொல்லும் செய்தியாகும் . எனவே கோபுரம் என்பது தமிழ் சொல் என்பது ஏற்கத்தக்க ஒன்றாகும் .

கோபுரங்கள் உருவானதன் பின்னணி :

கோபுரங்கள் உருவானதன் பின்னணியில்அறிவியல்,அரசியல்,ஆன்மீக, சமூக ,பொருளாதரா,கலை,கல்வி மற்றும் வரலாறு சார் காரணிகள் உள்ளன .

அறிவியல் காரணங்கள் :

கோயில்களில் உள்ள கோபுரங்களின் மேல்உள்ள தங்கத்தால், செம்பினால்அல்லது பஞ்சலோகங்களால்

புரட்டாசி- ஐப்பசி 2020 சிவ ஒளி 10

சுட்டிக்காட்டி, இந்து தருமாசிரியர் பரீட்சைத் தேர்வில்,சைவ மாணவர்களின் ஈடுபாடுமிகக் குறைவாக உள்ளதைக் குறிப்பிட்டு எழுதியுள்ளதை வாசகர்கள் கவனிக்கவேண்டும். தமிழ்மொழியும் சைவசமயமும் எமக்கு இரு விழிகள் போன்றவை என்பதைச் சைவ மாணவர்கள் உணர்ந்து அதற்கேற்பச் செயற்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மருத்துவக் கலாநிதி சனபிரதாபன் எழுதிய இல்லங்கள் தோறும் சைவசமயம் வளரட்டும்என்ற கட்டுரை ஒவ்வொரு சைவத் தமிழரும் தேடிப்படிக்க வேண்டியதாகும். முனைவர் பாலசிவகடாட்சம்,ஈழத்தில் கண்ணகி வழிபாட்டின் தோற்றம். அதன் பரவல். கண்ணகி வழிபாட்டுடன் தொடர்புடைய இலக்கியங்கள், தொன்மங்கள் என்பனவற்றை உள்ளடக்க சிறந்த ஆய்வுக் கட்டுரையை வழங்கியுள்ளார். சிவத்திரு சற்குணலிங்கம் ஹோபிநாத், ஆறுமுகநாவலர் பற்றிய பன்முக ஆளுமைகளையும், அவரது ஆக்கங்களையும ;பற்றி விரிவாக விளக்கி எழுதியுள்ள கட்டுரையும் விதந்து கூறத்தக்கது.

அன்பும் பக்தியும் மனிதநேயம் ஒருபார்வைஎன்ற தொடர் கட்டுரையில் பொன் ஜெயரூபன் அவர்கள் அன்பு, கருணை, பக்தி, மனிதநேயம் என்பன மனுக் குலத்தின் இயங்கு சக்தி என்பதை பல்வேறு இலக்கி

யச் சான்றுகளுடன் சிறந்த முறையில் எழுதியுள்ளார்கள். வழமைபோல் சிவஒளியில் கலை,பண்பாடு சார்ந்த கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன. இலங்கையின் கூத்துக்கலையானது தமிழகத்திலும்விட மிகநுட்பமான முறையில் வளர்ச்சி பெற்றுள்ளது. ஈழத்தின் தேசியக் கலைவடிவம் கூத்து எனக் கூறக் கூடிய அளவுக்குக் கூத்துக்கலை மக்கள் வாழ்க்கையுடன் இணைந்துள்ளது. இப்பின்னணியில், ஈழத்துக் கூத்துக்கலையின் தனித்துவமும் அவற்றிற் புராண இதிகாசங்களின் தாக்கமும்என்றதலைப்பில் எழுதப்பட்டுள்ள கட்டுரை கூத்துக்கலையின் தோற்றம், வளர்ச்சி, கூத்துக் கதைகளில் இராமாயணம்,பாரதம்,புராணம் சார்ந்த கதைகள் பெரிதும் இடம் பிடித்துக்கொண்டுள்ள பின்னணிகள் என்பன பற்றி இக்கட்டுரை விளக்குகின்றது. சமூகம்,கலை,பண்பாடு,மதம் முதலான தளங்களிற் கூத்துக் கலை காலூன்றி வளர்ந்து வந்துள்ள சமூகபண்பாட்டு வரலாறும் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

தமிழர் பண்பாட்டின் காலவரையறையை நிர்ணயிக்கும் கீழடி ஆய்வுகளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் இக்காலக்கட்டத்தில் தமிழர் பண்பாட்டுக் கூறுகள் பற்றிய ஆய்வுகள் அவசியமாகின்றன. இப்பின்னணியிற் பண்டைத் தமிழர் பண்பாட்டு வரலாற்றாய்வில் முக்கிய இடம்பெறும் சுவாமிவிபுலாநந்தர,; இசைக்கருவிகள் பற்றி மேற்கொண்ட ஆய்வுகள் குறித்த கட்டுரைகளும் காலத்தின் தேவையாகின்றன. தமிழர் பண்பாட்டில் சங்;க காலம் முதலாகப் பயன்பட்டு வந்த தமிழர் இசைமரபு,அதனை வளர்த்து வந்த பாணர்,பாடினியர்,பொருநர்,விறலியர் முதலானோரின் வாழ்வியல்,அவர்கள் பயன்படுத்திய நரம்பிசைக் கருவிகள்,தோலிசைக் கருவிகள் முதலானவை பற்றியும் நாம் அறிந்து கொள்ளவேண்டியது அவசியமானது.

வேற்றுமொழிப் பண்பாட்டாளர்களும். சமஸ்கிருதம்,தெலுங்குமுதலான மொழிகளும் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு முதலாகத் தமிழகத்தில் மேலாதிக்கம் பெற்றிருந்தமையால் தமிழிசை பாதிப்புக்கு உள்ளாயிற்று. சீரோடு வழங்கிவந்த பண்டைத் தமிழ் இசை மரபைப் பற்றிப் பல்லாண்டுகளாகச் சுவாமி விபுலாநந்தர் ஆராய்ந்துயாழ் நூல்என்ற இசைத்தமிழ் ஆராய்ச்சி நூலைத் தந்தார். யாழ் நூலிற் கூறப்பட்ட பண்டைத் தமிழர் பயன்படுத்திய யாழ்கள் பற்றிய உண்மைகளைப் பொதுமக்களும் அறிந்து கொள்ளும் வகையில் பண்டைத் தமிழரின் இசைக் கருவிகள் என்ற கட்டுரை எழுதப்பட்டுள்ளது. சங்;க காலத்தில் வழக்கிலிருந்த யாழ்வகைகள், அவற்றின் தோற்றம், சிறப்புக்கள் என்பன பற்றி இக்கட்டுரை விரிவாக விளக்குகிறது. மேலும், இளங்கலைமணி சுரேந்திரா நரேந்திரா எழுதியுள்ள இறையும் இசையும் என்ற கட்டுரையில் பண்டைத் தமிழர் வாழ்க்கையில் இடம் பெற்ற பல்வகை நடனங்கள் பற்றியும்,குறிப்பாகப் போர்கள ஆடல்கள் குறித்து அரிய தரவுகளைத்திரட்டி மிகநுணுக்கமாக ஆராய்து எழுதியுள்ள கட்டுரையும ;பாராட்டத்தக்கது.

ஈழத்திலும் தமிழகத்திலும் சித்தமருத்துவம் மிகநீண்ட காலமாக மக்களுக்கு மருத்துவசேவை வழங்கி வந்துள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1985- 1990 இடைப்பட்ட காலப்பகுதியில் சித்தம









ருத்துவபீட மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தகாலம் முதலாக அத்துறையில் எனக்கும் ஈடுபாடுண்டு. தமிழ் இலக்கியத்தில் சித்தமருத்துவம்என்ற நூலையும் எழுதியுள்ளேன். சிவஒளியில் வெளிவரும் சித்தமருத்துவம் பற்றிய தொடர்கட்டுரைகளை ஆவலுடன் படித்து வருகின்றேன். சித்தமருத்துவர் சுதர்மன் அவர்கள் எழுதிவரும் கட்டுரைகள் மக்களுக்கு இன்றைய கொறனோ பெருந்தொற்றுக் காலச் சூழலிலும் பயன் அளிப்பனவாகும். யாழ்ப்பாணத்திலே 1950 -2000 காலப்பகுதியில் சித்தமருத்துவத்திற் பிரபல்யம் பெற்று விளங்கிய சில்லாலை இன்னாசித்தம்பி, அத்தனாசிரியர் முதலியோரைப் பற்றியும் இக்கட்டுரை குறிப்பிடுகிறது. அதுபோன்றே சுதுமலை,நாயன்மார்கட்டு, கல்வியங்காடு முதலான இடங்களிலும் சிறந்த சித்தமருத்துவர் வாழ்ந்து வந்தமையையும் இக்கட்டுரை குறிப்பிடுகின்றது. நவீன ஆங்கிலமருத்துவ வசதிகளின் அடிப்படையிற் சித்தமருத்துவம் பின்னிலை அடைந்தாலும் இம்மருத்துவக்கலை மீண்டும் புத்துயிர்ப்புப் பெறும் என்ற நம்பிக்கையை இக்கட்டுரை ஆசிரியர் கூறுவது வரவேற்கத்தக்கதே.

சமூகத்தைச் செம்மைப்படுத்திவர்கள் சித்தர்கள் என்பதைப் தமிழர் பண்பாட்டு வரலாற்றில் அறிந்து கொள்ளலாம். சித்தர் பாடல்களிற் சமூக சீர்திருத்தக் கருத்துக்களும் சமயதத்துவமும ;செறிந்திருக்கும். ஐசவ முதலிகள ;நால்வரின் திருமுறைகளும்,திருமுலர் திருமந்திரமும் சைவத் தமிழருக்கு வேதமெனக் கொள்ளத்தக்கவை. இவ்விதழில் அருணா செல்லத்துரை அவர்கள் காலிங்கநாதர் சித்தர்பற்றி எழுதியுள்ளார்கள். சித்தர் பாடல்களை விளங்கிக் கொள்வது சற்றுச் சிரமமானது. ஆயினும் செல்லத்துரை அவர்கள் பலசித்தர்பாடல்களை எடுத்தாண்டு அவற்றுக்குத் தக்க விளக்கமும் தந்துள்ளமை வாசகருக்கு விருந்தாக அமைகிறது. ஆறுமுகம் சசிநாத் அவர்கள் எழுதிய சித்தர்கள் பற்றிய கட்டுரை வாசகர் அனைவரும் விரும்பிப் படிக்கத் தக்கதாக அமைந்திருக்கும் என்பது எனது நம்பிக்கை.

ஊலகப் பொதுமறை எனப்போற்றப்படும் திருக்குறள் பற்றி, கலைவல்லார் நா.வை. குமரி வேந்தன் ஆய்வுநோக்கில் திருக்குறள்- சமூகச் சீர்கேடுகளை எதிர்த்த முதல் நூல்; என்ற தலைப்பில் ஆய்வு நோக்கில் எழுதியுள்ள கட்டுரை நிச்சயம் சிவஒளி வாசரைக் கவர்ந்திழுக்கும் தன்மையது. பெண்ணடிமைத்தனம், வருணப்பாகுபாடு பற்றிய கருத்துக்கள் பகவத்கீதையில் கூறப்பட்டிருப்பதை எடுத்துக் கூறி, அதிலிருந்து வேறுபட்ட தன்மையில் அமைந்த திருக்குறளின் மேன்மையை விளக்கும் விதமும் பாராட்டத்தக்கது. திருக்குறளுக்குப் பகுத்தறிவுக் கோட்பாட்டின் அடிப்படையில் அவர் தரும் விளக்கமும் சிறப்பாக உள்ளது. வாழ்த்துக்கள்!

நெதர்லாந்திலிருந்து சமூகம் நோக்கிய ஒரு பெண்மைக் குரல்!. திருமதி பவானி சற்குணலிங்கம் அவர்களின் பெண்ணியம் பற்றி ஆண்களும் பேசவேண்டும் என்ற கட்டுரைத் தலைப்பே எழுச்சி தருவது. எத்தகு சமூகமாற்றமோ அல்லது கல்விவளர்ச்சியோ ஏற்பட்ட போதிலும் சிலஆண்கள் மனதளவில் ஆரம்பப் புள்ளியில் இருக்கிறார்கள் என்ற உண்மை நிலைப்பாட்டை இக்கட்டுரை வலியுறுத்துகின்றது. பெண்ணியம் பேசுபவர்களும், பெண்ணியத்துக்கு எதிரானவர்களும் கட்டாயம் இக்கட்டுரையைப் படிக்கவேண்டும். தொடர்ந்தும் எழுதுங்கள்.

மன்னும் கயிலைமலை தங்கமே தங்கம்.. ..என்னும் தேசபாரதியின் கவிதை சிவஒளிக்கு ஆரமாக அமைகின்றது.

இவ்விதழின் வடிவ அமைப்பு, கட்டுரைத் தலைப்புக்கு ஏற்பப் படங்களைத் தேடிப் பெற்று கட்டுரைக்களுக்கு மெருகூட்டி வரும் இதழ் வடிவமைப்பாளருக்கு எனது பாராட்டுக்கள்.





ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்

அறிமுகம் – பின்னணி

ஈழத்தில் 19 ஆம் நூற்றாண்டில் ஈழத்தில் கிறிஸ்தவ மிஷனரிமாரின் செல்வாக்குப் பெற்ற காலத்தில் தோன்றிய சைவப் பெரியார்களுள் ஆறுமுக நாவலரும் ஒருவர்.

ஞானப்பிரகாசர் மரபில் வந்த கந்தப்பிள்ளை - சிவகாமி அம்மையார் தம்பதியினருக்கு ஆறாவது பிள்ளையாக 1822 டிசம்பர் 18 ஆம் திகதி நல்லூரில் பிறந்தார். இவரது ... பிள்ளைத் ... யுடையவரான இவர், நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியாயர், வேலாயுத முதலியார், சரவணமுத்து உபாத்தியாயர், சேனாதிராய முதலியார் ஆகியோரிடம் குருகுல முறையில் கல்வி பயின்றவர். தனது பன்னிரண்டாவது வயதில் தமிழ் சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் புலமை பெற்றார்.

யாழ். வெஸ்லியன் மிஷன் கல்லூரியில் (யாழ்ப்பாண மத்திய கல்லூரி) கல்வி பயின்று சகல பாடசாலையின் நிறுவனராயும், அதிபராயுமிருந்த பேர்சிவல் பாதிரியார், கிறித்தவ விவிலியத்தைத் தமிழில் மொழி பெயர்க்கும் வேலைக்கு உதவியாக இருந்து பணியாற்றினார். இதனால் கிறித்தவ விவிலியத்தில் சைவமதச் சார்பான சொற்கள் இடம்பெறுவதற்கும் ஆறுமுகநாவலரே காரணமாக அமைந்துவிட்டார் என்றால் அதை மறுப்பதற்கில்லை.

சைவசமயத்தையும் அதன் கருவி



# தென்னாடு

www.thennadu.org

உ
சிவமயம்

# தென்னாடு



## செந்தமிழாகம சிவமடம்-கொக்குவில்

**அருள்மிகு ஐம்பூதநாதர் அருட்கோலம் மற்றும் ஈழத்து சித்தர்கள் தவக்கோலம்**

- சிவமயங்கல நீராட்டு (உருத்திர அபிஷேகம்)
- சிவப்பெருவேள்வி ( உருத்தியர மகாயாகம்)
- பிறைத்தோற்ற வழிபாடு (பிரதோஷம்)
- சித்தர்கள்/ நாயன்மார்கள் குருபூசை
- சிவஞானப் பெருவேள்வி ( திருமுறை முற்றோதல்)
- தென்புலத்தார் வழிபாடுகள்
- நிறைநிலவு ( பௌர்ணமி) வழிபாடு
- மறைநிலவு (அமாவாசை) வழிபாடு
- ஆண்டுப் பிறைநாள் (திதி)
- பிறைநாள் சடங்குகள் (திதி)

**கருமுதல் திருவரை சகல சடங்குகளும் செந்தமிழிலே இயற்றப்படும்**



குளங்கரை ஒழுங்கை.
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தொடர்புகளுக்கு :
+94 21 221 2739